மையைக்கொண்டு மிருதித்தன்மையின் விவத்தையாம், இந் திரியசம்பந்தத்தாலுண்டாந் தன்மையைக்கொண்டோ அனு பவத்தன்மையின் விவத்தையாம், ஆகவே முரண்முட்டறுதல் உளதாகுக ? ஆகாதாம், பிரமாத்தன்மையைப் பொதுமை யென வுடன்படாதபோது பிரமாரூபத்தன்மையை விடய விவத்திதியினனே யங்கீகரித்திருத்தலின் வேற்றுபாதி விளம் பினும், மிருதித்தன்மை அனுபூதித்தன்மைகள் ஒரேதருமி யாகிய பொருளின்கண்ணேபுகுதலின் பிரமாத்தன்மை யப்பிர மாத்தன்மைகட்கு ஒரு விடயத்தன்மையே பொருந்துமென்க.

197. தானுகவே யொளிர்தலின் மிருதித்தன்மை அனுபூதித் தன்மைகட்குச் சங்கரமாம்.

மேலும், ஞானபேதங்களின் சத்துவ அசத்துவங்கள் ஆன்மாவின்கண்ணே யொளிர்தலின் மிருதித்தன்மை யனு பூதித்தன்மை யென்னு மிரண்டும் பிரத்தியபிஞ்ஞையின்கண் ணே தாமாகவே யொளிர்தலின் மிருதித்தன்மை முதலியவற் றிற்கு விடயநிரூபண விவத்திதியை யங்கீகரியாதபோழ்து இதந்தையின்கண்ணும் மிருதியிலங்கும் வழக்காம் சமஸ்காரத் தாலுளதாந் தகைமையே மிருதித்தகைமையெலாயின் ; அதற் கே, மூரண்மொழியப்பட்டவழி மூரணீக்குவான் அதேயுபாதி யுபந்யசிக்கப்பெறும் என அயன்மனத்தே அமைவாகப்புகுவ தின்றென்க. இனி, மிருதித்தன்மை யென்பது அன்னியமென் னினுமமையாதாம் ; அங்ஙனமன்றே :—சமஸ்காரத்தாலுள தாந்தன்மை, சமஸ்காரத்தின் பின்னர் நியதமாயிருத்தல், நிய தத்தன்மையும் ஞானவியத்திகளிலுள்ள ஒரு ரூபமாகிய நன்கு கவரற்பாலதைக்கவராது சம்பவியாதாமென மிருதித்தன்மை யானே சமஸ்காரத்தாலுளதாந் தகைமை சாற்றற்பாற்றுந் அன்னண்மாகவே, சமஸ்காரத்தாலுளதாந் தகைமையின் நிலை பேற்றின்மாட்டோ மிருதித்தகைமையுபாதியாகும், மிருதித்

தன்மையின்நிலேபேற்றின்மாட்டோ சமஸ்காரத்தாலுள தரம் தகைமையாமென வொன்றை யொன்றுபற்றலாம். ஆதலின், மிருதியனுபவசங்கரம் நீக்கவொண்ணுததேயரம்.

198. உபயகாரண ஜன்னியத்தகைமையின்கண் சங்கரம் நீக்கவேலாமை.

மேலும், மிருதியனுபவங்கட்குக் காரணசாமக்கிரியாயுள்ளவைகள் பிரத்தியபிஞ்ஞையின்கண்ணே யெண்ணத்தக்கனவா, அல்வா, அலவேலாயின், யாங்ஙனம் அங்கிசத்தானும் பிரத்தியபிஞ்ஞானத்திற்கு மிருதித்தன்மையும், அனுபவத்தன்மையும், கூடும். இவ்வாறே, அவ்வாறதாந் தன்மையேலாயின், மிருதியனுபூதிகட்கு அதிப்பிரசங்கம் வருதலின் அதுவே சங்கரமாம். முதலதிலோ, தனியாகவே காரியவுதயவழக்காம். தனித்தனியாகத் தன்றன்காரியத்தில் ஆற்றற்றன்மையுண்மையின் சாமக்கிரியின் வேற்றுமைக்குக் காரியவேற்றுமைக்காரணத்தன்மையானே துணியப்பெற்றதாந்தன்மை யுண்மையின்.

199. தனியாகத்துணியப்பெற்ற சாமக்கிரியின் வேற்றுமைக்குக் காரியவேற்றுமை யுடைமையாமெனக் கடாதல்.

இனியாண்டு அவைதனியாக உளவாமோ ஆண்டுத்தனியாகவேகாரியமாம். பிரத்திய பிஞ்ஞையின்மாட்டோ அவைகட்கு ஒரேபோழ்திலுண்டாந்தன்மை யுண்மையின் தழீஇயெழுதலின் தழீஇயே காரியமாம். குடமாடை முதலியவற்றின் சாமக்கிரிகட்கு இன்னணம் காணப்பெறுவிடினும்; அதனினும் விலக்கணவியற்கை மேயவாதலினிவைகட்கு இத்தகைமையியையும், ஒரு பொருளின் எத்தகைய இயற்கையுளதோ அத்தகைமை மற்றவை யாவற்றிற்கும் பற்றுமென்பதின்றன்றே, உலகவிசித்திரப் பங்கப்பிரசங்கம் வருதலின் என்பதாம்.

200. சாமக்கிரிகளின் அன்னியோன்னிய சககாரியத் தன்மையினும் அதனபாவத்தினுந் தூடணம்.

இஃதாகாதாம், யாண்டவற்றிற் கொருமித்திருத்தலாமோ ஆண்டென் பரஸ்பரசககாரித்தன்மை அவற்றிற்குடன்பாடா? இன்று? இன்றேலாயின் ஒன்றற்கொன்றொருமிக்கு மிலக்கண ச்சிறப்புபயோகமற்றதாம். காரியத்தைப் பயக்கும்பொருட் டொன்றற்கொன்று சககாரிபாவமின்மையாற் பிரயோஜன மாகாமையின்; அதனனே துல்லியமாதலின் தனித்தனியே காரியமாமெனச்சாரும். இனி யொன்றற்கொன்று சககாரியத் தன்மை அவற்றிற் கவாவப்பெறுமேலாயின் அனுபவத்தினங் ஙசத்தும் சமஸ்காரத்தின்வியாபாரமாம், ஸ்மரண அங்ஙசத்தும் இந்திரியத்தினதாமென நியாமகமாகவெண்ணிய அவற்றிற் ரண்டங்ஙசத்தும் பொதுமைபுண்மையின் மிருதியங்ஙசத் தும் அனுபூதி அனுபூதியங்ஙசத்தும் மிருதியெனப் பிரத்திய பிஞ்ஞையின் மாட்டனுபூதி மிருதிசங்கரத்தானே வச்சிரப் பூச்சாம்.

201. நான்காவதுபக்க நலமின்மை.

அனுபவமே யாமென்னும் பக்கமும் நலமுடையதாகா தாம்; ஆமேல் தத்தையால் வரைந்துகொண்டது அபேதப் பற்றுக்கோடாதலின்கட் சமஸ்காரமும்ன்றும், இந்திரியசம்பந் தமு மன்றுமென அதற்கவ்விடயத்தன்மையினடைவாம்.

202. சமஸ்காரத்தை வாயிலாகவுடைய பிரத்தியாசத்தியால் இந்திரியத்தான் அதன் கவர்ச்சிச்சங்கை நீக்கம்.

சமஸ்காரத்தை வாயிலாகவுடைய பிரத்தியாசத்தியாகிய சம்புக்த சமவேதவிசேஷணதையினனே அதன் கவர்ச்சியா மென்னற்க; ஆயிற்சிலபால் அவனிவனு? அல்லனு? வென் றுமையம் நிகழாமற்போம். தோடவயத்தானே ஆண்டதன் பிரதாசமாமன்றிச் சம்பத்தவிசேஷணத்தன்மையானே யாகாதா மெனின்? சமஸ்காரமில்லாமலும் தோடவயத்தானே அத

னடைவுகூடலின். வத்துவை யொளிர்விப்பதன்கண்ணே தோடத்தன்மையைக் கூறும்யுக்திகூற முடியாமையின். சிலபால தற்கு அவத்துப்பிரகாசித்தன்மைபுண்மையின் தோட்டமாமெனின்? யாங்ஙனம் அக்கமுதலியவற்றிற்கு மஃதாகாமற்போம்? விசிட்டத்தன்மையானே யவ்வாறுந்தகையமக்குப் பிரகிருதத்தின்மாட்டும் பரிகாரமின்மையின். இதற்கவத்துவை யொளிர்விக்குந்தன்மை சிறப்பின்றியாண்டுமொன்றுறுதாம். இருக்கப்பட்டபொருளின்கண்ணும் தோட்டத்தான் அவத்துவிற்கே பிரகாசமாயின் ஐயத்தான்விழைந்தார்து முயல்கைமுதலியன சம்பவியாவாம்.

203. நிச்சயத்தடைத்தன்மையே தோடத்தகைமையென்னுங் கடாவை யோக்கல்.

வத்துவிடயத்தின்மையிருப்பினும் தோடத்தானே அநிச்சயத்தன்மையாமெனின்? உண்மையாக அதற்குக் கல்பின்மையின் அதனது பிரகாசத்தில் அதுவே ஐயத்தொருபக்கத்தில் ஒளிர்ந்ததென யாங்ஙனம் அதன் அநிச்சயத்தன்மையென்க. நிச்சயப்பொருளுக்குச் சம்சயகோடியின்பால் கண்டனமில்லாதபோது சம்சயத்தின்கண் அதனபாவமாகிய அநிகத்தைக்கவருந்தன்மையிருப்பினும் நிச்சயமானது தடையற்றிருத்தலினனே அபாவநிச்சயங் கேவலம் அயற்கோடியாயதிகமாம்.

204. சமுசயத்தன்மைச்சாதியான் வரைந்துகொண்டதை யுண்டாக்குந்தன்மை தோடத்தன்மையாமென்னும் பக்கமிடல்.

சமுசயத்தன்மை ஜாதியாம், அதனை யுண்டாக்குவதே தோடமாமெனின், அற்றன்றும், இஃதஃதா? அல்லவா? என்னும் சமுசயகோடிப்பொருளைக் குறிப்பிப்பதோடு இனிதுகோடலின் வாசப்தப்பிரதீதி வியவகாரங்களின் அபாவ அடைவாதலின், பிரதீதியோடும் வாகாரார்த்த சம்பந்தமாயின் புலனு

றின்றேறை இலனெனை அதனடைவாதலின் வாகாரப்பொ
ருள் பிரதிதியையடைந்திருப்பதாயினும், நிச்சயத்தகைமை
நிகர்ப்பக்குற்றியைக் கொணுமகனேயேனும் என்னும் குற்றி
மகன்பாலுள்ளபக்கத்ததாய விவகார அடைவுகூடாமையின்.
ஆகலின் வாகாரப்பொருட்கு ஞானதருமத்தன்மையுண்மை
யேற் சாகூபாத்காரித்தன்மை முதலியவற்றைப்போலும், விட
யத்தேறடு விரவாமையேயாமென்பதாம்.

205. தோடத்தானே பிரத்தியாசத்தியின்றிரஸ்காரத்தான்
ஐயமாமென்னும் பக்கநீக்கம்.

சம்பந்தமிருந்தபோதினும் மாசின்வசத்தான், சம்பந்தங்
காரணமன்மையின். ஆண்டு மனத்தானே கவரப்பெறுதாம்
எனப்பெறுகவெனப்பேசுக; தோடமிருந்தபோதினும் பொ
ருள்கட்குச் சமஸ்காரத்தோடும், சமஸ்காரத்திற்கு மான்மா
வோடும், அதற்குமனத்தோடும், அதற்கும் வெளிப்பொறி
யோடும், ஆம்சம்பந்தம் அவாவின்மாட்டே அதன் பொருளொ
ளிர்வு முதலிய நியமங்கூடலின், மீண்டுயாதுதான் கொளின்
மதத்திற்சம்பந்த அகாரணத்தன்மையாதலோ ? சமஸ்கார சம்
பந்தத்தை யவாவாமல் அங்ஙனேயப்பட்டலாமேலாயிலே அனு
பவியாதாதல், மறந்துதானுதல் அன்னணமையப்படலாமே.

206. சம்பத்தவிசேஷணத்தகைமைச் சம்பந்தத்தானே
அபேதக்கவர்ச்சி கூடாமை.

உண்மையாயோ, சமஸ்காரத்தைக் கவராதமனத்தானும்,
ஆன்மாவைக்கவராத விழிமுதலியவற்றானும், அத்தகைய சம்
பந்தத்தானே கவர்ச்சிகூடாமையின் நியமமாக அப்பொறி
யானே கவரப்பெறுதலைப் பற்றுக்கோடாயுடையதை யெதிர்
மறையாக வுறுவதினும் வேறுயதன் கவர்ச்சியில், தன்னைக் கவ
ரப்பெற்ற சம்பத்தவிசேஷணைக்குச் சம்பந்தத்தன்மைநியம
மிருத்தலின் ; மாறுயிலே நீர்ப்பரமாணுமுதலியவற்றில், மற்

றிடத்தே கவரப்பெறுதலின் வடிவத்தகுதியின்மை நீக்கப் பெற்ற பிருதிவித்தன்மை முதலியவை விழிமுதலியவற்றுனே கவரப்பெறலாமே. பொறிசரிக்குந்தேயங்களில் பரமாணுவுடை மையின்மைநியம அங்கீகாரம் பொருத்தமுடையதாகாதாம். சப்தாபாவப்பிரத்தியக்கத்தன்மை வாதிமதத்தில் சுரோத்திரே ந்திரிய விசேஷணத்தகைமையேழாவதாய சம்பந்தமாம். ஆண் டுச்சம்பந்தவிசேஷணதை வேண்டுவதின்று மென்பதனுனும் பிறழ்ச்சியின்றுமென்க.

207 சமஸ்காரத்திற்கே மனப்பிரத்தியாசத்தித்தன்மைநீக்கம்.

ஆன்மசம்புக்தமனப்பொருட்டு முன்னனுபவித்தபொரு ளாண்ம சம்பந்தமே சமஸ்காரமென அதன்பொறிப்புலப்படா மை குற்றத்திற்கிலக்காகாதாம், இந்திரியார்த்த சந்நிகர்ஷத்தை யங்கீகரித்தலின் பெரிறிக்குப்புலப்படாத பிரத்தியாசத்தியை யுடன் படுவதானுந் தாண்டமுடியாதாம்; அன்னணமாயினே, அஃதென்னுமங்கிசத்தில் விழிமுதலியவற்றிற்குப் பிரத்தியா சத்தியின்மையின் பிரத்தியபிஞ்ஞைக்கு விழியாற் கவரப்படா மையினடைவாம். இஃதென்னுமங்கிசம் விழி முதலியவற்று னே, அஃதென்னுமங்கிசமோ மனத்தானேகவரப்பெறும், அத னிதனபேதமோ எதனுலெனவியம்பியதும் சுழன்று தொடரு மென்பதாம்.

208. கூடப்பெறுதற்கே விழியாற்கவரப்படுதலாமென்னும் மதநீக்கம்.

இதனுனே, சமஸ்காரம்-சககாரிமாத்திரமாகும், இந்திரி யத்தின் அதிப்பிரசங்கம் நீக்குவதுமாம், பிரத்தியபிஞ்ஞையின் கண்ணே அதன்பொருள் பொறியோடு பொருந்தாமலே புலப் படுகின்றது மயக்கப்பொருள்போலும். பொறிக்குப்பொருந்தி யதைப் புலப்படுத்துவதுஉம் இயைபாஞ்சககாரியின்றியமை யாதிருத்தன்மாத்திரையாம் அதுவுமிதமங்கிச வியைபாலே

யாம், யாவற்றையுங் கவருமியைபுசகாரியாகாதாம் என்ப தும் நீக்கப்பட்டதாம்; அஃதிஃதா? அல்லவா? வென்னும் ஐயமின்மையி னடைவினனே யென்க. அதனைக் கண்டேன் என்பதாதிமிருதியும் இவ்வாறனுபவமே யாம், மனத்தினது ஆன்மசம்யோக உதவியுற்ற ஆன்மபொருளியைபானசமஸ்கா ரத்தானுண்டாவதாய அதற்குப்பொறிப்பொருட் சம்பந்தத்தா லுளதாந் தன்மையினனே யாமென்க. மனத்தோடு ஆன்மசம் யோகமிருத்தலின், ஆன்மசமவாயமாகக் காட்சிப்படுத்தப்படு வனவாய ஞானுகிகளோடு எண்ணப்படும்பொருட் கொப்புமை யுண்மையின் என்பதாம்.

209. பேதாபாவமாயாதல், சொரூப அபேதமாயாதல் இலங்கல்கூடுமென்னும் பக்கநீக்கம்.

இதனனே, அஃதென்னுந்தன்மையான் வரைந்துகொண் டதை எதிர்மறையாகவுடைய அன்னியோன்னிய அபாவாபா வமாயாதல் சொரூப அபேதமாயாதல் இஃதிலங்காநிற்கும் என்பதுநீக்கப்பெற்றதாம். அன்னியோன்னிய அபாவாபாவம் தத்தையிதந்தை யவச்சின்னங்களின் அன்னியோன்னியமே யாம். அச்சேர்க்கையொன்றுனே யினிதுகவரப் பெறுவதன் றும். இவ்வாறே சொரூப அபேதத்தின்மாட்டும் அவற்றின் றருமவொருமை யறியப் பெறுதலேயாம் அதனைக்கவர்வதின் மையினன்.

210. மிருதிக்குச் சமஸ்காரத்தாலுண்டாந்தன்மையுண்டேனும் அனுபவத்தன்மையினடைவாம்.

சமஸ்காரத்தாற் புலப்படும் விடயத்தில் ஞானமனுபவ மாமேலாயின் மிருதியும் அனுபூதியாகாமை யாண்டையதெ ன்க. இனிச்சமஸ்காரா தீனத்தன்மை மாத்திரையானே மிரு தித்தன்மையாகாதாம்; மற்றேர், அனுபவகாரணத்தோடு கூ வாதசமஸ்காரத்தாலுளதாந் தன்மையினனேயாம். அதனனே

அதிகமாகிய அருத்த அக்கவியைபை யவாவியபிரத்தியபிஞ்ஞானம் அனுபவமேயாகும் மிருதியாகாதாம் எனின்! அற்றன்ரும், சமஸ்காரத்தோடு சாராத அனுபவகாரணத்தாலுளதாந் தன்மையினுனே அனுபவத்தன்மையுளதாம்; பிரத்தியபிஞ்ஞானமோ சமஸ்காரசகித அனுபவகாரணத்தாலுளதாயது மிருதியேயாமென மாறுபாடாக ஆகாதென்னைகொலோ! பிறவிடத்தேமிருதி அனுபவ காரணத்தோடடைவுற்ற சமஸ்காரத்தாலுளதாயதெனவோ வின்ரும்மாலோவெனின்? பிறவிடத்தில் அனுபவமும் சமஸ்காரத்தோடு சார்ந்தபொருட் பொதியொற்றுமையானேயுளதாய தெனவுமின்ரும்மென வொப்புமையானே அபாதகமாம்.

211. பிரத்தியபிஞ்ஞானத்தின்ஏக அனுபவத்வபக்கநீக்கமுடிபுரை

ஆதலினின்னணும், இதுதானென நிறுவவதில் அளவையின்மையின் தான்கற்பித்த விவத்தான மாறுபாடாகவும் கற்பனைசம்பவித்தலின் பிரத்தியபிஞ்ஞானம் உபயகாரணவொன்றுபாட்டான் மிருதியும் அனுபவமுமாமென எண்ணற்பாலதாம். இவ்வாறுகவே மிருதியினின்றும் விலகியதாக அனுப்பவத்தன்மைச்சாதியுளதென்னும் கெட்டபேரவா இடம்பெறுதலேயாகும். விடயாங்கிசத்தின் மிருதித்தன்மை அனுபவத்தன்மைகளின் விவத்தையியற்றுவானியலாததாகும். அதனீக்கநிவேதன நிகழ்த்தியிருத்தலின், அதனுனே அந்தஞானமே அதனங்கிசத்தில் மிருதியும் அனுபூதியும் எனவியையினும் முரண்மதிறுமக்நிலதாயின் அதனதீனமாய அப்பொருளிலே பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மை வீழ்ச்சியில் அஃதுளதாகுக.

212. சங்கரத்தான் அனுபவத்தன்மை, சாதியன்ரும்மென நிரூபித்தல்.

இப்பாத்தகத்தானே முரண்முற்றலான் அனுபவத்தன்மையங்கோரத்தில் மிருதியினும்வேரூய அனுபவத்தன்மையென்

னுங் தொடர்புசாக்ஷாத்காரி ஞானமனுமிதி முதலியவற்றின் காரணமென்பது அனுபவபலத்தானே நிலைபெறுத்தற்பால தாம் என்னும் பிரதிதிகலகமும் கழிக்கப்பட்டதாம்.

213. அனுபவவிரோத உற்பாவனமும் அதன் சமாதானமும்.

அற்றேலோ, அனுபவமேசரணமீண்டாம், பிரத்தியபிஞ் ஞான்த்திலோ அனுபவத்தன்மையே அனுபவிக்கப்படுகின்ற தேயன்றி மிருதித்தன்மையின்றும். அதனானே, சமஸ்காரத்தா லுளதாந் தகைமைபிருப்பினும் பொறிப்பொருளொற்றுமை யின் மிருதிகுறித்து அனுபவத்தன்மையே யெனப்பக்கம் நிறு வுவதிலும் இதுவேயளவையாம், அன்றுயிலே பிரத்தியபிஞ் ஞானத்தின்கண்ணே அனுபவத்தோற்ற முண்டாகலாகாதாம் என்னும்பிரதிதிகலகத்தானே எதிர்த்துநிற்றலாகும் அற்றன் றும், இதந்தைதத்தைகளே யிலக்குவனவாகிய அனுபவ ஸ்மர ணபாகங்களிருத்தலினானே அனுபவத்தின தொருபக்கத்தின் முக்கியமாக்கி யளவையிட்டறிவிப்பான் ஈண்டாற்றலின்மை யின்.

214. பிரத்தியபிஞ்ஞையின் கண்டனத்தின் உபயோகம்.

இதனானே, மிருதியனுபவ சங்கரப்பிரசங்கத்தானே அனு பூதிபதத்தானே விலக்கப்படுவது வாளாபோமெனக் கருதத் தக்கதாம்.

215. அனுபவத்திற்கு மிருதியை நீக்குந்தன்மையின் நீக்கம்.

பிரத்தியபிஞ்ஞானம் விலகாதொழிக, வேறுமிருதியோப விக்குமெனப்பகரற்க ; அதனையும் அனுபவத்தன்மையாலே யும்மாலின்றியமையாது அங்கீகரிக்கத்தக்கதாம். அங்ஙனமன் றேல்:— குடமாண்டிருந்தது என்பதாதிமிருதியின்கண்ணே பூர்வகால விசிஷ்டகுடம் புலப்படுகின்றதன்றே ; சமஸ்காரத் தாற் புலப்படும் அப்பூதத்தகைமை பூர்வமனுபூதமன்றும் ; மாறுகப் பூர்வம் வர்த்தமானத்தகைமையே அனுபூதியாற் கவ

ரப்பெற்றதாகும். ஆதலினிஞ்ஞான்று பூர்வத்தன்மை புண்ர் வின் சாமக்கிரிக்கலப்பால் அதுவித்துவென்னும் பிரத்யபிஞ்ஞா னம்போலும் விசிஷ்டஞானமாய இதுவும் மிருதியனுபவ வடிவமென்றே யங்கீகரிக்கத்தக்கதாம்.

216. பிரத்தியபிஞ்ஞானத்தின் அனுபவத்வ கண்டன அதிதேசம்.

இதனுனே, அனுபவ சாமக்கிரிசகித சமஸ்காரம் அனு பவ காரணமென்னும் பக்கத்திற் பூர்வம் வினவியதில் இம் மாசையு மியைவித்துக்காண்க. அவ்வாறுகவே, மிருதியினெ ழிவொன்றலின். அந்த ஸ்மரணமின்றுமன்றே எதன்கண் ணஃதொளிராதோ ; அதனனும் விலக்கப்படுவது கூடாமை யேயாம்.

217. களவாடியீ தத்தையின் ஸ்மரண கண்டனம்.

தோடவயத்தாற் பிரமுஷ்டதத்தாம்ச ஸ்மரணமுண்டா மெனச் சிலரியம்புவர் அதுவுமட் பொருந்தாதாம். அதனதி ஸ்மரணத்தன்மையி லளவையின்மையின், அனுபவ சாமக்கிரி யில்லாமையினுனே எஞ்சியதாக மிருதித்தன்மையா மென் னற்க; பொறிப்பொரு ளொற்றுமையின் விலக்கத்தானே அனுபவ சாமக்கிரியின்மையின் எஞ்சியதாக அனுமிதி முத லியவற்றிற்கும் மிருதித்தன்மையி னடைவாதலின். சர்வானு பவ சாமக்கிரி யசம்பவத்தா லாமாலெனின்? மீண்டியாங் ஙனந்தான் ஆயுஷ்மானல்தத்தையி னங்கிசந் தனந்த வெள்ளி முதலியவற்றின் ஞானசாதனசாமக்கிரி அனுபவ ஹேதுசாமக் கிரி யன்றென்று துணியப்பெற்றதோ! ஐந்துபிரமாண காரண சாமக்கிரி யசம்பவத்தானெனின்? நான்கு பிரமாண ஜனக சாமக்கிரி யசம்பவத்தானே எஞ்சியதாக ஸ்மரணத்தை ஐந்தா வது பிரமையாக வுன்னு னிலைபெறுத்தப்படாத தென்னை கொலோ! ஐந்துபிரமாண காரணசாமக்கிரியில்லாதவழி

யுள்ளதாகியஞானம் மிருதியாமென யாண்டடைவுற்றனைகொல்! ஆண்டுக்குடமிருந்தது என்பதாகி ஞானங்கட்கு அனுபவத் தன்மையாமென வுபந்யசிக்கப்பட்டமையின்.

218. எஞ்சியதாகச் சமஸ்காரமாத்திரத்திற்குக் காரணத் தன்மைச் சங்கை.

காட்சியாதி காரண சாமக்கிரி கூடாமையின், வெள்ளி மாத்திரமே முன்ன ரனுபவிக்கப்பட்டமையின், அவ்விடய சமஸ்காரம் சம்பவித்தலின் சமஸ்காரமே ஹேதுவென அங்கீ கரிக்கப்படும்; அயற்காரணத்தானே கற்பிக்கப்படமாட்டா தாம். பொறிப்பொருளொற்றுமை முதலியவை கிடையாத வழி யுளதாவதாகிய அனுமானுதி அனுபவிக்கப்படாத விட யமாதலினானே, அதனை ஹேதயமாத லணுகாதென அதன் காரணம் குறி முதலியவையென வுடன்படலாகும்; ஆகவே, வேறளவையோடு கூடாத சமஸ்காரத்தா லுளதாதலாம், அதனை லிலக்கப்படலாதலாம், சாதிச்சிறப்பே மிருதித்தன்மை யென்பதாம்.

219. எஞ்சியதாற் றுணிவின்மை.

அன்னணமாகாதாம், ஆண்டு அக்கத்திற்கே காரணத் தன்மை ஆகாதென்னைகொல்? எதனாற் சமஸ்காரத்தாலாந் தன்மை சாதிக்கப்பெறுகின்றதோ, அப்பொருளோடு அக் கால் அக்கத்திற் கொற்றுமையின்மையின், ஒற்றுமையற்ற அதற்கும் உணர்வைப் பயக்குந்தன்மையாமேல் மேல்வழக் குண்டாதலின் அதற்குப் பொறியாற் பயந்த தன்மையின்று மெனின்? அன்றும், கேவல சமஸ்காரத்திற்கும் அதனைப் பயப் பதில் மேல்வழக்காங்கே நிலைபேறுடைத்தாதலின். பொது வாய்க்கதுவுந் தன்மப்புலப்பாடுமுதலிய உதவியோடுற்ற சமஸ் காரத்திற்கு அதனைப்பயப்பதில் மேல்வழக் காகாதெனின், ஆற்றன்றும், அவ்வுதவியானே உதவிபெற்ற பொறிக்கும் அத

னைப் பயப்பதில் மேல்வழக்கு மேவாமையின் ஆயின் அனுப விக்கப்படாததின்கண்ணும் வழக்காமெனின்? ஆகாதாம், நினைக்கும், அத்தருமத்தன்மையானே யறியப்பெறாது அத்தருமமுடைய தறியப்பெற்றவழி அதனது சமஸ்காரமுடையானுக்கு மிருதியினடைவான் விடையொருபடியாம். அச் சமான தருமதரிசனத்தாலாகிய சமஸ்காரமற்றவனுக்கும், அவ்வாறாயின், சகசரிதமாகிய வெள்ளிமுதலியவற்றின் பொறிபயந்தபுலப்பாட்டின் வழக்காமெனின்? என்னற்க, நின்மதத்தும் அத்தகைய வெள்ளி முதலியவற்றின் சமஸ்காரமுடையானுக்கு வெள்ளி முதலியவற்றின் ஸ்மிருதி வழக்கொப்பாதலின்.

220. சமஸ்கார நாசகத்திற்கே இந்திரிய சககாரித்தன்மை.

ஆதலின், நினக்குக் காலத்தடை முதலியவற்றானே சம்ஸ்கார லோபமாமன்றோ, அதனபாவத்திற்கு ஏதுத்தன்மையை யங்கீகரித்தபோதினும் மேல்வழக்கு மேவாதாம். அஃதிங்ஙனமன்றோ:—"மாலுணர்த்துஞ்ச மக்கார நிற்கெது, வாலதொப்புப்பி ரத்திய பிஞ்ஞானங், காலதேசக காரி விழிக்குற, மேல டைவினை மேவவொட் டாததே" அதனைப்புமைப் பிரத்திய பிஞ்ஞானமோ நினைக்கத்தக்கதன்றினவு வாயிலாக வாமென்னு மிதுவும் ஒப்பேயாம்.

221. மயக்கத்தலத்தி லொற்றுமைப்படாததற்கே போறியாலாந் தகைமையைப் புகலல்.

ஆயினும், பிறவிடத்திற் பொருளொற்றுமையிலாது பொறிக்கு ஞானகரணத்தன்மை புலப்படக் கண்ட நின்றன்றோ வெனின்? அற்றன்றும். விசிஷ்டரூபமாக மயல்விடயத்தில் என்னால் அங்கீகரிக்கப்பட்டிருத்தலின், உதவியாயுற்ற தோட சக்திக்கேனுஞ் சம்பந்தத்வ முண்மையானே இஷ்டமாதலின், அன்றியும், வேறு பிரமாணத்தின் சகாயம்பெறாத சமஸ்காரத்திற்கும் பிறவிடத்தில் ஞானம்பயக்குந் தன்மையைக் கண்

டிலேமென அதுவுந்தான் யாங்ஙனங் கற்பிக்கப்பெறுமோ! பிரத்தியபிஞ்ஞானத்தின்கண்ணே சமஸ்காரத்திற்கு ஒப்பின் றிசஞ்தி சககாரித்தன்மை கற்பிதமாகும் இந்திரியத்திற்கென்ரு மெனின்? அற்றன்ரும், பிரத்தியபிஞ்ஞானத்தில் சமஸ்கார இந்திரியங்களென்னு மிரண்டிற்குமே காரணத்தன்மை யிருத்தலின் ஒப்பின் றிசஞ்தி யுதவியுடைமையின் காட்சி யொப்பாதலினென்க.

222. சாதிருசிய ஞானம்போலுஞ் சமஸ்காரத்திற்குச் சககாரித்தன்மை யுண்மையேல் தத்தை புலப்படுமேடைவாம்.

ஈண்டுச் சதிருசதரிசன சககாரித்தன்மையேல் சமஸ்கார சககாரித்வத்திற்கும் வழக்காம் பிரத்தியபிஞ்ஞானம்போலுமெனின்? அற்றன்ரும், அவ்வாரூபின், அதுபோலவே தத்தையின் புலப்பாட்டடைவாதலின். சதிருசதரிசஞ்தி சககாரித்தன்மையானே தத்தையி னங்கிசம் வந்துறுமேல், சமஸ்காரத்தாலாந்தன்மை யுபாதியாம். தத்தையின் பிரயோஜிகையாகிய சதிருசதரிசன சககாரிதையே தியாகிக்கத்தக்கதாம். சமஸ்காரம் அல்லவாமென்பது மேலாதாம்; சதிருசதரிசனத்தை விடுத்தச்சமஸ்கார மிருந்தபோதினும் அவ்வாறின்மையி னுணர்வின்மையின்.

223. இந்திரியத்திற்குப் பிராப்பியகாரித்தன்மையேல் பிரதிவந்தியைப் பிறப்பித்தல்.

ஆயினும், இருக்கும்பொருளி லிந்திரியத்திற்குப் பிராப்பியகாரித்தன்மை கண்டதைக்கண்டித்தன் முடியாதாமெனின்? அன்ரும், ஈண்டு, எங்ஙனம், அடைவி னுதவியையுற்ற இந்திரியத்திற்கு ஞாபகத்தன்மை கண்டனமோ, அங்ஙனமே, வேறு பிரமாணத்தின் சகாயம்பெற்ற சமஸ்காரத்திற்கும் ஞாபகத்தன்மை புலப்படக் கண்டனம் என அதுவும் அகற்றற் கணுகாததாம் என வியம்பினுமன்ரே. சமஸ்காரத்திற்கு மிக்

கிரியசம்பந்தத் தன்மையை யங்கீகரித்திருத்தலின் அதனபா வந் துணியப்பெறுமையின் என்பதாம்.

224. தத்தையி னங்கிச மோச நிராசம்.

தத்தையி னங்கிச மோச கற்பனையும் சுதந்திர சமஸ்காரத் தாலுளதாம் பக்கத்தின்பாலே அளவினுமீறி நிற்கும். இத் தத்தையினங்கிசமோச மியாங்ஙனமாய் தென்னு மாராய்ச்சி யதிகரிக்கின்றதாம். முன்னர் நிகழ்கால மூதலிப் காலச்சிறப் பாற் சிறப்பிக்கப்பட்ட வெள்ளி மூதலியவை ஓரனுபவத்தி லொளிர்விக்கப்பட்டமையின் அதனலுளதாய சமஸ்காரத்தி னும் அவ்வாறே யொளிர்விப்பான், றகுதியதாமாதலின் ; பிரத் தியபிஞ்ஞைபின்கண்ணே அவ்வாறே பயன் காணப்படுதலின். மாசின்வயத்தானே தத்தையினங்கிசமோசமெனின் ? ஒல்லா தாம், விடயசம்பந்தமான் தியற்கையா யுண்மையின் சமஸ்கா ரத்தில் அதனுலோபமிலாமையின். மாசான் மிருதியின் மாட் டன்னணமெனின் ? அம்மாசுதா னியாதுகொல் ? மற்றையர்க் கெதனனே மயலுற்பத்தியாமோவெனின் ? ஆயின், அவ் வெள்ளிக்கொப்பா மிவ்வெள்ளி யென்பதன் கண்ணேனும், அதேவெள்ளி வியக்தி யிதுவென்பதன்கண்ணேனும், மீண்டு மதே வெள்ளி முற்பட்டதென்பதன் கண்ணேனும் பொது வாகவே தத் சப்தத்தானே பராமரிசிக்கப்பட்ட வெள்ளிக்கும் மயலின்மாட்டுத் தத்தாங்கிசமோசமாம், தோடமிருத்தலின், மாறுபிலேனு, இது வெள்ளியென்னு மங்கிசத்தும் அந்தவுணர் வின்கண் தத்தையி னங்கிசமோச மாகாதாம், என இவ்வடை வின்பின்னடைவு சாலுமென வமைவாம்.

225. சித்திரரூபம்போலப் பிரத்தியபிஞ்ஞைக்கு விலக்கணத் தன்மையின் நீக்கம்.

பிரத்தியபிஞ்ஞையென்பது ஸ்மரண அனுபவங்களினும், அயல்வகையேயென வறையற்க ; அனுபவத்தன்மையின்மை

யானே அப்பிரமாத்தன்மை யுறுதலின்; உறுகதானங்ங னென வுரையாடற்க; நிலைபெறுத்தும் வாதியினானே திரத் துணிபிற் பிரமாணத்தன்மையானே உபந்நியசித்திருத்தலின். இத்தகைய பிரசித்த இலக்கியத்தியாகத்தானே இலக்கண உப பாதனத்தில் அநியமம்வந்து பொருந்துமென்பதாம்.

226. உபசங்காரம்.

ஆகலின், ஜாதிவாசகமாகிய அனுபவபதம், மிருதியினின் றும் நீக்கற்பொருட்டுப் பெய்ததாமென்பது எவ்வாற்றானும் பொருந்தாதென்பதாம்.

227. இரண்டாவது மூன்றாவது கற்பம் பொருந்தாமை.

மிருதியன்னியத் தன்மையேனும், மிருதியிலக்கணமில தாந்தன்மையேனும், அனுபவவார்த்தமாகாதாம். கூறியமுறை யே மிருதியனுபூதி சங்கரங் காண்பித்திருத்தலின் விலக்குத லாதல் பொருந்தாமையினென்க.

228. மிருதி யயற்றன்மையின் விகற்ப உபந்யாசம்.

இதனானும் அனுபவவார்த்தம் மிருதியன்யத்வமன்றும் அங் ஙனமன்றே:—மிருதியன்யத்வம் ஒரு சிறிது ஸ்மரண அன்யத் வமா? சர்வமிருதி வியக்தியன்யத்தன்மையா? மிருதித்தன் மையற்றதன்மையா? கருதியது யாதுகொல்?

229. முதல்விகற்ப நீக்கம்.

முதலதிலோ, மற்றொருமிருதியி னயற்றன்மையானே மற்றொரு மிருதியும் அனுபூதியாகலாமே. வேறு ஸ்மரண வியக்தியினின்றும் வேறுபட்ட ஒரு ஸ்மிருதி வியக்தியானது ஸ்மரணமே யாகாதாமென்றுகாதன்றே; எதனாலதனன்னியத் தன்மை மிருதியன்னியத் தன்மையாகாதோ.

230 இரண்டாவது விகற்ப நீக்கம்.

இரண்டாவது மேலாதாம், எம்மனோது மிருதி வியக்தி களினின்றும், உன்னுல் யாங்ஙனந்தான் அயற்றன்மை பிர

மைக்குத் துணிதல்கூடும்? அவையாவற்றையு மறிவானுனக் காற்றலின்மையின். அங்ஙனமன்றே:—ஆண்டு அயலானது உணர்வின்கண் ணயலானுக்குக் காட்சிகூடல் நம்மனோர்க்குக் கூடாதன்றே, அனுமான அருத்தாபத்திகளும் ஆகாவாம்; குறிபொருந்தாமைகள் யாண்டும் அற்ப அறிவினரான் அறிவான் முடிவுபெறுமையின், சத்தமுமாகாதாம் யாண்டு மதற்கசம் பவ முண்மையின், உபமானுதியசம்பவமும் வெளிப்படையே யாம். ஆகையால் யாங்ஙனம் சர்வஸ்மிருதி வியக்திகளினின்றும் வேறென நிரூபித்தல்கூடும்? என அறியாமையானே பிரமையி னிலக்கணத்துணிபின்மையாம். சர்வகால சர்வபுருஷசம்பந்தி களாய சர்வஸ்மிருதி வியக்திகளும் என்பாலிருக்கும் ஸ்மிருதி வியக்தியை மிருதித்தன்மையானே சாமானிய இலக்கண இந்திரியப் பிரத்தியாசத்தியாற் காட்சிப்படுத்தும் என்ஞற்காட்சியானே யுணரப்பெறுவனவாம் வியாப்தியைக் கவருங்காலத்தே வியாப்திய வியாபக வியக்திகளைப்போலும் என்னற்க; அவ்வாறுயின் ஒரு பிரமேயத்தைக் காட்சிப்படுத்தி னேனுக்குப் பிரமேயத்தன்மைச் சாமானியப்பிரத்தியாசத்தியினானே பிரபஞ்சமே பிரத்தியக்ஷமாகுமன்றே. இங்ஙன மங்கீகரிக்கும் நினதிம் முற்றறிவுண்மையை எமது சித்தத்தேயாது நிகழ்கின்றதென்பதை அறிதியேல் விசுவசிப்பேம்.

231. மூன்றுவது விகற்பத்தில் விகற்போபந்யாசம்.

மூன்றுவது முற்றுதாம், மிருதித்தன்மையற்ற தன்மையும், மிருதித்தன்மையின்மை யுடைமையா? மிருதித்தன்மையை எதிர்மறையாக வுடைமை பற்றுக்கோட்டின் வடிவமா? அதனுணர்வா?

232. மூன்றுவதன்கண் முதல் விகற்ப விலக்கு.

ஆதியதாகாதாம், அங்ஙனமன்றே:— மிருதித்தன்மை யன்னியோன்னியாபாவமும் மிருதித்தன்மையபாவமே யென

ப்பவிக்கும். அஃதுடைமையும், ஸ்மிருதிகளிலுமிருக்கும், மிருதித்தன்மையே மிருதியல்லவன்றே. அதனினும் மிருதிக்கும் பிரமாத்தன்மையினடைவாம், அது விலக்காமையின் விசேடணம் வீணேயாம் விசேடணமின்றியினே இச்சை முதலிய வற்றே மிகும் வழக்காம்.

233. மிருதித்தன்மையின் சம்சர்க்காபாவ விசாரம்.

மிருதித்தன்மையின் சம்சர்க்காபாவ மாண்டுக் கூறும் வேட்கையாமெனின் ? ஆகாதாம், அங்ஙனமன்றே :—மிருதித்தன்மையின் சம்சர்க்காபாவம் என என் கூறப்பெறுகின்றது ? மிருதித்தன்மை விசிஷ்டமாய சம்சர்க்கத்தினபாவமா? அல்லது சம்சர்க்க விசிஷ்டமிருதித்தன்மையி னபாவமா ? அல்லது தான் அயலேயா சிறிது இவ்வாக்கின்வகையான் வசனிப்பான் வாஞ்சை ? ஆகியமேல், மிருதித்தன்மைச் சம்சர்க்க அன்யோன்யாபாவம் மிருதியின்கண்ணே யிருக்கின்றதென அதேவழக்காம் மிருதித்தன்மைச் சம்சர்க்கம் மிருதியன்றும். அதனினே யிரண்டாவதுமன்றும், சம்சர்க்க விசிஷ்டமாய மிருதித்தன்மையே மிருதிவியக்தியென்பதில்லே யல்லவா ? அதனினே சம்சர்க்கவிசிஷ்ட மிருதித்தன்மையோடுகூட மிருதிவியக்தியின் அன்யோன்ய அபாவங்கொண்டு விளம்பியதோடம் விலகாமையின். இங்ஙனம், ஆண்டாண்டும் சம்சர்க்க விசேஷணங்கொடுப்பின் தோடம் விலகவேவிலகாதாம். விசேஷணங்கொடுக்கும் பரம்பரைக்கு வரம்பின்றியோடலின்கட்டாண்முடிவுபேறுகுக.

234. சம்சர்க்கத்திற்குச் சொரூபமே சம்சர்க்கம் என்னும் சங்கையின் நீக்கம்.

மிருதித்தன்மைச் சம்சர்க்கத்திற்கு வேறுசம்சர்க்கத்தானே சம்பந்தித்தன்மையின்றும், மற்றே, இயற்கையானே அஃதாம், பரம்பரை நேடல்கூடுமெனலியாங்ஙனம் ? எனக்

கூறற்க ; மிருதித்தன்மைச் சம்சர்க்கத்தின் அன்னியோன்னி யாபாவங்கொண்டு செய்தவழக்கைப் பரிகரிப்பான் முற்றிலும் முடியாமையின், வேறுசம்சர்க்க விசேஷணவசனத்திற்கு அதி கப் பொருண்முடிவுபேறின்மையின்.

235. இலக்கணத்தின் அசம்பவப் பீடிப்பு.

அன்றியும், அதனுபயவடிவத்தினும் அயலாக அச்சம் சர்க்கத்தை அங்கீகரியாதவனுல் மிருதித்தன்மைச் சம்சர்க் கம் மிருதித்தன்மைத் தன்மிவடிவம் என்னுமிவைகட்குச் சம் சர்க்கவடிவத் தன்மையை நிலைபெறுத்தப்புகின், அணுபூதி யில் அத்தகையசம்சர்க்கத்தின் நிஷேதயாங்ஙனம்? அணு பூதியின் சொரூப மில்லையென்ரு? அல்லது, மிருதித்தன்மை யின் சம்சர்க்கத்தினு? அதனு லெதன்நிடேதம்? வேற்றுப் பொருளுருவமேய சம்சர்க்கத்தின் நிடேதமேலா மிருதியின் கண்ணும் வழக்கவ்வாறே நிலைபெறும் மிருதியின்கண்ணே அவ்வேற்றுப் பொருளுருவமேயதன்னுன் அங்கீகரிக்கப்படா மையின்; சொரூபமே யவற்றின் சம்பந்தம் என ஆண்டு நின தங்கீகாரமாகும்.

236. சொரூப விசேஷ சம்பந்த வினு விலக்கம்.

இனியியம்பப்படுகின்றது, அணுபூதி மிருதித்தன்மைச் சம்சர்க்கங்களின் சொரூபம் சம்பவமாயினும் அவற்றிற்குப் பரஸ்பரசம்பந்த புத்தியைப் பயக்குந்தன்மையின்ரும், அத் தகைமையும்பாண்டு ஆண்டே அவற்றின் சொரூபங்கட்குச் சம்பந்தவடிவத்தன்மை சாற்றப்படும். இவ்வாரூவ்வாதாம் சிறப்பாயதொடர்ந்த தருமந்துணியப் பெரூக்கால் அதற்குங் கூடாமையுண்மையின், தொடர்ந்த தருமமயலொன்று சொற் றிடின் அதன் சம்பந்தத்தினும் வழக்கான் அயல் அயல் தொ டர்ந்ததருமம் நேடற்கு வரம்பின்றியோடல் வந்துறுதலின்.

237. சம்சர்க்கத்திற்குச் சம்பத்தபுத்தியைப் பயக்குந்தன்மை யிருப்பினும் அசித்தியாதல்.

இத்துணையானும் அனுபூதிவடிவத்தில் எதன் நிடேதம் வர்ணிக்கப்பட்டதாம். மிருதித்தன்மைச் சம்சர்க்க அனுபூதிகள் சம்பந்தித்தனவென்னும் வடிவினதாய புத்தியைப்பயக்குந்தன்மையையெனின்? அற்றன்றும், மயல்வடிவினதாய இத்தக்கய புத்தியைப்பயக்குந் தன்மையை நீக்குவான் கூடாமையின்; மெய்யானதின் எனின்? மெய்யாகிய இத்தகைய புத்திக்குண்மையை யங்கீகரித்தனையாயின், அனுபூதியின் மாட்டு மிருதித்தன்மையின் வழக்காம். இனியங்கீகரித்திலையாயினோ எதன்பொருட்டு அதனது பயக்குந்தன்மையின்மை நிரூபிக்கப்படும். இனிமுற்றினும் அசத்தேயாய அத்தகையபுத்தியைக் குறித்துப் பயக்குந்தன்மையின்மைத் துணிபையனுபூதிக் கங்கீகரித்தனையாயின் மிருதியின்கண்ணும் வழக்காம் எத்துணையம்மதிகள் ஆண்டுண்டாகின்றனவோ அவற்றினும் அயலாய் முற்றினும் அசத்தாய அத்தகைய மதியைக்குறித்துப் பயவாப்பான்மை மிருதியின்பாலும் சம்பவித்தலின். அத்தகைய சர்வமதியையும் குறித்தே பயவாத்தன்மையனுபூதிக்காம் இன்னணம் மிருதிக்கோ இன்றுமெனின்? அன்னணமாகாதாம், சர்வ அவ்வியக்திகளினுணர்வு கூடாமையின். அன்றியும், சர்வமென்பதன் பொருள்யாதோ, இன்மையாய யாவுமா? உண்மையாயயாவுமா? இனியுண்மையு மின்மையுமா மூபயத்தையுங் குறித்துப் பயவாத்தன்மையா? ஆதியதிலும், மற்றதிலுமோ, மிருதியின்கண்ணும் அதனைப்பயவாத்தகைமையிருக்கின்றதே யாம், மிருதித்தன்மைச் சம்சர்க்கமிருதிகள் சம்பத்தங்கள் என எத்துணைப்புத்திகள் மிருதிவியக்திகளில் உண்டாகின்றனவோ அவைகளைப் பயக்குந்தன்மை தனித்தனி மிருதிவிய்க்திகளிலதாகும், யாதாமொரு உண்மையா யிராநின்றதை யது பயு

வாத்தன்மை முன்னரே முனியப்பெற்றதாகும். மூன்றுவதிலோ அனுபூதியின்கண்ணும் அதனைப்பயவாத் தன்மையின்றும், இராநின்ற உண்மையாய அத்தகைய புத்திக்குப் பாவத்தானேனும் அபாவத்தானேனும் இருப்பதை யில்லாததைப் பயவாத்தன்மை சம்பவியாமையின்.

238. பாட்டவிளவிலக்கம்.

இயைகவிது, மிருதித்தன்மையினது அன்யோன்யாபாவங்கொண்டு எவ்வதிவியாப்தி காண்பிக்கப்பட்டதோ அது பொருந்துவதின்றும். பேத அபேத வாதிமதத்தில் மிருதித்தன்மைப் பேத அபேதத்திற்கு மிருதியோடுகூட அங்கீகரித்திருத்தலின். எவற்றிற்குப் பேதாபேத மிருக்கின்றதோ அவற்றிற்காண்டு அன்யோன்ய அபாவ மங்கீகரியாமையின். இங்ஙனியையாதாம், மிருதித்தன்மையினது பேதாபேதம் மிருதியோடும் அனுபூதியோடுமன்றென யாங்ஙனந் துணியப்பெற்றதோ? அனுபூதியோடுகூட மிருதித்தன்மை விசிஷ்டப்பிரமையின்மையினெனின்? சத்தியத்தினதா? அசத்தியத்தினதா? என்பதாதி யியம்பிய விகற்பமாசு மருவலின். முன்னின்மைப் பிரதியோகியினதெனின்? கூடாதாம், அனுபூதியின்கண்ணே அத்தகையதை அங்கீகரித்தலானே அனுபூதிக்கத்தகைமை யடைவுறுதலின். மிருதி மிருதித்தன்மைகளின் அன்னியோன்னியாபாவாபாவமாகிய அன்னியோன்னிய வடிவம் அனுபூதியின்கண்ணும் ஒப்பேயாம். மிருதித்தன்மையின் அன்னியோன்னியாபாவம் அனுபூதியாகாதாமென அறைந்தாம் திரும்பும்.

239. அன்னியோன்னிய அபாவசம்சர்க்க அபாவங்களின் ரோற்றப்பாடால் வந்த விலக்ஷணத்தகைமையை விலக்கல்.

இனிப் பேதாபேதங்கொண்டு பரிகரித்த தொவ்வாதொழிக; ஆயினும், இதுவதுவாகாதாம், ஈண்டஃதில்லை யென்

னும் தோற்றத்தைச் சான்றுயுடையதேயாகும் அன்னியோன்னியாபாவ அத்தியந்தா பாவங்களின் வேற்றுமையெனின்? அற்றன்றும், பிரதியோகிவடிவ வுபாதி விசித்திரத் தகைமையின்மையினுனும், அபாவத்தின்கட் சாதியாதி பேத மங்கீகரியாமையினுனும், அவற்றின் பேதமதியே மெய்ம்மை மேவலியலுபவியாததாய்ப் பொய்ம்மதியாகுமென அஃதை யாதரியாமையின்.

240. இலக்கணத்தானும் அன்னியோன்னியாபாவ சம்சர்க்கா பாவங்கட்குப் பேதநீக்கம்.

தனது பிரதியோகி சமானகால சமாநாதிகரண அபாவம் அன்னியோன்னியாபாவமாம் அதன் அன்னியோன்னியாபாவத்தையுடைய அல்லபாவம் சம்சர்க்காபாவமாம் எனச் சாற்றுக; சம்பவித்தபடி ஆன்மாசிரயாதி அனுபவமின்மை, தன் வேற்றுமைத்தொடர்பின்மை, அவ்வவ்வுணர்ச்சி, என்பவைகட்கு விடைபகரப்படா வழக்காதலினென்க.

241. வேற்றிலக்கணவாயிலாகப் பேத நீக்கம்.

அற்றேல், சம்சர்க்கப் பிரதியோகியையுடைய நிஷேதம் சம்சர்க்கபாவமாம், தாதாத்மியப் பிரதியோகியையுடைய தாதாத்மிய அபாவமுமாம் எனக் கூறுவதானே அவற்றின் கலப்பணுகாதாம். யாதொரு சம்சர்க்க தாதாத்மியத்தின் நிடேதமுளதோ அது சம்சர்க்கநிடேதமே யாவதில்லையன்றே. தாதாத்மியப் பிரதியோகியுடைமையின். இங்ஙன மியம்பலேலாதாம் பொருள் பண்பு தொழில்களினது சமவாயிகாரணங்களிலோ அவற்றின் பின்னின்மைகள் கூறியவகையாய சம்சர்க்காபாவமாகாவாம். சம்சர்க்கப் பிரதியோகித்தன்மையின்கண்ணேயோ, சம்சர்க்கத்திற்குச் சமவாயரூபத்தன்மையினுனே சமவாய அநித்தியத்தன்மை வழக்கன்றேவாம். அன்றியும், அற்றுயின் சம்சர்க்க அன்னியோன்னிய அபாவ

ங்க ளிரண்டுமே கடமுதலியவற்றைப் பிரதியோகிகளா யுடை யனவல்லன்வாதலின் கட முதலியவற்றிற்குக் கால முதலிய வற்றைப்போலும் அவஸ்தைத்தன்மை யின்மையன்றே அடைவு றும். சிறப்பிக்கப்பெறுதனவாய சம்சர்க்க தாதாத்மியங்கள் நிஷேதிக்கப்படுவனவாமேல் பொதுவாகவே அவற்றினழி வாம். இன்னணம், எவ்வெப்பிரதியோகிதான் கூறப்பெறு மோ அவ்வதுவடிவத்தானே யில்லாமற்போம், அதற்கும் சம் சர்க்கப்பொருட்டுச் செல்லினோ அஃ தழிவற்றதேயாகும், சம் சர்க்க மெல்லியின்றிச் செல்லலாம், எஞ்சியது துஞ்சலானே மூன்முன்னது துஞ்சலேனுமாம்.

242. ஒருமித்திராமை வடிவ முரண்பாட்டை யுடன்படினும் தாண்டமுடியாமை.

பாவாபாவங்கட்குச் சொரூபபூதவிரோதமின்றாகும் ; மற் றே, ஒருமித்திராமையேயாம். ஆதலின் ஒருமித்திருத்தன் மாத்திரம் ஒவ்வாதாம், சொரூபமே யவறறிற்கின்றென்ப தின்றும் எனின் ? அற்றன்றும், அபாவத்தின்கண்ணே பாவ வடைவாம். அவ்வாறு மெய்யுணர்வின்மையின் யாங்ஙனம் அங்ஙன மிருக்குமெனின் ? அற்றன்றும், அவ்வாறு மெய் யுணர்வின்மையின் மூலமாய ஒருமித்திராமை விரோதத்தின் நியமனம் நீங்கலின். பாவாபாவத்தகைமையினும் அயலாக அவற்றிற்கு விரோதமியாதாம்? அவ்வாறு புலப்படாமையே அஃதாமெனின் ? ஆகாதாம், மேல்வழக்காதலின். நியமமாக வெனின்? ஏலாதாம்,ஜாதியானேநியம முடன்படலின் வியத்தி கட்கு முரண்பாடின்மையி னடைவாதலின் என்க.

243. சொரூபயோக்யதையே விரோதமென்பதை விலக்கல்.

அங்ஙன் புலப்பாடுறுத இயற்கையே யோக்யதையெ னின் ? அம்மேயத்திருக்கும் யோக்யதையே அனுயோகிப் பிரதியோகித்தன்மைகளினு மன்னியமாக யாதெனத் துணி

வித்ததாகும் ? சொரூபமேயெனின் ? அற்றன்று பரஸ்பரம் கலப்பை யங்கீகரித்தவரானும் அவற்றிற்குச் சொரூப அங்கீகாரஞ் செய்திருத்தலின். அவ்வகை வடிவம்வாய்ந்த சொரூபமாமெனின் ? அதையே யின்னதென நிகழ்த்தவேண்டியிருத்தலின்.

244. முப்பக்க சாதாரண தூஷணங் கிளப்பல்.

பாவாபாவங்கட்கு இவ்வகையாய முரணுறவே கோத்தன்மை அசுவத்தன்மைகளினும் யாது சிறப்பாகும் ? அவற்றின் ஒருமைப்பிரமை யுளதாகவே பிரகாரபேதத்தால் நிலைபெறுத்துதல் செயல் என்னைகொலோ ! பிரமையினனே அப்பிரமையை யங்கீகரியாமையினனே யென்க.

245. முன்மொழிந்த அடைவுவினவும் அதனீக்கமும்.

இனிக் குடமுதலியவற்றனே சிறப்பிக்கப்பெற்ற அவற்றிற்கு அந்நிடேதங்களாம். சிறப்போடு கூடியவையாய விதிநிடேதங்கள் ஒருபோழ்தும் சிறப்பையொழித்து இராவாம் எனக் கூறின், அஃதுமொவ்வாததே, ஆயின், சிறப்புடைய தின் நிடேதம் சிறப்பையும் பற்றும் எனச் சம்சர்க்க அன்யோன்ய நிடேதமும் சம்சர்க்க நிடேதமேயாகுமென மீண்டும் அவ்வழக்கு வச்சிரப்பூச்சாமன்றே. அன்யோன்ய அப்பிரதியோகியையுடைய சம்சர்க்கா பாவம் அவ்வாறு விளம்ப விரும்பியதாம் ; இவ்வாறே அன்யோன்யாபாவமும் சம்சர்க்க அப்பிரதியோகித் தன்மையானே நிகழ்த்தற்பாலதாம் எனின்? அற்றன்றும், இன்னணமாகவே, அன்னியோன்னிய சம்சர்க்காபாவமும் சம்சர்க்க அன்னியோன்னியா பாவமும் வேறு கோடியன்றேவாம். மேலும் இங்ஙனமாயின், அன்னியோன்னியாபாவம் யாதாகாதோ சம்சர்க்காபாவம் அது சம்சர்க்கா பாவமென்று விளம்ப விரும்பியதாமெனக் கூறியதேயாகும் ; ஆகவே சம்சர்க்க விசேஷணம் வாளாபோம், போகவே சம்

சர்க்காபாவப்பொருளே அதிகமாக விரும்பியவனுகிய உன் னுற் காரணப்பொருண்மேய சம்சர்க்காபாவ சப்தமும் இழக் கப்பட்டதாகும், அன்னியோன்னிய அபாவம் யாதாகாதோ அபாவம் அது சம்சர்க்காபாவமெனக் கூறப்பட்டமையின். அன்றியும், இங்நெறியாய மொழியானே அன்யோன்யாபாவ நிடேதத்தை யறைபவனு யன்யோன்யாபாவத்தினும் அடை வுறும். அன்னியோன்யாபாவம் அன்னியோன்யாபாவமாமெ ன அறிவான் முடியாமையான் சாமானுதி கரண்யமோ வேற் றுமைவகை யுளதாய வழியுளதாம் கருங்குவளையென்பதே போலும் அதனு லஃதின்மையினுனே அவ்வாறன்றுமென மேல்வழக்காம். அன்னியத்தான் அன்னியோன்னியா பாவங் களின் மாட்டே யிருந்துகொண்டே யாது பிரமேயமாம்? எஃ தடையதின் கண்ணே அங்ஙன மறையலாமோ. அபாவமாத் திரத்திலாமேலோ மேல்வழக்குண்டாதலின், எஞ்சிய வியத்தி விசேடங்களாகிய அன்னியோன்னியா பாவங்களிற் சம்சர்க்கா பாவத்தன்மை வருதலின்.

246. துஷணத்தையாண்டும் பரப்பல்.

இதனை அலக்ஷிய அன்னியத்தன்மையானே வேறுபடுத் தியவற்றுளெல்லாம் கண்டுகொள்க, அங்ஙனமன்றே:—"அது வலாததிங்கதுவல வெனவது வதுவுமிங் காகாதேற், பொதுவ காயுறு மொருநிலைக் களம்பெறப் புகுபிரி வுருநோக்கும், நிதம காய்க்குறித் துருப்பிரிவினைக்கொடு நிகழ்துவதுவாமே லதுவி லாமுருவது தனினுயினும் பிறழ்வுறு மதுதானே."

247. அவ்வியாப்தியைக் கிளப்பல்.

மேலும், அன்னியோன்னியா பாவத்தினது சம்சர்க்கா பாவமும் இன்னணம் விலக்கப்பட்டதாகும், அதற்கு அன்னி யோன்னியப் பிரதியோகியுடைமை யுண்மையின், இனி யன் யோன்யாபாவத்திற்குச் சம்சர்க்காபாவமதிகமாக அங்கீகரிக் கப்படுவதேயில்லே எதனைக்கொண்டவ்வாருமோவெனின், அற்

றன்றும், இவ்வாறேயாயின் அன்யோன்யாபாவத்தின் அன் யோன்யாபாவமும் அதிகமாக அங்கீகரிக்கலாகாதாம் என அன்யோன்ய அப்பிரதியோகித்தன்மையானே நினதபிமத மாய சம்சர்க்காபாவத்தினது விலக்குதலு மெங்ஙனந்தானு கும் ? விலக்குதலென்பது நிடேதப்பொருள்படுதலின், இனி யாகாதொழிக அதிகமாகவது, சொரூபமே யவ்வா றங்கீகரிக் கப்படும், படவே அதைக்கொண்டே இவ் விவகாரம் மாசற்ற தாமெனின் ? ஆயின், அன்யோன்யாபாவ சம்சர்க்கா பாவத் திது மிஃதொப்பேயாமன்றே.

248. அதிவியாப்தியைக்களைப்பல்.

மேலும் அன்னியோன்னியப் பிரதியோகியையுடையதா காதது எவ்வபாவமோ சம்சர்க்காபாவமென இயம்புபவனுகிய உன்னுல் அன்னியோன்னியப் பிரதியோகியையுடைய அபா வம் நிடேதிக்கப்படவே அன்னியோன்னிய வடிவமாக இவ்வ பாவம் அங்கீகரிக்கப்பட்டதாகும். இருநிடேதங்கள் சுந்தோப சுந்தநியாயத்தான் அன்யோன்யத்தையே திடப் படுத்தலின். படுத்தவே சிறப்பற்ற அன்னியோன்னியத்தின்கண் ணுலகமே புகுத்தப்பட்ட தாகுமெனச் சம்சர்க்கா பாவத்தன்மையானே விளம்ப விழைந்ததற் குலகவடிவத்தன்மை தணியப்பெற்ற வழி அன்யோன்யாபாவ வடிவத்தன்மையும் ஆமெனவாளா வன்றே நின்றது சிறப்பின் முயற்சி சிரிப்பின் பொருட்டாக ; சிறப்புற்றதினும் சிறப்பற்றதொத்த வழக்காமென மகத்தாயக வுத்தகமாம்.

249. வேறு பொருளடைவு விலக்கவினு.

அற்றேல், கடபாவம் ஆகாது தம்பமென வியம்பிற் றம் பம்கடவடிவமாக விதிக்கப்பெறுமாவென் ? அஃதெதனதேது வினுனே ? கடமும் அதனபாவமுமென்வே உலகாகுமேலா யின், அக்காலன்றே அவ்வாறும், தம்பமுதலியவையும் வேறு

கோடியிருப்ப யாங்ஙனம் அவ்வாறும்என வியம்பிய வழக்கிற் கிடமிலதாமாலோவெனின்.

250. தருக்கத்திற்குச் சிதிலமூலத்தன்மை யின்றுமென விடையிறுத்தல்.

அற்றன்றும், கடம், அதனபாவங்களினும் அயலாக வத் திராதிகளாகிய கோடியு மிருப்பதேபோல அன்னியோன்னிய அதனபாவங்களினும் அயலாய கோடி சம்பவியாதாம். சிறப் பற்ற அன்னியோன்னியமத்தியில் உலகமே புகுந்திருத்தலின். அதன் வடிவமும் நிடேதிக்கப்பட்டதாய வழி அதன் நிடேத வடிவமாய அதன் வடிவத்தில் உலகம் புகுந்திருத்தலினென்க. கடம்பட வடிவமென்பதனனே கடவடிவத்தினும் அன்னி யம் அதன்வடிவமாய் விதிக்கப்படமாட்டாதன்றே! தாதாத் மியமென்பது அபேதமெனப் பெயரிய ஒரு தருமமென வுடன் பாடாம் அது கடபடாதி யதிகரணத்தன்மையானே நிடேதிக் கப்படுகின்றதேலாயின் சம்சர்க்காபாவமேயஃதாம்; ஆகை யால், சிறப்பற்ற தாதாத்மியத்துள்ளடங்கிய தலகெனக்கோடி வேறிலதாகுமென்பதாம்.

251. வாதி வழங்கிய தூடணத்திற்கு அப்பகூத்தின்கண்ணே வழக்காம்.

மேலும், இங்ஙனமாயின்கடத்தை நிடேதம்புரியில் கடா பாவம் விதிக்கப்பெறும், கடாபாவத்தை நிடேதிக்கினே கடம் என்பதுமாகாதாம்; மூன்றுவது முன்னிற்றலின். உளதா குகதான்; கடாபாவம் தம்பம் ஆகாதாம் என்பதன்கண்ணும் கடாபாவத்தன்மைச் சிறப்பின்மையினனும், வேறு சிறப்பை விளம்பமுடியாமையானும், கடம் தம்பவடிவமேயெனக் கூறி யதாகும் என்பதாக நினது வழக்கு நின்மாட்டே நீங்காது நிற்கும். சம்சர்க்க அன்னியோன்னியாபாவவைச்சித்திரியத் தைக்கொண்டே அது பரிகரிக்கத்தக்கதாம் அதுவே இதுகா றும் நிலைபெறுத்த முடியாமல் நிற்கின்றதாகும்.

252. புலப்பாட்டின் வலுமையானே வைதர்மிய சங்கையி னீக்கம்.

அதனானே, பிரதீதியின் வலுமையா லன்னியமாகவே வைதர்மியம் இவைகட்குக் கொள்கவென்னுங் கூற்றுங் குலைக் கப்பட்டதாகும். அபாவப்பிரதியோகி விரோதத்தில் பிரகார விசேஷவிவத்தை விளம்ப வேலாமையின் சிறப்பின்றியே யொன்றை நிடேதிக்கவே அன்னியவிதி நிலைபேறுவதாய் அன்னியோன்னிய அபாவநிடேதம் செய்தவழியும் அன்னி யோன்னிய விதியின்பொருட்டேயாம்.

253. சித்தாந்தத்தில் தோஷ உத்தாரஞ் செய்தல்.

எமக்கே பிரதீதி விவகார விவத்தை விஞ்பகழி தடுப் பான் வச்சிரக்கவசமாயுற்று வெற்றிபெறுவிப்பது அநிர்வசநீ யதையேயாம். எமது துணிவுபேறே இவ்வாறும் பிரதீதி சித்தமாதலின் அத்தியந்தம் அசத்விலக்ஷணமாயினும், அவ் வாறு சத்தையுடன்படினும் பாத்யமானத்தன்மை யுறுத லின் உலகு அநிர்வசநீயமாம்.

254. அநிர்வசநீயமாவதில் அனுபவவிரோதமின்மை.

அதனானே, இவைகட்குப் புலப்படுந்தன்மை யுண்மை யின் வைச்சித்திரியம் மிகச் சேய்மையிலே நிராகரிக்கப்பட்ட தெனக் கூறப்பட்டது. பிரதியோகி முதலிய வைச்சித்திரியம் பொருந்தாமையானே பிரதீதியாவதற்கே பாத்யத்தன்மை யையே கூறலின், ஆகையான் "ஒன்றென் றலவென்பது மொற்றுமையா, னின்றென்பதன் பேத மிசைந்துறவே, யொன்று மவற்றின்னிலை யொன்றித்தனை,குன்று மிதைத்தீர்ப் பவர் யாவர்கொலோ."

255. தேற்றப்பொருள் கூற முடியாமை.

அபாவமே யாண்டெனத் தேற்றத்தோடும் கூறத்தக்கதா மெனின் ? தேற்றத்தானே யாததிகம் கூறப்பெறுகின்றதோ !

பாவம் நிடேதிக்கப்படுகின்றதெனின் ? அதற்கபாவத்தானே கிடைத்திருத்தலின், பாவநிடேதமபாவம் என்னு மிதுவே பொருள்பயப்பதன்றன்றே. பாவசாமாஞதி கரண்ய நிடேதம் தேற்றப்பொருளாமெனின் ? உரைத்ததனனே பெறும் பொருளாதலின் அதன தன்யோன்ய அபாவம் மிருதியின் கண்ணும் சம்பவிக்குமாதலின், பாவசாமாஞதி கரண்யம் மிருதியன்றன்றே ! மிருயிண்கண்ணே பாவத்தையும் அபாவத்தையும் ஓரிடத்திலங்கீகரிக்குமுன்னல் அதுவு மிஷ்ட்மென ஒப்புக்கொள்ள வேண்டியிருத்தலின், அவற்றிற்குப் பரஸ்பரம் நீக்கவடிவத்தன்மை யுண்மையின் ; ரூபரசங்கள் ஓரிடத்தின் மையினனே அதன் சாமாஞதிகரண்ய மின்மையாகாதன்றே!

256. அபரஸ்பர நீக்க வடிவத்தன்மையின் விளைவிடைகள்.

சமமாய்ப் புகுந்த பாவாபாவங்கட்குப் பரஸ்பரநீக்க வடிவத்தன்மையே துணியப்பெறமாட்டாதெனின் ? அற்றாயின் அவ்வகையானவைகட்குப் பாவம் அதனபாவம் என்னும் பதசங்கேதம் ரூபரசங்கட் கின்றும்என்னும் நினது உருசியேயளவையாகும். ரூபரசங்கட்குப் பரஸ்பரநீக்கவடிவத்தன்மையின்மையின் அவற்றினபாவமுற்றவழி அவற்றின்சாமாஞதி கரண்ய அபாவம் உளதாகுக ; ஈண்டோ அவ்வாறின்றுமெனின் ? அவ்வகையாயதற்கு அசமாஞதி கரண்யப் பிரயோஜகத்தன்மை யுண்மையேல் அதனினும் அயலாயது சாமாஞதிகரண்யப் பிரயோஜகமாம்என ரூபரசாதிகட்கு அசாமாஞதிகரண்யஅடைவும் பாவாபாவங்கட்கு அசாமாஞதி கரண்ய அடைவின்மையும் ஆம்.

257. சாமாஞதி கரண்ய நிடேதத்திற்குத் தேற்றப் பொருண்மை யின்மை.

அசாமாஞதிகரண்யமே யாண்டோ எனக் கூறும் விழைவாமெனின் ? அற்றன்றும், தேற்றப்பொருளின் நிலமே

மின்மை அந்நிலைமைத்தே யாதலின். இதனானே விலக்ஷணமே யாமிவ்வபாவம் பாவத்தோடுமோராசனம்புகாததாம் யாது தேற்றத்தோடுரைத்த பதத்தானே உரைக்கப்படுமோ என்பது நிராகரிக்கப்பட்டதாம். அதற்கும் விலக்ஷணத்தகைமை பிரதியோகியாசிரய நிடேதத்தகைமை சமமாயிருந்தபோதினும் சாமாநாதிகரண்ய மின்மையின் ஊகிக்கத்தக்கதாம்; அதுவும் அயலபாவத்தோடு சமமாம். சாமாநாதிகரண்ய அபாவப் பிரதீதியினானேயெனின்? பிரதீதிச் சிறப்போடுகூடிய பொருட்கு மிருதியின்கண்ணும் இருப்புண்மையின். அன்யோன்ய அபாவத்தினும்வேறுய மிருதித்தன்மையினபாவமெனக் கூறினே மிருதியினும்வேறுபதுஎன்னும் பக்கத்துட்கூறிய தோடமே அக்காலாமெனச் சாலும் விரித்ததென்க.

258. இரண்டாவது மூன்றுவது விகற்பநீக்கம்.

மிருதித்தன்மைப் பிரதியோகியையுடைய ஆசிரயத்தினதுவடிவம்ஆதல் அதனதுஞானமாதல் என்னும் பக்கமும் கூடாதாம்; அன்யோன்ய அபாவத்தின்கண்ணும் உங்கட்கு அபாவவிவத்தை அத்தகைத்தேயாதலின் உரையாடிய வழக் கொப்பாதலின் என்பதாம்.

259. வேறுவகையானே சம்சர்க்காபாவநிகழ்த்தலே நீக்கல்.

இனிச் சம்சர்க்காபாவம் அயலாயே சிறிது நிகழ்த்தப்பபடும், அங்ஙனமன்றே:—மிருதித்தன்மைக்கு யாண்டு சம்சர்க்கித்தன்மையானே நிடேதமாமோ ஆண்டு அதனபாவத்திற்குச் சம்சர்க்காபாவத் தகைமையாம்; கதாத்மத் தன்மையானே யாண்டோ, ஆண்டு அதனபாவத்திற்குச் சம்சர்க்காபாவத் தன்மையின்றும்; மற்றே, அன்யோன்ய அபாவத் தன்மையேயாம், அதுவும் ஈண்டியம்ப விரும்பியதன்றும், முன்னலதையே சம்சர்க்காபாவமென விளம்ப விரும்பிய

தாமென்ப. இஃதாராய்ச்சியைச் சகியாததேயாம்:—சம்சர்க் கித்தன்மையானே நிடேதமென எவ்விம்மூன்றும் வேற் றுமையுளதோ அது இலக்கணத்திலா? சகயோகத்திலா? காரகபேதமாய காரணத்திலா? ஆதியதாகாதாம், சம்சர்க் கித்தன்மையானே இலக்கியப்படுத்தப்பட்டதற்கே அன்னி யோன்னிய அபாவங்கொண்டு வழக்குண்மையின் இரண்டாவ தாமியையாதாம், அதனோடு கூடியதேயாய அன்னியோன்னிய அபாவத்தை நிடேதிக்கமுடியாமையின். மூன்றுவதோ முற்று முதாம் முற்றுமின்மைக்குற்பத்தியின்மைத்தன்மை யுண்மை யின் அதுவே பிரகிருத உதாகரணமாதலின்.

260. மூன்றும்வேற்றுமைக்கு இத்தகைத்தென்னும் பொருள் பேறுத்தினும் குற்றமாதல்.

வகையைவழங்குவது இம்மூன்றும் வேற்றுமையெனின் வகைச் சத்தப்பொருளே யதிகமாக வழங்கவேண்டியதாக வர் துறுதலின், வகைவகையே யெனின்? அறியாத இலக்கியமாய அம்சை இலக்கணமியம்பாமன் மற்றதினின்றும் பிரித்துணர் த்திவைக்க முடியாமையின்; மாறுயிஞையாண்டும், கடாயி னனுக்கு இலக்கணமியம்பாமை யெய்தலின். கடமியாதென வினயவழி கடமேகடமென்பதே விடையெனல் பொருந்தும். வகையேயாமென்னும் பக்ஷம் பொருந்தாதாம் தோடத்தோடு கூடலின் எனக்கூறுபவன் தோடம் யாதென வினவப்பெற்று னுய்த் தோடமேதோடம் என இயம்புபவனுயே பயன் பெற் றவனுவன் என்பதாம்.

261. மூன்றுவது கற்பத்திற் றாடணத்தைப் புகுத்தலும் பிருதி யிலக்கணங்கூற முடியாமையும்.

பிருதித்தன்மையோடுற்றது பிருதியின் வேறிலக்கண மின்மை அனுபூதித்தன்மையாமெனக் கண்டிக்கப்பட்டதைக் கண்டுகொள்க. கவரப்பெற்றதின் ஞானமே பிருதியாமென்

னும் மிருதியிலக்கணமேல் தாரையாய்ப்பெருகும் ஞானத்தி லதிவியாப்தியாம், அபேக்ஷையோடு கூடிய ஞானம்மிருதி யேல், அபேக்ஷையோடு கூடியதாதலாவது தனது விடய நியமத்தில் சமான விடயஞான அபேக்ஷையாதலாம் எனின்? பிரத்திய பிஞ்ஞையின் பாகத்திற்கு மிருதித்தன்மையின் அடை வாதலின், அவ்வாறேயாகுகவெனின்? அற்றன்றும், அற்ற யின் பிரத்திய பிஞ்ஞையின் கண்ணே மிருதியனுபவ பாகங் கட்குப் பின்ன விஷயத்வ நிலேபேறுகவே அவற்றின் அபே தம் எதனுற்கவரப்பெறும் என்பதாம். சமஸ்கார மாத்திரத்தா லுளதாய ஞானம் மிருதியென்பதும் அடாதாம், சாமக்கிரியி னுனே சர்வ சம்பவமாதலின் இலக்கணத்திற்கு அசம்பவ மெய்தலின். அசாதாரணமாகிய அக்காரணமுடைய ஞானத் தன்மையெனின்? ஆகாதாம்; ஆன்மப், பிரத்தியபிஞ்ஞானத் திலும் அடைவுறுதலின், ஆன்மமனசம்யோகத்திற்குச் சாதா ரணத்தன்மை புண்மையின். காரிய ஒருமைப்பாட்டின் றுணி பின்றியவழி காரணத்தன்மையின் றுணிபுகூடாமையின். அத னுருமைப்பாடுகிட்டினே அதுவே யிலக்கணமாகுக. எஞ் ஞானத்தானே அர்த்தம் அறியப்பெற்றதாந் தன்மைவடி வுடைமையை யடையப்பெறுமோ அஃதனுபவமாம்; எத னுனே ஞானமே யவ்வாறுமோ அது ஸ்மரணமாமெனின்? ஆகாதாம், ஞானம் அறியப்பெற்றது அறியப்பெறும் என்னு மனுமானுதியிலும் அடைவுறுதலின்.

262. மிருதியிலக்கணங் கூடாமையின் முடிபுரை.

அதனுனே, முடிபாக வாக்கியத்தானும் அனுபவிக்கப் படுந் தன்மையுண்மையின் விடயத்தானும், தொடர்ந்தரூபம் முன்னின்மையின் காரிய காரணங்களானும், சங்கரப்பிரசங்கம் வருதலின் ஜாதியினுனும், மிருதியைப்பகுத்தல்கூடாததாகும் என்பதாம்.

263. நான்காவது விகற்ப நீக்கம்.

நான்காவதும் ஆகாதாம்; காரியத்திருக்கும் விலக்ஷணத் தகைமையை அறியாதபோது யாண்டு காரணத்தன்மையைத் தான் யாண்டு அசாதாரணத் தன்மையைத்தான் அறிதல் கூடு மென்க.

264. சேர்ந்த இலக்கணத்திற் பிரத்திய பிஞ்ஞானத்தின் மாட்டுத் தூஷண உபந்யாசம்.

தனித்தனி பதார்த்தத்திற்கு அதன் வேறுபடுத்தற் றன்மையின் கூடாமைமாத்திரம் அன்றும்; சேர்ந்த அவ் விலக்கணத்தின் கண்ணும் தூஷணங்கூறப்படும். அங்ஙன மன்றே:—தத்துவானுபூதி பிரமையென்பதனானே காகதாலீய மும் மெய்ஞ்ஞானமாய்விடும், அஃதிவ்வாறும், கரத்தின்கண் ணைந்துபலகறையைமூடி யொருவன் எத்துணைப் பலகறை யென வினவினுங்க, வினவப்பட்டானும் அஜாகிருபாணீய நியாயத்தானே, ஐந்தாம், என உரைத்தான்; அதனானே ஐந் தென்னும் ஞானம் கூறினானுக்கும் கேட்டானுக்கும் ஆம். ஆண்டு இவ்வகையாய உதாகரணங்காணப்படுகின்றன. அந்த ஞானமானது தத்வபதத்தானே விலக்கக்கூடிய தாகாதாம். உண்மையாக அதற்கு ஐந்தென்னும் எண்ணுல் வரைந்து கொண்டமையானே அவ்வாறும் வடிவுடைமையின்மை யின் மையின் அனுபவ சப்தத்தானே விலக்கக்கூடியது மாகாதாம்; அனுபவிக்கப்படாததா யிலங்கலினானே ஸ்மரண இலக்கணத் தை யுபேக்ஷித்தலின். கூறுபவனுக்கு ஐயமேயாகும் நிச்சய மின்மையின், ஓரேகோடியின் விவகாரமோ கிருஷி முதலிய வற்றின் முயற்சிபோலும் கூடுமென்பதுங் கூடாதாம்; அதன் கண்ணும் ஆகாரரூப ஒருகோடி நிச்சயநிலைபேறுண்மையின் மாறுபிலை, ஐயத்திற்கு இருகோடி நிச்சய சமுச்சயத்தன் மையின் அடைவாதலின்.. பிரமையே யஃதாமென அங்கிகரிக்

கத்தக்கதாம் என்னற்க ; காட்சிப்பிரமாண முதலியவற்றின் மத்தியில் உள்ளடக்கமுடியாமையின்.

265. விசேஷணங்கொடுப்பிற் றத்துவபதம் வீணுதல்.

அவ்யபிசார காரணத்தா லுளதாவம்தாடு என்பதைச் சிறப்பிக்கத் தக்கதாம் எனின் ? கூடாதாம், தத்துவபதம் வீணுக முடியுமாதலின். காகதாலீய மெய்ஞ்ஞானமும் வியபி சாரி சாதாரணகாரண சாமக்கிரியாலுண்டாயது என நிலை பெறுத்த முடியாதவனுவாய், வியபிசாரிக்கும், காரணவிசேட மின்மையின் மெய்ம்மைவழக்கா மன்றே. ஹேதுவையுடைத் தாகாமலே அதற்கு மெய்ம்மையா மென்னற்க ; நியாமகமின் மையினுனே அதிப்பிரசங்கம் வருதலின். இன்றியமையாது இதனது அவ்யபிசாரித்தன்மையில் அவ்யபிசாரி நியதமேயாய காரணங் கழறத்தக்கதாம். அஃதியாது கொலோ வெனின் ? தாமாகவே இவ்விஞவிற்கு விடை தம்மாற் சாற்றத்தக்கதாம் எதனுனே நியதமாகிய பிரமைக்குழுவின்மாட்டும் இஞ்ஞான மடங்கலாமோ ; பிரமையின் சாமானிய இலக்கணத்திஞற் ருன் வேறுபடுத்தத்தக்கதாமோ.

266. உதாகரணத்தைக் காட்டல்.

இவ்வாறு இலிங்க ஆபாசாதிகளானும் உண்டாய இலி ங்கி (வன்னி)ஞானம் சைவகதியினுனே இராநின்ற இலிங்க இலிங்கியின் கண்ணேனும், இலிங்கிமதியின் கண்ணேனுந் தான் யாதாமோ அது இலிங்காபாசத்திற் பிரமையாகாதாம், அஃதுடைய இலிங்கிவடிவத்தின்கட்டான் ஆகாதாம் ஆயினும் விசிட்டத்தை யவ்வாருகக்கவரும் அவ்வுணர்விற்கு வேறு இலிங்கமுடையதன்கண்ணேனும் கேவல இலிங்கியாகிய வன் னியாதியங்கிச விட்யத்திலேனும் பிரமாண மாதலி யங்கீ கரித்தலினுற் கூறிய குற்றமகலாமையின் என்க. போலிக்கர ணம் பயத்தலின் அதன்விடயம் உண்மையா யிலிங்கியாதி

யினும் அன்னியமேயாமெனின்? ஆகாதாம், சிறப்பாயது வேறுயினும் அச்சாதீயமாத்திரமுடைப் போலியங்கிசத்தில் ஆசு அகலாமையின். விசேடம் சாமானிய சம்பந்தகோடியிற் புகுத்தப்பட்டிருத்தலின், ஆண்டில்லாததேயாய அதனது விளக்கமாதலின் இக்குற்றம் பற்றுதாமெனின்? அன்றும், விசேடவிளக்கமின்றேனும் சாமானியமாக அம்மாத்திரமுடை விளக்கத்தையங்கீகரித்திருத்தலின் தேவதத்தன் யஞ்ஞதத்த சம்பந்தி யென்பது ஐயமாயிருப்பினும் புருடசம்பந்தித்தன்மை நிச்சயம் போலும் சம்பந்திவிசேடத்தைக்கேவல விசேஷ ரூபமாகப்புகுத்தின் வியாப்தியாதிகட்குத் தொடர்பின்மை வழக்காதலின். சாமானிய அனுமானப்போலியாகியபயனுடையதிலோவிசேட அன்னியத்தன்மையுடைமைக் கற்பனைக்கிடனின்மையின். சாமானியசமவாயங்களும் அன்னியங்களே இலங்குகின்றனவெனின், அன்னியதாக்கியாதியை விடுத்து அசத்கியாதியிற் புகுதலுமுறுதலின். ஆங்குள்ளவேறு தருமத்தைச்சாதியோடு தாதாத்மிய ஆரோபமதன் கண்ணெனின்? அன்றும், ஆயினும் கர்மியின் கண்ணும் ஜாதியின் கண்ணும் பிரமாத்தன்மையானது அவ்வாறே நிலைபெறுதலின் சம்சர்க்க ஆரோப நிமித்தத்தானே தாதாத்மிய ஆரோபங் கூடாமையின். பராத்த அனுமான ஆபாசத்திலோபிரதிபாதிக்கப்பட்ட பதார்த்தசம்சர்க்க ஆரோபகாரண சம்பவத்தால் அங்ஙனமாயினும் ஆண்டுத்தாதாத்மிய ஆரோபகற்பனத்தே அவ்விதமயனியமம் அளவையற்றதாம்.

267. அங்கீகரித்துந்தோடத்தைக் காட்டல்.

ஆண்டுப் பயன்படைத்த ஜாதி சம்சர்க்கமயக்கமுடைய வொருவனுக்கு மிதியின் கண்ணேசதி யென்னைகொல்! சித்த சாதனத்திற்றன்கதியென்னே? ஆண்டு மன்னியத்தன்மைக் கற்பனையேல் சித்தத்தன்மை வியாகாதப்படுதலின் தத்துவமே

லாயினே ஹேதுப்போலிக்கும் உண்மையைக் கவருந்தன்மை யுண்மையானே நிகழ்த்தியநிமித்தத்திற்குப் பிறழ்ச்சியோடும் விரோதமின்றும், பிறவிடப்போலியினும் பிறவற்றிற்பிரதிபாச தற்பனேகாரணமின்றியே கதுவுதலின் ; சித்தசாதனமிதிக்கேனு ந்தான் விலக்கமின்மையின்.

268. வேறு இலக்கண தூடணம்.

உண்மையனுபவம் பிரமையென்பது மிலக்கணமாகாதாம், உண்மையென்பதென் தத்துவத்தை விடயஞ்செய்வதா? அல்லது பொருட்கொப்பாயிருப்பதா ? ஆதியது முன்னமே நூக்கப்பட்டிருத்தலின் ஆகாதாம், இரண்டாவதுமேலாதாம் பிறழ்ச்சிபுணர்ச்சிக்கும் பிரமேயத்தன்மை முதலியவற்றுனே பொருளொப்புமையிருத்தலாற் பிரமாத்தன்மையடைவுறுதலின். அற்றேல், ஞானம் விடயஞ்செய்தவடிவத்தானே இவ்வொப்புமையியம்ப விரும்பியதாம் ; பிரமேயத்தன்மை முதலிய ரூபத்திற்குப் பிறழ்ச்சியின்கண்ணும் ஒளிர்தல்கூடலின். அவ்வாறாயினும் மேல்வழக்காமென மிழற்றற்க ; ஒளிராநின்ற பிரமேயத்தன்மை முதலிய அங்கிசத்தில், விடயமாய வேறு தருமங்குறித்துப் பிறழ்ச்சிக்கும், பிரமாத்தன்மையை யங்கீகரித்திருத்தலின் எனின்? இஃதியையாததேயாம், ஒளிராநின்ற ரூபாதி சமவாயித்தன்மை ரூபத்தானே ஞானத்திற்குப் பொருளொப்புமை யங்கீகரியாவிடினும் ஆண்டு அதனதுபிரமாத்தன்மையை யங்கீகரித்தலின்.

269. பரிகார சங்கையும் அதனிராகரணமும்.

ஒளிராநின்ற ரூபத்தால் விசேஷணபாவங்கொண்டு பொருளொப்புமை யனுபவத்திற்குப் புகலுமவாவாம், பொருட்கோசமவாயத்தான் ரூபம் விசேஷணமாவதேபோல விடயபாவத்தால் ஞானத்திற்கு மதுவிசேஷணமாகவேயாமெனின் ? அற்றன்றும், இன்னணமே முன்னிருத்தற்றன்மைமுதலிய

ரூபத்தானே அவ்வாறுந்தன்மை சம்பவித்தலின், முன்னிருப் பதாய இப்பியை வெள்ளியாகக்கவரும் உணர்வும் பிரமை யாம். அதுபிரமையெனவு முடன்படவே செய்வேமாதலின் இப்பிறழ்ச்சிவினு ஊகமாகியதாகாதாமென்னற்க; உண்மை அடைவாளாபோம்வழக்காதலின். அனுபவம் பிரமையெனக் கூறினுமே ஆண்டுமேல் வழக்கு மேவாதன்றே; எல்லாப் பிறழ்ச்சி யனுபவத்திற்கும் முடிபாக அன்னியதாக்கியாதி வாதிமதத்தில் தருமியின் கண்ணும் பிரமாத்தன்மை சம்ப விக்தலினுனே பிரமையின் கண்ணே அனுபவத்தன்மைக்கு நிலைபேறுண்மையின். அங்கிசத்தானும் பிறழ்ச்சியுடைய தன் கண்ணே இலக்கணமேகாதொழிகவெனமனத்தினிறுவி உண் மையடை புகுத்தியதேலாயின், பொருத்தமாகாதாம் புகன்ற தேர்டமெய்தலின்.

270. இரண்டாவது கற்ப நிராகரணம்.

இனி ஒளிராகின்ற எல்லாரூபத்தானும் விசேஷணபாவத் தானே எவ்வனுபவத்திற்குப் பொருளொப்புமையுளதோ அது பிரமையாமெனக்கூறப்படும். அத்துணையானே தருமிக்குத் தருமி விசேஷணமாகாமையானே தோடமா மென்னற்க; அதற்கும் அதனயல் விடயத்தை விலக்குந் தன்மையுண்மை யின். ஆயின், பிறழ்ச்சியுணர்ச்சி தருமியின் கண்ணும் பிரமை யாகமாட்டாதாம் எல்லா வடிவத்தானும் ஒப்புமையின்மை யின். அவ்வபிசாரி அங்கிசத்தை அனுசரியாமல் அதனது அப்பிரமிதிகோடி வைப்பைவலுவிற் புரிதலான் அஞ்சாத வும்மால், அவ்வியபிசாரி யங்கிசத்தையனுசரித்தலான் வியபிசாரியங்கிசத்தையும் பிரமைக்கோடியிற் புகுத்துதலேயே யேனிண்ணயித்தலாகாதோ! அத்தகைய அபிப்பிராய அவி ரோதிகளாக அனுபூதித்தன்மை ஞானத்தன்மை முதலிய வைகள் இலக்கணப்படுத்துவான் முடிந்தனவேயாகும்:

271. விபக்கத்திற் பாதகவுபந்யாசம்.

பாத்தியப்பொரு ளங்கிசஞ்ஞானம் அபாத்திய அர்த்த அங்கிசத்தும் அப்பிரமையே யாகுமாயின்; மேன்மாடியின் மேல் வைத்தகும்ப முதலியவற்றைப்போலச் சேய்மையினிரு த்தலின் நிலவுமின்னன் முதலியவை மறுபக்கங் கவரப்பெரு மையானும், ஆண்டவயவியினது பரிமாணங்கவரப் பெறுமை யானும், அற்பபரிமாணங்கவர்ந்து பிரமாத்தன்மையானே யுல்கப்பிரசித்தமாயிரா நின்ற பிரத்தியக்ஷமானது அப்பிரமை யாம். தேசகால ஆலோகாதி வியக்தியோடுகூடிய ஞானத் திற்கு எல்லா அத்துணையருத்தத்தைக்கவரும் பிரவிருத்தி யிலாற்ற லுற்ற வுதாகரணம் நிடைத்தல் யாண்டு கொலோ! எதனுனதன் பிராமாண்ய மெண்ணுதியோ.

272. உலகவிரோதங் காட்டல்.

பாத்தியப்பொரு ளங்கிசத்திற் பாதமாதலின் அபாத்திய அங்கிசத்தும் அப்போதப் பொய்ம்மையைச் சாதிக்குதியே லாயின் எப்பொருட்சாதியுடையது பாத்தியமாமோ அப் பொருட்சாதியுடையது அபாத்தியமாயினும் பொய்யேயென வெண்ணின் உலகப்பிரசித்தப்பிரமை யுதாகரணத்தை விடுவ தல்லது யாதுவிடை விடுக்கமுடியும்?

273. விடய விசேட நியமத்தானே பிரமாத்தன்மை யிலக்கண நீக்கம்.

இனி, ஒளிராநின்ற ரூபத்தானே விசேஷணமாக எப் பொருளொப்புமை யனுபவத்திற்காமோ அதன்கட் பிரமாத் தன்மையென விடய விசேடநியமத்தானே பிரமாத்தன்மைக் கிலக்கணம் புரிக, இதன் பொருட்டே உண்மை விசேடண மெனக் கூறுவேம்; இங்ஙனங் கூறுதலுமேலாதாம், விசேடாங் கிசத்தும் அனுபூதியிவ்வண்ணம் பிரமையாகாதாம் வேறுபிறிக் குந்தன்மையே விசேடணத்தன்மையென வுடன்பாடாம்,

ஆகவே தருமியும் தற்சம்பந்தத்தானே தருமத்தை விசேடிப்பிக்கின்ற தெனக்கூறிய தோடமின்று மென்றுரைத்தாமன் றேவெனின்! கூடாதாம், விசிஷ்டத்திற் பிரமாத்தன்மையின பாவங்கூடலின். மேலும், இவ்வாறுயின், யாது வெள்ளியாக வொளிர்ந்ததோ இப்பிலியக்கி அஃதிஃதெனவெள்ளித்தன்மை முதலியவையும் இப்பியை வேறுபடுத்தவேசெய்யும். அற்றேல் நேரே விசேடணத்தன்மை விளம்பும் வேட்கையாம், இரஜதத்தன்மையோ ஞானவாயிலாக இப்பிவிசேஷணமாம் என மேல்வழக் காகாதாமெனின் ? இவ்வா றுரைவ்வாதாம், ஆயின், நீள்தடியனிவனென்பதாதியில் சுறுந்தடியுடையவரினின்றும் விலக்ஷணத்தன்மையானது விசேடியத்திற் கனுபவிக்கப்படவே அனுபூதிக்குப் பிரமாத்தன்மையாகாதாம். நீட்சிமுதலியவை தண்டாதிவாயிலாக விசேடமாய் நிற்றலின் ஞானரூபவாயிலாயவாவாமல் விசேடணத்தன்மை யிஷ்டமா மெனின், கூடாதாம், சாக்ஷாத்கரிக்கப்பட்டான் என்பதாதி யுணர்ச்சிகட்கு அப்பிரமாத்தன்மை வந்தடைதலின். அந்த ஞானத்தாற் பிரகாசிப்பிக்கப்பட்ட ரூபத்தானே விசேஷணத்தன்மையானது இஷ்டமாமென்பதோ மிகத்துச்சதரமாம்; ரூபாதிகள் சமவாயத்தானே ஞானத்திற்கு விசேடமாகாமையின், அந்தஞானத்தா லொளிர்விக்கப்பட்ட ரூபத்தானேயென்பது யாதோ அவ்விது பொருள்விசேஷணத்தன்மையால் நியமமாம் என ஞானத்தின்கண்ணுமாவ தின்றுமெனின்? அந்த ஞானவியக்திக்குப் பிறவிடத்திற் சம்பவமிலாமையின். அசாதாரணத்தன்மையானே அவ்யாபகத்தன்மை வருதலினெனச் சாலும்.

274. உதயனசாரிய இலக்கணகண்டனம்.

நற்பரிச்சேதம் பிரமையென்பதும் பொருந்தாதாம், நற்றன்மையென்பது தத்துவவிடயத்தன்மையாதல், உண்மைப் பான்மையாதல், உரைத்ததோட மெய்தலிற் சம்பவியாதாம்.

275. மூன்றுவது கற்பத்தை முற்படுத்தல்.

அற்றேற், சமஸ்தத்தன்மையே நற்றகைமையென இஷ்டமாம் ; பொதுவடிவமாக என்னுற் பார்க்கப்பட்டதேயன்றி நன்றாகப் பார்க்கப்படவில்லையென்ன வுலகினுமன்றே கூறுகின்றனர் ; ஆண்டிதன்கண்ணே சமஸ்த அர்த்தத்தின் பரிச்சேதம் நற்பரிச்சேதமாம் ; நன்றாக அருத்தவிடயத்தன்மையுண்மையினுனேனும் இந்நல்லது என்னுஞ் சப்தம் பரிச்சேத சம்நிலைக்களத்திருப்பதேயாம்.

276. சமஸ்தத்தன்மை கூறமுடியாமை.

இவ்வாறெவ்வாதாம், பொருளினுடைய சமஸ்தத்தன்மையென்பது சர்வ அவயவத்தோடு கூடியிருத்தலா ? அல்லது சர்வ தருமத்தோடு கூடியிருத்தலா ? ஆதியதாகாதாம், அநவயவபதார்த்த பரிச்சேதத்திற்கேபோல, மத்தியபாகாதிகளே விடயஞ்செய்யாத அவயவத்தோடுற்ற பதார்த்த பரிச்சேதத்திற்கும் அப்பிரமாத்தன்மை வந்தடைதலின் ; இரண்டாவது மியையாதாம், அசர்வஞ்ஞபரிச்சித்திகள் யாவற்றிற்குமே அப்பிரமாத்தன்மைவந்தடைதலின்.

277. நல்லதென்னுஞ் சப்தத்திற்குச் சவிசேடார்த்தத்தன்மையுடையதாஞ் சங்கை.

இனி,நல்லதென்னுஞ் சத்தம் சவிசேடப்பொருளது,என நினைகின்றனைகொல் ! என்னனன்றுகப் பார்க்கப்படவில்லையென்பதாக வுலகினும் கூறுகின்றனரன்றே ! அதற்கும், என்னுல் விசேடமாகப் பார்க்கப்படவில்லையென்றன்றே பொருள்படுகின்றது ; ஆகலின், விசேடத்தோடு கூடிய தருமியின் பரிச்சித்தியே பிரமையென விளம்பியதாகும். விப்பிரமுதலியவையோ விசேடங் காணுதற்கே விளைகின்றனவென அதனைக்கப்பொருட்டு இவ்விசேஷணமாம் ; சர்வ விசேஷணங்

கட்கும் விசேடம் வேறுடன்படாவிடினும் சொரூபமே சில வற்றிற்கு விசேடமாம்.

278. நிர்விகற்பஞானத்தில் அவ்யாப்தியை நிகழ்த்தல்.

இது பொருந்தாததேயாகும், விசேடபதத்தால் விசேட மாத்திரங் கூறப்படுமாயின், வெள்ளித்தன்மை முதலிய விசே ஷணத்தோடுகூடவே இப்பிவியச்திமுதலியவை மயலாற் கவ ரப்படுதலின் அவற்றிற்கும் பிரமாத்தன்மையாகும். பொரு டோறும் விலக்கும் வடிவினவாய விசேடங்களைக் கோடிற் ரொடர்பிலாவழக்காம் ; சாமானியமாமேலோ மேல்வழக்காத லின் ; இருவாற்றானும் அசங்கதத்தன்மை வந்துறுதலின். விசேடத்திற்கும் சொரூபமே விசேடமாகுகவாயினும் அபே தத்தானே விசேடத்தோடு கூடியிருத்த லிலதாமென அவ்வி யாப்தியகற்றமுடியாமையின்.

279. மற்றோருமதத்தைக் கிளப்பல்.

விசேட சப்தத்தானே, எதைக்காணவிடின் மயலேயமுண் டாமோ, எதைக்காணின் அவற்றின் பாதமும் நிண்ணயமு மாமோ, அவை கூறப்பெறுகின்றன. அதனை யங்கீகரியாவி டிற் றத்துவாதத்துவ விபாகமாகாதாம், அதனானே பலிக்கத் தக்கதாம் ; மாறுயினே, வியாகாதம்வருதலின் ; என்பதாகச் சிலர் கூறியது யாதோ.

280. மறுமதமாற்றம்.

அது பொருந்தாதாம், ஆண்டு எஃதுணர்ந்தானுக்கு மயன் முதலியவை சம்பவியாவோ அவ்வித விசேடமொழி வான் முடியாதாம். கனக்காண்போனுக்கு எல்லாவிசேடங்க ளும் புலப்படுதலின். வியாகாத கண்டபயமாத்திரையானே இது கூறமுடியாததேயாயினும் அங்கீகரிக்கத் தக்கதாமென் பது கூடாதாம் ; அதனைக்காட்ட முடியாமையானே வியா காதபரிகாரமே யாதேனுமயலொன்று இஃதெனவினிது கூற

முடியாதவ்ஞருதியேல், இருக்கின்றதென்றேயாவது நிலைபெறுத்தக்கூடாத தென்னேகொலோ ! காணப்பட்ட பதார்த்த கோசரம் அனுபவிக்கத்தக்கதா யஃதொன்றுமின்றும், யாதுகனவின் கண்ணுதல், தொடர்மொழிப் போலிபின்கண்ணுதல், உணர்ந்து கோடமுடியக்கூடியதாமோ ! இதனுலே, உணரவருவதாக எவ்விப் புலப்பாடாக் கற்பனையுளதோ அதனினும் தோற்றுததான வியாகாத பரிகாரத்தினது · இரமணீய கற்பனையே மேலாம் வியாகாதம் விளைக்கும் பயங்காட்டிகளை வேரோடு மிகப் பெரிதும் விநாசம்புரிவேம்.

281. விசேட பதத்தானே சவிசேடஞ் சாற்றப்படுகின்ற தென்னுஞ் சங்கை.

அற்றேல், விசேடத்தோடுகூடி விளங்குகின்றது விசேட சகிதப்புலப்பாடாமென விளம்புகில்லேம் ; மற்றேது, விசேடத்தோடு கூடிய பொருள் புலப்படுத்தலேயாம், ஆகவே, இப்பியில் வெள்ளிப்பான்மை விசேடமாக விளங்குமாதலின் யாங்ஙனம் வெள்ளிமாயினும் அவ்வழக்காம்.

282. சங்கையின் பரிகாரம்

இவ்வாறியம்பற்க, அறைந்த தோடத்தானே யகற்றியிருத்தலின். விசேடமானது சாமானியமாகக் கூறப்படுமாயின் முன்னிருத்தற்றன்மை முதலியவற்றிற்கு முண்மையின் வழக்கினீக்க முண்டாகாதாம் ; விசேடமாக அஃதறைப்படுமாயினே தொடர்பின்மையேயாம்

283. முற்கூறியபொருளையே கூறுவதாற் பரிகாரம்.

பாத அபாத விவஸ்தையி னேதுவாக விசேடமிருக்குமென்னும் பக்ஷத்தை எச்சதானவிடாலே அவன் நகிதீரத்தில் ஐந்துபழங்க ளுள்ளனவென்னும் வடிவினவாய ஆப்தாபாப்தவாக்கியங்களானே உணர்ந்துகொண்டபொருளி லிரா

நின்ற மற்றொருபாற் காணுத விசேடமென்னே யொருபாற் காண்கின்றனையென வினவப்பட்டவனுக் யுணர்த்தத்தக்கவனுவன். ஆயினும் உணர்ந்துகொள்ளாத ஜடதம னெவனேனும் உளனேல் அவன், உனது விசேடாந்தரப் பிரவாகச் சுவீகாரத்தில் அநந்த விசேட அடைவின் அச்சத்தான் உன்னுற்றுமே விசேட ரூபங்களென எவைக ளங்கீகரிக்கப்பட்டனவோ அவற்றின் சொரூபம் ஆன்றிப் பரஸ்பரம் விலக்கியதாமாதலின் தொடர்ந்த ஒரு ரூபமாகவின்மையின் அவ்வியாபகத்தன்மை யாம்என அறிவுறுத்தத்தக்கவனுவன். பாதவிவத்தையின் ஹேதுத்தன்மையினுனே தொடர்பாமெனின் ? ஆகாதாம், சில பாலுளதாம் பாதவிவத்தை யேது மயலினு மொளிர்தலின். ஆண்டதற்கெனின் ? அன்றும், விலக்கமாயிருத்தலின் பாதத்திற்கும் மயலின்மாறுய பொருட்பிரமாத்தன்மை யுண்மையினுனே அதனர்த்தந்தொடராமையின், பிரமையையு மிதுகாறு நிலைபெறுத்தமுடியாமையின்.

284. வேறுவினுவை விலக்கல்.

இதன் சுண்ணிதனினும் மேலாக வேறுவினுக்களும், உண்மை விசேடண ஹேடணங்களாற் றூடிக்கப்பட்டனவே யாய் வீழ்கின்றனவெனக் கூறியதைக் கூறும் பயத்தாற் கூறப் படவில்லை.

285. விசேடத்தோடு கூடிய அர்த்த அனுபவமென்னு மிலக்கணத்தில் அதிவியாப்தியைக் கிளப்பல்.

மேலும், தருக்களுனமும், ஆகார்யசமுசய விபரியயங்களும் விசேடத்தை யினிதுகண்டே யுண்டாகின்றனவன்றே அவற்றுன் மேல் வழக்காகும் ; ஆகாரியங்களாகிய அவைகள் உடம்படத் தக்கனவன்றுயென்பது பொருந்தாதாம், வஞ்சகனது வாக்கியப்பிரயோக மூலமாக ஆகார்யமயலும், உண்மை யுணர்ந்த ஆசிரியரானவர் சீடனுக் குணர்வுறுத்தும்பொருட்டு

ஆகார்ய ஐமமயல்களின் ஆராய்ச்சினையத் தொடங்குதலும் உங்களது நூலின்கண்ணே யங்கீகரிக்கப்பட்டிருத்தலின்.

286. முன்மொழிந்ததோட முடிபு.

பரிச்சேதசப்தமும் அனுபூதிபரியாயமாம். ஆகவே, அனுபூதிக்குற்ற தூடணத்தைக் கடக்கமாட்டாதெனச் சாலும்.

287. பட்டசம்பந்திகளி னிலக்கணகண்டனம்.

பிறழ்ச்சியின்றிய அனுபவம் பிரமையென்பதும் பொருந்தாதாம், பிறழ்ச்சியின்றியதென்னும் பதத்திற்குத் தத்துவ விஷயாதிகள் அர்த்தமெனவாயினுங்கூறிய தூடணங்களே தொடராநிற்குமென்க.

288. நான்காவது விகற்பத்தில் விகற்போபன்யாசம்.

இனிப் பிறழ்ச்சியின்மை யென்பது அருத்தத்தைவிடாதிருத்தலாம் எனக்கூறின், அதன்பொருள் யாதுகொல்! எக்காலே யருத்தமுளதாமோ அக்காலே ஞானமுளதாதலா, அல்லது யாண்டுப்பொருளிருக்கின்றதோ ஆண்டத்தேயத்திலே யேஞானமிருத்தலா, இனியெவ்வாறு பொருளோ அவ்வாறே ஞானம்யாதோ அதுபிரமிதியா? என வினவத்தக்கதாம்.

289. விகற்பத்தை விலக்கல்.

ஆகியதாகாதாம், சென்றனவருவனவற்றின் அனுமிதியாதிகளில் அவ்யாப்திவருதலின்: இரண்டாவது மியையாதாம், உணர்வினேடும் ஒருநிலைக்களத்திராத பொருட்பிரமிதிகட்கு அவ்யாப்திவந்தூறுதலின்; ஞானசம நிலைக்களத்திருக்கும் அருத்தத்தைத்தேகாதியின்கண்ணே ஆரோபிக்கப்பட்ட அனுபவத்திற்கும் பிரமாத்தன்மை வந்தூறுதலின். மூன்றாவது மூணுறும், உணர்வும்பொருளும் வேறென்னும் மதத்தில் எல்லாவடிவத்தானும் அதனெப்புமை அமையாமையின்; வேறன்றென்னும் மதத்திலோமையுக்கும் அங்ஙனம் அங்கி

கரிக்கத்தக்கதாமென்னும் வழக்காமே அடையானது வாளா போயொழிதலின். அவ்வவ்விசேடங்களானே ஒப்புமையுரைக்கும் வேட்கையேல்முன்னர் உண்மையென்னுமிடத்திலுரைத்ததோடங்களே திரும்பிவருமென்றுணர்க.

290. பௌத்த இலக்கண கண்டனம்.

பயனற்றதல்லாத முயல்கையைப்பயக்கும் அனுபவம் பிரமையென்பதும் பற்றுதாம். பயனற்றதல்லாத முயல்கையைப்பயத்தலென்பது, மற்றொருஞானத்தானே அவ்வாறே புலப்படுத்தப்பட்ட பொருளுடைமையா? மற்றொருஞானத்தானே மாறுபாடாகமலர்த்தாதிருக்கும் பொருளுடைமையா? புலப்படும் வியாப்பியத்தை யுடையதன் விடயமுடைமையா? அல்லதுதானென்யாதேனும் வேறென்றேயா?

291. மூதற்கற்பத்தி லதிவியாப்தி.

முதலாவது மூடியீதாம், தாரையாய்ப் பெருகும்மயலுக்குப் பிரமாத்தன்மைவழக்காதலின்; பிரமைவடிவமாய வேறுணர்வுகூறும் வேட்கையாம் எனவிளம்பற்க; பிரமைக்கே இலக்கணமுடிவு பெறுத்தவேண்டியதா யிருத்தலின்.

292. இரண்டாவது விகற்பநீக்கம்.

இரண்டாவது மேறுதாம், பாதமுண்டாகாத மயலிலதிவியாப்தி வருதலினுனும்; கெட்ட பொறித்தசையிலுளதாய சங்குமஞ்சளென்பது முதலிய உணர்வினுனே புலப்படுத்திவிடயீகரித்த விபரீதவிடயத்தையுடைய ஈற்றசையிலுண்டாய வெண்சங்கு ஞானநிகட்கு அப்பிரமாத்தன்மை வழக்குவந்தூறுதலினுனுமென்க. பிரமையினுலே புலப்படுத்தப் பெறுத விபரீதப்பொருளுடைமை அஃதெனவறையு மவாவேலாயினுபிரமைக்கே இலக்கமுடிவு பெறுத்தவேண்டியதாயிருத்தலின் வனமுற்கூறியது பின்றொடராகிற்கும். கெட்டதல்லாத

காரணத்தாலுண்டாய உணர்வினனே பாதிக்கப்படாமையே யஃதெனக்கூறும் வேட்கையெனின்? ஆயினதுவே பிரமைக் கிலக்கணமாகுக; மேலும், கெட்டதன்மையைக் காத்தாமல் கெட்டதல்லாததன்மையைக்காத்தமுடியாதன்றே; இத்தனை யானேயென்னேகெட்டதன்மையென்பது, விபரீதவுணர்ச்சியை யுண்டாக்கும் அதனைதவிலிருக்கும் விசேடமென்பதாக இனி தாகவேயியம்பலாமன்றே; ஆகாதாம், விபரீதபதத்தால் விலக் கப்படுவது அறியப்பெறுதாயின் அதுகொடுத்தும் வாளா போமாதலின். அதுகொடுக்கப்படாவிடினே ஞானத்தைப் பயக்குந்தன்மைமாத்திரம் கெட்டதன்மையெனக் கெட்டதல் லாதகாரணஜன்னிய ஞானமேயின்றென்றன்றேவாம்; விபரீத பதத்தானே விலக்கப்படுவது பிரமையேயாமெனின்? ஆகா தாம், அதற்கே இலக்கணமுடிவுபெறுத்தவேண்டியதாயிருத் தலின். அப்பிரமையினின்றும் விலக்கப்பட்ட பிரமையின் சொரூபத்திற்கு இன்றளவும் தோற்றப்பாடின்மையின் யாங் ஙனம் விலக்கமுணர்தலேலும்; எனவே விலக்கப்பட்ட அந்த ஞானமில்லாமல் விலக்கப்பட்டஅந்தஞானம் அசித்தமாமென ஆண்மாசிரய அன்னியோன்னியாசிரயங்களேனும் அநவஸ் தையேனும் ஆமென்றறிக. "பொங்குநேக விசேடப்பொரு ளினி, லெங்கொரேய்ந்த சிறப்புக்குறிப்பிட, லங்குதான்குறை யோடிடுமச்சிறப், பிங்குவேறினும் வேறெனுந் தன்மையான்."

293. மூன்றுவது விகற்பநீக்கம்.

மூன்றுவது முற்றுறுதாம். வியாப்பிய சப்தத்தானே வியாப்பியமாத்திரம் கருதியதா? அதன்விசேடம் யாதேனுங் கருதியதா? ஆதியதேல், புகையோடு கூடியதீயை விடயமாக வுடையகனுவுணர்விற்காதல், ஆத்தனல்லான்றொடர்மொழியா னுண்டாயவுணர்விற்காதல், அப்பிரமைத் தகைமையாகாதாம். இரண்டாவது மியையாததே, அஃதென்னர்த்தக்கிரியையா ?

சாமக்கிரியா? இருபாலும் முற்றேட நீங்காமையின். ஒரே காலத்திலோயாண்டும் பிரமாணஞ்சம்பவியாமையான், முறையேபற்றின் அவ்வவ்வர்த்தக்கிரியை அவ்வச்சாமக்கிரிசளின் பரம்பரையைச்சவரும் நியமத்தையுடன்படின் ஓரேவிடயத்தில் புருடாயுஷ முடிக்கவேண்டுமென்னும் வழக்காதலின். விட்டதைக் கோடிஜென்ம ஈற்றுக்கவர்ச்சிக்குப் பிரமாணமாதலின்மையானே முதல்வரை அப்பிரமாத்தன்மை யடைவுறுதலின். உண்மையாய அவ்வர்த்தக்கிரியைத் தன்மையை நிரூபிக்கமுடியாமையானே விவகாரத் தகுதியின்மையின்; அவ்வாறு பிரதிநிமாத்திரத்திற்கு அப்பிரமைப் பொதுமைவந்துறுதலின்.

294. நான்காவது கற்பனீக்கம்.

ஆற்றேல், இங்ஙனமாயின் நான்காவதுபக்கம் ஆகுகவே, அங்ஙனமன்றே:—ஈர்த்தக்கிரியாகாரி விடயத்தன்மைதான், பயனற்றதல்லாத முயல்கையைப் பயத்தலாம், "அளவையதாமவிசம்வாதி ஞானமாகும், உளவர்த்தக்கிரியைத் திதியேயவிசம்வாதம்" எனவுமன்றே கூறியுள்ளார்எனின்? ஆகாதாம், பொதுவர்கப்புகலும் வேட்கையேலோமயலின்கண்ணும் வழக்காதலின், புலப்படும் வடிவத்தானே அர்த்தக்கிரியாகாரித்தன்மைபொருட்குப்புகலும் வேட்கையெனின்?—பொருந்தாதாம், துயருற்றுத்துணிய முடியாமையின். அதனர்த்தக்கிரியைகாண்டலானே அதன்முணிபாமெனின்? ஆகாதாம். அர்த்தக்கிரியையில்லாமலும் அதன்காக்ஷி சம்பவித்தலின் அர்த்தக்கிரியைப் பிரமிதியுறையும் வேட்கையேலாயிஜென்றே தூடித்தேயுள்ளேம், பிரமையே நிரூபிக்கவேண்டியதா யிருத்தலின். அப்பிரமய அவிசம்வாதத்தானே பிரமாணம்யாவுங் கூறுவேமெனின்? முடியாதாம், அக்கால் வாஞ்சையாலாய அவிசம்வாதம் கனமுதலியவுணர்வுகளின் கண்ணும் கதுவுதலின். அவிசம்வாதம் காலாந்தரமதாயிஜெனுபயரமர்ந்தும் துணியமுடியுமோகாண்!

295. பிராப்தியோக்கியத் தன்மையவிசம்வாதித்வ மென்பதன் நீக்கம்.

இதனானே, பிராப்தியாதி யோக்கியதையேயவிசம்வாதப் பொருளென்பதும் நீக்கப்பட்டது; துயருற்றும்பாதிக்கமுடியர்த்துபோற் றோற்றுகின்றது இத்தருமகீர்த்தியின் நெறியாமென ஈண்டு இகழ்ப்பாறி வேரோடும் பரிகரிக்கத் தக்கதேயாகும்.

296. பௌத்தருடன்பட்ட வேறிலக்கணநீக்கம்.

பாதிக்கப்படாத அனுபூதியே பிரமையென்பதும் நீக்கப்பட்டதேயாம்; அக்காற்பாதமற்றதேலோ அதிவியாப்திவந்துறும், வேறுகாலத்திலும் வீழ்தலில்லதென்பதோ நிரூபிக்கவே முடியாதாம். தனக்குப் பாதமற்றதேலோ அதிவியாப்தியடைவுறும், சர்வஜனபாதமற்றதென்பதோ தன்புற்றும் அணிய முடியாததேயாகும்.

297. பிரமையின் அயலிலக்கணநீக்கம்.

தருக்கசமூகய விபரியய மிருதிகளினும் வேறுயபிரதிதியேபிரமையென்பதுங் கூடாதாம், மிருதியினும் வேறுயதன்மைத்தண்டன நியாயத்தானே நீக்கப்பட்டதேயாதலின்.

298. பிரமைத்தன்மை ஜாதியுடைமை பிரமையிலக்கண பக்க நீக்கம்.

ஜாதிசங்கரத்தைப் பாதமென்று கொள்பவற்குப் பிரமைத்தன்மையிலக்கணஜாதியினது சம்பந்தத்தானே பிரமையென்பதுங்கெட்ட இலக்கணமேயாம். அறியப்பெறுத இதற்கு அதன்விவகாரத்தைப் பாபக்குந்தன்மையுண்டாமேல் பிரமையின்கண்ணப் பிரமைப்பிரம சமூசயங்சளுண்டாகாவாம்; தேருட்டத்தோடு கூடிபதற்கு அவ்வாறுந்தன்மையேல், பிரமஞ்சமூசயம் பிரமமழுதலிய விவகாரங்களுண்டாகாத ஞானத்தின்

மாட்டு ஞானமென் மாத்திரமெனக்கவரும் உதர்கரண்டத்தின் கண்ணும் பிரமாத்தன்மை வந்துறுதலின்.

299. அறியப்பேற்ற திலக்கணமாயினும் தோடமாம்.

அறியப்பெற்றதாய இவ்விலக்ஷணத்தானே விவகாரமா மெனினேனு,யாங்ஙனமிதுவேயறியத்தக்கதெனக் கூறுதல்கூடும், ஆண்டுமானதக் காட்சியானேமாட்டாதாம், அவ்வாறுயினேனு, சிலபாலுஞ்தாய பிரமையின்கண் அப்பிரமை விபர்யய சமுசயங்கட் கிடமின்மையாதிக ளாகவேண்டும், தருமியாகியபிரமையைப்போல மனத்தினானே நிர்ணயிக்கப்படுதலின்; வேறு சின்னவேட்கையோடுற்ற மனத்தானே அறிவதாம்; அச்சின்னத்தானேதான் இலக்கணமாகி யறிவிப்பதாம், என்பதூஉம் பிறிதிபக்க ஆசைமாத்திரமேயாம். அச்சின்னத்தானே பிரமைத்தன்மைச் சாதிக்கற்பனை நிடேத அடைவுவருதலின் அவைகள் பலவெனவருயின் யாவையவையெனக் கூறவேண்டியதாகும். உபந்யாசப்படி அச்சின்னங்கள்யாவுமே தூடிக்கப்பட்டிருத்தலின். பிரமாணமாதலின் பிறிதாலாமென்பதை நீக்குஞ்சமயத்தில் விரிவாகவெறுத்துப் பரிகரிப்பாம்.

300. பாட்டசித்தாந்த நீக்கம்.

இதனானே சக்திவிசேடம் பிரமாத்தன்மை அதன் சம்பந்தம் பிரமையினிலக்கணம் என்பதும் நீக்கப்பட்டது; துயர் செறிந்தும் துணியமுடியாமையின்.

301. எல்லா இலக்கணங்களினும் பொதுவான துஷணத்தைப் பொருத்தல்.

பிரமைக்கிலக்கணம் யாதுசிறிது கூறப்பெறுகின்றதேர் அஃதறியப்பெறுததாயாதல் அறியப்பெற்றதுமாத்திரமாயாதல், பிரமாத்தன்மைவிவகார காரணமாகுமேலாயின் அதிவியாப்தியாம். பிரமையாலளக்கப்படுமேல், பிரமைதுணியப்பெறுதிரு

ப்ப அது துணியப்பெறுதல் எத்தையருற்றும் முடியுங்கொல்! துணியப்பெறுதொழிக, உண்மையாயோ அவ்வாறையாமெனின்? ஆகாதாம், உண்மையாக அவ்வாறன்றேயென்னாகாததென்னைகொல்லென வினவின் விடையின்மையே யடைவுறுதலினனும், பிரமாத்தன்மை நிரூபணம் வாளாபோந்தன்மையை மருவலினனுமென்றுணர்க. உண்மையாயோ, பிரமையினே கட்டாதித்தவிவகாரமும் ஆயின் ஆகுகவெனவிரித்தது சாலும்.

302. இலக்கியப் பிரமாண கண்டனம்.

இவ்வாறு பிரமிதியானது கூறமுடியாமையின் பிரமையின்கரணம் பிரமாணம் என்பதும் பொருந்தாதாம்; கரணப் பொருள் கூறமுடியாமையினனும் என்க.

303. கரணத்தன்மையைக் கூறும் பூர்வபக்கம்.

அற்றேல், காரகாந்தரத்திற் பயன்பெறுதன்மேறுதத் தன்மையே கரணத்தன்மையாம், கரணத்தைப் பயக்குங் கருத்தாவிற்கோ பயன்பெறும் பான்மையாம்; காரகாந்தரத்தில், சொரூபமாகப் பயக்கப்படாததன்மைபிருப்பினும் வியாபாரத்தை வேய்தலானே பயக்கப்படுந்தன்மைகூடலின். அத்தகையவதற்கே கரணத்தன்மையுண்மையின். இங்ஙனமே கருமமும் கரணத்தைப் பயந்தவழி பயனுடையதாம், கரணவியாபாரமோகருமவிடயமாம், கருமமிலதாயினுவிடயமிலதாகலின் கரணவியாபாரமே பயக்கப்படமாட்டாதாம் எனவதனைக் காத்தவழி அதற்கும் பயன்பெறுந் தன்மையாமன்றே. இன்னணமே அதிகரணகாரகத்திற்கும் கரணவியாபாரத்தைக்காக்குந் தகைமைகதுவும். சம்பிரதான அபாதானங்கட்கோயாண்டுமிருப்பதனேதுத் தன்மையின்மையாம், கரணமோயாண்டுமிருப்பவைகட் கேதுவேயாமெனைக் காகாந்தரத்திற்பயன்பெறுதுயாண்டுமிருப்பதனேதுவே கரணமாமெனின்?

304. பூர்வபக்க நீக்கம்.

இவ்வாறியையாதாம், ஆண்டிவ்விரித்தவுரை யாராயாத போது இரமணீயமாயமர்க. அந்தரசப்தமானது விசேஷ மாத்திர வசனமாயின் விலக்குவதாகாதாம், விசேடத்தை விலக்கிக்காக மாத்திரம் எவராலும் உண்டாக்கப்பட மாட்டாதாம், யாது விலக்கப்படுவதாமோ. அந்தரசப்தம் அன்னியவசன மென்பது மாகாதாம், அவ்வாறாயிலோ எதனினின்றும் அன்னியமென விசேடங் குறிப்பிடப்படாதவழி கரணத்தினின்று மென வொருங்கு சேர்த்துரைத்தாலானே கிடைப்பதாகும்; அன்னியமான்மா, அன்னியமாகம் என்பதாதிகளிற்போலும். இங்ஙனமாகவே கரணத்தினும் அயலாய காரகக்கருத்தானே பிரயோகிக்கப்பட்டதாகும்; அஃதுமாகாதாம், இன்றும் கரணமே நிரூபிக்கப்படவேண்டியதாயிருத்தலினலும் அதிவியாப்தி யாதலினலுமென்க. கர்த்தா கருமங்களின் சொரூபத்தைத் தரும்பரமானது இவ்வந்தர சப்த மென்பது மாகாதாம், அவற்றானே அதிவியாப்தி வந்தடைதலின். கருத்தா கருமங்களைக்குறித்து வேறென்பதேயந்தர சப்தப்பொருளென்பதுந்தகாதாம், வாளாபோதல் வருதலின்; காரகத்திற்பயன் பெறுப்பான்மையே பகாற்பாலதாம். மிகுதிப்பொருள் பயவாததே யிதுவென்பதாகப் பிரயோகிக்கத் தக்கதாகாதாம் அந்தர சப்தமென்பதுங் கூடாதாம்; அங்ஙனமாயின் கரணத்தைப்பயக்கும் கரமுதலியவை கரணமாகாவாம். வியாபாரத்தோடு கூடிய காரணமேயன்றோ கரணமெனப்படுகின்றது, பானைச்சையோகாதி வியாபாரத்தோடுகூடியவன்னீ முதலியவற்றிற் கவ்வாறுந் தலைமை யிருக்கின்றதேயாகும்; அதனைப் பயக்குந்தன்மை கரமுதலியவற்றிற்கு மூலதேயாகும். கரமுதலியவை அகரணமென்பதாகவே யங்கீகரிக்கத்தக்கதாமென்னற்க; வியாபாரமுடைய காரணமாதலினு

னேயது காரணமென ஒருதலேயா யங்கீகரிக்க வேண்டியிருத் தலின். கருத்தா முதலியவற்றின் மாட்டுத்துயருற்றும்அடக்க முடியாமையின், ஏழாவது காரக அங்கீகார அடைவுண்டாத லின். அதுதன் முதலியவற்றில் அத்த முதலியவற்றிற்குத் தடையுண்மையின் வேறுதுத்தன்மையே யின்றும், வேறுதுத் தன்மை யென்னேயுளது எனவியம்பற்க; கர்த்தாவிற்கு மிவ்வாறே வழக்காதலின். புருட வியாபாரத்தானே தேக அசைவு முதலியவை, அவற்றுனே குடாரக்கிரியை முத லியவை, அவற்றுனே பிளவுபடன்முதலியவையா மெனப் பரம்பரைத் தடையுண்மையின். இவையாவுமே கர்த்தாவின் வியாபார பரம்பரையாகும், கர்த்தாவிற்குக் காரணத்தன்மை யைக் கெடுக்காவெனின் ? ஒப்பேயாகுமன்றே ; ஆகலின், கர ணத்தன்மையாளே அவசியமங்கீகரிக்கத்தக்க அத்தாதியில் வியாபிக்காமையின் இஃதலக்ஷணமேயாம்.

305. அவ்வியாப்தியையாக்கல்.

இதனுனும், காரகாந்தர சப்தம், கருத்தாகருமத்திஞும் வேறைக்கூறுவது என்னும் பக்கம் நீக்கத்தக்கதாம்.

306. காரணத்தின் வேறிலக்கண நீக்கம்.

கர்த்தாவின் வியாபார விடயம் காரணமென்பதும் கத வாதாம், ஆகமசைவான் முயன்றுனுடைய முயற்சி வடிவ கர்த்தாவின் வியாபாரத்திற்கு, உண்டாக்கப்பட்ட ஆகக்கிரியை யாதல், கிரியையோடுற்ற ஆகமாதல் விடயமாகுமென அக் கிரியையின் கண்ணே காரணமாகுமென, (அதிவியாப்தியாம்.) இஃதங்கீகரிக்கக் கூடியதாகாதாம், பவிப்பதற்கும், தன் பொ ருட்டும் காரகத்தகைமை கூடாமையின். நேரே கருத்தாவின் வியாபார விடயமெனச் சிறப்பித்துக்கோடினும் இவ்வதி வியாப்தியின் பரிகாரமின்றும்; நேரே விவகரிக்கும் மனமுத

லிய கிரியையின்கண் வழக்காங்கே நிலைபெறுதலினுமும், அவ்யாப்தியுறுதலினுமென்க.

307. அயல்வகையானே கரண இலக்கணமும் அதன் கண்டனமும்.

இனி, அக்கிரியையின் ஹேதுவாகி அக்கிரியைக் கர்த்தாவின் வியாபாரவிடயம் அக்கிரியையின் கரணமாம் எனநினைகின்றனைகொல்! இவ்வாறெண்ணற்க; அசேசுரவாதத்தில் அங்குராமுதலிய வற்றிற்கு அகரணமுடைமை வழக்காதலின். துயின்ற பின்னுண்டாகும் பிரமைக்கு, கனக்கிட்ட கரணவுபாதிகளின் வேற்றுமையானே கணக்காய பிரமைக்கூட்டத்தினின்றும் வெளிப்படும் வழக்கன்றேவாம்; அசேதனத்திற்கும் கர்த்திருத்தகைமையேன் மிகு வழக்காதலின். ஈசுரவாதத்திலோ, ஈசுரவியாபார விடயமாயயாவுமே காரணமென அகரணங் காரணமாகாதாம்; ஓமென வுரையாடினை அகாரணமாத்திரமே விலக்கப்படுவதா மென்க் காரணமே கரண மென்பதாகவே யியம்பலாமே, வாளாவிசேஷ பூரணப் பிரயாச மெற்றினுக்கோ!

308. விசேஷணத்திற்குப் பயனுடைமைச் சங்கையும் அதனீக்கமும்.

இனி, வேறுதருமியை விலக்குதற் பொருட்டு விசேஷணங்களன்றும், மற்றே, ஒரே தருமிக்கும் ரூபபேதத்தானே காரணபதத்தாற் கூறுந்தன்மையைக் காண்பிக்கும் பொருட்டாம் என எண்ணுகின்றனைகொல்! இவ்வாறுயின் இந்தரூபாலிங்கிதத்திற்குக் காரணத்தன்மை யுண்மையின் இலக்கணமியம்ப முயன்றவுன்னல் இலக்கியமாத்திர மியம்பியதாகும். இலக்கியப் பதப்பிரவிருத்தி நிமித்தம்போல இலக்கியப்பொருளென்பதின்றும்; கந்தமுடைமை முதலியவற்றிற்குப் பிருதி

வியாதிகளின் அலக்ஷணத்தன்மைபடை வுண்டாதலின். மேலும், இவ்வாறு வத்துமாத்திரம் காரணமெனக் கூறிக்கொண்டே காரணபதப்பிரயோகத்தி நிமித்தத்தையேன் காண்பிக்கலாகாதோ. எல்லாவிடத்தும் வத்துக்களிடத்திற் காரணவிவகாரமாகுமேலாயின் இவ்வாறுகுக வெனின்? ஆயின் நீ கூறிய இலக்கணமும் பலிக்குமேலாயின் எவ்விடத்தும் காரணத்திற் காரண விவகாரமாம் எனவுங் காண்குதி; கருத்தாவின் கண்ணுதல், கருமத்தின் கண்ணுதல், எவருக்குங் காரணவிவகாரம் ஆதலின்றும்,

309. கருத்தாவின்கண்ணே காரண விவகாரத்திற்குக் கௌணத் தன்மையைக் காட்டல்.

கர்த்தாவின் கண்ணே ஆண்டு 'பிரமாணே மீண்டுத்தேவதத்தன்', என வுளதாமூலகில், 'மந்திரம் வைத்திய சாத்திரமிவைதா, மெந்தவாபிரமாண மாகியே யிலங்கும், அந்தவாறதன்பிர. மாணமுமாதலாம், சுந்தரவாப்தப் பிரமாண மாதலாண்', எனச் சாஸ்திரத்தின் கண்ணும் உளதாமெனின்? ஆகாதாம், இஃதென்மாணவகன்மாட்டுத்தீ விவகாரம் போலக்கௌணமா? அல்லது முக்கியமேயா? எனல்வயம் நிகழுழி, உன்ஞனினிதுகற்பிக்கப்பட்ட, நிமித்தத்தானே முக்கியமாகுமேலாயின், அதே நிமித்தத்தானே கருமத்தின் கண்ணும் ஆகுகவே, எனப்பாதகங் காண்டலின் எஞ்சுதலானே கௌணமாகவே அதைநிலை பெறுத்துதல் பொருத்தமாகும்.

310. கருமத்தின்கண்ணே காரண விவகார இட்டச் சங்கையு மதனீக்கமும்.

கருமத்தின்கண்ணும் அவ்வடிவத்தானே யுளதேயாம் எனின்? நூலிலும் உலகிலும் ஆண்டுக் காட்டக்கூடிய உதாகரண மிஃதெனவில்லையாகும். குடத்தைக்காண்கின்றான் என்

னும் பொருளிற் குடத்தாற் காண்கின்றனென எங்கு கண்டனெகொல்! உன் மனத்தின்கண்ணே கேவல மிருக்குமாயின் அதன்கண் ணுதரவுசெய்ய யாமுற்சாகப்படேம். பிரமேயமாத்திரங் காணமெனக்கூறுகின்ற வாமமதியன் மனத்தில் இனிது நிகழாநின்ற பிரமேயமாத்திரத்திலே காணவிவகார மிருக்கும் பான்மையே யங்கீகரிக்கத் தக்கதாம். குடத்தாற் காண்கின்றே னெண்பதாதியாகக் கூறுமையின்வயத்தானே பிரயோக மின்றும், எல்லாம் இலக்கண சம்பந்தமாயே பிரயோகிக்கப் படுவதின்று மெனின்: கூடாதாம் உளதாகா தொழிக, அஃதிலதாயின் அன்னியம் யாதுளதுகாண்! அவற் றின்பாற் காண விவகாரம் எனக்கூறத்தக்கதாமது; அதனைக் காண்பிக்கவோ முடியாதாம்.

311. காணத்தின் வேற்றிலக்கண நீக்கம்.

கிரியையோடு கூடாமையை விலக்கலானே சம்பந்திகரணமாமென்பதுங் கூடாதாம். அங்ஙனமன்றே:—கூடாமையை விலக்கலென்பது கூடுதலேயென்பதாக முடிவுபெறும் பெறவே சம்பந்தத்தாற் சம்பந்தியென்று கூறப்பட்டதாகும். ஆகவே கூறியது கூறலேயாம். எக்காற்சம்பந்தி யென்பதனானே காலவிசேஷ நியத சம்பந்தித்தன்மை சாற்றப்பெறுவதாமோ, அதனினும் அயற்போதினும் சம்பந்தித்தகைமை கூடாமையை விலக்கலென்னும்பதத்தானே விளம்பும் வேட்கையெனின்? ஆகாதாம், சம்பந்தியென்பதனானே காலவிசேஷநியத சம்பந்தித்தகைமை கூறப்படாததாம், எதனானே அயற்போதில் அடைவுறுத சம்பந்தித் தகைமையைக்கூறும் பொருட்டு வேறுபதங்கோடப்படுமோ. இனி, பொதுவாகக் கூறும் சம்பந்தி யென்பதற்குக் காலவிசேஷ நியதமாய சம்பந்தத்தைக்கொண்டும் முடிவிற் பயனுடைமை யவசியமுண்டாம் எனக்காலாந்தரத்தில் அசம்பந்தியாக இனி திராநின்ற

கருத்தா முதலியனவும் காரணமாம், அதை விலக்குவான் காலாந்தரத்திற் சம்பந்தித்தன்மை வேறுபடுத்தால் விளம் பப்படும் எனின்? இங்ஙனியையாதாம், ஆயின் அதனலுஞ் சிலபாலே காலாந்தரத்திற் சம்பந்தித்தகைமை கூறப்படுமேல் அக்காலும் பயனுடைமை சம்பந்திபத நியாயத்தானே அப் படுவாகப் புகல்வதற்காம் என அதனினும் அயற்போதில் அசம்பந்தத்தை யகற்றுவான் வேற விசேடணமும் புகுத் தத்தக்கதாம்.

312. அதிவியாப்தி விலக்விடைகள்.

இனி, ஒருகாலும் எக்கூடாமையுளதோ அவ்வியாவற் றின் விலக்கம். விளம்பும் வேட்கையா மேலாயின் சம்பந்தி பதத்தின்கண்ணே இவ்வியம்பு மிச்சையிருக்குக, அதிகங் கொண்டு அவ்வறையுமாசையால் ஆற்றியதுபோதும். நிடேத விலக்கத்தானே எவ்விடத்திலுமுடைமையின் இலாபமாமெ னின்? ஆகாதாம், நிடேத விலக்கமானது விதியினும் வேறு பொருளாகாமையின் சமமேயாதலினென்க.

313. விலக்விடைகள்.

அத்தருமியையுடைய (கோடரி) சம்பந்தத்தின் அசம் பந்த அசாமானதிகரண்யம் என்பது, கூடாமையை விலக்க லான் என்பதனனே கூறப்பெறும் எனின்? பெறுதாம், அத னது இருப்பின் காலத்தினும் ஆண்டிருப்பின்மையை யங்கீ கரித்திருத்தலின். எப்போது மெனின்? இயலாதாம், இங்ங னமேல், அஃதென்காரணமின்றிய காலத்தும் காரணத்தோடு கிரியைக்கு யோகமேயா? எதுவரையிருக்குமோ வெனின்? ஆயின், சம்பந்தியென்றது வீணும், இருக்கும் வரை கூடா லமையை விலக்கலானே யாது விசிட்டமாயாதல் உபலக்கண மாயாதல் ஆமோ அது காரணமென்பதாகவே யாகுக, சம்பந்தி

யெனவேயாதல் அவ்வாறு விளம்பும் வேட்கைப்படலாமென முன்பே மொழிந்தேம்.

314. கூறியது கூறுதலின் பரிகாரசங்கையுந் துஷணமும்.

இப்பொருளே, ஏதாவதோர் சூதர்க்கத்தானே சம்பந்தி பதப்பயனுடைமையைக்கூறி அறையுமவாவுளதா மேலாயின் அக்காலங் கூறப்படும்:—இருத்திகையி னுதயக்கிரியையில்லோ கிணியி னடைவு மிங்ஙன் கரணமாகலாம், பின்னருண்டா வனவாய பதினான்குடுக்களின் உதயப்பொருட்டு முன்னுண் டாவனவாய பதினான்கெண்ணிக்கைவாய்ந்த வுடுக்களின் அஸ் தமயமுங் கரணமாகலாம் இவ்வாறே இயைபுமென்னற்க ; ஒரே காலத்துளதாதலின் காரணத்தன்மை கூடாமையாற்கா ரகமென்பது சேய்மையி லொதுக்கப்பட்ட வழிகரணமென் னுஞ் சம்பாவனை யேறுமையின்.

315. சம்பந்த அசத்வசங்கை பரிகாரங்கள்.

ஆண்டுச் சம்பந்தமேயின்றே மென்னற்க ; இயற்கைச்சம் பந்த வடிவமாய வியாத்தி துயருற்று மகற்றமுடியாமையின். இனி, காரிய காரணபாவம் சம்பந்தம் எனக்கூறுமவாவாம், ஆகாதாம், சாமக்கிரிக்குக் கரணத்தன்மை வருதலின்; ஒமெ னின்? அஃதென்னே ஒமெனவுரைத்தே பயனுடையவனுயினை கொல்! எம்மனோரால் சாமக்கிரியும், காணமெனக் கருதப் பெறுமென்பதன் கண்ணே சிரத்தையுறுத எங்களையும் ஆ! ஆ!! பிரணவவாயிலாய ஏதாவதொருசுருதியையே யோசிச்சிரத்தை செய்விக்கலாமென வெண்ணுதியோ!

316. சாமக்கிரி கண்டன பூமிகை.

சாமக்கிரி காரணமல்லவாம், மற்றே, சாமக்கிரியேகதே சமாய நானூதந்தனித்தனியே காரணமாம். ஏதன்பின் காரி யம் அவசியமுளதாமோ அவ்வித்துணைமாத்திர வடிவதே சா

மக்கிரியெனின்? ஆகாதாம், இத்தகைய சாமக்கிரி யிலக்கணம் காரணத்தினு மிருத்தலினனே காரணத்திற்குச் சாமக்கிரித்தகை மைவந்தூறுதலின். கிரியைக்கு விபாகாதிகளிடத்திலும் விபாகத்திற்குச்சம்யோக நாசாதிகளின் பொருட்டும் அவ்வாறுந் தன்மை யடைவுறுதலின்.

317. சாமக்கிரிக்குக் காரணத்தன்மையை யங்கீகரித்தல்.

சாமக்கிரி யேகதேசப்பொருட்டு நியதமாக முன்னிற்றன் முதலிய காரண இலக்கணம் யாதங்கீகரிக்கப்பெறுமோ அது சாமக்கிரியின் கண்ணுமுளதாமென யாங்ஙனம் அதற்ககாரணத் தன்மை? முற்போதையுள்ளடக்கிச் சாமக்கிரியாம், அத்தகைய அதற்கு முன்னிருப்பேயிலே யாமெனின்? இன்றும், அதனனே முற்காலத்திற்கு அகாரணத்தன்மை யுண்மையின்காரணசாமக்கிரியின் கண்ணே அது புகுத்தப்பெறுமையின்.

318. அவ்வியாப்தியைக் கிளப்பல்.

மேலும், இவ்வாறியம்ப இச்சிப்பினும் காரணமாகாதாம், இருக்கும்வரை வியாபாரத்தோடு கூடியதாயினு மதற்குக் கிரியையெய்ப்பயக்குந் தன்மையின்றும்; கிரியையின் காலத்திற்கணமாயினும் அதனனுவிருத்தி நிலேதத்தே பிரமாணத்தையுபந்யசிக்க அஞ்ஞரடைந்து மணுகாலமையின் ஐயத்தானும் இலக்கணம் அசித்தியாதலின்; மாறுக, நெடுநேரந்திரம் பெற்றகரச்சையோகமுற்ற பொருளிற்பரிசப்பிரமையின்கட் காரணமாகிய பரிசன இந்திரியச்சையோக நிலேபேற்றிற்குத் துணியத்தகுதியாதல் கூடலின்.

319. அசம்பவ மறைதல்.

இருக்கும் வரையும் காரணமென்னுங் கூற்றில் யாண்டும் அஃதுள்ளகாலத்திற் காரணத்தன்மையாமென்பது பொருள்;

நியதமாகப் பூர்வகால சம்பந்த வடிவமாய காரணத் தன்மைக்கு ஒரு காலத்தே யிருப்பென்பது கூடாதாம்; காலப் பொருட்டு வேறு காலமின்மையி னென்றுணர்க.

320. வேறுபொருள் விலக்கல்.

இனி, கிரியையோடு கூடாமையை விலக்கலானே சம்பந்தி யென்பதற்கு இது பொருளாம், எஃகிருப்பின் அவசியம் கிரியை யுண்டாமோ என்பதாம்; இதன்பொருள் யாதுகொல்! எதன்பின் கிரியை யவசிய முண்டாமென்பதா? அல்லது எது நிகழின் அவசியம் கிரியையுண்டா மென்பதா? அல்லது எதன் பின்னர்க் கிரியையிருப்பதே யாமென்பதா? அல்லது எது நிகழின் அவசியம் கிரியையிருப்பதாமென்பதா? ஆதியதாகாதாம், சாமக்கிரிக்குக் காரணத்தன்மை வழக்காதலினும் அத்தமுதலியவற்றிற்கு அகாரணத்தன்மை வழக்காதலினும், சுகதுக்காதிப் பிரமேயத்திற்கும் பிரமாகரணத் தன்மை வழக்காதலினும் என்க. பிரமேயமும் பிரமையின் காரணமாமேயென வறையற்க; ஆண்டு அவ்வாறு எவருக்கும் விவகாரங் காணப்பெறுமையின். இரண்டாவது மேலாதாம், தீண்டப்படுவதோடு திரசையோகத்தையுடைய துவக்கிந்திரியத்திற்கு அவ்வியாப்தி வருதலின், அஃதிருந்தபோதினும் மனமயற்பான் மருவின் அத்தனைற் பிரமையுண்டாக்கப்படாமையின். மூன்றாவது மூற்றாதாம், சாமக்கிரி முதலியவற்றிற்குக் காரணத்தன்மை வழக்காதலினும் உற்பத்திக்குத் திதிக்கிரியைப்பொருட்டுக் காரணத்தன்மை வழக்காதலினும் என்க. நான்காவதும் நலமிலாததே, ஒருங்கு கூடியுள்ளவைகட்குக் காரணத்தன்மை வழக்காதலின் இனிக் கிரியையோடு கூடாமையை விலக்கலானே சம்பந்தித்தலைமை காரணத்தன்மையென்பதற்கு இது பொருளாம், வியாபாரமுடையதற்குப்

பலப்பிறழ்ச்சி யில்லாமை யென்பதாம்; இங்ஙனியையாதாம், அத்தமுதலியவற்றே யவ்யாப்தி வருதலின்.

321. வியாபார விகற்பம்.

அவ்வியாபாரமென்பது திஃதென்னே! கரணத்தாலுண்டாய காரணமா? கரணத்தைப்பற்றிய காரணமா? ஆதியதாகாதாம், குறியாராய்ச்சியின்கண்ணே அது சம்பவியாமையின்.

322. அவ்யாப்தி பரிகாரசங்கை.

வியாத்தி மிருதி வாயிலாக இரண்டாவது குறியாராய்ச்சி வியாபாரத்தைப்பயக்கும், பக்கத்தின் முதற்புகை முதலிய காட்சிக்குக் கரணத்தகைமை கருதத்தக்கதாம். இவ்வாறுகவே, மெய்யாக இரண்டாவது வியாத்த அதன் ஆராய்ச்சி வியாபாரத்தையுடைய வியாப்பியத்தின் சொரூபமான பிரமிதி அனுமிதிகரணமென உடன்படலாமெனின்?

323. அவ்யாப்தியின் பரிகாரமின்மை.

ஆகாதாம், பிறிதினின்றுமுளதாய வன்னி தூமாதி வியாப்தி மிருதியுளதாகவே பக்கத்திருக்கும் முதற்றூமாதி தரிசனத்திற்கு அவ்வியாபாரமுடைமை யசித்தமாதலின். ஆண்டும் உபய சருமஜசையோசும்போல அதுவும் காரணமெனின்? ஆகாதாம், அபாவமுதலிய அவாவோடுகூடிய விசிட்டஞானம் போல முன்னுளதாய வன்னி வியாத்த தூமமிருதிக்கு முதலிலும் எவ்விது வன்னி வியாத்தமோ அவ்விது தூமமென ஆராய்ச்சி கூடலின். நித்தியம் அவாவிடும்பொருளில்ஆகுக வங்ஙனம் பிறவிடத்தில்வேண்டாம்;முதலாவதங்ஙனமெனின்? அன்றும், மூன்னக்கரணங்கூடில் அயற்பாலில்லை யிவ்வண்ணமென்னும் நியமத்தில் அளவையில்லாமையின். அதற்கு வியாபாரமின்மையினன் அனுமிதியைப் பயக்கும்பான்மையே யில

தாமெனின்? வியாபாரமுடையதற்குக் காரணத்தன்மையென்ப தாகவே துணியப்பெருமாயின் இன்னணமுமாகுக.

324. உடன்பாடேதிர்மறைகளின் பிறிதோராற்றாற் பெறப்படும் விஞவிடைகள்.

ஆண்டுத் தூமாதி நிருவிகற்பமுடையதும் அவ்வியாபார முடையதும் காரணமாகலாமெனின்? ஆகாதாம், நித்தியமினிது பொருந்திய பொருள்போல நிருவிகற்பகமில்லாமலும் சவிகற் பக எழுச்சி கூடற்கு முரணிலாமையின் நீ மொழிந்த பிரக் கிரியை நியமம் அளவையற்றதாகும். நித்திய மினிதுகூடியதி லும் நிருவிகற்பகத்தை நிண்ணயிப்பேன் எனின்? ஒவ்வா தாம், அயற்காரணத்தானே யதுகிடைத்தவழி ஆண்டு நிரு விகற்பக கற்பனையின்கண் ணளவையின்மையின்; மாறுக, அவ்வினிது பொருந்தியதற்கு இயற்கையைத் தாண்டாமை யுடன்பட்டிருத்தலின்.

325. அவ்யாப்தி பரிகார விஞவிடைகள்.

ஆயினும், யாதொன்றதைப்பயப்பதோ அதுவே ஆண் டனுமிதி காரணமாக நிலைபெற்றுய்கவெனின்? உய்யாதாம், அவ்வாறே பொறி முதலியவற்றிற்கும் அனுமிதி காரணத் தன்மை யமைதலின் என்பதாகப் பெரிது விரித்ததுசாலும்.

326. விசேடணம் பிரயோகித்தலாற்றாடணம்.

சத்தசுரோத்திர சம்பந்தத்திற்கும் சுரோத்திர அவ்வியா பாரத்தன்மை வழக்காதலின்; வேறுயிலை, சுரோத்திரத்திற் குச் சத்தவுணர்வின்கண்ணே அகாரணத்தன்மை வழக்காதலின் சம்பந்தமே பொறியின்வியாபாரமெனப் புகலப்படும் என்ப தாக வேறு வியாபாரமும் அதற்குக்கணிகமாக அசித்தமாம், கிரமேலாயின் முதலிய தோடமேயாம். சத்தமேயதன் வியா பாரம் ஆகாதென்னைகொலோ வெனின்? ஆகாதாம், கருமத்

தன்மையானே கரண கோடியினின்றும் வெளிப்பட்டிருத்தலின்.

327. அப்பிரயோஜகத்தகைமை விளவிடைகள்.

சிலபாலவற்றிற் கொருமையிருப்பினும் யாது கோதாமாலோவெனின்? என்னற்க, சத்தபுத்தியாகிய காரியத்தின் கண்ணே உபாதிவடிவத்தானே புகுந்த சத்தத்திற்குக் காரணவியாபாரமாதலானே காரணகோடியின் கண்ணும் புகுந்தவழி அங்கிசத்தான் நியமிய நியாமகத்தன்மை விரோதவடைவாதலின். குடமுதலிய புத்தியில் விழிமுதலியவற்றிற்கு விழிகுடமுதலியவற்றின் சம்பந்த வியாபாரமுடைமை யிருப்பினும் ஒப்பாமிஃதெனின்? எம்மனோர்க் கென்னும்? ஆகவே.—"பாதம திடமதாயிற் பகரய லொப்பினனே, யேதுகாண் டிடம தாயி னயலியு மெறியலாமான், மோதநிர் வசனவாதி முழுகூஷ்க்கள் முற்றினர்க்குக், கோதுறு மமதையெங்கே கொள்வதோ வறிகிலோமே", "அவ்வண மன்றே முன்ன மிதிலையினரசனனு; செவ்விய முழுகூஷ் வென்ன தெனுஞ்சிறை சிதைந்த மேலோன், இவ்விதமுரைத்தா னிந்த மிதிலைதா னெரிந்த தென்னிற், றிவ்விய வெனது காகஞ் சிறிதிலை சிவமாய் நின்றேன்"

328. இரண்டாவது விகற்ப நிடேதம்.

குறியராய்ச்சிக்கு அனுமிதியின்கண்ணே அகரணத்தன்மை வழக்காதலின் இரண்டாவது மியையாததாம். அதன்நிரு விகறபத்தையுடன்படினும், சவிகற்பகத்தைப் பற்றுமையின். பிரதானக்கிரியையின் அதன் ஹேதுவைப்பற்றுதற்கு அதன் ஹேது வியாபாரத்தன்மையேலோ மிகுவழக்காம்.

329. பலப்பிறழ்ச்சியின்மை யங்கிசகண்டனம்.

மேலும், பலப் பிறழ்ச்சியின்மை யென்பதென்னே, அப்போழ்திலேயே பயனிருப்பி னியமமா? அல்லது அதன் பின்

னர்ப் பயனிருப்பி னியமமா? சுரணைத்திற்கு இன்றியமையாது முன்னிருப்புக் கூறவேண்டியிருத்தலின் ஆகியதாகாதாம். பின்னாதல், தடையிலாத பின்னராதலறைபு மவாவேலாயின் அக்கால் யாதோ சிறிது வியாபாரமுடையது காரணமென்னும் பக்ஷத்தில் அத்தமுதலியவை காரணமாகாம லொழிதலின் இரண்டாவதுங் கூடாதாம். பலம்வரை வியாபாரமுடையதற்கவ்வாறுயினை சருத்தா முதலியவற்றி லதிவியாப்தியாம். இனித் தடையுற்றதற்கும் பின்னராதல் கூறும் வேட்கையேலாயின் அப்போழ்தும், யாதோ சிறிது வியாபார அபிப்பிராய மேல் இடையூறுகூடலின் அத்த முதலியவற்றி லவ்வியாப்தியாம்; பலம் வரை வியாபார அபிப்பிராயத்திலோ தடையிலாமையின் காரகமாத்திரமே காரணமெனக் கழறியதாகும்.

330. விகற்ப நீக்கம்.

வியாபார மூடையதற்கும் பலப்பிறழ்ச்சி யின்றென்பதென், அவ்வியாபாரத்திற்குப் பலப்பிறழ்ச்சி யின்மையா? வியாபார விசிட்டத்திற்கா? அத்தாதி யகரணத்தன்மை யடைவுறுதலின் ஆகியதாகாதாம். அதனுனே மற்றது மூணும், மகமுதலியவற்றிற்குத்துறக்க முதலியவற்றின் அகரணத்தகைமை யடைவுறுதலின். அபூர்வ வாக்கியார்த்தத் தன்மை வாதியினுனும் ஈற்றுமகத்திற்குப் பல காரணப்பான்மை யங்கீகரிக்கப் பட்டிருத்தலின்.

331. உத்யோதகராற்றிய காரணவிலக்கண நிராகரணம்.

இனி, எஃதடையதே யியற்றுகின்றதோ அதுகாரணம், எஃதடையதே யளக்கின்றதோ அஃதளவையெனக் கூறப்படுமெனின்? இங்ஙனியம்பற்க, அகரணங்களாய ஆன்மதன்மப் பிரத்தவம்சாதிகட்கு அளவைத்தன்மை வழக்காதலின்.

332. விசேஷணமீயினும் அதிவியாப்தியாதல்.

எக்கிரியைக்காரணத்தோடு கூடியதாகவே அளக்கப்படு மோவெனின்? அடாதாம், சுகமுதலிய பிரமிதியின்கட் கரணவியாபாரத்திற்கும் காரணத்தன்மை வழக்காதலின். ஓ மெனின்? ஒண்ணுதாம், வியாபாரமற்றதாதலினனே காரக மாகாமையின் காரகவிசேட கரணபாவங் கூடாமையின். வியா பாரமுடையதானுமெனின்? என்னற்க; இவ்வாறே வியா பாரமுடையதற்கேகரணத்தன்மையாகாதாம். வியாபாரமுடை யவதற்கு வேறுவியாபாரமுடைமை யுளதாத லின்றன்றே. இனி, வியாபாரமுடையதற்கு வியாபார அங்கிசம்தணந்து காரணத்தன்மையாம், ஆண்டோ உளதேயாம் இவ்விலக்கணம், எதற்குக் காரணத்வமுளதோ அதற்கு வியாபாரமுடைமையும் உளதேயாம் என வியாபாரமுடையது காரணமெனலாமெனின்? தகாதாம், ஆடையை யுயர்த்தித் தாழ்த்தித் தோய்ப்பவனுக்கு அவ்வாடை காரணமேயாகவும் காரணமன்றேவாம்.

333. இலக்கிய வடிவத்தை யுணராவிடின் இலக்கணந் தந்திரமாகாமை.

மேலும், யாதுதன் காரணத்தன்மையென இலக்கியமாயது அவசியம் இயம்பவேண்டியதாயிருத்தலின், கூறிய இலக்கண முடைமையேயஃதாமேலாயின், அப்போழ்தான் மாசிரயவடை வாம். சொரூபமெனின்? கூடாதாம், சொரூபமானது காரணந் தோறும் வெவ்வேறுதலின், ஒன்றை விடுதலானே அயலி னிடத்தில் இலக்கணம் சென்றதென்பதாக அதிவியாத்தியாம். விழியின் சொரூபம் செவிக்கின்றன்றே.

334. எஃதுடையதேயளக்கின்றதோ என்பதன் கண்ணயற்றேடம்.

மேலுமிவ்வாறே பொறி முதலியவற்றிற்கும் பிரமாணத் தன்மையாகாதாம், அஃதற்றவாய அனுமாதா முதலியவற்றிற்

கும், பிரமாதாத்தன்மையாதலின். இது பிரத்தியக்கமன்று மாலோவெனின்? அன்றும், இவ்விலக்கணமுந்தான் காட்சி யொன்றனுக்கே புன்னுற் செய்யப்படவில்லை யன்றே. அற்றேல், பொறி முதலியவற்றிற்கு விசேடமாக விலக்கமெனினும் அச்சாதியையடைந்ததன் காரணமாத்திரத்தன்மையானே அச்சாதியமர்ந்தது மாத்திரத்திற்குவிலக்குதலிலாமையேயாம்; அனுமிதியாதியின்கண்ணும் அகரணச்சாதீய முடையது அளப்பதென்பதாக விலையன்றேவெனின்? என்னற்க, கரணமெனப் பொதுமைபுற்ற விதுகாறுங் துணிபுறுத்த வேலாமையின்.

335. அவ்யாத்தி பரிகாரவினவிடைகள்.

இனி யெப்பிரமையை யெஃதுடையதே பயக்குமோ அதன் மாட்டது காரணமாமெனின்? இங்ஙனிசையாதாம், கௌபீனமறைப்பு முதலியவற்றிற்கும் காரணத்தன்மை வழக்குக்கதுவலின். எச்சாதியுடையதையெனின்? இஃது மேலாதாம், பரோக்கப் பான்மைச்சாதி யுறுப்பிரமையைக்குறியுடையதேயாதல் சத்தமுடையதேயாதல் பயக்குமென நியமமின்மையின் அதற்கு அகரணத்தன்மை வழக்காதலின் சாக்ஷாத்காரித்தன்மை அனுமிதித்தன்மை முதலிய சாதிபேதங்கள் விளம்பும் வேட்கையினவாமெனின்? ஆகாவாம், தனித்தனி கோடப் படுமேல் அங்கிச அவ்வியாத்தியாதலின், ஒருங்கேகூட்டிக் கோடினே அசம்பவமாதலின், நியமமிலாமலே கோடினே இலக்கணமையபிலாம விருந்தேகலின் என்றுணர்க.

336. வியதிரேக வாயிலாய்க்கரண சாமானியத்தையும் பிரமாணத்தையுந் தூடித்தல்.

எஃதிலாமையின் கருத்தா கருமங்கள் கிரியையுண்டாக்காவோ, அது காரணமாம்; அதனுன் எஃதின்மையின் பிரமாதாப் பிரமேயங்கள் பிர்மையைப்பயவாவோ, அது பிரமாண

மென்ன விலக்கணம் என்பதும் இயைபுறுதாம். பிரமாதாப் பிரமேயங்கள் இருந்து எந்நிமித்தமாகப் பயவாவோ எனவா? அல்லதில்லாமலும் எனவா? ஆதியதில் சென்ற வருவவாய கருதன் முதலிய கரண அவ்வியாத்தியாம். இரண்டாவது மேலாததே, பிரமாதாப் பிரமேயங்களினும் வழக்காதலின்; ஆண்டுக்கண் முதலியவையிலாமையின் பிரமை யுதியாததே சோலவே பிரமாதாப் பிரமேயங்களினும் இன்மையின்; அன்றுயிலை, அவற்றிற்குக் காரணத்தன்மையே கதுவாமற் போம். இதனனே பொதுவாகப் புகன்றது மறுக்கப்பட்ட தாம் நம்மனோர் முதலிய கருத்தாக்களையவாவிய ஈசுரகருத் தாவையுடைய நமமனோர் முதலியோர் ஞானத்தில் நம்மனோர் முதலிய கருத்தாக்களின் காணத்தன்மையடைவுறுதலின். இங்ஙனமாகிய வழியும் வகைவேற்றுமையானும் பிரமாணப் பிரமாதாத் விவத்தையைப் பொருந்துமாறு செய்வித்தன் முடியாதாம்; எவ்வுருவத்தானே கருத்துருத்தன்மைமுதலிய வற்றனே நம்மனோராதியர்க்குப் பிரமையின்மாட்டுச் சேர்க் கையோ அவ்வுருவத்தானே அவ்வபாவத்திற்குப் பிரமை யைப் பயவாமையின்கட் பிரயோஜகத்தன்மைபுண்மையின் என்பதாம்.

337. வேற்றிலக்கண நீக்கம்.

ஈற்றுவியாபாரமுடைமை கரணத்தன்மையென்பதுங் கூடாதாம், வியாபாரமின்மையின் குறியாராய்ச்சிக்கு அக ரணத்தன்மையடைவுறுதலின், சவிகற்பகவியாபாரமுடைய நிருவிகற்பகத்திற்கு ஆண்டுப் பிரமாணமாதலாமென்னற்க; கேவலம் விகற்பிக்கப்பாலதாய குறிவிடயத்தில் அஃதொவ் வாமையின். சமக்காரமுதலியவவை பற்றினே அனுமிதிக்கு ப்யந்தமையுண்மையின் கண்ணளவையின்மையின், காரியத்திற் குக் காரணமாகாதது காரகவியாபாரமாகாதாமென்க. அன்றி

யும் அறியப்பெறுதகாரணத்தன்மை வந்தமைதலின். குறியே ஆராய்ச்சி வியாபாரமுடைமையானே கரணமெனல் கதுவு மென்னற்க; அனுமிக்கப்பட்ட அனுமான முதலியவற்றின் மாட்டாராய்ச்சி குறியாற்பிறவாமையானே அதன்வியாபார முடைமைகூடாமையின். ஆத்தனறைதன்முதலியவற்றுனே ஆண்டமர்ந்திருந்தது புகையெனப் புலப்படுதலான். அப் போழ்து ஆண்டுத்தீயுமிருந்ததென எவ்வனுமானமாம் அவ ணின்மையின் புகையினுக்கு ஆராய்ச்சிவியபார முடைமையா னேகரணத்தன்மை சேய்ம்மையின் நூக்கப்படுமென்றுணர்க.

338. ஈற்றுத்தன்மை யேவிய தூடணம்.

மேலும், யாதாவதொன்றனைக்குறித்து ஈற்றுவியாபாரத் தன்மைக்கு எல்லாக்காரகப்பொதுமை யுண்மையின், எல்லாக் காரகங்களைக்குறித்து ஈற்றுவியாபாரத்தன்மைக்குத் தற்குறி த்து ஈற்றுத்தன்மை பொருந்தாமையான், யாண்டும் அசித்தி யாதலின். கருத்தாவைக்குறித்தெனின்? ஆகாதாம், கருத்தாத் தருமி மாத்திரங்குறித்து விளம்பும் வேட்கையேல், கருத்தா வின்கண் வழக்காங்கே நிலைபெறுமாகலின். வியாபாரமுடைய கருத்தாவ வாவைக்கருதினே கருத்தாவின்மாட் டவ்வழக் கேயாம். ஒருவியாபாரமுடைய கருத்தாவைக்குறித்து அய லயற்கருத்துரு வியாபாரத்திற்கு ஈற்றிலாந்தன்மையுண்மை யின். எல்லாவியாபாரமுடைய கருத்துருவாப்பக்கத்தினே காரணம் கழறுவான்காதலிருப்பினும் ஆகாதாம். பலசித்தி பரியந்தம் கருத்துருவியாபாரம் இலைப்பாருமையின், வியா பாரம் விடுபடின் அதனேதிலக்கண விரிதல் வருதலின்.

339. விஞவிடைகள்.

எவ்வியாபாரத்தின்பின் வேறுகாரகம் வியாபாரியாதோ அஃதீற்று வியாபாரமெனவிட்டமா மெனின்? அன்றும், கட வுளைக்கோடும்பக்கத்திற் கருத்துருவியாபார மிலைப்பாருமை யின், அதன்பின்னர்த் தாய்த்துணியப் பெறுமையின் அவர் க்குக் கரணத்தன்மையடைவுறுதலின்; கடவுளைக்கருதாப்பக்

கத்தின்கண்ணே பொறியொற்றுமை முதலியவற்றானே வியாபாரத்தோடுற்றகருமத்தின்கண்ணும் வழக்காதலின். பிளக்கப்படுவன முதலியவற்றிற்கோ கரணவொற்றுமைமுதலிய வியாபாரங்கடையதேயாம், ஆகவே யாங்ஙனம் அவற்றின் நீக்கமாதல்? அத்தத்தான் அவ்யாப்தி வருதலினனுமென்க.

340. கரணமாத்திரத்தின் வேற்றிலக்கண நீக்கம்.

பிற்பலங்கரண மென்பதும் பிழையாம், சிறப்பிலாதபிற் படுதல்சருவகாரண சாதாரணமாதலின், வியாபாரியை யவாவியதடையற்ற பிற்படுதல் மகமுதலியவற்றில் அவ்வியாப்தியாதலின், வியாபாரம் அவாவியதோ அத்தாதியில் அவ்வியாத்திப்படுதலின், வியாபாரபரம்பரை யவாவியதற்கு எல்லாக்காரகத்தினும் வியாபித்தலின் என்பதாம்.

341. வியாபார தூடணம்.

மேலும், அதன் காரியங்கிரியையின் காரணமாக அது வியாபாரமென்ப திட்டமாயின் அக்காற் பொறியின்காரியமாகிய குறியாராய்ச்சி அனுமிதிக்கிரியையேதுவாமெனப் பொறியைக்கரணமாகவுற்றதனுமிதியெனப் பொருந்தும். இனி (முக்கியக்கிரியை) யேதுவின் காரியமாய்க்கிரியையேதுவாமது வியாபாரமாம்; ஆகவே, அனுமிதியின் ஏதுவாகாத பொறிக்குக் கரணத்தன்மை யாங்ஙனங் கூடுமெனின்? என்னற்க, யாதனுமிதியின்கண்ணே பொறிக்கிலதாமோ அவ்வேதுத்தன்மை யாதுகாண்! நியதமாய்முன்னிற் பதாமெனின்? ஆண்டு முன்னிற்றற்றகைமையுளதாம், நியதத்தன்மையும்காரணத்தன்மையிற் சாதகமென விழையின். எவ்வருவத்தானேனும், பொறிமுதலியவற்றிற்கு நியதத்தன்மை பொருந்துறுமாறு நின்னானே முயலத்தக்கதாம்; வேறுயினே குறிபொறிமுதலியவை பரஸ்பரம்பிறந்தலின் காரணமற்றதே பிரமையாகும்; உளவொற்றுமை முதலியவையே அவ்வாறுமேல் அப்பிரமைப் பொதுவாம். மேலும், பொறிமுதலனவற்றிற்கு

அகரணத்தன்மையினடைவாம், எப்பொதுவி லெப்பொதுச் சாதகமாமோ அச்சிறப்பினுக்கே அச்சிறப்பிற் சாதகத்தன்மை நியமங்காண்டலின். ஆகையால் எவ்வொருவடிவத்தானே பொறிக்குப் பிரமையில் நியதத்தகைமை நிகழ்த்தப்படுமோ அவ்வடிவத்தானே வழக்கின் ஒழுக்காம். இனிப்பிரமாத்தன்மையி லதுசாதகமாம் அனுமிதித்தன்மை முதலியவற்றிலோ ஆகாதாம் எனின்? ஆகாதாம், வேறோராற்றூற் பெறப்படாத உடன்பாடென்திர்மறையுண்மை யொருபடித்தாதலின் உரைத்த பொருளினும் மிகுபொருளொன்றுங் காணுமையின் பொதுச் சாதகத்தகைமையானே விசேடத்தை விடுதற்கிடங்கிடையாமையின் என்க. அன்றியிஞ்ஞ வியத்திக்கு அகாரணமுடைமை யடைவுறுதலின்.

342. பிரமாண விலக்கண மிதுவெனும் விஞ.

இனிப்பிறவிடத் தொருவாறுகரண இலக்கணமுளதாகுக, பிரமைக்குக்கூறவிழைந்த ஜாதிவிசேடத்தால் விலக்கப் பாடுடையது பிரமாணம், பேதமதிவிளக்கம்பெறுவனவாமிக் காட்சிமுதலிய வுணர்வுகணன்கேயன்றே; பிரமாதாவாதல் பிரமேயமாதல் அப்பேதமேதுவாகாதாம், அளவைகளோதக்க தக்கபடி நான்கன் கண்ணும் சிறப்புற்றனவேயாம் எனப் பேதமதிவிளக்கும் காரணங்களே யாகும்.

343. விஞவின் விடை.

இங்ஙனமியம்பற்க, விளம்பவிழைந்த பதமாண்டிலக் கணத்தில் வஞ்சகன்வரைவேபோலும் புருட இச்சைகட்கு நியதமிலாவிடயத்தன்மை யுண்மையின் பொருளாலுண்டாந் தன்மைக்கும் பிரத்தியக்குப்பொருட்டுப் பொறியாலுண்டாந் தன்மைபோன்றே யிருத்தலின்பொருட்கும் கரணத்தன்மை வழுக்காதலின் ஆத்தன்கூற்றிலோ, கருத்தாவிற்கும் சாத்தப் பிரமைச்சாதிச் சிறப்புடைமையானே மிகுவழக்காதலின், ஓமெனும் விடையை யுரையாடிஞ்ஞ முன்னரே மொழிந்தா மென்க.

344. அயலிலக்கண தூடணத்தோடர்புணர்த்தல்.

அறைய அவாகிய சாதிபேத வுபாயத்தகைமையானே பிரமிதிய சமவாயிகாரணச் சிறப்புடையது பிரமாணமென்பதும் இதனுனே மறுக்கப்பட்டதாகும்; என்பதாகப் பிரமாகரண நிருக்கித்தூஷணங்களாம்.

345. பிரமாணவிசேட இலக்கணகண்டனத்தோடர்புணர்த்தல்.

இன்னணஞ்சிறப்பானும் அளவையிலக்கணங்கள் மறுக்கத்தக்கனவேயாம். அங்ஙனமன்றே:—பொறிப்பொருளொற்றுமையானுண்டாயஞானம் பிறழ்தலிலாததுபிரத்தியக்கமென்பர்; யாதின்பொருட்டிஃ்தியம்பலாயதுகொல்! சஜாதீயவிஜாதீயங்களினின்றும் விலகிய வதன்புலப்பாட்டின்பொருட்டா? அல்லது சாஷாத்காரித்தன்மைப் பிரதீதியின்பொருட்டக்குறியையுணர்த்துவதிஃ்தாமெனவா? அல்லது விவகாரப்பொருட்டா? அல்லது காட்சியாதி சத்தப்பிரயிருத்தி நிமித்த நிண்ணயப்பொருட்டா? அல்லது வேறு யாதேனும் ஒன்றன் பொருட்டேயா?

346. விகற்ப விலக்கம்.

அவற்றுள் ஆதியதாகாதாம், அங்ஙனமன்றே:—சஜாதீயமெனப்பிரத்தியக்கத் தன்மையானே சமஜாதியுடையதை விரும்பியதா? அல்லது வேற்றுருவத்தானேயா? ஆதியதன்றும், ஆகலின் விலக்குவது வரை சஜாதீயமாதலின் விலக்கப்படாத்தன்மைபுடைமையான் விலக்கப்பாடுடைமைகூடாமையின் விலக்குந்தகைமையையங்கீகரித்தலினுனே அவ்வியாத்தி வருதலின் மற்றதும்பற்றுதாம், விஜாதீயபதங்கோடல் வாளாபோதலின், உளதேயாமன்றே, பிரமேயத்தன்மைமுதலியவற்றுனே சர்வசஜாதீயத்தன்மை. இனிப்பிரமாணத்தன்மை முதலியவற்றுனே சிறப்பாகச் சஜாதீயத்தகைமை விளம்பவிழைந்து இஃ்தியம்பப்படுமாயின், இலக்கியத்திற்கும் பிரமாணத்தன்மையானே சஜாதீயத்தகைமை யுண்மையான் விலக்

கப்படுங்கோடியிற் புகுத்தப்படுதலிற் சங்கிரகிக்கப்படுவதொன்றிலாவழுக்குண்டாம். இலக்கியத்திற்கு யாது பிரமாணத்தன்மைமுதலியவற்றுனே சஜாதீயமாமோ அது விலக்கப்படுவதாம். இலக்கியத்தினிலக்கியம் சஜாதீயமென்பதாக வாகாதாம்; ஆறும்வேற்றுமைப் பொருட்கு வேற்றுமை விளக்க விருப்புண்மையின் எனின்? இங்ஙனமாயின் இலக்கியத்தைக் குறித்து வேற்றுமையான் விலக்கம் என்பதாகவேயியம்பலாம் பிரமாணத்தன்மை முதலியவற்றுனே சஜாதீயத்தகைமை கொண்டு பிரகிருதத்திலுபயோகமாகாததை வருணித்தலானே. வரைந்ததுசாலும் இலக்கியத்தினின்றும் அயற்றகைமைமற்றவற்றிற்குணரப்படுமாயின் அக்கான்மற்றவற்றினின்று மயற்றன்மையும் இலக்கியத்திற்குப் பொருளாணியப்பெறும், பிறவே முன்பே இலக்கணப்பயன் சித்தமாம், ஆகவே இலக்கணக்கதைக்கு வீணீந்தன்மையே பூணுமென்க.

347. இலக்கணம் அறியப்பெறினும் பெருவிடினும் விலக்குவதாதல் கூடாமை.

உளதாகுக தான்விளம்பும் வேட்கையின் விசித்திரவயத்தான் எங்ஙனமேனும் இத்தகையகூற்று. எனினும், அறியப்படாததேயாய இவ்விலக்கணத்தானே ஆண்டு விலக்கப்படுந்தோற்றம் அமைதலாகாதாம், மிகுவழக்காதலின். அறியப்பட்டதானுமாகாதாம் துயருற்றுணிதல் கூடாமையின். அங்ஙனமன்றே:— ஆண்டுப் பொறிப்பொரு ளொற்றுமையுதயங்காட்சிப்படாதாம் காட்சிப்பட்டா விசேடணத்தன்மையுண்மையின். காரியக்குறியானுதல் அதன்பொருந்தாமையானுதல் அதனுணர்வாமென்பது மடாதாம். அவற்றுற் பொதுவாகக் காரணமாத்திர ஆக்ஷேபத்தானே காரணத்திருக்குந் தொடர்ந்தரூபந்துணியப்பெறுதவழி வகரூபவிலக்கணந் துணியப்பெறுமையின். காரியத்தினது ஒருஜாதியுடைமையினுனே ஒருஜாதியுடைய காரணசித்தியாமெனின்? ஆயின் காரியத்திருக்கும் ஒருஜாதியுடைமையை முன்னொருதலையா யுணர

வேண்ட லுடன்பட்டவழி, அதனுனே சஜாதீய விஜாதீய விலக்கவுணர்வுளதாக, பாரம்பரியத் தட்டசிருட்டியாமிதனு லியற்றியதுசா லும்.

348. சிறுஉபாயத்தாற் சித்தித்தவழி குரு உபாயத்தின் முயற்சிகோதாதல்.

அற்றேல், இத்துணையானும் பிரகிருத இலக்கண கண் டனமாகாதாம், அவ்வியாத்தியாதல் அதிவியாத்தியாதல் உண் டாக்காமையின் ; இங்ஙன ஏலாதாம், முதலிலாதலானும், இன்றி யமையாது அனுட்டிக்கத்தக்கதாதலானும், எளிதாயவுபாயத் தாற்றுணிபொரு டெணியப்பெற்றுற்றவழி, ஈற்றினெய்தலானும் இன்றியமையா தனுட்டிக்கத்தக்கதாந் தன்மையின்மையானும் பேருபாயத்திற் பிரவிருத்திக்கும் நினக்கே இத்தோடமுண் டாக்கலாம், விளக்கில் வேறு விளக்கைக்கொழுத்தி இருளீக்கு வான் முயலும் புருடனுக்கேபோலும். அவ்வயல் விளக்கிற் காசொன்றுமின்றும், மற்றே, அவ்வாறுக்குமவனே கடாவத் தக்கவனுவன். சருவசாதன சாதாரணமாகவித்தோடந்தானும், யாது இவ்வண்ணம் எளிதாய வுபாயத்தின்கண்ணே சம்பவிக் குந்தன்மையென்பதாமோ, எல்லாவளவைகட்கும் சொரூபா சித்திபோலும். ஆகலின் அதிவியாத்தியாதி தோடங்களுண் டாகவே வேண்டுவதின்றும் பொதுத்தோடத்தானே இவ் விலக்கணந் தட்டமாமென்பதாம்.

349. இரண்டாவது விகற்ப நீக்கம்.

இதனுனே யிரண்டாவதும் நீக்கப்பட்டதாகும், சாகூாத் காரித்தன்மையபுணர்க்து கோடாமல் அதனுணர்வுகூடாமை யின், அதனுணர்வானே இதன துபலப்பாடாமென்புழி ஒன்றை யொன்று பற்றும் வழக்காம். உளதாகுக தான் மற்றொன் றெதுவேனும் பொறியாற் பயக்கப்படும்பான்மையிற் குறி யாயினும், அஃதே சாகூாத்காரித்தன்மையிலா தண்டாகாமை யின் பிரத்தியகூ லகூணமுபன்யசிக்குக, முன்னிலையுணர்வு

டைமையின். அஃதின்றியமையாது வியாபகமெனக் கூற வேண்டுவதின்றும் குறிக்கு அதன் வியாப்பியத்தன்மையானே கூடலின் எனின்? ஆகாதாம், யாண்டுக்குறி யவ்வியாபகத் தன்மையானேயிலதாமோ, ஆண்டுப்பொறியாற் பயக்கப்படும் பான்மைக்கு அளவையின்மையின் உணர்தற்குமுடியாமையின் யாங்ஙனம் அதனாற் சாக்ஷாத்காரித் தன்மை யுணர்வாதல்? சிலபாற் பொறியாற்பயக்கப்படுந்தகைமை பிரத்தியக்க ஜாதியே மாயே அளவையின்மையின் துணிய முடியாமையானே சாக்ஷாத்காரித்தன்மையின் வியாபகத்தன்மை வியாபகத்தன்மை யானே யறியப்படாதபோதினும் இலக்கணமாங்கால் அவ்வி யாபகமாய அயற்குறியால் ஆக்கிய அபராதமியாதுகொலோ! இனி யாண்டது பொறியாற்பயக்கப்படுந்தன்மையிற் குறியா காதோ ஆண்டு அயற்குறியால் அஃதுணராத்தக்கதாம். ஆயி னும், அதுவே சாக்ஷாத்காரித்தன்மையின்கட் குறியாயிருக் குக, பொறியாற்பயக்கப்படும்பான்மை யனுமான வாயிலாக அதனனுமான கற்பனையானேயாக்கியது சாலும். இனி யவ் வாறு இருகுறியாமலை தனித்தனி அவ்வியாபகத்தன்மை யானே இலக்கணமாகாதாம் பொறியாற்பயக்கப்படும்பான்மை யோ அவ்வாறதாந் தன்மையார்தலின் இலக்கணமாமெனின்? ஆகாதாம், இலக்கணப்பிரயோஜனமாகிய சாக்ஷாத்காரித்தன் மையனுமானத்திற்கு இரண்டனுனே சித்திகூடலின். வியாபக மாகியவதனானே விளைத்ததுசாலும்.

350. மூன்றுவது கற்ப நீக்கம்.

மூன்றுவது முற்றுதாம், அதுவே இவ்வடிவினதாம், யாது பொறிப்பொருளொற்றுமையான் உளதாயதோ அது காட்சியென்பதாக விவகரிக்கத்தக்கதாம். இப்பொருளும் இலையவதாகாதாம். இலக்கணத்தையறிய வேலாமையின். சா க்ஷாத்காரித்தன்மையானே அஃதுணரப்படுமாயின் சாக்ஷாத் காரித்தன்மையே விவகார நியமகாரணமாகவாகுக, தடையற்ற வுணர்வுடைமையின் என வுணர்த்தப்பெற்றதாகும்.

351. நான்காவது கற்பநீக்கம்.

இதனுனே நான்கர்வதுமாகாதாம் கற்பனைக்கவுரவதோட மும் மிகநிற்கு மென்க.

352. ஐந்தாவது கற்ப நீக்கம்.

ஐந்தாவதுமகாதாம் அத்தகையதைக் காண்பிப்பான் கூட்டாமையின் இதனுனே யிலங்காநின்ற வடிவப்பொறியொற் றுமையானே புளதாயது காட்சியென்பதும் நீக்கப்பட்டதாம். மேலும், பிரமாணவிசேட விலக்கணமாயவிது பிரமாணசாமா னிய இலக்கணங்கவர்ந்தவற்றுட்சிலவற்றைக் கோடுவதாகவும், சிலவற்றை வீடுவதாகவும் கூறவேண்டும். பிரமாணவிலக் கணத்தானே பிறழ்வதின் நீக்கம் காட்டப்படும். அன்னண மாகவே கேட்டபடியாய விஃதலக்ஷணமாம், இலங்காநின்ற சத்தைமுதலிய வாகாரத்தின் வியபிசாரியும் பொறியொற்று மையான் உண்டாம். இனி விசேஷச்சுருத்தானே இவ்விலக் கண மியம்பத்தக்கதாம், ஆயினும் அசங்கதமாம்; அங்ஙனமன் றே:—சிறுமாத்திர மிலங்காநின்ற பொறி யொற்றுமையான் உளதாந்தன்மையுரைக்கும் வேட்கையா? அல்லதென் யாவு மிலங்கும் பொறியொற்றுமையான் உளதாந்தன்மையா.? ஆதியதேல் வியபிசாரிவிலக்கப்படாதாம், நிர்விகற்பமுங் கவ ரப்பெறுதாம்.

353. இரண்டாவது விகற்ப நீக்கம்.

இரண்டாவதும் ஏலாதாம். விகற்பஞ்சுகியாமையின்; அங்ஙனமன்றே:—விளங்குந்தன்மை விசிஷ்டத்தின் பொறி யொற்றுமையா? விளங்குந்தன்மை யுபலக்ஷிதத்தினதா? ஆதி யதாகாதாம், முன்னர் விளங்குந்தன்மையின்மையின் காரணத் திற்கு முன்னிருப்புத்தன்மை யுண்மையின். இரண்டாவதன் கண்ணும் லட்டிற்கு (நிகழ்காலங்காட்டும்லகாரத்திற்கு)விளம்ப வேட்கைப்படாப் பொருண்மையா? விளம்பவேட்கைப்படும் பொருண்மையா? ஆதியதாகாதாம், அங்ஙனமன்றே:—விள

ங்காகின்ற எல்லாவடிவ வொற்றுமையா னுளதாயதாமிது கடமென்னுமுணர்வு, அக்காலான்மாவின்கட் காட்சியின்றும், ஆன்மாவிற்கதன தது விடயத்தன்மையின்மையின், பிரமாண மாதற்கும் விடயநியமத்தன்மை யுண்மையின். யாண்டுப்பிரா மாணியம் ஆண்டே விடயத்தில் அவ்விசேஷப் பிரத்தியக்ஷத் தன்மையறையவேண்டி யிருத்தலின்; மாறுயிலே ஆடையி னிருப்பிற் குடமிஃதென்னுங்காட்சியைப் பிரமாணமாச்சுபவ னுக்கு விடையாதுகொல்?

354. கருத்தறியாமையை மூலமாக்கோண்ட வினாவிலக்கம்.

அற்றேல், இவ்விடை குடவுணர்வு ஆடையிற்காட்சிப்ப டாதாம், அப்பொறி யொற்றுமையாலே யுண்டாயதெனவாக்கா தாம். அஃதென் ஆன்மப்பொறி யொற்றுமையா னுளதாய குடவுணர்வு ஆன்மாவின் கண்ணே காட்சியேயா? யாங்ஙன மிங்ஙனமாகும்? ஆன்மப்பொறியொற்றுமையாற் குடவுணர் வுளதாயினும் ஆன்மாவிலங்காததாகலின் எனின்? அற்றன் றும், இலங்குகின்ற தென்பதன்கண் இலட்டிற்கு விளம்பும் வேட்கைப் பொருண்மையிலாப் பக்கம்பற்றி இஃதன்னுமை யம்பப்படுமென வெண்ணத்தக்கதாம். உளதேயாமன்றே ஆன்மாவிற் கிலங்குவதாந்தகைமை யோரொருகா லெதனு லேனும், மாறுயிலே, அப்பிரமேயத்தன்மை வழக்காதலின்.

355. வேறுவிசேஷண வினா விலக்கம்

இயம்பிய இலக்கணத்தையுடையது தன்விடயத்திற்பிரத் தியக்கம், பிறவிடத்துமென்பது பிழையாமாலோ வெனின்? அற்றன்றும், தன்னென்னுஞ் சத்தத்தானே ஞானமாத்திரத் தைக்கூறும் வேட்கையேல் அக்கால் அத்தோடம் ஆங்கேநில்லை பெறும். இனிஞானவியக்தியவாவப்பெறும், அக்கால் இலக்கிய வடிவம் அசாதாரணமாயிருத்தலின் அதனதீக்கத்தான் இலக் கணத்திற்குப் பிறவிடத்திற் செலுந்தன்மை யேய்தலின் அதி

வியாப்தியாம். இலக்கணத்திற்குப் பற்றுக்கோடாகியவேறு வியக்திக்கு ஒருவியத்தியோதிய இலக்கிய வடிவமாய அசாதாரணரூபத்தன்மையின்மையின் வேறுவியக்தியும் இலக்கியமே இலக்கியமல்லாததன்கண்ணன்றே இலக்கணத்தின் செல்கையர்ல் அதிவியாப்தியாதல் எனின்? அற்றன்று, யாது ஓரிடத்தில் அசாதாரணவடிவமாயிலக்கியத் தன்மையானே யுன்னுன் நிரூபிக்கப்படுகின்றதோ, அது அன்னியத்தினதுவடிவமன்றும், ஆகலின் யாங்ஙனம் அதுவும் இலக்கியம்என வும்மைச்சத்தத்தான் அநேகத்தைப் பொதுவாக்கிக்கூட்டுவிப்பான்கூடும்? எதுதான் சாதாரணரூபமோ அதுவும், வேறுவியக்தியை விலக்குவதாகிய தன்விடயபதவிசேடணம்தரும் உன்னுனே அசாதாரணமாக்கப்பட்டதாம். தன்னென்னுஞ்சத்தம் ஞானமாத்திரப் பொருளதேல் தோடங்கூறப்பட்டிருத்தலின், தன்றன்மையின் றொடர்ந்தவுருவத்தையும் கூறுவான் கூடாமையின்; மாறுயிலே, அன்னிய வியக்திவிடயத்திற்குப் பிறவிடத்தில் அவ்வாறுந்தன்மையடைவுறுதலின்.

356. இலட்டிற்கு விளம்பவிரும்பிய பொருண்மைப் பக்க நீக்கம்.

இரண்டாவது பக்கமும் ஏலாதாம். விகற்பம் பொறுக்க மூடியாமையின், ஒற்றுமையைக்குறித்து நிகழ்காலத்தன்மையா? அல்லதென் ஏதேனும் ஒன்றைக்குறித்தோ? முதலதேல், விசேடணத்தன்மைப் பக்கத்தினும் விசேடமின்றுமெனவிளம்பியதோடடைவாம். இரண்டாவதேலோ இலட்டிற்கு விளம்பும் வேட்கையிலாப் பொருண்மையேயாம், விலக்கப்பட்டனவாய இலங்கிய இலங்குவனவற்றிற்கும் அஞ்ஞான்றஞ்ஞான்று இலங்குந்தன்மை யங்கீகரித்தலின்.

357. பரன்விஞவின் கண்டனம்.

பொறியொற்றுமையின்பின்னர் விளங்குந் தன்மையவாவப்பெறும், ஆகலின் விளம்பும் வேட்கைப்பொருள்

எனின்? அற்றன்றும், ஆன்மாவிற்கும் பொறியொற்றுமை யின் பின்னரிலங்குந் தன்மையுளதாம். அது மனத்தாற் கவ ரப்பெறும்போது பொறியொற்றுமையின் பின்னரிலெனின்ப தாகவிலையன்றே ! பொறியொற்றுமைமாத்திரம் புகலும் வேட்கையின்றும், மற்றே, எதன்பின்னரிலங்குந் தன்மையுள தாமோவெனின்? ஆகாதாம், அவ்வியாத்தி வழுக்குண்டாத லின், ஒரு விளக்கமாத்திரம் இலக்கணத்திற்கு நிலைபெறுதலின்.

358. விசேஷணமிலேகை விஞவின் விலக்கம்.

இனி எவ்விலக்கம் எவ்விடயத்தினது பொறியொற் றுமையானுளதாமோ அஃதாண்டுப் பிரத்தியக்ஷப்பிரமாணம் என நிகழ்த்திற் கோதின்றும். இங்ஙனியையாதாம், இதுகுட மாமென்னும் எவ்விளக்கம், எவ்விடயவான்மாவின் பொறி யோடொற்றுமையின் உளதாமோ; அவ்விளக்கம், அவ்வான் மாவின் கண்ணே பிரமாணமாம். ஆன்மாவதற்கு விடயமாகா தாம், ஆகலின் யாங்ஙனம் இங்ஙனமாம் எனின்? உன்னுலத னது விடயத்தின்என இயம்பப்படவில்லை யன்றே; மற்றே, பொதுவாக விடயத்தின் என்பதாம், அதனுலிஃதியம்பப் பட்டது. அதனதாந்தன்மை விசேடணத்தை நீ கொண்டு அஃதெனுஞ் சத்தத்தால் ஞானஜாதியமாத்திர பராமரிச மேல் அத்தோடம் ஆங்கே நிலைபெறும். ஞானஜாதியமாத்திர வியத்தி விசேட பராபரிசமாயிலை, அவ்வியாபகத்தன்மை யாம், ஞானந்தோறும் அஃதெனுஞ் சத்தப்பொருள்வேறுத லின், எதுவரந்தன்மையேனும் அதுவாந் தன்மையேனும் சிறிது தொடர்ந்த வடிவமாயிலையன்றே !

359. பிரபாகர அனுசாரியான் இட்ட அடைவின் விஞ விலக்கம்.

இதனுனே ஆன்மவிடயத்தன்மை யனுயோகம்போலத் திரிபுடிப் பிரத்தியக்கவாதியின்பால் ஆடையுணர்விற்குக் குட

மூதலியவற்றின்கண்ணே பிரத்தியக்க முளதாதலிற் பிரமாண மாதலுயோகம் காணத்தக்கதாம், விழியொற்றுமையின் மையின்; மாறுபிலே, அவற்கிட்ட அடைவாதலின்; அதன் பொருட்டு, எப்பொறியொற்றுமையானே புளதாயதென விசேடணமிடில் எதுவதுவெனுஞ்சத்தப்பொருட்குச் சிறப் பாந்தன்மையுண்மையின் அவ்வியாத்தி யடைவுண்டாதலின் எதுவதுவெனுஞ் சத்தப்பொருள்கள் தொடர்ந்தனவாமேன் மீண்டும் பிறவிடத்திலிதுகுடமென்னு முணர்விற்குக் காட்சித் தன்மையானே பிரமாணத்தன்மை பொருந்தாநிற்கும்.

360. அதிவியாத்திவிலக்க வினு விலக்கம்.

இனியயல் வேறுமென்றடையிடுவையேல் அஞ்ஞான்றன் னியவிடயத்திற்குப் பிரத்தியக்கத்தன்மையாகாதாம். அயற் சத்தத்தாற்றொடர்ந்த பொருளறையின் விலக்கத்தன்மை யின்மையின், குடவுணர்விற்கு மாடையிற் பிரத்தியக்கமாகப் பிரமாணமாதல் பொருந்தாநிற்கும்.

361. வேறிலக்கணத்தின்கண்ணும் தோடம்புகுத்தல்.

இதனானே, பொறிப்பொருளொற்றுமையான் உண்டா முணர்வு பிறழ்வற்ற பிரத்தியக்க மென்பதன்மாட்டும் இத் தோடமியம்பப்பட்டதெனக் காணத்தக்கதாம், அத்தகைய வுணர்விற்கும் வேறு விடயத்திற் பிரத்தியக்கத்தன்மையானே பிரமாணமாதல் வழக்குண்டாதலின். எப்பொருளினெற்று மையான் எவ்வுணர்வுண்டாகின்றதோ அஃதாண்டுப்பிரத்தியக்க மாகப்பிரமாணம் எனவறையினே எது வெனுஞ்சத்த அது வெனுஞ்சத்தப் பொதுச்சிறப்புப் பொருளுரை விகற்பித் துரைத்த தோடவழக்காம்.

362. அவ்வியபிசாரிபதம் வீணுதல்.

அவ்வபிசாரிபதமும் வீணும், இப்பியின்மாட்டு வெள்ளி யுணர்வு வெண்பொன் பொறியொற்றுமையான் உண்டாய

தண்ரும் ; சமக்கார இலக்கணப்பிரத்தியாசத்தி வெள்ளித் தகைமையின்கண்ணும் உளதாமெனின் ? ஆகாதாம். முன்னனுபவித்தவெள்ளித் தாதான்மியத்தின் சமக்காரமின்மையினனே கூறிய தோடமாங்கே நிலைபெறுதலின் குருமதத்தை யனுசரித்து முற்றினும் விசேடணம் வீணுதலின், அதனுன் வியபிசாரமங்கீகரியாமையின். வெள்ளித்தகைமை வைசிட்டியத்தில் முன்னிருப்பதற்கு அஃதிலாமையின், அவ்வவஸ்து சத்தின்கண்ணேதான் அப்பிரமாணியமாம், வெள்ளித்தன்மைமாத்திரத்திலின்ரும், அதற்குப் பிறவிடத்திலிருப்புண்மையின்.

363. பிரத்தியக்கவயலிலக்கண நீக்கம்.

இனிச்சாக்ஷாத்காரித்தன்மை பிரத்தியக்க இலக்கணமெனப்படுமேலாயின், சாக்ஷாத்காரிமயலினும் வழக்காம்; பிறழ்ச்சியிலதாந்தன்மையானே விசேடிக்கப்பட்ட தவ்விலக்கணமென்றேனும், வேற்றுமைகவராமையினும் வேறுயவிப் பிரமாபாவமென்றேனுமாமெனின் ? ஆகாதாம், விகற்பஞ்சகிக் கொணுமையின், இவ்விலக்கணம் அறியப்பெற்றதாய்ப் பல வேதுவா ? அறியப்பெறுததாயா ? அவற்றுட்கடையதாகாதாம், அதனைக்கூறல் வீணும் வழக்காதலின். கூறுவதற்கு ஞானஉதய உபயோகித்தன்மையுண்மையின். அறியப்படாதவதற்கே பலசாதகத்தன்மையை யங்கீகரித்தலின். முதலது முரணும், பிறிதொன்றினின்றும் அஃதறியப்பெறுகின்றதா ? நினதிலக்கண வாக்கியத்தினின்றுமா ? பிறிதொன்றினின்று மேல் இவ்விலக்கணமியம்பும் ஆபாசத்தாலாயது சாலும். கூறுவதற்கு ஞானேதயத்தினுமயலாய பயனின்மையின், அதற்கும் மற்றொன்றினுலேயே துணிவுபேறுண்மையின். கடையதேல், நின்கூற்று ஆத்தனுபதேசமாகச் சாக்ஷாத்காரித்தன்மையை யுணர்த்துகின்றதா ? அல்லது இலிங்காநுபாவத்தாஞ ? கடையதுகதுவாதாம், நினது வாக்கியத்திற்குச்

சாக்ஷாத்காரித்தன்மை யவிஞபாவாதிகளைக் காண்பிப்பான் மூடியாமையின். முதலதுமூட்டுறும், வாதியின்பொருட்டு நீ ஆத்தனுதலமையாமையின். அமையுமேலாயினே பதிஞ்ஞை மாத்திரத்தானே துணிபொருடுணியப்பெறுதலின் ஹேதுமுத லியவற்றையியம்புதல் அநர்த்தமுறுவதாக யாண்டுமேயாம்.

364. இலக்கணமியம்புதற்கு அயற்பயஞ்ந்தகைமை விஞ.

யாவன் சாக்ஷாத்காரித்தன்மையை யன்னியத்தாலறிவ தே பிரத்தியக்கவிவகாரகாரணமாக வறியானே அவன்பொரு ட்டுப் பிரத்தியக்கவிவகாரகாரணத்தன்மை இதற்கிலக்கண வாதியால் அறிவிக்கப்படும். அதுவும் அனுமான பாவத் தானே யறிவிக்கப்படும், ஆத்தவுபதேசத்தானன்றும். இத தனே யிலக்கணம் கேவலம் வியதிரேகியனுமானமெனக் கிளத்தாநிற்பேம். அஃதெங்ஙனம்:—சிரவணாதிப் பிரமிதிக ளேனும் சாக்ஷாத்காரிப் பிரமிதிகளேனும், பிரத்தியக்கத்தகை மையானே விவகரிக்கத்தக்கன, சாக்ஷாத்காரிப் பிரமிதித்தகை மையுண்மையின், யாது பிரத்தியக்கமாக விவகரிக்கப்பட மாட்டாதோ அது சாக்ஷாத்காரியாக மாட்டாது, அனுமிதி யைப்போலும், அங்ஙனமே யிவையுமாம், ஆதலினங்ஙனம். இவ்வனுமானப் பிரதிபாதகவாக்கியமும் வாதியான் ஆத்த வாக்கியமாகப் பிரயோகிக்கப்படமாட்டாதாம்; மற்றே, வியாத்திமுதலியவற்றைப் பெற்றனுக்கே நிஞைப்பூட்டுவதாம், முன்னர்ப்பெறனுக்கேனும் அறியுமவாவையாக்கும் வாயி லாக இப்போழ்தே வாதியின்பால் அளவையையுண்டாக்கு வதாம்என வியம்பியதோட மிடம்பெறுதாம்.

365. விஞ விலக்கம்.

பிரத்தியக்கமாக விவகரிக்கத்தக்கனவன்றும், எனி விவ காரத்திற்கு விடயவேற்றுமை விசேடமா? அல்லதென் சத்த வேற்றுமைவிசேடமா?

366. விகற்பவாயிலாய் விலக்கம்.

முதலதில், இவன் விடயவிஷ்ட விவகாரத்தை யறியா திருப்பனேற் சாக்ஷாத்கரிப்பதன்கண் அவனுக்குத் தானி யற்றத்தக்கதை இலக்கணவாக்கியத்தானும் யாங்ஙனம் அறித லேனும்? அனலேயறியான் அனுமானத்தானும் அனலொற் றுமை யுணர்த்துவிப்பானுகானன்றே இனி யறிந்திருப்ப னேல் அக்கால் அறிந்ததையறிவித்தல் வீணுதலின் இலக்கண ரூப மனுமானம் பயனற்றதாம். இனிப் பிரத்தியக்கவிவகா ரத்திற்கு ஒருசிறிது விடயமுளதாமெனப் பொதுவாக வுணர் கின்றனன், சிறப்பாகவோ வுணர்கின்றனில்லை, அவன் பொருட் டிஃதியம்பப்படும்; படாதாம், பொதுவாக நிமித்த முடைமையை விவகாரமாத்திரத்திற்குணர்கின்றனனு? அல்ல தென் விவகாரவிசேடத்திற்கா? ஆதியதேல் விவகார விசே டஞ் சிந்திக்கப்பாலதாய் நிற்றலின் பிரகிருதத்திற் குபயோ கப்படாதாம். மற்றதேல், இவ்விவகாரத்தின் விசேடம் எதனுலாக்கப்பட்டதாம்என விகற்பித்தபக்கம் புகுதலல்லாமற் கடக்கமுடியாதாம்.

367. வேறிலக்கணத்தும் கூறிய தூடணங் கூட்டல்.

இதனுனே எல்லா இலக்கியத்தி னங்கீகாரமுமே எடுத் தெறியத்தக்கதாம். அங்ஙனமன்றே:—"அம்மவ் வப்பொரு ளங்கீ கரித்திடல், செம்மை யன்றுணர் வானே திரிதலான், அம்ம நிக்குமு தன்கண் ணளவையேல், விம்மு தற்கொளல் வீடுவர் யாவரே." இனியய லதுவிசேட மென்றுன்று யேற் கினத்தீத், தனிவளர் தகைமை தன்னைத் தவிசினைத் தந்தாயன் றே, வினைதரு வடிவங்கொண்ட வாதமாமதற்குநன்றுய், வினை தருமதுதான்வெட்டவெளியதாய் விளங்குமன்றே. அனுபவித்த தன்மையாதியளவையின் றன்மமெல்லாம், வினையபொருளாற் றேற்றம் விரவுதலிலையதேபோற், பனுமத்தீப்பான்மைதானும்

பகரதேபோலவாகு,மெனுமிதாற்பொருளனர்த்தவியற்கையை யெய்துமாலோ. அம்மதிச் சிறப்புத் தானும் அம்மதி யில திங்கென்னே, செம்மையிற் செறியலாமோ செப்புமிப்படியே யாக, விம்மது தானுமம்ம விளங்கது தானுமென்ன, மும் மரப் படியிலோட முடிவிதற் கில்லையாமே. எங்கெலாவுலக நூல்க ளேகமத் தியமாந் தன்னைத், துங்கமாப் பற்றிமிக்கத் துலங்கிடு மவ்வவ்வத்து, இங்கெழு பத்திகடம்மி னினவிவ காரங்கட்குத், தங்குறுங் கதியதென்னே சாற்றக வாதலானே. அவ்வவ்வொண் மதங்களானே யறைந்திட முடிந்திடாத, செவ்விய விவகாரங்கள் சென்றுசேர் சேர்க்கைநோக்கில், எவ் வுல கமுமேவாழ்த்து மெழிலநிர் வசனவாதத், தவ்வெழிற் பாதசேவை தன்னைவிட் டிலேயே யாமால்.

368. இரண்டாவது கற்பனைக்கம்.

இரண்டாவது மாகாதாம், அங்ஙனமன்றே:—இஃதனு மானப்பொருளாம், கேள்விமுதலிய வுணர்வுகள், பிரத்தியக்ஷ சப்தவிடயங்களாம், சாக்ஷாத்காரித்தன்மையுண்மையின் என் பதாதியாம், அதுவுமாகாதாம், அசாக்ஷாத்காரியாய அனுமா னாதிகளில் அச்சத்தப்பிரயோகஞ்செய்யாத மாத்திரையானே சாக்ஷாத்காரியின்கண் அச்சத்தப்பிரயோகமாற்றப் படுமேலா யின் மூயற்கோடு ஜுஹுஹுஷ்ஷ் முதலாய சத்தப்பிரயோகமும் சாக்ஷாத்காரியின்கட் செய்யத்தக்கதேயாம், விசேடமிலாமை யின். இனி ஜுஹுஹுஷ்ஷ் முதலிய சத்தங்கள், பொதுவாகப் பொருளுடையனவாய் வெளிப்படையனவல்லனவாம். யாண் டும்பிரயோகிக்கப்படாமையின், முயற்கோடு முதலிய சத்தங் களும் அசத்துவிடயங்களே யாமெனச்சித்தங்களாம், பிரத்தி யக்காதி சத்தங்களோ சத்துவிடயமுடையனவாகப்பொது வாய்ச்சித்தங்களாம். பிரத்தியக்கமுளதாமென்பது முதலிய பிரயோகங்காண்டலின், உளது விசேடமெனின்? ஓவ்வாதாம்,

இச்சிறப்பானும் காட்சிமுதலிய சத்தங்கட்கு விலக்கமின்மையின், அவைகட்கும் சாக்ஷாத்காரிமாத்திரத்திற் பிரயோகவழக்காம், சாக்ஷாத்காரித்தகைமையுளதாயவழியும் கேள்விமுதலியவற்றிற் காட்சிமுதலிய சத்தங்களின் பிரயோகமிலதாம். இங்ஙனம் பிரத்தியக்காதி சத்தங்கட்கின்றுமேயெனச் சிறப்பாமாலோவெனின்? இன்னணமாயின் யாண்டுச்சாக்ஷாத்காரித்தன்மையின்றுமோ ஆண்டுப்பிரத்தியக்க சத்தப்பிரயோகமின்றும், யாண்டுச் சாக்ஷாத்காரித்தன்மையுளதாமோ ஆண்டு யாண்டுமுளதாமென யாவனுணர்கின்றனனே அவன்பொருட்டு இலக்கணக்கூற்றென்பதாகவாம்; அவனும் வேறுவிவகாரம்போல வுடன்பாடெதிர்மறைகளானே வாச்சியவாசகத்தன்மையைத் துணிந்தவனுவன், ஆகவே இலக்கணம் வாளாபோம்.

369. தோஷ அதிதேசம்.

இதனுனே அனுமிதியாதி விலக்கப்பட்டு விவகரிக்க வேண்டும் என்பது கூறியவனுமான சாத்தியமாகக்கூறப்படுவது நீக்கப்பட்டதென்றுணர்தற்பாலதாம். முன்னருணர்ந்த வாச்சியவாசகப்பொருட்டே இலக்கணக்கூற்றுன் நினைப்பூட்டப்பெறுகின்றுன் எனின்? ஏலாதாம், சம்பந்தமுணர்ந்தானுக்குப் பிரத்தியக்க சத்தத்தானே அதன் நினைவுகூடலின் இலக்கணக்கூற்றிற்கு வாளாபோந்தன்மையன்றே வுண்டாம். சத்தார்த்த சம்பந்தத்தையுணர்ந்தவன் சத்தத்தானே நினைந்து இலக்கணத்தானே நினைப்பிக்கப்படுவனேலாயின் இலக்கண வாக்கியத்திருக்கும் பதக்குழுப்பொருணினைவின் பொருட்டும் அவ்விலக்கணமறையத்தக்கதாம்,சிறப்பிலாமையின் இங்ஙனம் அவ்விலக்கண வாக்கியத்தின்கண்ணும்என வரம்பின்றியோடலேயாம்.

370. சாத்திரஞ் சீடன்பொருட்டாவதில் ஏது முதலியவை யியம்பல் வாளாபோதல்.

அற்றேற் பிரதிவாதியின்பொருட்டு இலக்கணமியம்புதல் பயனுடையதாகாதாம், அவனுல் வாதியாத்தபாவமங்கீகரிக்கப் படாமையின்; மற்றே, சீடன்பொருட்டுச் சாத்திரத்தில் இலக்கணமியம்பப்படுகின்றது, அவனே சாஸ்திரத்தின்கருத் தாவை யாத்தனனவே யெண்ணுநிற்பன். ஆகலின் சீடன் பொருட்டு ஆத்தன்மொழியாகவே ஆசிரியரான் அறையப் பட்ட இலக்கணவாக்கியம் பொருளேப்புகலாநிற்கும், எச் சாக்ஷாத்காரி சத்தார்த்தம் உன்னுலறியப்பெற்றதாமோ அது வே பிரத்தியக்க சத்தார்த்தமென்பதாம். இஃதேலாதாம், வாதியின்பொருட்டுச்சாத்திரமன்றேல், சீடன்பொருட்டாமே லாயின் பதிஞ்ஞைமாத்திரத்தானே ஆத்தவசனத்தாற் சீட னுக்குப்பொருட்டுணிபுளதாதலின் ஏதுமுதலியவை கூறல் நிஷிற்பயனில் கூற்றேயாகவன்றே முடிவுபெறும்.

371. சாஸ்திர இருவகைச்சங்கையும் சமாதானமும்.

இனியாகுக அப் பிரதிவாதியின்பொருட்டும் நூற்கண் ணாண்டு ஏதுவாதியோடியையும் வாக்கியம், இலக்கணவாக்கிய மோ நூலாசிரியராத்தபாவத்தையுணர்ந்த சீடன்பொருட்டே பிரயோஜகமாமென நினைகின்றனைகொல்! அதுவுமொவ்வா தாம், இப்பொருள் பிறநூலாற்றுணியப்பெறுதலின்; நாம னிக்காநுசாசன வியாகரணுதிய நூல்கள் முனிவர்களான் மொழியப்பெற்றனவாய்ச் சம்பந்தங்கவர்வனவாயுள்ளனவாம்; அயனூல்களான் அமையப்பெற்றனவாய அருத்தமும் உனது நூல் விடயமேலாயின் பகுதிவிகுதி வேறுபடுத்தலாற்சத்தங் களின் சாதனமும் சாற்றப்பெறுத தென்னைகொல்! சத்தங் களினிலிங்கந்தான் சாற்றப்பெறுததென்னைகொலோ! அத னறியாமையாலும் தோல்விதோற்றுவதேயாகும். அல்லது

வியாகரணதிவிடயம் விடுத்து நாமம்விளம்பல் எங்ஙனமேனும் உனது நூற்குவிடயமாயுளதாகுக; ஆயினும் இவ்விடயத்தில் மிகக்குறை வுனது நூற்காம், வேறு நூற்களில் வீற்றிருப்பன்வாய்ப் பகுபெயர்களுளவாம் அவைகள் அறையப்பெறுதனவெண்ணெகொல்! இனி இந்நூற்கண்ணெச்சத்தங்கட்குபயோகமுளதோ அவைகள் இதனுலியம்பப்பெறும் பிறவெல்லாம் இயம்பப்பெறுவாம்என வியம்பினும் ஒருதொடர்மொழியிலிருக்கும் பதத்திற்கு இலக்கணமியம்புதல்பேர்ல்லவே அவ்விலக்கணத் தொடர்மொழியிலிருக்கும் பதத்திற்கும் என்பதாக எல்லையில்லாது செல்லல் நூற்கேய்தராகிற்கும். நூற்கண்ணவ்வவ்விலக்கணத்தொடர்மொழிப் பிரயோகத்தின்மாட்டே அவ்வம்மொழிகட்குபயோக முளதாந்தன்மையுண்மையின். இனிநாஞவிலக்கணம்புனையும் வாதியர்க்கையம் பிரத்தியக்காதிசத்தார்த்தத்தின்கண்ணே யிருத்தலின் ஐயமகற்றுவான் அறையப்பெறுகின்றது, அயலன்றும், ஐயமில்லாமையின்என எண்ணுகின்றனெகொல்! எனினும் ஏலாதாம். வாச்சியத்தன்மைநியோத்தியத்தன்மை விவாதம்வாதிகளினர்த்தத்திலுளதேயாம், சிதராதிபதங்களின் பொருளாயகருமகருத்திருத்தவ அகருமகருத்திருத்தவங்களில் விவாதமுளதேயாம், பாவசத்தத்திற்குச்சொரூப சத்துவசத்தாசர்மானியாதியருத்தத்தன்மையிலுளதேயாம், அதிகரணசத்தார்த்தத்திற்கு வீழ்ச்சித்தடைத்தன்மை சமவாயித்தன்மை முதலியவற்றின்கண்ணேயுளதாம். இவ்வாறே பிறவெண்ணின்மொழிப்பொருள்களிலும் ஐயங்கள் விழித்தேவாழ்கின்றன. அவ்விலக்கணங்களறையாததென்னெகொல்! ஆகலின் ஓரிடத்தில் வித்தர அபிநிவேசஞ்சாலும்.

372. சாகூஷாத்காரித்தன்மைகூற முடியாமை.

மேலும், அச்சாகூஷாத்காரத்தன்மை, சிறப்பைச்சிலவிணிய பொருட்பிரகாசத்தன்மையென்னின்? ஆகாதாம், சிறப்பைச்

சிவணியதாந்தகைமையுபலக்கணமாயின் அணுமாஞதிவியாத்தி யாம் (அதிவியாத்தியாம்) சிறப்பாயிலை, சிறப்புக்கோர்வை யிலைப்பாறின் எல்லாச்சிறப்பிலுணர்விற் காட்சியிலக்கணங் கழிதரலான் மூலம்வரையுமே காட்சியிலதாமெனல்கதவும். இலைப்பாறுதலிலதேலாமாயிலை அத்தகையதற்கே வியாத் திக்கவர்ச்சியுண்மையின் அணுமையின்மாட்டும் அத்தகைய சித்தியாமெனச்சாகூாத்காரித்தகைமையினடைவாம்.

373. அதிவியாத்தியகற்றும் விஞவும் அதன்விலக்கும்.

இனித்தொடர் பின்மையின் ஆண்டஃதணுமையன்றும், ஆயின் அதன்றொடர்ந்ததோற்ற முதலியனகூடாமையும், வியத்தியின் கருதலானே அசித்தியடைவும் ஆம்; வியத்தியில் லாது பொதுமைக்கெவ்வாறே அவ்வாறே ஆண்டச்சிறப் பிலாமல்வியத்திக்கும் கூடாமையொப்பாதலின்; தோற்றம் முடிவுபேறடையாமையின்மையின் பக்கதருமமாக முடிவி லாச்சிறப்புச்சித்தியாவாமென நினைன்றனைகொல்! ஆயிற் றோற்றியது முடிவுபேறடையாமையின் அவ்வுணர்வு நேரே யொளிராகிற்கும்.

374. அசம்பவமீவான்றோடங் காட்டல்.

கவரற்கேலாத முடிபிலாச்சிறப்பொளிர்வின் கற்பனை யிலும் தனித்தசாகூாத்தகைமை யெனப்பெயரியசிறப்புக்கற் பனையே அற்பத்தன்மையார்தலின் மிகமேன்மையதாம். சாகூாத்தன்மைவிவகாரம் வேறோராற்றல் விரவாமையாயகற் பனைவிரைக் கத்துணையானும் பயன்படும் பான்மைபற்றலின் எனக்கொண்டக்கற்பனையும் அதனனேயடாதாம், இதன்கண் விரிவோ விளம்பப்பெறும்.

375. விசேடசத்தார்த்தத்திற் றோடங் காட்டல்.

சிறப்பும் விலக்குவதாயின் சிருவிகற்பத்தவ்வியாத்தியாம், விசுவத்தைவிலக்கும் வடிவவொளிர்வான் அதுவுமவ்வாறென வாயின் சேய்மையிற் சாமானியக்காட்சிக்குக் காட்சியற்றதன்

மை கதுவலாம்; ஆண்டு அகிலவிலக்கணத்தன்மையொளிர் மேவல் ஐயப்பாடுமுதலன வமையாமையின். ஆண்டும், உணர் பவன்முதலிய விலக்கமாத்திரவொளிர்வாற் சிறப்பொளிர் வாந்தன்மையேயாமேல் அனுமிதியாதியி லதிவியாத்தியாம்.

376. வேறுவகையாகக்காட்சி யிலக்கணகண்டனம்.

இனி, பொறிக்கரணமன்று மனுபூதித்தகைமையாம், ஆண்டுச்சாக்ஷாத்காரிஞானகரணத்திற்கே பொறித்தன்மையா னே ஒன்றையொன்று பற்றலாந்தகைமைபுறுவதாகு மென் பர் சிலர். அஃதேலாதாம், உண்மைச்சிறப்போடுற்ற அறியப் பெறுப் பிரமைக்கரணத்தகைமை பொறித்தகைமையெனப் புகலக்கூடலின் காரியங்கதுவுஞ் சிறப்புச்சித்தியிலாது என் பொருட்டுக் காரணத்தகைமையே யுணர்தலாமெனப்பாதஞ் சாதிக்கத்தக்கதாம்.

377. கூறியகுற்றத்தைப் பாட்டமத்தினுங் கோடித்தல்.

இதனானே யறியப்பட்டதாம் பெற்றியொன்று அயலாம் அதைப்பயக்கும் பான்மையுணர்விற்குச் சாக்ஷாத்தன்மையாம் என்பதும் எள்ளப்பட்டதாம். ஒருவடிவுடைமை நிலைபெறுத வழிகாரணத்தகைமைதுணிய முடியாமையின். அறியப்பட் டதாந்தகைமையின் விலக்கணப்பான்மை அயலாற்றலைமையப் பெறுமையானே அதன்பெறுதியாமென்னற்க; வேறுகாரண விலக்கணத்தன்மையானே அஃதமைதலின்.

378. வேறுகாட்சியிலக்கண கண்டனம்.

மேயத்தானுயதன்மையுமாகாதாம், மிகுவழக்காதலின், தன்மேயத்தாலாயதாந்தகைமையேலோ தற்பொருள் விலக்கத் தாற்றொடர்பின்மையின், முற்குற்றமகலாமையானு மென்க.

379. அறியுமவாக்கருவுமும் அயலிலக்கண கண்டனம்.

இனி, எதனைறியப்பெற்றவழி அறியுமவா மீண்டும் ஆகாதோ அவ்வறிவுசாக்ஷாத்காரியென்பதும் அடாதாம்;

காட்சியாற்கண் ணுற்றபோதினும் இட்டமாய சுதாதியர்பாலறி யும்அவா நிகழக்காண்டலின். இனி யாதின்பின் வேற்றுப் பொதுமையதின் ஞானவேட்கை நண்ணுதோ அத்தகைமை யவ்வாறுந்தகைமையெனின், ஆகாதாம், அதன்சமஜாதியதை யறியப்படாதவழி அதன்வேற்றுச்சாதியதை யறியமுடியாமை யின், அணுமையாதியின் விடயமாய அரியினசுவரியத்தைக் காண்பான்காதல் கதுவாமையானும் என்க. காட்சியாற்கண் ணுற்றபோதினும் கனலின்கட்சிவப் பதோகமலர்க்கொத் தென வையப்பாடுற்றுழி, புகைக்காட்சியாற் கனற்குக்கருதப் படலாந்தகைமைகதுவுதலி னெனவுஞ் சிலர் கழறுநிற்பர்.

380. வேறுவித்தத்தானே காட்சியிலக்கண கண்டனம்.

அறியப்பெறுது சிறந்தகாரணமுறுமனுபவத் தன்மை யாதல், காரணச்சிறப்புற்ற பாவப்பான்மையாதல் சாஷாத் காரித்தன்மையாம் எனின் ? ஆகாதாம், நீட்சிமுதலியகாட்சி யவ்வியாத்திநிகழ்தலின், ஆண்டவதிமுதலியவற்றின் றேற்ற வுவாவுறுதலின். ஆண்டவதியறியப்பெறுவதா யங்ஙனமாகா தாம், அவதியறிவோவாம், சென்றனமுதலவாய் அவதிமாட்டு மங்ஙனமுணர்வுகூடலின் எனின் ? புகைமுதலியகுறியின் கண்ணும் ஒக்குமன்றே, புகைக்காட்சியாலாண்டழலமர்ந்த தெனப் பின்னருங்கருதக்கூடலின். ஞானச்சிறப்பாக ஞேய ஹேதுத் தகைமை யொப்பதேயாம்.

381. மூன்றவது கற்பமோசனம்.

சிறந்தகாரணமெனலாற் கரணங் கருதியதாமெனின் ? ஆகாதாம். கருதப்பட்டவருங்குறியுறும் வருங்குறியுற்றதன் கருதலின்கண் ணில்லாதகுறிக்குக்காரணத்தகைமை கதுவா மையின் அறியப்பெறுங் காரணமுடைமையின்மையின்.

382. பிரபாகர நீக்கம்.

ஆண்டுக்குறியறிவுகாரணமாம், அதுவும் சொப்பிரகாச வாதியாதிய எனக்கு அறியப்பெறுவதேயாமாண்டெனின் ?

ஆகாதாம், அதற்கும் அறியப்பெறுவதாகவே காரணகோடியுட் புகுதலின் மானமின்மையின். முதலியவுணர்வுகட்கும் அவ் வாறுந்தன்மையின்மையின். வேறோராற்றாற்பெறப்படுவதாய அறியப் பெறுவதாந்தன்மையையும் அகற்றுதொழியில், விழி முதலியவற்றின்கருதலின்பின்னர்த் தெய்வத்தாலுளதாங்கடா திக்காட்சி யவ்வியாத்தியார்தலின்.

383. நியமச்சிறப்பான்மாசையகற்றும் விளைவும் அதன் விலக்கமும்.

நியமமாகவெனநிகழ்த்தின் நிலையாதாம், விதியில்லீணை தலின்; நியமமாகவெனல் நிடேதத்தின் சிறப்பாமேல் தெய் வத்தாலறியப்பெறும் பொறியினுணர்வின் பின்புண்டாம் பிர த்தியக்கங்கூடலின் அசித்தியாம். விதியின்கண்ணே காரணத் தன்மையுட்புகுமாறே யிந்நியமமியம்பப்பெறும் எனின்? என் னற்க, ஆயினும் வாளாவே போதலான்; அன்றியிலை மேல் வழக்காதலின் வாளாபோதலியாங்ஙன மெனின்? அன்றும் ஆயினும் மேல்வழக்கேயாதலின், இரதமுதலியவற்றின்சாகூ த்காரத்தின்மாட்டிருவழுதலியவைகாரணமாகாவன்றேவேறோ ராற்றாற் பெறப்படுதலின் அன்றுமெனின்? அன்றும், கருத லினும் ஒப்பாதலின் மேலும்யாண்டுநிடேதம், அதன்பாலுற்ற ஒருருவப்பான்மையோதத்தக்கதேயாம், அன்றியிலை, எது கொண்டு நியமம் நிகழ்த்தமுடியுமெனக் காரியங்கதுவிய ஒருரு வப்பாண்மை யோதாமன்முடியாதாம். நியமபதப்புகுதலின்றி யும் காரியங்கதுவிய ஒருருவப்பான்மையோதாமலிருக்கவியலா தேயாம். அறியப்படுவது அன்றீண்டுகரணம் எனவேகாரியவிய த்தியைக்கருதியேயாமேல், அதன்முற்புலப்படுவனவற்றிற்கு ஆண்டகாரணத்தன்மைதுணியமுடியாதாம்; ஆகலின் அப்பொ துமையுடையதன்கண் அப்பொதுமையுடையதன் பிறழ்ச்சி யுணர்சந்தானத் தவசியமுயல்கை கடனும். இனித்தடையற்ற

பொருட்பிரமைத்தன்மையவ்வாறுமாயின், எதுகுறித்துத் தண்டயறல், அஃதென்னெனவு மற்றதற்பாலதாம், பொறியைக் குறித்துத்தடையாம், அதுவும் அதனசந்நிகருடமாமென வாயின், இந்திரியசந்நி கிருட்டப்பிரகாசத்தகைமை யென்பதாகக்கோண்டற்பொருளர்ம், அதுவும் அமையாதாம், தன்னிழிக் கோளகக்கருதலி லதிவியாத்தியாகலின்.

384. வேறுவகையாக இலக்கணநீக்கம்.

உணர்வுபயவாவுணர்வாந் தன்மையஃதாமெனின்? ஆகாதாம், விகற்பத்தோடுற்ற விசேடவுணர்வி லவ்வியாத்தி வருதலின்.

385. வேறுவிஞ விலக்கம்.

இதனுனே வேறுவிடயவுணர்வுவிஞயாமை அஃதென்பதுமகற்றப்படும். சவிகற்பகத்திற்கு அதிகவிலக்கவடிவவிடயத்தன்மையாதலின்; அதனவதியுணர்வு விஞத்தலின்.

386. காட்சிக்கயலிலக்கணங் கழித்தல்.

தன்விடயத்தடங்காப் பொருளுணர்வுவிஞயாத் தீமையதுவாம். எதிர்மறையோடுற்ற பொருட்காட்சியிலவ்வியாத்தியாமென்னற்க; அடையடுத்தபொருளுட் புகுத்தப்பெற்ற எதிர்மறைக்கும், பிரத்தியபிஞ்ஞையின்மாட்டுத் தத்தைக்கே போலும் காட்சிவிடயத்தகைமையங்கீகரிக்கிருத்தலின்; எதிர்மறையாகாத்தகைமையானே சிறப்பித்தலானுதல் ஆமெனின்? ஆகாதாம்; தன்னென்னும் பதத்தானே துயர்துடைத்துண்மையினுனும், காரியவியாத்தியின்மாட்டு விஞயாமைதுணிதல் கூடாமையினுனுமென்க. அப்பொதுமையுடையதன்மாட்டு அப்பொதுமையுடையதன்பிறழ்ச்சிச்சத்திரங்கொளிஞை காரியவோருருவப்பான்மையின்மாட்டே முன்போல் வீழ்தலாமென்க.

387. வேற்றிலக்கணங் காட்சிக்கு விலக்கல்.

தற்போதால் வரைந்துகொள்ளப்பட்ட பொருட்போதப் பான்மை சாக்ஷாத்தன்மை யென்பதாகவும் ஆகாதாம்; தற் பொருட்பகுப் பிலாமையின். கருதன்முதலியவற்றைக் கழித் தல்தா னியாங்ஙனமேலும்? ஆண்டு வியாத்தியாதி புகுந்த போது நியதப்பொருண்மையாம்; நிலாவெழ நிறைகடலெழன் முதலியவற்றின்மாட்டுந் தற்போதுப் பொருட்டன்மை யாயி னும் ஆண்டும் வியாத்திபுகுந்ததன்மையே அத்தகைமைக் குத வியாவதெனின்? ஆகாதாம். எங்ஙனமேனுமாகுக, ஆயினும், தற்போதுவரைந்துகொண்ட பொருண்மைபொருந்தலின். எப் பொதுமையுடையது இவ்வாறேயெனச் சிறப்பாமென்னற்க; விலக்கணத்தன்மைமேய சமசாதித்தகைமை மூன்னரேதுணி யப்பெறுமாயின் அயலாலியாது பயன்? அதுவுமடாததேயென வறைவேம். வியாத்திமுதலியவை யிலாமலேயெனின்? ஏலா தாம். அதற்கே யாற்றலுண்மையின் தற்போதாங்கதை வாளா போதரலின்; எவ்வாறதுவுமாகாதோ அவ்வாறறையப்பெறும்.

388. தத்துவவுபப்புலவக்காரர் சாற்றியதூடண நீக்கம்.

தற்பிரகாசநிடேதத்தான் தற்போது வரைந்துகொண்ட பொருட்பிரகாசத்தகைமை சம்பவியாதாம்எனச் சிலர்செப்பு வதுந்தப்பாம். உண்மையாயோ யாதுதற்போது அதனையே யறையுமவாவாதலின்; நிகழ்காலப்பொருளொளிர் வவ்வாறு மென நிகழ்த்தன் முடிவு பேறுதலின். நிகழ்காலப்பொருளி யாவராலுமே யியம்பத்தக்கதாதலின். அவ்வாறே "நீதிசம் பத்தமும் நிகழ்தரலாய, போததும் விழிமுனும் பொறிகவர்ந் திடுமா, லாதலி னியாமுரை யாடிய தேதகும்" எனவுமறையப் பட்டுளது.

389. காட்சிக்கயலிலக்கணங்கழித்திதேல்.

ஆறெற்றுமையினயலாலாகாவிடய நியமவுணர்வு அவ் வாறுமெனின்? ஆகாதாம். தோடவயத்தாலாய சாக்ஷாத்து

ணர்வின்மட்டுமேதமையாமையின். பிரமைச்சாக்ஷாத்காரம்மண்டவ்வாரூமெனின்? என்னற்க, சாக்ஷாத்தன்மையானே பிரமையற்கட்குச் சிறப்பின்மையின், பொதுவாய சாக்ஷாத்தன்மையே புகலவேண்டியதாதலின். இட்டமிலா மயன்மதி மதத்தில் ஆறேற்றுமைக்குந் தனித்தனிதழீஇய விசற்பங் கூடாமையின்.

390. பிரகாரமயலாற்பிரத்தியக்க நீக்கம்.

சாக்ஷாத்துணர்வு சொரூபவுணர்வாம், தன்வடிவத்தானே பொருளின் பொலிவாம் எனின்? அன்றும், அநுமானாதியதியர்த்திவருதலின், அநுமானாதியின்கண்ணே குறிமுதலியவற்றின் அவாத்தன்மையுண்மையின் அதுவரைந்துகொண்ட சமயசம்பத்தபோதத்தன்மை காட்சிப்படுவதில்லையாம் எனின்? என்னற்க, பிறழ்வுறுதலின், யாண்டுக்குறிமுதலியவை வருவனவாதியை யுணர்த்துவிப்பதாமோ ஆண்டு அக்காலத்தன்மை பிறழ்தலின். இதனானே, குறிப்போதுவரைந்துகொண்டவியாபகவிளக்கம் அநுமையாகாதாமேலாயின் பொய்வியாப்பியத்தாற்கருதப்பட்ட வியாபகமாயதெய்வ வயத்தான் மெய்வியாப்பியவியத்தி வேறுடையதன் ரூற்றமுண்டாய வழி வியாத்திகாலம் வரைந்துகொண்ட வியாபகவடைவினானே அத்துணையவ்விசத்திற் பிரமைப்பெற்றியாதலிப் பிரமைச்சிறப்பி னுள்ளடக்கமுடியாமை வந்தடையுமென்பதூஉம் நோக்கப்பட்டதாம். பூதாதிவியாபக அநுமானத்தில் வியாப்பிய காலத்தன்மை யசம்பவமாதலின். ஆயினும், அக்கினியாதி மதவ்விசமாத்திரத்திற் பிரமாத்தன்மை வீழ்த்த னீக்கமுடியாமை நிகழ்த்தியிருத்தலின்.

391. அயற்காட்சியிலக்கணமகற்றல்.

அதுபதிப்புலப்பாடே சாக்ஷாத்துணர்வெனின்? விசிட்டப்பிரவிட்ட விசேடியக்காட்சியி லவ்வியாத்தியாதலின். காரண

அனுபவித்தற்கைமைவிளம்பும் வேட்கையதெனின்! என்னற்க, பிறகரணவுபவித்தத்தில் அவ்வியாத்திவருதலின், தற்கர்ணவுபவித்தத்தன்கைமைக்கும், தற்பதவகட்டிற் புகட்டியதாற் தகைமையுண்மையின்.

392. இலக்கணம் வேறுகாட்சிக்கீரித்தல்.

வியாத்தியாதி யுபவித்தத்தன்மை முதலியவற்றினின்மையாண்டொருங்குகூடுமோ அத்தீசாக்ஷாத்தீயெனின்? ஆகாதாம், வியாத்தியாதிக் காட்சியி லவ்வியாத்தியாதலினுனும், அவித்தத்தன்மையுண்மையினுனும் என்க. மலீதீயுடைத்தென்பதாகவே பதிஞ்ஞையாதலின், ஓசையானும் தற்புகலுதலிலாமையின், சாத்தாதிஞானங்கட்கும் காட்சியினடைவாம்.

393. காட்சியினிலக்கணமயலோன்னு கடிதல்.

தடையிலாத்தீத்தகைமை சாக்ஷாத்தீத்தகைமையெனின்? தடைவிகற்பமடாமையின். நாப்பண்பொருட்சிறப்பின் நிலை பேறுதடையாமேல், அஞ்ஞான்றுகாட்சிப்படாவிபுவுணர்வுகட்குச் சாக்ஷாத்தன்மையினடைவாம். இனியுணர்த்துவிப்பதினுணர்வுவாயிலா யசத்தைதடையாமேன் முன்மைமுதலியவற்றின் காட்சியின்மையினடைவாம். அடையடுத்தகண்ணடையடுத்தமை தடையாமெனின்? ஆகாதாம், புகையடையடுத்ததில் அழலடையடுத்தமையென்னுஞ் சொரூபத்திதியின்மாட்டவ்வாறுமேல், காரியகாரணபாவமுரணும்; புலப்பாட்டின்கண், புகையடையடுத்தமைக்குத் தருமிச்சிறப்புத்தகைமையேல் ஏதுவிற்கங்கிசத்தானே தன்மாட்டிருப்பாம், துணிபொருட்சிறப்புத்தகைமையேல் வியாத்தியைக்கவருங்காட்சியின்கண்ணும் தடையிலாமையிலாமையின் சாக்ஷாத்தகைமையிலதாம்.

394. காட்சித்தகைமைக்குப் பொதுமைத் தகைமையில் விலக்கம்.

இனியுணர்விற்குச் சாக்ஷாத்தகைமையொரு பொதுமை வேற்றுமையாம். ஆண்டனுபவத்தன்மையானே பராபர

பாவங்கூடாதாம், மிருதிக்கும் சாக்ஷாத்காரித்தன்மையுண்மையின் என்பர்சிலர்; அஃதெவ்வாதாம், மிருதிக்கவ்வாறுந்தகைமை யங்கீகரிக்கப்படாமையின் கனவிற்காண்டு மிருதித்தகைமை துணியப்பெறுமையின், துணியப்பெறலாயவழியிலுதல் ஆண்டுச் சாக்ஷாத்தகைமை யாரோபமங்கீகரிக்கப்படுதலின். பாவனையின்பலம் பயந்ததற்கும்சிலபால் ஆலோகாதிதருமியை (அதிஷ்டானமாக)உடைய பிரியாதியாசிரயதரும ஆரோபத்தகைமையாம், இப்பிவெள்ளிமயல்போலும் மூடியகண்முதலியவற்றிற்கும் கனக்கடுப்பவே கதிகருதத்தக்கதாம்.

395. காட்சித்தகைமைக்குப் பொதுமைத்தகைமையேற்குற்றங்கூறல்.

பரமாணுமுதலியவுணர்வு அனுவியவசாயத்தை யாற்றுழிப்பரமாணுப்புலப்பாட்டங்கிசத்தும் சாக்ஷாத்தகைமை யனுபவிக்கப்படுகின்றது என்பதன்கண் ணிதுவோஎம்மனோர்க்குப் பொருத்தமுறுவதாகாதாம்; மாறுயிலோ, குறிஞானவிலக்கணச்சம்பந்தத்தானே தீயும்மானதக்காட்சியேயாம் குறியாற்பெறலாவதாகாதாம், எனப்பிறரான் இயம்பலெளிதாதலின், இன்னணம் ஒட்டியுணர்வதில் இவற்குமுற்றேயகாலசம்பந்தத்தைக் காண்கின்றேன்என யாவற்கனுபவம்? எதன்வலுவான் அன்னணமங்கீகரிக்கலாமோ; ஆகலிற்புலப்பாட்டுப்போராமிஃதெண்க.

396. சாக்ஷாத்தன்மைச்சாதிக்குக் காட்சிப்படல் கழித்தல்.

சாக்ஷாத்தன்மைச் சாதி காட்சிப்படுவதேயாமேலாயின், புலப்பாட்டிற்சிலர்க்குக் காட்சிப்படுவதெனவும்,காட்சிப்படாததெனவும் விவாதம்விளையாமற்போம். கடாதிக்காட்சித்தகைமையின்கண்ணே கலாம்விளைப்பதில்லையன்றே, சிலபால்வெளிப்படாமையின் விவாதமாமெனின்? ஆகாதாம், அங்கிசமற்றவத்துவின்கண் வெளிப்படைவிளக்கமின்மையாதாம்? ஒருபொருட்சமவாயிகளாய மிருந்தவற்றோடு தோற்றமேலாயின்

அது ஞானத்தன்மைமுதலியபோலும் சாக்ஷாத்தன்மையினு மாம், ஆகவே ஞானத்தன்மைகளில் விவாதமின்றும், சாக்ஷாத்தன்மையிலோ ஆமெனச்சிறப்புரைக்கப்பாலதாம். தரிசனம் புரிந்தார் விவாதமோ மாற்சரியத்தாலுதல் வாய்மாத்திரத்தாலுதல் அன்றும்; மற்றே, தத்துவ அபிமானத்தானேயாம்.

397. காட்சித்தகைமைக்குப் பொதுமைத்தகைமையேற் கலப்புக்கதுவல்.

காட்சிப் பொருட்டருமியையுடைய அனுமையின்கண் ணே சாக்ஷாத்தகைமை பரோக்ஷத்தகைமைச் சங்கரந்தடுக்க முடியாததாம். பரோக்ஷத்தன்மை பொதுமையன்றும்; மற் றே சாக்ஷாத்தன்மையேயவ்வாறும், கேவலம் சாக்ஷாத்தன் மையின்மையே பரோக்ஷத்தன்மையெனின்? ஆகாதாம், இப் பொருட்கு ஒருபக்கநிறுவு மூகமிலாமையடைதலின் முற்று ணர்வோனைக்கருதுவோனது மதத்திலே அறியப்பெற்றகுறி யாதியையுடைய் கடவுளுக்குக் குறியையுடையதுமுதலிய வுணர்வின்கண் ணபரோக்ஷத்தகைமையானும் முரணும் குறி முதலிய வுணர்வுபயந்ததன்மை யனுமித்தன்மை முதலியவற் றின்பாற் சாதகமாமாலெனின்? ஆயின், சாக்ஷாத்தன்மையி னூடும் பொறியொற்றுமைமுதலியவை பயந்ததன்மையெனச் சாக்ஷாத்துமஃதாகாதாம்.

398. இலக்குவதிலாமையின் காட்சித்தகைமைக்குப் பொதுமைத் தகைமையினீக்கம்.

வியஞ்சகவுபாதி நியதமாகச் சாதியங்கீகாரமாம், அஃதி தன்மாட்டின்றும், பகர்ந்தவகையேபாதமாதலின் வியஞ்சக நியமமங்கிகரியாமையின் அஃதீண்டங்கிகரிக்கப்படாதெனப் பகரற்க; என்ஞற்காணப்பட்டதா? அல்லதெவனுனேனும் அறையப்பட்டதா? வென அங்ஙனமையம் அமையாமையின் முன்னுளதாகிமரிக்கப்பட்டதாய அம்மதிநின்மதத்தின் மனத்

தேர்டுணர்வுவடிவச் சம்பந்தத்தானே காட்சிப்படுங்காற்சாக்ஷாத்தண்மைக்கவர்ச்சியின்மை வியஞ்சகாபாவமிலாது யாங்ஙனமாம் ?

399. காட்சித்தகைமைக்கு அருத்த தருமத்தகைமையகற்றல்.

அருத்ததருமமும் சாக்ஷாத்தன்மையென்பது சுவப்பிரகாசவாதத்தி லகற்றப்பட்டது.

400. காட்சித்தகைமைக்கு வேறு பொருட்டன்மை விலக்கல்.

அன்னமாயினும் பாதிக்கப்படாத சாக்ஷாத்தன்மை மதிவிவகாரவலியான் முடிபாகச் சாக்ஷாத்தன்மையையற் பொருளாயேனுமங்கீகரியாமற் கதிலைக்காணும், மயற்கும் மயலின்மைவாயிலாந்தன்மையாதலின் எனின் ? ஆகாதாம், அதற்கும் சாக்ஷாத்கவர்ச்சியேல் ஓரிடத்தும் அவ்விவாதம் ஆகாதாம்என்பதாதி தோடமொப்பாதலின், அனுமானுதியாலறியப்படுவதின்கண்ணே குறியாதிகூடாமையின், வியாத்தியாதிக்கவர்ச்சியாண்டையதென்பதாதி விடைபகரமுடியாப்பரம் பரையே யாம். ஏழுபதார்த்தங்களின் நியமசாதனங்களும் யாங்ஙனம் முரணுமற்போம்

401. காட்சிக் கயலிலக்கணங் கழித்தல்.

குறிமுதலியவை பயக்கும்பான்மையின்மைக் குழுவுறுமதி சாக்ஷாத்தெனின் ? இயையாதாம், பரோக்கவிடயச்முசயாதியின் கண்ணதிவியாத்தியாதலின் இத்தகையபிரமையவ்வாறுமெனின் ? என்னற்க, காட்சிமயலி லவ்வியாத்தி வருதலின்.

402. வேறுவகையானே யிலக்கணவிலக்கம்.

அகற்றப்பெற்ற அனுமானுதி யவ்வச்சிறந்தகாரணத்தாகாதவுறிவு சாக்ஷாத்தெனின் ? கூடாதாம், இவ்வாறே பிரத்தியக்க அவ்வவ்வபரவயற்றீ அனுமானுதியாமென மாறுபடுதலே யாகாதென்னைகொல் லென்பதாக வொருபக்க நிறுவுமுக

மின்மையாம். விலக்கப்படுமவற்றி லொன்றிரண்டுமுதலியவற் றையொழித்து விலக்கப்படுவத னேதுப்பயவாமையானும் சாகூபாத்தன்மைபோலும் ஆண்டாண்டுத் தொடர்புற்ற மறு மதியாதிமருவலின். விவகாரமேலோ நிமித்தம்வேண்டலாம்; நிமித்தத்தைவேண்டி விவகாரமின்றுமாலெனின்? என்னற்க, மேல்வழக்கின்வாயிலாகாத நிமித்தமே கற்பிக்கப்படுதலின், அவ்வப்பயக்கப்பட்டபான்மையின்மையும் அவ்வடிவத்தானே தொடர்ந்த விவகாரப்புலப்பாடுகளுக்கும் அயலானுமாகா தாம். அவ்வாறுமேல், காணப்பெற்றவியத்தி விசேடங்களியா வற்றினும் அயலாந்தன்மையானே விவகாரம் விரவலின் சோத் தன்மைமுதலியவை கெடுவதாம் வழக்காம். ஆகலின்:— "அயலிதவிதியினு லாயஞானமாஞ், செயலறுமின்மையாற் செயப்படாததாம், உயுமுறையிலெயெனி னுனக்குக்கோதினை, யயலகற்றிடுவன்மேலாக்கலியாதரோ."

403. காட்சியிலக்கணம் வேறுகடிதல்.

சத்தவனுமானவுபமானம்பயந்த மெய்யுணர்வினும் வே றுந்தன்மையையேய்ந்து மெய்யுணர்வாந்தன்மைமேயது காட் சியிலக்கணமெனக் கழறியெவனேனுமொருவன் வெட்கிலனே லாயின் அவன் வினவப்படுவன், தனித்தனியாக இஃதிலக் கணமா? அல்லது, கலப்புற்று? தனித்தனிபிறழ்வுறுதலின் ஆதியதாகாதாம் மற்றதில், கலப்புற்றவற்றின் கழிப்பா? கழிப் புற்றவற்றின் கலப்பா? தனித்தனியே பிறழ்த்லின் ஆதியதா காதாம், தனித்தனி யனுமிதியாதிகளிற்கலந்த அவ்வுருவம் பொருந்தாதன்றே. மற்றதுமாகாதாம், கலப்புற்றவனுமிதி யாதிகளிற்கழித்த கலப்புப்பொருந்துவதாயினும் காட்சித்த கைமை யங்கிகரியாமையின்.

404. விசிட்ட விலக்கண விலக்கம்.

மிகுதிப்பற்றுக் கோடுற்றவையாகமிழற்றிய நிடேதங் கட்கு இலக்கணத்தகைமையிலையாம், மற்றே, ஏகப்பற்றுக்

கோடுற்றவைகட்காமெனின்? ஆகாதாம், சமுதாயியேதமே னும் சமுதாயத்திற்கு அனுமிதியாதியேபோலும் ஒருமை யுப சாரவிரையொப் புடன்படலாமெனவே வழங்கப்படும். அச முதாயத்தன்மையோடுற்றதாயெனவும் விளம்பவேட்கையா மெனின்? என்னற்க, சமுதாயத்தன்மை விசிட்டத்தின் கண் ணே யங்கிசத்தாற்றன்பான் இருப்புமுரண்பாட்டச்சத்தான் அசமுதாயத்தகைமை யங்கீகரிக்கப்படவேண்டலான் அத்த கையவழக் ககற்றற்கெளிதல்லவாம். ஞானத்திற்கிங்ஙனியம் பும் வேட்கையாமெனின்? ஆகாதாம் விசிட்டமாயஞானத்திற் கும் ஞானத்தன்மையாமேயென்க.

405. ஏகசத்தார்த்த விகற்ப நீக்கம்.

ஒன்றென்பதுஉம், பற்றுக்கோடாயவியத்தியபேதமென வியம்புமவாவா? அல்லது அபின்னஜாதியுடைமையா? அல் லது ஒருபாதியுடைமையா? அல்லது ஒன்றன் எண்ணிக்கை யுற்றமையா? அல்லதுதானென் இரண்டுமுதலிய வெண்ணிக் கையியைபின்மையா? ஆதியதில் அதன் விசிட்டத்திற்கு அவ் வியாபகத்தன்மைத்தோடமாம், வியத்தி வடிவமாய அபேதத் திற்கு விலகியிருத்தலுண்மையின் தன்மியினுலும் இலக்கணச் சிறப்பேல் அலகியதன்மத்தன்மை தன்மத்திற்காம், தனக்கே தனது தன்மத்தன்மை சாராமையின் ஆசிரய அபேதத்திற்கு பலக்கணத்தன்மையேன் முன்மொழிந்தோடமாம்.

406. இரண்டாவது முதலிய விகற்ப விலக்கம்.

இரண்டாவதில், அதேயபின்ன ஜாதியுடைமை யிலக்கண மாகுக, ஒருதலையாயுளதாவதாய் முதன்மையானே புலப்படுவ தாதலின். மூன்றுவதும் முரணுறும், பரோக்கப்பிரமித்தகை மைஅனுமிதியாதிகளின்மாட்டும் கலப்புற்றவற்றுமிருத்தலின். நான்காவதும் நலமலவாம், வைசேடிகபக்கத்திற்குணங்குண வீனமாகலான் அஃதிலாமையின்; உளதெனினும் அனுமிதி

யாதிமூன்றன்கண் ணிருப்பனவாய மூன்றபாவங்கட்கும் ஒரு மையெண்ணிக்கையின் ஒருநிலைக் களப்பான்மை யுறுதலின் கலப்புற்றவைகட்கும் ஏகசமூதாயத்தை யனுசரித்து அவ்வா றுந்தன்மையாதலின். ஐக்காவதும் நைர்தேகும், வைசேடிக மதானுசாரமாக அனுமிதியாதிய மூன்றன்கண்ணும் அதன்பா வஞ் சமமாயிருத்தலின், அதனினு மயன்மத வங்கீகாரத்திற் காட்சியபிகளின்கண்ணும் இரண்டுமுதலிய எண்ணிக்கை யியைதலினென்க.

407. ஏகசத்தார்த்த விகற்ப விலக்கம்.

ஆயினும், ஒருகாட்சி வியத்தியின்கண் ணிரண்டுமுதலிய பரிசமாப்தியின்றும், இரண்டுமுதலிய வெண்ணிக்கைப் பரிச மாப்தியபாவமும் அதனபாவசத்தத்தானே விளம்பும் வேட் கையாமெனின்? அன்றும், ஆண்டேயிருப்பாம் இரண்டுமுத லியவற்றின் பரிசமாப்தி, அது ஒருவியத்தியின்கண் ணின்று மெனின்? என்னற்க, இங்ஙனம் ஏகத்தன்மைக்கும்யாண்டும் பரிசமாப்தியின்றாகும், அதற்கு ஆண்டே யிருப்பாகாதாம், ஆயின் அன்னியத்திற் கேகத்தன்மையின்மை வழக்காம், ஆகலின் ஒருமையெண்ணிக்கையுடைய வியத்தியின்மாட்டே யிரண்டுமுதலிய பரிசமாப்தியென்பதாகச் சமமேயாம்.

408. ஒருமையெண்ணிக்கையிற்பரிசமாப்தி விஞவுமதன் விலக்கமும்.

ஒருவியத்தியின் மாட்டிருப்பது ஒருமையெண்ணிக்கை வியத்தி பிறவிடத்தின்றுமெனின்? கூடாதாம், சத்தைவியத் திக்கும் இவ்வாறுந்தன்மை வழக்காதலினுனும், தொடர்பின் மைதொடர்தலினுனும் என்க. சத்தை யொரேபொதுமைவடி வமாம், ஒருமையோ வியத்திதோறும்வேறும் பண்புப்பதார்த் தமாம் எனின்? அந்தோ? வைசேடிகரானே வஞ்சிக்கப்பட்ட வறையினை! இன்றுயின் சத்தேகவுணர்வுகட்கு அனுபவவிவ

காரியசேட்டங்களிருந்தும் என்வையெவையோ சிலபலபொருத்தமிலாவுக்கரங்களைப் புலம்புகின்றனை யாங்ஙனம்? சத்தை யொருமைக்குப் பராபரப்பான்மைபற்றுமையின் இன்னணமாமெனின்? ஆகாதாம். ஒப்பேயுறுதலின், ஜாதிபராபரப்பான்மைத்துணிபே யெவ்வழியும் ஒன்றன்கூறைறந்த விருப்பிலளவையாம். யாண்டவ்வாறெனின்? என்னற்க, சயிலத்தனலத்தைக்கருதுங்காலதனங்சித்தின்மாட்டியாண்டு மூழஞ் சாண்முதலியவை யுற்றனவெனத் துணிவுபெறுமைபோலக் கோதிலாமையின்.

409. அர்த்தாந்தரசங்கையும் அதன்நிவாரணமும்.

அற்றேல், ஒருமைதொடர்ந்ததாயாகுக வலதாகாதொழிக, ஈண்டதனை யறைதலானென்னே! இருமைமுதலியவையாண்டுமுடிவுபேறடைப்பாவோ, மொழிந்தவபாவமூன்றுமுளவாமோ அது பிரத்தியக்கமாமெனின்? இங்ஙனியையாதாம், அனுமிதியாதி மூன்றனாடும் மும்மைமுடிவு பேறடைவதின்றும்; இன்னணமாகவே, அயலாயவை மூன்றுகளாகாவாம். யாதுபிறவிடத்துளதோ அம்மும்மைவியத்தியயலாமெனின்? ஆகாதாம், யாதானுமொருமும்மைவியத்திக்கு அனுமிதியாதி மூன்றன்கண் முடிவுபேறின்மையின்.

410. மூன்றுவது கற்பநீக்கம்.

எம்மும்மை வியத்தியும் யாண்டுமுடிவுபேறடைவதின்றேவெனின்? அன்றும், அவ்வியாபகத்தன்மை யுண்மையின். பிரத்தியக்கத் தன்மைக்கும் மும்மைவியத்திக்கும் ஒரு தலையாக ஒருநிலைக்களமுறுவதாந்தசைமைஷய வைசேடிகமதத்தினின்றுங் கிளம்பியவன்னன் அங்கீகரிக்கவேண்டலின்; மாறாயினே, பிரத்தியக்க வியத்திகள் மூன்றென்பன வாகாவாம் யாண்டு மும்மை முடிவுபேறடையாநிற்குமோ அதுவேயன்றே மூன்றென மொழிவதாம்.

411. நுதலிய விசேடணத்தானும் அதிவியாத்தி நீங்காமை.

மேலும், ஆயினும் அவ்வதிவியாபகத்தகைமைத்தோட மேயாம்; மும்மையானேவரைந்துகோடப்பட்ட வணுமித்தி யாதிவியத்திகளில் நீ நிகழ்த்திய மூன்றபாவங்களுமுள்ளன வாம். ஆகவே யாண்டும் பிரத்தியக்கவிலக்கணம் அடைவுற்ற தென வதிவியாத்தியறையப்பெற்றது. அதனைநீக்கும்பொரு ட்டு, எம்மும்மையியத்தியும் யாண்டுமுடிவுபேறடைவதின்றே வென வுன்னுணுரையாடப்பட்டது. இன்னணமியம்பினும் அவ்வதிவியாத்தியகலமாட்டாதாம், ஆண்டுமறைந்தநிறப்பமர் ந்திருத்தலின். மும்மையான் வரைந்துகொண்டதன்கண் ணியாதொருமும்மையியத்தியும் முடிவுபேறடைவதில்லையன் றே! மும்மைவடிவமாய வோருபாதிவரைந்துகோண்டவதன் கண் அயன்மும்மையியத்தி யழையுமேனும், அப்பற்றுக் கோடுகொண்டேயமையும், முடிவுபேறடையாமைதிலே யின் றன்றே! யாண்டுத்தன்மிகளின்கண் மும்மையுபாதி பூதமா யுரைக்கப்பட்டதோ அவற்றின்மாட்டு மூன்மையின் முடிவு பேறு காணப்படுமாயின், அக்காட்சியானே ஆண்டுத் தன்மி மாத்திரத்தில் இலக்கணநீக்கம் அணியப்படும். மும்மைவிசிட் டத்தன்மியின்கண்ணேயின்றன்றே! ஆகலின், அதிவியாபகத் தகைமை யவ்வாறே நிலைபெறும். மூன்றபாவங்களும் மூம் மையுபாதி வரைந்துகோடலானே இனிதுநிறப்பின்மையை யெய்திய விசிட்டதருமியின்கண்ணிகழும், அவிசிட்டத்திலன் றும், தனித்தனி யவைகளின்பால் அபாவமூன்றன் அமைப் பை யறைவான் ஆற்றலின்மையின்.

412. அதிவியாத்தி விளைவிலக்கங்கள்.

இனி, அத்தகைய விசிட்டத்திற்குப் பிரமிதித்தன்மையி னானே விலக்கம்என நினைகின்றனைகொல்! அபாவமூன்றுடை யமும்மைச் சிறப்பைப்பற்றுக்கோடா யதன்பக்கத்துள்ளடக்கி

அத்தருமியத்தினிற் பிரமிதிப்பெற்றி பிறக்குவதின்றும்; மற்றோர் அத்தருமிகளின் சொரூபமாத்திரத்தாம்; ததலியவ பூர்வமூன்றும் பிரமிதித்தகைமையும்என்னுமிவை யாண்டுள வாமோ அது பிரத்தியக்ஷமெனவே கூறுவேமெனின் ? கூறெ ஞ்தாம், நின்னுனும் பின்னபின்ன தன்மத்தான் வரைந்து கொள்ளப்பட்டதருமிக்கே பிரமிதிப்பெற்றியும், அபாவமூன் றுடைமையும் ஒருதலையா யுடன்படத்தக்கதாம். அங்ஙன மன்றேல்:—பிரமிதிப்பெற்றிக்கொருபா லுறைவதாத லினியா மகம்நிகழ்த்தப்படாதாயின் யாவும்பிரமிதியாம் அல்லது ஒன் றும் ஆகாதாம். ''அன்னியான பேக்கையா னமநியாமக, மன் னுமேற்சத்தசத்தேனுமாமெங்குந், தன்னியாமகந்தனுற்பாவ மாந்தமக், குன்னுமாறேரிட முறுவதாதலே''

413. விகற்பவாயிலாய் நியாமகநீக்கம்.

அங்நியாமகம் ஆசிரயத்தில் விசேஷணீபூதமாயாதல், உப லக்கணபூதமாயாதல், உரைக்கவேண்டும்; ஆதியதில், பிரமிதிப் பெற்றியின் பற்றுக்கோட்டின்சிறப்பு யாதோ அதுவே அம் மூன்றபாவத்திற்கும் ஆமேலாயின் மும்மையான் வரைந்து கோடப்பட்ட அனுமிதியாதியின்மாட் டபாவமூன்றுங் காட் டப்பட்டிருத்தலின் மும்மையான் வரைந்துகோடப்பட்ட ஆண்டும் பிரமிதிப்பெற்றியா[illegible]வண்டும், வேண்ட வே பிரமிதிப்பெற்றியானே அதன்விலக்கமின்றும். இனியன் னியம் வரைந்துகொண்டதிற் பிரமிதித்தகைமை, அன்னிய தன்மம் வரைந்துகொண்டதிலோ மூன்றபாவசம்பந்தமேலா யின் நின்பக்கத்தும் (அபாவமூன்றனோடு) பிரமிதித்தகைமை க்கு ஒருதருமவிசிட்டாசிரயத்தன்மைவடிவ ஏகாசிரயத்தகை மையின்றும். விசிட்டமாயதருமியின்கண்ணுற்றதும் தருமி யாசிரிதமேயாகும் எனக்கொண்டும் பிரமிதித்தன்மைக்கு அபாவமூன்றன் சமானாசிரயத்தகைமையில் அனுமிதியாதி மூன்றிலும் வழக்கவ்வாறே நிலைபெறுமென்க.

414. உபலக்கண பக்க நீக்கம்.

இரண்டாவது மியையாதம், உபலக்கணீபூதமாய யாதாவு தொருதருமத்தானே எவ்விவ்வுபலக்கிததருமியுளதோ அதுவே யுரனுய் மும்மைவிசிட்டமுமாம்; விசேடணத்தோடிருப்பனவே னும் விசேடியவத்துக்களெவையும் விசேடியவத்துவடிவமாயி ருத்தலின், தண்டியாயபுருடனும் புருடனேபோனும் இன்ன ணமாகவே உபலக்கிதத்தினுமல்வடிவமாகா மும்மைவிசிட்ட மாய அனுமிதியாதியின்கண்ணும் பிரமித்தகைமையாகிரித் திருக்கும்; நியாமகமாய வுபலக்ஷணத்தானே வுபலக்கியவுபேத வியவத்திதியினுனே அதற்கும் வரைந்து கொள்ளப்பட்டதாந் தன்மை யுண்மையின்; உளதாகவே யதிவியாத்திவச்சிரப்பூச் சாமென்க.

415. அதிவியாத்தி விலக்கிடைகள்.

ஆயினும் உபலக்கணத்தான் மும்மைவிசிட்டமாக வித்த ருமியுபலக்ஷிதமாகவில்லை; மற்றே சொரூபமாகவெனின்? ஏலா தாம், இதன்கண்ணியம்பப்பட்டது, யாதுதான் அதனுலு பலக்ஷிதமாமோ அதுவே விசிட்டமுமாம், ஆயினும் விசிட்ட வடிவத்தானே ஆண்டுபலக்ஷிதமாக வில்லையேயெனின்? உபல க்ஷிதமாகவேண்டாம், அவிசிட்டமாகவும் அஃதுபலக்ஷிதமாக வையிலையாம், அன்றுயிறே பிரத்தியக்கத்தினும் வேற்றுமிலைக் களத்தகைமை யடைவுறுதலின்.

416. உபசங்காரம்.

மேலோங்குகும் பல்லவம்வெட்டும் விலாசவிலோபாட்டா மதுசாலும்; ஆகலின், இங்ஙன மயலிலக்கணத்தும் அறையப் பட்ட இத்தூஷணக்கூட்டந் தாமேயுய்த்துணரத்தக்கதாம். "பார்த்திது தன்னையே பட்ட பாதரால், வார்த்தை யிங்கிது மிகவழங்க லாயதாஞ், சேர்த்திடு மிலக்கணஞ் செப்ப லாவ தோ, வார்த்தவெவ் வங்கிசத் தாலமை யுமே" அயற்கருத்தா

லறையப்பெற்றதாயினு மது பொதுவாகவும் பொருத்தமு டையதேயாம்.

417. அனுமானகண்டன ஆரம்பம்.

அனுமானமுமென் னறையப்பெறும்? காரணபக்கத்திற் குறியாராய்ச்சி யனுமானம்எனின்? குறித்தகைமை யாது கொல்! வியாத்தத்தற்குப் பக்கதருமத் தன்மையெனின்? ஐய மூபலக்கணமாயின் ஆண்டு வியாபகத்தைக்கண்டும் அவ்வா ராய்ச்சியி லதிவியாத்தியாதலின். இதனனே, நிகழ்வதாயவதற் கும் (உபலக்கணத்தன்மை) இன்றும் அஃதிலாக்காலத்தும் உபலக்கணத்தன்மைபுண்மையின், விசேஷணமாயின், வியாப கத்தை யனுமித்துத் தருமிநாசம்போலும் முயல்வின்மை யடைவுறுதலின் பக்கதருமத்தான் ஹேதுவினனே பக்காங் கெ விசேடியத்திற் சாத்தியசித்தியாம்; இத்தகையதாம் வே ற்றுநிலைக்களத்தகைமை இஷ்டமே யாமென்பதனனே இவ்வா றின்றுமெனின்? இன்றும் பக்கம்பற்றி வேற்றுநிலைக்களத் தன்மையேல் நியதமான ஒருநிலைக்களத்திலிருத்தலாந்தகை மை யிலக்கணவியாத்திக்கு லோபம் வந்துறுதலின், ஆயினும் விசேடியங்கொண்டு அஃதுளதாமேயெனின்? ஆகாதாம், யாண் டுச் சாமானியம் வியாத்திவலுவால் வரலாயதோ, ஆண்டுச் சாத்திய விசேடசித்தியும் சாமானியத்தோற்ற முடிவடையா மை வலுவானேயாமெனச் சாமானிய விசேடசித்தி யுபயோக மில்லாத பக்கதருமத்தன்மை யுணர்திட்டமாம், கேவலம் துணி ந்ததைத் துணிதனீக்கற்பொருட்டே அனுமிதிகாரணத்தன் மையானே யிட்டப்படத்தக்கதாம். துணிந்ததைத் துணித லும் தன்பொருட் டனுமானத்திற் றேடமன்றுமென அனு மிதிமாத்திரஹேதுவின்கட் புகுவதன்று மஃதென்பதாம், விட விழைந்த:—"சிரவண மனனமெய்த் தியானத் தானுமே, வரையறு காட்சியான் வழுத்து மான்மனிற், றிரிவித மளவைக

டிரளுஞ்சங்கர, மருவுறுந் தம்பொருட் டாகமாந் தசே" இதனனே ஐயத்தகுதியும் நீக்கப்பட்டதாம்.

418. வியாப்பியத்தன்மை இலிங்கத்தன்மையாமென்னுங் கடாவிடைகள்.

வியாப்பியத்தன்மையெனின் ? வஸ்து கதியாய் வியாப்பியத்திற்குச்சொரூபமாக வாராய்ச்சியனுமானமா? வியாப்பியமாகவா? ஆதியதாகாதாம், வியாத்தியைக் கவராதவனனும் புகை முதலியவற்றின் ஆராய்ச்சிக்கு அனுமானத்தன்மை வழக்காதலின். இரண்டாவது மியையாதாம், வியாத்தியை யிலக்கும் அளவைக் கனுமானத்தன்மை வழக்காதலின். அதற்கும் வியாப்பியத்தகைமையைக் கவருந்தகைமை யவசிய மறைய வேண்டலின். இதனனே இரண்டாவது மூன்றாவது சிறப்புகளும் சிதைக்கப்பட்டனவாம். தாரைப்பெருக்கில் அவ்வாறுந்தன்மை யடைவுறுதலின். வியாத்தியைக் கவர்ந்தவனனும் ஓரேபோ திரண்டின் கவர்ச்சியேல், இவையிரண்டும் வியாப்பியவியாபகங்கள் என்னும் ஆராய்ச்சிக்கு அனுமானத்தன்மை வழக்காதலின். அஃதனுமானமே யாமென்னற்க; ஐயப்படாமையானே பக்கத்தன்மை யின்மையான் அதன் றன்மமாய ஹேத்துவிற்குத் துணிந்ததைத் துணிதல்போலும் பக்கதருமத்தன்மை யின்மையின்.

419. துணிந்ததன்கண்ணும் ஐயமிருத்தலின் மாசென்னும் விஞ்மாற்றம்.

தன்பொருட் டனுமானத்தி லித்தோடமின்றாமெனின் ? அன்றாம், காட்சியிலக்கணங் கதுவுதலின் சாகூாத்தன்மையாகூாத்தன்மை விரோதம் விரவலின். அவ்வியாபக விஷயத்தன்மையோடுங் கூடியெனின் ? கூடாதாம், வியாப்பிய விடயத்தன்மையின்மை வழக்காதலின், வியாப்பியத் தன்மையோ பிரதியோகியுடையதைக் கவர்வதாம், ஆகவே இதனது வியா

ப்பியம்மீதெனக் கவரப்பெறும், பெறவே விசேஷணமாகிய வியாபகத்தினது கவர்ச்சியை யொருதலையாயுரையாடல்வேண்டும்; இன்றியிஃதே விசிட்டக்கவர்ச்சி விளம்பற்கேலாதாம். விசேடமாகவியாபக அவிஷயத்தன்மையோடுங் கூடியெனின்? என்னற்க, அக்கினிதூமங்கள் வியாத்தங்கள் என்னும் ஆத்த உபதேசத்தான், முன்னர் மிகுதியாகக்கவர்ந்த தீப்புகையுடனிதழ்ச்சி யுடையவன்றன், தீப்புகைகளைக் கவராதகாலத்தில் மினைப்பின் வயத்தாஞதல் உண்டான வியாத்திக்கவர்ச்சியுடையவன்றன் வியாப்பிய ஆராய்ச்சியுமானமாம் ஆராய்ச்சியுணர்வுமாத்திரமன்றும், எதனுன் முதற்கவர்ச்சியில் வழக்காமோ. மற்றே, ஒட்டியுணரு முணர்வாமெனின்? ஆகாதாம், விசாரத்தின் முன்னேனும், ஆத்த உபதேசத்தின் முன்னேனும், வியாத்தியையுணர்ந்து, மீண்டுமாத்த வுபதேசத்தாஞதல் விசாரத்தாஞதல் என்னுல் எவ்வியாத்தி கவரப்பெற்றதோ அதுவேயிதுவென வொட்டியுணர்பவனது வியாத்திஞானம் அனுமானமாம், விசேடமாக வியாப்பிய விடயத்தன்மையோடுங்கூடியெனின்! கூடாதாம், அவ்வியாபகத்தன்மை வழக்காதலின். ஒருவியத்தி விடயத்தன்மை வேறு வியத்தியிற்சம்பவியாமையின், பொதுவான வியத்திவிடயத்தன்மையோ அதி வியாத்தியை யடைவித்தலின்.

420. விகற்ப உபந்யாசவாயிலாகச் சாத்தியஞாபகத் தன்மைத்தூடணம்.

மேலும், புகையுடைமையினனே மலைமுதலியவற்றிற்கு எப்போழ்தேனு மொருபோழ்து தீயுடைமை தோற்றுகின்றதா? அல்லது அப்போழ்தே தீயுடைமையா? ஆதியதாகாதாம், அப்போழ்தே போலமற்றைய போழ்திலும் அழல் விழைந்தோன் முயல்கையாண்டு வேண்டலின். இரண்டாவது மினிதாதா, அக்கால் அழலுடையதாக வியாத்தத்தன்மை யறி

வமையாமையின். அக்காலெனப் புகைப்போழ்தவாவியதா மெனின்? ஆகாதாம், சிலபால் அயற்சமயத்தும் புகையினிரு ப்புளதாமென வேறுகாலத்திற்கும் புகைக்காலத்தன்மை யுண் மையின். அப்புகைக்காலம் அவாவியதாமெனின்? என்னற்க, அதுவெனுஞ்சத்தம் விசேட வியத்தியைக் கூறுவதாயின் தோற்றுவியாத்தி யுடைமையாம், யாதாவதொரு வியத்தி யைக்கூறுவதாயினே அறைந்ததோடத்தினடைவாம். ஹேது வின்பக்கதருமமாகவும் மலைமுதலியவற்றி சோததருமத்துணி பொருளாகாதொழிக, அதனனே வேறுகாலத்தேனுகாதோ? அக்காலத்தை யுள்ளடக்கிப் பக்கத்தன்மையேல், யாங்ஙனம் பின்னர் நடுங்காமன் முயலுதல்? புகைப்போழ்தையுள்ளடக்கி யெனின்? வழங்கியது திரும்பிவரும்; அப்புகைப்போழ்தெ னின் அங்கிசத்தாற்றன்பாலிருப்பாம்.

421. வியாப்தி கண்டனம்.

வியாத்திசத்தப் பொருள்யாதென விளம்பவேண்டும், அவிநாபாவமெனின்? ஆகாதாம், ஒன்றன் இன்மையின்மை யுளதாக மற்றொன்றன் உண்மை அவிநாபாவபதப்பொருளா? அல்லது ஒன்றன் இன்மையாயவழி மற்றொன்றன் இன்மை யா? ஆதியதேலாயின் இன்மையினின்மை யுண்மைப்பொரு ளாம், ஆகவே ஒன்றன் இருப்புளதாயவழி மற்றொன்றனிருப் பாமெனக் கூறப்பட்டதாம். இவ்வாறுகவே, மண்ணுலாயதாந் தன்மை, இரும்பாற்போழ்தலாந் தன்மைகளின் உடன்பாடு காணும் வியாப்தியாம்.

422. எல்லா விடங்களிலுமாகு சம்பந்தவியாத்திகண்டனம்.

சிலபாலாஞ் சம்பந்தம் வியாத்தியன்றும், எல்லாவிடங் களிலும் ஆவதற்கே அவ்வாறுந்தன்மையெனக்கூறும் வேட் கையுண்மையின் எனின்? இவ்வெல்லா விடங்களிலுமாந்தன் மையென்பது யாதுகொல் சம்பந்தத்திற்கு? எல்லா அச்

ப்பியமிஃதெனக் கவரப்பெறும், பெறவே விசேஷணமாகிய வியாபகத்தினது கவர்ச்சியை யொருதலையாயுரையாடல்வேண்டும்; இன்றியிதனை; விசிட்டக்கவர்ச்சி விளம்பற்கேலாதாம். விசேடமாகவியாபக அவிஷயத்தன்மையோடுங் கூடியெனின்? என்னற்க, அக்கினிதூமங்கள் வியாத்தங்கள் என்னும் ஆத்த உபதேசத்தான், முன்னர் மிகுதியாகக்கவர்ந்த தீப்புகையுடனிகழ்ச்சி யுடையவன்றன், தீப்புகைகளைக் கவராதகாலத்தில் நினைப்பின் வயத்தானுதல் உண்டான வியாத்திக்கவர்ச்சியுடையவன்றன் வியாப்பிய ஆராய்ச்சியனுமானமாம் ஆராய்ச்சியுணர்வுமாத்திரமன்றும், ஏதனுன் முதற்கவர்ச்சியில் வழக்காமோ. மற்றே, ஒட்டியுணரு முணர்வாமெனின்? ஆகாதாம், விசாரத்தின் முன்னேனும், ஆத்த உபதேசத்தின் முன்னேனும், வியாத்தியையுணர்ந்து, மீண்டுமாத்த வுபதேசத்தானுதல் விசாரத்தானுதல் என்னுல் எவ்வியாத்தி கவரப்பெற்றதோ அதுவேபிதுவென ஒவாட்டியுணர்பவனது வியாத்திஞானம் அனுமானமாம், விசேடமாக வியாப்பிய விடயத்தன்மையோடுங்கூடியெனின்! கூடாதாம், அவ்வியாபகத்தன்மை வழக்காதலின். ஒருவியத்தி விடயத்தன்மை வேறு வியத்தியிற்சம்பவியாமையின், பொதுவான வியத்திவிடயத்தன்மையோ அதி வியாத்தியை யடைவித்தலின்.

420. விகற்ப உபந்யாசவாயிலாகச் சாத்தியஞாபகத் தன்மைத்தூடணம்.

மேலும், புகையுடைமையினனே மலைமுதலியவற்றிற்கு எப்போழ்தேனு மொருபோழ்து தீயுடைமை தோற்றுகின்றதா? அல்லது அப்போழ்தே தீயுடைமையா? ஆகியதாகாதாம், அப்போழ்தே போலமற்றைய போழ்திலும் அழல் விழைந்தோன் முயல்கையாண்டு வேண்டலின். இரண்டாவது மினிதூர்தா, அக்கால் அழலுடையதாக வியாத்தத்தன்மை யறி

வமையாமையின். அக்காலெனப் புகைப்போழ்தவாவியதா மெனின்? ஆகாதாம், சிலபால் அயற்சமயத்தும் புகையினிருப்புளதாமென வேறுகாலத்திற்கும் புகைக்காலத்தன்மை யுண்மையின். அப்புகைக்காலம் அவாவியதாமெனின்? என்னற்க, அதுவெனுஞ்சத்தம் விசேட வியத்தியைக் கூறுவதாயின் தோற்றுவியாத்தி யுடைமையாம், யாதாவதொரு வியத்தியைக்கூறுவதாயினே அறைந்தமோடத்தினடைவரம். ஹேது வின்பக்கதருமமாகவும் மலமுதலியவற்றி லிராததருமத்துணி பொருளாகாதொழிக, அதனுனே வேறுகாலத்தேனுகாதோ? அக்காலத்தை யுள்ளடக்கிப் பக்கத்தன்மையேல், யாங்ஙனம் பின்னர் நடுங்காமன் முயலுதல்? புகைப்போழ்தையுள்ளடக்கியெனின்? வழங்கியது திரும்பிவரும்; அப்புகைப்போழ்தெனின் அங்கிசத்தாற்றன்பாலிருப்பாம்.

421. வியாப்தி கண்டனம்.

வியாத்திசத்தப் பொருள்யாதென விளம்பவேண்டும், அவிநாபாவமெனின்? ஆகாதாம், ஒன்றன் இன்மையின்மை யுளதாக மற்றொன்றன் உண்மை அவிநாபாவபதப்பொருளா? அல்லது ஒன்றன் இன்மையாயவழி மற்றொன்றன் இன்மையா? ஆகியதேலாயின் இன்மையினின்மை யுண்மைப்பொருளாம், ஆகவே ஒன்றன் இருப்புளதாயவழி மற்றொன்றனிருப்பாமெனக் கூறப்பட்டதாம். இவ்வாறுகவே, மண்ணுலாயதாத்தன்மை, இரும்பாற்போழ்தலாற் தன்மைகளின் உடன்பாடுகளும் வியாப்தியாம்.

422. எல்லா விடங்களிலுமாஞ் சம்பந்தவியாத்திகண்டனம்.

சிலபாலாஞ் சம்பந்தம் வியாத்தியன்றும், எல்லாவிடங்களிலும் ஆவதற்கே அவ்வாறுந்தன்மையெனக்கூறும் வேட்கையுண்மையின் எனின்? இவ்வெல்லா விடங்களிலுமாந்தன்மையென்பது யாதுகொல் சம்பந்தத்திற்கு? எல்லா அச்

சாதியையுடைய வியத்திகளில் இருக்குந்தன்மை யெனின்? எல்லா அச்சாதியையுடைய வியத்திகளே யறியாதபோழ்து இது துணிய முடியாதாம். எல்லா அவ்வியத்திகளையுஞ் சிறப் பர்கவுணர்வான் முடியாதாம். அவ்வவ்வுணர்வின் கரணமமை யாமையின்.

423. சாமானியப் பிரத்தியாசத்தி கண்டனம்

பொறியாற் சாமானிய இலக்கணைச் சம்பந்தத்தானே வியாத்தியைக் கவரும்வேலையில், எல்லா அச்சாதியையுடைய வியத்திகள் கவரப்பெறுகின்றனவாம், இதை யங்கீகரியா விடின் அலையமணந்து முடையின்மகவுவேண்டுதல்போலும் என வாசஸ்பதியாகூபங்கூறி யுள்ளாரெனின்? இங்ஙன மேலாதாம், சாமானிய இலக்கணைப் பிரத்தியாசத்தியினானே வியாத்தி கவர்பவனுக்கு முற்றறிவுண்மை வழக்காதலின். யாண்டும் அறியாமை நினக்குறுதொழிக வென்பதாகச் சர் வஞ்ஞத்தன்மையின் சம்பாதனமாமெனவிலக்கும் வேறுதே வதையும் விலக்குறுதாம். பிரமேயமாக வியாத்திகவருங்கால் எல்லா அச்சாதியையுடைய வியத்திகளிற் பிரமேயத்தன்மை யானேயாவும் அஞ்ஞான்றறியப் பெறுவதேயாம், அயலுரு வத்தானே அல்லவாமெனின்? அல்லவாம், வேற்றுருவத்தா னே யது பிரமேயமாமேலாயின், வேற்றுருவமுடையதும் பிர மேயத்தன்மைக்குப் பற்றுக்கோடாதலானே யாங்ஙனங்கவரா மையாம்? இனிப்பிரமேயமன்றேல் வேற்றுருவத்தானே யஃ திலதேயாம். எவ்வுருவத்தானேயுளதாமோ அவ்வெலாவற்றா னே பிரமேயமென இருக்கும் ஆகாரமுழுவதானும் அறியப் பட்டதாந்தன்மைவழக்காம்; அவ்வாறுந்தன்மையை யங்கீ கரிக்கினே, பிரமேயத்தன்மை தரிசியாகின்றுல் எமது மனே விருத்தியறியப்பெறும், பெறின்விசுவசிப்பேம்.

424. பேத அபேதமதம்பற்றி விளாவிலக்கம்.

உளதாகுகவித்தான், அன்யோன்யாபாவ வைதர்மியாதி பேதம் தனித்ததாவதேபோல வத்துக்களின் ஐக்கியமூமாம், அதனுற் பிரமேயத்தன்மையாதியும் தருமிகளின்ஒருமையொன் றேயாம், ஆகவே பிரமேயத்தன்மையாமே அறியப்பெற்ற அவ்வியாவுமே அவ்வைக்கியத்தானே புலப்படும் ஒருவியத்தி வடிவனவாகவே அறியப்பெறுவதாகும் என யாங்ஙனம் அவ் வொருமையையறிபவனுக்கு முற்றறிவுண்மையாதல்? வியத்தி களின் நானுத்தன்மையும் பிரமேயமென அதுவும் தருமியாகக் கவரத்தக்கதேயாமெனக்கழறற்க. ஏதனுலதுவும் பிரமேயத் தன்மைமுதலியவற்றுனே கவரப்படுவதா யொன்றேகவரலா குமோ, அதனுல்:—"ஏகபாவந் தத்துவத்தானே, யெதனுற் கண்டன மதனுற்கண்டனம், சர்வபாவந் தத்துவத்தானே" என்பதாம்; தத்துவத்தானே, அவ்வுருவமுடைமையானே ஒரே வடிவமாம். அவ்வித்துவும் அமைவுறுதாம், நானு ஏகம்என்ப தாக முரண்பட்டதோற்றமுன்னிற்றலின்.

425. இரண்டாவது கற்பனீக்கம்.

இனி, வேற்றுருவத்தானே நானுத்தன்மை பிரமேயத் தன்மை முதலியவற்றுனேயோ ஐக்கியம், என்னும் விவத்தை யினுனே வியாகாதம்வாதாம்; ஆயின், பிரமேயத்தன்மைக் காதாரமாய வியத்தியேதமுழுவதையும் கவர்தலின் முற்று முணர்தலினடை வல்வாறேயாமென்க.

426. சர்வவியத்திக்கவர்ச்சியை யங்கீகரித்தும் வியாத்திக் கவர்ச்சியசம்பவமாம்.

மேலும், சாமானிய இலக்ஷணச்சம்பந்தத்தானே அச்சா தியுடையதன்விசேடக்கவர்ச்சியேல் அவ்வெல்லாவியத்திகளி லும் சம்பந்தமுளதாமென்பதி லளவையாதாம்? எல்லா வியத்திபோலு மதன்சம்பந்தக்கவர்ச்சியிலும், வியாத்தியைக்

கவரும் பொறியேயளவையாமெனின்? அற்றுயின், சிலபா லிங்ஙன் முணிந்ததற்கு ஏப்பிறழ்ச்சிகாணப்படுகின்றதோ அஃ தாகாதாம், அச்சம்பந்தம் பொறியா லுணரப்பெறுதலின். பின்னர்ப்பாதிக்கப்படுதலி ஞண்டுச்சம்பந்தத் தோற்றம் மயலா மெனின்? ஆகாதாம், சாமக்கிரியபேதமாக, ஒன்றுமயலற்ற தெனவும், மற்றொன்று மயலுற்றதெனவும் வேறுபிரித்தல் கூடாமையின், தோஷ அதோஷ விசித்திரத்தன்மையின் பகுப் புக் கியலாற்றுங் தொகுக்கமுடியாததாகலின்.

427. காரியவிலக்ஷணத்தன்மையானே காரணவிலக்ஷணத் தன்மையென்னும் விளைவிலக்கம்.

காரியபேதத்தானே சாமக்கிரிபேதமுமுன்னத்தக்கதா மெனின்? உன்னுக, அதுதானே யெங்ஙனுன்னத்தக்கதென உரைக்கவேண்டும். எல்லாவிடத்தினுமாஞ் சம்பந்தவுண்மை யின்மை வடிவினதாகவாண்டாகாதாம்; அக்கால்வருஞ் சம் பந்தங்கட்கிருப்பின்மையினனே அகாரணத்தன்மையுண்மை யின். அச்சாதியுடையவைகடம்சம்பந்தத்தின் புலப்பாட்டின் முன்னர்ப் பொதுவாகச் சத்துவம் மயலுண்மை மயலின்மை களின் சாதாரணமாயாம்; ஒருபாலுஞ்சம்பந்தமிலதென் மய லுதியாமையின்.

428. இரண்டாவது கற்பனீக்கம்.

இதனனென்னே! ஆயின், காரியவேற்றுமையானே காரணவேற்றுமையலே கற்பிக்கப்படுமெனின்? அஃதென் னேபொறிச்சககாரியூதமா? வேறுகாரணமேயா? கற்பிக்கப் படுவதென்ப தியம்பவேண்டும்; ஆதியதாகாதாம், பொறிக் குப் பாவியூதசம்பந் தாங்சித்திற் பிரமாணத்தன்மைக் கற் பனையிற் பிரமாணவின்மையின், மாறுக, உபாதியையுற்ற பொறியாபாரத்தையுடைய விசாரவானுக்கு, முன்னர்த் தோற்றுஞ்சம்பந்தத்தையுடைய தருமியிரண்டினது வியாத்தி

யின்றுணிவு காண்டலின். அப்போழ்தும், மனமூலதுபொ றியாகவெனின்? உளதாகுக, அக்கரியத்தின்கண்ணே மனங் கரணமாவதன்கண்ணே ஆளவையொன்றுங்காணேம், இன்றி யமையா தினிது கற்பிக்கத்தக்கதாய பிறிதொன்றுனே எல் லாக்கூடாமையும் உபசாந்தியாதலின். காரணத்தன்மைமாத் திரமோ, விழிமுதலியவற்றால் விளைந்தஞானம்போலும் மன நிற்கண்டாம். விழிமுதலியவைபோலும் கரணம்பிறிதொன் றேயது கற்பிக்கத்தக்கதென ஏழாவது பொறியாதல் அயல ளவையாதல் இலையும், அன்றியினே, விழிமுதலியவற்றி லாய புலப்பாட்டின்கண்ணும் விழிமுதலியவற்றிற்குக் கர ணத்தன்மை கதுவுறுதாம். ஆண்டும், அவற்றுண்மனமே யின்பமுதலியவற்றின் புலப்பாடேபோலும் கரணமெனக்கழ றல்கூடும், விழிமுதலியவையோ சககாரிமாத்திரமாம். இரண் டாவது பின்புறுதாம், வேறுபொறிவழக்காதலினுனேனும், வேறளவைவழக்காதலினுனேனுமென்றுணர்க.

429. பாவபதத்தோடு நகாரசம்பந்த கற்பவிலக்கம்.

வினுபாவம், ஒன்றன் இன்மையாதே பிறிதொன் றன் இன்மையின்மையாமதனீக்கம் அவினுபாவமாம் என் னும் இரண்டாவது துணக்கமும் இனிமையற்றதாம், இவ்வாறே இரும்பாற் போழ்தலாற்றன்மையின்மையும், மண்ணுலாயதாற் கன்மையின்மையும், சிலபாலுளதாமென மண்ணுலாயதாற் கன்மைக்கும் இரும்பாற்போழ்தலாற் தன்மைக்கும் அவினா பாவமடைவுறும். இன்மைகளொருகாலுறலும் எல்லாவிடத் களிலுமுறலாகவேண்டுமென விளம்பும் வேட்கையாம், ஒருபா லுறலாற் தகைமையல்லவாம், அதனுனே யறையப்பெறுகின் றது அவினாபாவநியமமெனவெனின்? ஆகாதாம், எல்லா விடத்துமுறலாதலி னுடன்பாட்டுத் துணிபைச்சிய நியாயத் தானே எல்லாவிடத்துமுறலாதலி னெதிர்மறைத்துணிபிற்கும்

மூடியாமையுண்மையின், மூடியுமேலோ, உடன்பாட்டுத்துணி பே யுளதாகுக, வெல்லாவிடத்துமுறலாதல், எதிர்மறைத் துணிபாங் கோணலினுமியற்றியது சாலும்.

430 வியாத்தியின் வேற்றிலக்கண விலக்கம்.

யாண்டு விபக்கத்தின்கண்ணிருப்பதிற் பாதகமுளதோ அவற்றின்சேர்க்கை வியாத்தியாமென்பர் சிலர்; அஃதொவ்வாதாம். விபக்கத்தின்கண்ணிருப்பதிற் பாதகமியாதுளதோ அது பிரமாணமாயாதல் தருக்கமாயாதல் இருக்கவேண்டும்; முதலில், ஆண்டிந்திரியமாகாதாம், அது சம்பவியாமையின், மாரு யிலே, பிறழ்ச்சிபிறழ்ச்சியின்மையையமாகாதாம்; அனுமான்முமாகாதாம், எல்லையில்லாது செல்லலாமென்னும் வழக்காதலின்; அருத்தாபத்தியுமாகாதாம், அனுமானத்தினுமயலாகாமையின், குறியுடையதனின்மையிலுனே குறியின்கூடாமை வேறுகவாயினும், அகனுனே குறியுடையது துணியப் பெறுதலின் அனுமானத்தாலாற்றியதுசாலும்; இன்னணமாகாதாயினே அவற்றிற்கு வந்த தென்னேகொல்!

431. அங்கீகரித்துந் தோடங் கூறல்.

உளதாகுக தான் எங்ஙனமேனும் ஆண்டார்த்தாபத்திப் பாதகம், ஆயினும், எத்தகையதங்கீகரிக்கப் பெறுவதென வினவப்படும், விபக்கவிருத்திபாதக சகிதமாக யாண்டுச் சில பாலன்வயம் வியாத்தியா? அல்லது அஃதோடும் எவ்விடத்து முறுமன்வயமா? அல்லது, விசேடணநேடலானமக்காக வேண்டுவதென்னே, அதனேடுகூடிச் சாமானியமாக அன்வயம் வியாத்தியா? அலலதுதான் எவ்விடத்துமுறுமன்வயமா? அதுவும் விபக்ஷத்திற்பாதகத்தானுணரப்பெறுவதா? ஆகியதாகாதாம், விகற்பம்பொருந்தாமையின், அங்ஙனமன்றே:—விபக்கத்திலிருப்பதிற் பாதகம் எல்லாவியத்திவிடயமா? அல்லது சாமானிய விடயமா? ஆகியதில், யாண்டுதான் அனு

மானம் முயல்வுறுத்தப்பெறுமோ ஆண்டின்றியமையாதிருப்ப தாய வேறுவிதமாய் விளைதலாம் பாதகபூத அருத்தாபத்தியி னானே துணிபொருடணியப்படுதலின், அழுமான விசனங் கொண்டவதிப்படல் சாந்தமாம்.

432. இரண்டாவது விகற்பநீக்கம்.

இரண்டாவதில், சிலபாற்பிறழ்வுறினும், சிலபாற்பிற ழாமைகொண்டு பாதகத்திற்குப் பயனுடைமையாம், புகை யுடைமைமாத்திரம் அழலுடைமைமாத்திர வியதிரேகியென்ப தானவடிவமன்றே சாமானியமாக விபக்ஷபக்ஷம், ஆண்டும் பாதகம் அவற்றின் அவிரோதத்தின்கண் முடிவுபெறும். அவி ரோதமும் சிலபாற் கூடியிருத்தலானுருதலியாயுண்டாம்என மண்ணுலாந்தன்மைக்கும் இரும்பாற்போழ்தலாந்தன்மைக்கும் இவ்வாறுய வியாத்தத்தன்மை வழக்காம்.

433. இரண்டாவது மூன்றுவது நீங்கல்.

இரண்டாவது மேற்றமுறுதாம், விசேஷணம் வீணுத லின், எவ்விடத்துமுறுமன்வயம் எனவேயியம்பலாம், அதுவும் பொருந்துறுதென அறையப்பட்டதன்றே. மூன்றுவதும் மூரணும், பாதகத்திற்குச் சாமானிய விசேட விஷயத்தன்மை விசுற்பத்துட்கூறிய வுகத்தானே நீக்கியிருத்தற்றன்மை யுண் மையின்.

434. நான்காவது விகற்ப நலமிலாமை.

நான்காவதும் நலமின்றும், அங்ஙனமன்றே:—யாது தூமமுடையதாமோ அஃதனலுடையதாம், என்புழி இவ்வன் வயத்திற்கு எவ்விடத்துமுறுந் தகைமையியம்பவேண்டும், எல்லாப்புகை வியத்திகட்கும் தீச்சம்பந்தித்தகைமை யாதுள தோ அது வியாத்திகவரும்போது கவரப்பட்டதாயின், புகை யுடைய வியத்தியாய பக்கத்திற்கும் தீயுடைமை முன் கவரப் பெற்றது நினைக்கப்படுவதே யாகுமென வனுமானஞ்சென்ற

தாம். சாமானியவன லுடைமையதற்கும் கவரப்பட்டதே யாகும், விசேடமாகவோ கருதப்பெறுமெனின்? விசேடமாக வென வென்னனலுடைமைக்கு விசேடம் வியத்திரூபமாய் விளம்பும் வேட்கையா? அல்லது காலதேசாதி சம்பந்தம் அதற்கா? ஆகியதாகாதாம், எல்லாவியத்திகளும் வியாத்தியின் கண்ணே புலப்படுவனவாக நீயேயுடன்பட்டிருத்தலின். இரண்டாவதுமின்புறுதாம், அக்கினியுடைய வடிவத்தானே நினைந்த புகையுற்ற விசேடபக்கமாயவதற்கு விழிமுதலியவற்றானே மலைத்தன்மைமுதலிய தேசகால விசேடாதியுடைமையானே பரிச்சேதம் விளைதலின். முன்னனுபவம்வைத்த சமஸ்கார சகிதவிழிமுதலியவற்றானே அளவிடப்பட்ட இக்காலத்தாதல் தேசவிசேடத் திருத்தன்முதலியவற்றை யுடையவனுக்கு, அவனேயிவனென்னும் ஒட்டியுணருமுணர்வா லறியப்பட்ட தாந் தன்மையங்கீகரிப்பதேபோல வீண்டுமுளதாகுக, அனுமானத்தாலாற்றியது சாலும்.

435. உபமானசத்தங்கட்குப் பாதகத்தன்மை விலக்கம்.

உபமானமும் பாதகமாக விபக்கத்தில் விளம்பவியையாதாம், அதற்குநியதமாய விடயத்தன்மைபுண்மையின் இத்தகையவிடயத்தில் உதயமாகாமையின். சத்தமுமாகாதாம் உபதேசிக்கப்பட்ட ஆத்தனிலனுயின் வியாத்தியுணராமை வழக்காதலின்.

436. அநுபலப்திக்குப் பாதகத்தன்மைநீக்கம்.

அபாவமோ ஒருகாலாகலாம், அதுவும் நிரூபிக்கப்படுவதாய்பிபாருத்துவதில்லை, இன்னணம் அஃதறையத்தக்கதாம், வன்னியில்லாமற் போமிருக்குமாயின் அவ்வாறுபுலப்படலாமே புலப்படுவதோ இன்றும், ஆகலின் புலப்படாமையின அஃதிலாமலிராதிதன்பதாம். அதுவுமொவ்லாதாம், அங்ஙனமன்றே:—இலபாற்பிற்முதல் காணுமையின் இவ்வபாவம்பிரமிருத்

திக்கின்றதா? யாண்டும் பிறழுதல் காணுமையினு?, ஆகியதா காதாம், மண்ணுலாயதாந்தன்மைக்கும் இரும்பாற்போழ்த லாந்தன்மைக்கும் வியாத்தத்தன்மைவழுக்காதலின் இரண்டா வதுமாகாதாம், யாண்டும்போக்கிய அநுபலம்பமா? அநுப லம்பமாத்திரமா? என்பது கூறவேண்டும்; முதலதுமுரணும், யாண்டும் யோக்கிய அநுபலம்பஞ்சம்பவியாமையின். மற்றது மற்றதாம், மண்ணுலாயதாந்தன்மைக்கும் இரும்பாற்போழ்த லாந்தன்மைக்கும் சம்பவித்தலின். ஆண்டுவச்சிரமணியின் கண்ணே பிறழ்ச்சியாமெனின்? என்னற்க, அதனது அதரி சன தசையிற்பிறழ்ச்சி அறியப்பெறுமையின், அதனது தரி சனதசையில் ஆண்டுளதாம்பிறழ்ச்சி. யாண்டுஞருகாலும் பிற ழ்ச்சித்தரிசனமிலதாமோ ஆண்டுவியாத்தியெனின்? என்னற்க ஈண்டும் பிறழ்ச்சிகாணப்பெறுவதில்லை யென்பதன்மாட்டும் நியாமகங்காணுமையின்.

437. தருக்கத்தீற்குப் பாதகத்தன்மைவிலக்கம்.

விபக்ஷத்திற் பாதகந்தருக்கமெனவும் விளம்பமுடியா தாம், தருக்கத்திற்கு வியாத்திமூலத்தன்மையை யங்கீகரிக் கின் எல்லையில்லாதுசெல்லும் வழக்காதலின், அஃதுடன் படாவிடின் மூலஞ்சிதிலமானதாற் றருக்காபாசத்தன்மை வந் தூறுதலின்.

438. உதயனருரைத்த விஞநிரூபணம்.

இனி யது கூறமுடியாதெனக் கூறுதியோ அங்ஙனமன் றே :—அனற்புகைப்பிறழ்ச்சிச்சங்கையிற் பாதகந்தருக்கமிது பகரப்படும், புகைதீயைவிட்டுப் பிறழுமாறுற் காரணமற்ற தாய் நித்தியமாம், உளதாகாமலேனும்போம், அவ்விதத்தருக் கம்உத்தரமற்றதாம், ஆண்டுச்சங்கையில் வியாகாதம்வருத லின், எதன்கண்ணே ஆசங்கைசெய்யின் தனதுகிரியை வியா காதமுதலியவையாந் தோடங்கள் அவதரிக்கமாட்டாவோ; அதுவேயாசங்கிக்கப்படுமென்ப தலகமரியாதையாம்; இன்

ணம், யாண்டும் உத்தாமற்றதருக்கம்பாதகமாகக் கூறத் தக்கதாம்.

439. விளவிலக்கம்.

இங்ஙனமியையாதாம், இவ்வாறுவினவத்தக்கதாவென்? எதன்கண்ணேது பலபாவமேயுண்டர்காதோ, இவ்வாறேவின வத்தக்கதாம், அக்கினியைவிடுத்து அன்னியவேதுவினுலும் இஃதுதிக்குமென. இங்ஙனமாயின் புகைக்கு ஏகஜாதித்தகை மையாகாதாம் என நவிலற்க, சிலபாற் பொறிபயந்ததகைமை யும், சிலபாலனுமானுதிபயந்ததகைமையு மிருப்பினும் ஞான ஏருஜாதியுடைமைபோலு மஃதொல்லலின், ஆண்டுப்பொறி மூதலியவற்றிற்கு, உள்ளடங்கியசாமானியமாகிய சாக்ஷாத்கா ரித்தன்மை மூதலியவற்றிற் சாதகத்தகைமையாம், ஞானத் தன்மையின்கண்ணின்றுமெனின்? இன்றும், ஞானத்தன்மை காரணமற்றதாமென்பதைப் பரிகரிக்கும்பொருட்டுத் தொடர் ந்தவதன்காரணம் உன்னுலின்றியமையா தூரையாடத்தக்கதா கலின். வன்னிக்கும் தூமவிசேடத்தின்கண்ணே சாதகத் தகைமைய துபோல் வினவக்கூடலின். ஆண்டுத் தீக்ஷிளப்பிய விசேடம் புகைக்கண்ணேகாணப்பெறவில்லையெனக் கூறுதொ முக; அதன் காணப்பெறுமைக்கு ஆராய்வில்லாமல் வேறு ஹேதுவாக்கப்பட்ட உள்ளடங்கியஜாதிகாணுமையானே தகுதி யிலாமையின் விகற்பிக்க முடியாமைபொருந்தலின்; வேறு ஹேதுவாலாக்கப்பட்ட விசேடந்தூமத்திற்குக் காணப்படுமா யின் அது விகற்பிக்கப்படுமென்னுஞ் சம்பாவனை நீக்கமுடியா மையின்.

440. ஞானத்தன்மை காரணமற்றதாவதிற் சங்கையுஞ் சமாதானமும்.

ஆன்மமனயோகம் தொடர்ந்தகாரணமாக ஞானஉற்பத்தி யின்கண்ணே யுளதாமெனின்? ஆகாதாம், ஆன்மமனயோகத்

தானே உண்டாவது ஞானமாயின் இச்சைமுதலியவையும் ஞானமெனவாகுமன்றே. அதிர்ஷ்டவிசேஷமேனும், ஆற்றல் வேற்றுமையேனும், ஞானத்தன்மைப் பொதுமையேனும், ஞானமுன்னின்மையேனும், ஆண்டுத்தொடர்ந்த காரணமெனக்கழறப்பெறுமாயின், அதனினையலிலும், வன்னிப்பிறழ்ச்சியிலுந் தூமத்திற்கு ஒருஜாதியுண்மைப் பிரயோஜகமாகச் சங்கிப்பான் கூடியதேயாம்.

441. கண்டதிருப்பக் காணுததைக்கற்பித்தலின் வினவிலக்கம்.

திருஷ்டம்பிறழின், அதிருஷ்டாதியானே ஏகஜாதியுண்மையினிதுகற்பித்தலாமெனின்? ஆகுக திருஷ்டத்திலங்கிச்சயம், ஈண்டும் பிறழ்ச்சிகாணப்படாதாம் என்பதன்கண்ணே நியாமகமிலாமையின் வினவப்படும். இவ்வாறுவினவப்பட்ட வுனக்கு ஓரிடத்துமனுமானமுண்டாகாதாம் பிரதிவாதி யாத்மாதியனுமானுதியில்லாமற் கதையின்கண்ணே மூயல்கை கூடாமையின் சுயம் தம்மாற்செய்யத்தக்கனவாய அனுமானுதிகளிலித்தகைய சங்கை மேவுதலின் அதுவேவியாகாதமாமெனின்? ஆகாதாம், புகைபோலவியத்தியினுனும் (வன்னியினுனும்). வன்னிகாரணவிசேடவனுமானத்திற் கிவ்வாறுகவே நல்லனுமானத்தன்மைவழக்காதலின். சாமக்கிரியின்சமத்தாமே பிரமையப்பிரமை விஷித்திரத்தன்மை கூடாமையின். சாதாரணதருமதரிசனவிசேட அதரிசனுதிகளிருந்தபோதிலும் சங்கையுமுதியாதிருப்பின் சாமக்கிரியிருந்தபோதிலும் காரியமுஷ்மாகாமையின் பிறனுக்குணர்வுதிப்பான் வசனுதிவடிவஞான சாமக்கிரியையுண்டாக்குவான் முயன்றவுனக்கும் தற்கிரியையியாகாதஞ்சமமாம்.

442. வியாகாதசாம்யாபாவ சங்கைபரிகாரங்கள்.

வியாகாதமேவிசேடமாதலின் அதன்காட்சியின்சங்கைச் சாமக்கிரியே யென்பக்கத்திலில்லையாகலின் யாங்ஙனவியாகா

தம் ஒப்பாதலெனின்? அன்றும், அதுவோ ஆண்டு ஆகாராதி காரணத்தான் ஆவதென அங்கீகரிக்கத்தக்கதாகாதாம், கூட விஷயமாய அதற்கு மேல்வழக்குண்மையின்; கூடத்தி (பொய்யி)னும் வேறுயதுசம்பாதகமாக அளவையான் அளக்கப்பட்டதற்கேயாமெனின்? அதற்குத்தருக்க அவசரத்தின்கண் ணீக்கப்படுந்தன்மையுண்மையின். ஆகலின் சவ்விவ்வியாகாத ரூபவிசேடதரிசனம் சங்கைப்பகையாய்ச் சாற்றப்படுமோ அஃதென்னே அளவையானேயாண்டேனும் உண்டாவதாக வுரைக்கத்தக்கதா? தருக்கத்தானே? முதலதேலோ, சங்கையினிருப்பும் அவ்வளவையானே கோடற்பாற்றும், சங்கையிருந்தவழிவியாகாதம் வருகின்றமையின்; சங்கையில்லாத வழியும் வியாகாதமாமேலாயினே, சங்கிப்பவனுக்குஞ் சங்கியாதவனுக்கும் வியாகாத ஒப்புத்துணியப்பெறுவதேயாம்; சங்கையின்மாட்டும் அஃதவையாகுகவே இத்துணையானேயென்? முன்னுண்டாயசங்கையைப்பற்றி நிலைபெற்ற வியாகாதரூபவிசேஷதரிசனத்தான் வேறுசங்கையுண்டாகாதாமெனின்? ஆகாதாம், வியாகாதமிருக்குங்கால் அதுபற்றுஞ்சங்கையினனே சங்கிக்கப்பட்டவியபிசாரத்தன்மையாம், அச்சங்கையுபரமத்தையுறினே அதைப்பற்றும் வியாகாதரூபவிசேஷமிலாமையின் வேறுசங்கையுண்டாயின் நீக்குவது யாதோவென்பது விளம்பத்தக்கதாம்.

443. வியாகாதமின்மையினங்கீகாரத்தால் விளைவிடைகள்.

அக்கால் வியாகாதவடிவவிசேடம் ஆகாதாகுழிகவே, ஆண்டதனுணர்வாதல் அதனலாக்கப்பட்ட சமக்காரமாதலேதையாகுமன்றே, விசேடவுணர்வதன் சமக்காரங்களும் விரோதிகளேயாம். சொரூபமாகவொருபாலும் விசேடத்தின் நிலைபேறு அவ்வாறுகாதாம்எனின்? என்னற்க, பற்றுக்கோடுள்ளளவுமாதல் முன்னிருந்தவிசேடத்தின்காட்சியாதல் அத

லாயசமக்காரமாதல்யாதோ அதற்கு அயற்சமயத்தும் அத னதுபிரதிகூல சமூசயப்பலகத்தகைமைபோல் சிஜீவுடைய தன்பாகபக்கத்திற் பரமாணுவின் பாகபக்கத்திற் பூர்வம் கறுப் பாகவுணரப்பெற்றுக் காலவேறுபாட்டில் உளவாயபாகமு டைய கும்பத்திற்கும், பரம்பரையாகவதைத்தொடங்கும் பர மாணுவிற்கும், பாகத்தாலாயரூபவிசேடமுடைமையில் ஐயம் நிகழாதொழியவேண்டும். சங்கையின்பால் வியாகாதம் ஆமே லாயின், சங்கையைப்பற்றிய விசேடரூப வியாகாததரிசனத் தான் சங்கையிலயற்சங்கையாகாதொழிக, பிறழ்ச்சியைப்பற் றியதாயினே பிறழ்ச்சியுளதேயாம், வியாகாதஆசிரயமாய விய பிசாரத்திற்கும் அளவைபாலளத்தலமைதலின்.

444. அநவஸ்தைப்பரிகார சங்கைப்பரிகாரம்.

ஆகாதிமூலபூத் வியாப்தியையுடையனவாம் அத்தர்க்கங் கள்எனின் ? என்னற்க, அம்மதிக்கு அளவையாலளக்கப்படுந் தன்மை துணியப்பெறுமையின்; தேகத்திலத்தகையதனதான் மமதிக்கும் அப்பிரமைத்தன்மையங்கீகரித்திருத்தலின், அநா தித்தகைமை துணியப்பெறுமையும் இருபாலும் ஒப்பாதலின்.

445. தருக்கத்தானே வியாகாத வுணர்வின்நீக்கம்.

இதன்கட்பிறழ்ச்சியாமெனச் சங்கிப்பின் வியாகாதமாம், என்னும் வடிவினதாயதருக்கத்தானும் வியாகாதவுணர்ச்சியுண் டாகாதாம்; வியாகாதத்தைப் புகலுந் தருக்கத்திற்கு மூலஞ் சிதிலமேலோ தருக்கப்போலித் தகைமைவந்துறுதலின். அத் தகையதிற்கும் வியாகாத சாதகத்தன்மையாமேலாயின் வியா காத அடைவுமொப்பாம்; தருக்கப்போலியானே உனக்கும் வியாகாத மடைவிப்பான். எளிதாகவே முடியும்.

446. தருக்கத்திற்கு வியாத்தி மூலமாயின் அநவத்தையாதல்.

இனித் தருக்கத்திற்கு மூலபூதமாக வியாத்தியங்கீகரிக்கப் படும், ஆண்டும் பிறழ்ச்சிச் சங்கையுளதாயவழி மீண்டும்

வரம்பின்றியோடலேயாம்; ஆண்டும் வியாகாத சம்பாதனமா மேன் மீண்டும் இன்னணம் எல்லைபில்லாமற் செல்லலேயாம்; "ஆகலினுழு மரும்பொரு ளிதன்கண் ணைக்கருஞ் சிலசில மாற்றி, யூகமினின்ன காதையே யினிதா யோதுவங் கேள்வி யாகாதம், ஏகலற் றிருப்பிற் சங்கையு மிருக்கு மிலையெனிற் சங்கைதிண் ணமதாற், சாகிகல் வரையா சங்கையாற் தருக்கஞ் சங்கையி னவதியெங் கேயோ"

447. வியாபிசார சங்கையினுனே யனுமானந் துஷ்டமாதல்.

பிறழ்ச்சியின்மையும் ஒன்றன்பரித்தியாக விலக்கத்தான் மற்றதன் சேர்க்கையாம், சமசமயதிருஷ்ட நஷ்டத்திலும் அதிருஷ்டம் சங்கிக்கப்படும் என்பர்.

448. வியாத்தியின் வேற்றிலக்கண கண்டனம்.

இயற்கையாய சம்பந்தம் வியாத்தியென்பன்பிறன், அவன் வினவத்தக்கவனுவன், எதன்து இயற்கையாயது, சம்பந்திகளினதா? அல்லது பிறிதினதா? கடையதாகாதாம், மாறுபாடுமருவுதலின்.

449. இயற்கைச் சத்தார்த்த விகற்பம்.

ஆதியில், யாது இயற்கையாயதன் சத்தார்த்தமென வினவல்வேண்டும், சம்பந்தியியற்கையைப்பற்றியதா? சம்பந்தியியற்கையயந்தா? சம்பந்தித்தன்மையாற் கூறும் வேட்கையாயியற்கையலற்றதா? சம்பந்தியியற்கைவியாப்பியமா? சம்பந்தியியற்கையினும் அயலொன்றால் ஆக்கப்படாததா? அயலாகவே யாதேனுமறையுமவாவா?

450. இயற்கையாய்தென்னுஞ் சத்தார்த்த நீக்கம்.

ஆதியதில், மண்ணுலாயதாந் தன்மைக்கும், இரும்பாற் போழ்தலாந் தன்மைக்கும் வியாத்தத்தன்மைவழக்காம். இரண்டாவதுபியையாதாம், அதிவியாத்தியினுனும் அவ்

வியாத்தியினுமென்க; அதனுனே மூன்றுவது முற்றுரு தாம்; நான்காவதும் நலப்படாதாம், வியாத்தி விளம்பமுடி யாமையானே வியாப்பியத்தகைமை விளம்பமுடியாமையின், சம்பந்தத்திற்கு வியாப்பியத்தன்மையேலோ ,சம்பந்திகளாய வியாபகங்கட்குச் சம்பந்த அதிகதேசகாலஞ் சம்பவித்தலி னுனே, ஒருசம்பந்தியின்காட்சியுற்றவழி மற்றதனனுமானப் பொருட்டு நியாமகத்தகைமைகூடாமையின்; ஐந்தாவதும் நைந்துபோம், ஆக்கப்படாதது என்பது பயக்கப்படாததென வாமேலாயின், சம்பந்தஞ் செய்யப்பெறுததென்னும் பக்கத் தில் அயலொன்றால் என்னுமடைவாளாபோம், செய்யப் பெறுததைச் சம்பந்தியியற்கையும் பயவாமையின். சம்பந்தஞ் செய்யப்பெறுவதென்னும் பக்கத்திற் சொரூப அசித்தியே யாம், சாமக்கிரியினது சர்வசம்பந்தமாதலின் முடிபினுங் கால தேய அதிருஷ்டாதிகளினுனும் அஃதுண்டாந்தன்மையையின் றியமையாமற் கூறவேண்டலின்; ஆறுவதுபக்கமுமழிந்தொழி யும், அதுநிகழ்த்தமுடியாமையின். இன்னணமே இக்கடை விகற்பத்தைவிகற்பித்துயாண்டு முபந்யசித்தத்தூடிக்கத்தக்க தாம்; குறைவாந்தன்மைச்சங்கை யச்சத்தானென்பதாம்.

451. வேறுவியாத்தி யிலக்கண கண்டனம்.

உபாதியற்றதாயசம்பந்தம் வியாத்தியென்பன்மற்றை யன், அவன் வினவத்தக்கவனுவன், எஃதிலாமலுபாதியற்ற தாதல் ஆமோ அவ்விவ்வுபாதியென்பது யாதுகாண்! துணி யப்படும் பொருளோடு கூடிநின்றுதுணிவிக்கும் பொருளோடு கூடிநில்லாதது உபாதியாம் "பரப்பரப்பற்றறபவைகடங்கட் குப், பரப்பொருதுணிபொருளவிஞ் பாவமேற், பரப்பொரு ளின்மையினவிஞ பாவியாம், பரப்பெதனின்மையிங் கஃது பாதியே", வியதிரேகமுகமாகவெதனின்மை அஃதுபாதியாம் எனச்சேர்ப்பிக்கும் இக்கவிக்கது முடிவானபொருளாம்; அதன்

றன்மபூதமாயவியாத்தியும், வெண்பளிங்குமணியிற் செம்பரு த்தம் புட்பத்தின் செவப்பேபோலச்சாதனமெனப்பட்ட திலி லங்குகின்றதெனக்கொண்டு இஃதுபாதியெனப்படும். அவ் விது "கட்டியல்களையலவர்காட்டிய, மட்டவியாத்திகண் மன் னிப்பிழைப்பவரும், திட்டமாயினுமேயவைதேர்தலா, லிட்ட மேயிலைசாத்தியத் தேற்றமே" எனக்கூறப்பட்டுளதாம். அவ் வுபாதியும் நிச்சிதம்போன்றுசங்கிதமும் என (இருவகையாக) ஆம். அதன்கண் "எதுவரையிருப்பதாகவேது தான்விபக் கந்தன்னிற், சதமதினெரு கூறுளஞ்சங்கைய துண்டாங்கண் டூர், அதுவரையேதுவிற்கிங்கருந்துணி பொருளாயாய்ந்தே, திதமுறத்தேற்றுமாற்ற நிகழ்வதெங்குண்டாமன்றே" என்று மிஃதியம்பப்பட்டுளதா மெனின் ?

452. உபாதிகண்டனம்.

துணிபொருளொடுநிலவும் பக்கமயற்றன்மையின் கண் ணும் வழக்கார்தலின், அதனினும்வேறுயென்பதுமாமெனின் ? ஆகாதாம், பாதத்தாற்கருதப்பட்ட அதற்கு அவ்வியாப்திநேர் தலின் ; அன்றியினே, நிருபாதி சம்பந்தத்தன்மையிற்பாதம சித்தமாதலின், பாதத்தினுலேனும் உபாதிகருதத்தக்கதாம், அன்னியத்தாலேனும் எனயாதொரு சிறப்புமில்லையாம்; இதன் பொருட்டாகவும் சிறப்பிக்கப்பாற்றுமெனின் ? என்னற்க, எனினும்துணிவிக்கும் பொருளொடு நிகழாமையோடுமென அதன்வியாத்தி துணியாதவழித்துணியமுடியாதாம், இங்ஙனம் துணிபொருளொடு நிகழ்வதுமென்பதுமாம்.

453. சக்கரகாபத்திபரிகார சங்கையின் பங்கம்.

காணப்பிறழ்ச்சித்துணி பொருட்டன்மை துணிபொரு ளொடு நிகழுந்தன்மையாம் எனநினைக்கின்றனைகொல் ! நினை யற்க, வத்துகதியினனே பிறழ்ச்சியையுடைய துணிபொருட் கும் ஆராய்தலின் முன்னர்க்காணதபிறழ்ச்சித்துணி பொருட்

டன்மை சம்பவித்தலானே அதற்குமுபாதித்தன்மையினடை வாதலின். காணப்பெறமாட்டாதெனவுங் காட்டிவிடமுடியா தாம். வியாத்திகவருங்காலையிலோ துணிபொருட்டன்மை யின்மையானே அதன்பிறழ்ச்சியின்மையாங்ஙனந்துணியமுடி வதாகும்? துணிபொருள் வியாபகமவாவியதாமெனின்! ஆகா தாம், வியாத்தியறியப்பெறுதவழி வியாபகப்பொருள்விளங் காமையின்; சம்பவித்தவியாபகபாவவியாபகம் வாவியதா மெனின்? என்னற்க, வியாபகத்தை விளம்பாதிருப்ப எவ்வடி வத்தானே சம்பாவனைதானியற்றல் கூடும்? இனித்துணிபொ ருள் வியாபகமென்பதேகவிஞம் அஞ்ஞான்று துணிபொருட் டன்மையிலதேனும் துணிவுபெறுத்துவான்றகுதியைச்சாற்ற அவாவுண்மையின் எனின்? ஆகாதாம், இதுவேதுணிவுபெறு த்தத்தக்கது இஃதன்று எனயாங்ஙனங்கொல் லறியத்தக்கதா தல்? வியாபகத்தன்மையான் என வியம்பவேலாமையின். துணிவிக்கும் பொருளொடு நிகழாமையாண்டுந் துணிவான்மு டியாதாம், அவன்கரியன், மைத்திரன்மைந்தனந்தன்மையின் என்புழிச்சாகாதி யாகாரபரிணமபரம்பரையின்மை மைத்திர மைந்தன்மாட் டுணர்தலரிதினு மமையாமையின்.

454. ஐயுற்றவுபாதித்தன்மை நீக்கம்.

யாண்டுக்கூறிய இலக்கணத்திற்குத் துணிபாய அளவை யுளதோ ஆணடுத்துணிவுற்றவுபாதித்தன்மையாம் பிறவிடத் தியலுற்றவுபாதித்தன்மையாம், மைத்திரமகன்மை வியாப்பிய சாகாதியாகாரபரிணம பரம்பரையாய் நிலைபெறுகவென்பத தன்கண்ணே நியாமகமின்மையின் எனின்? என்னுதொழிக, மைத்திரமகன்மையாயவேதுவினுனே அதனையுந்துணியில் அச்சங்கையையுமறுப்பா னுற்றலின்மையின். ஆண்டும் அவ் வச்சாமக்கிரி யெனவுபாதியபரம்பரை உரைப்பினே அதனை யும் மைத்திரமகன்மையானே துணிதல்புரியமுடியுமாதலின்.

455. அநவத்தையகற்றல்.

இன்னணமே லெல்லையில்லாமற் செல்லலாமேயெனின் ? என்னற்க, உபாதியுபந்யாசத்திலே வரம்பின்றியோடல்வாராத தெங்ஙனம் ? சாத்தியசாமக்கிரியான் உபாதித்தன்மையேற்புகையுமானப் பொதுவாம், இவ்வாறுகச் சாத்தியத்திற் சாமக்கிரியுபாதித்தன்மை யகற்றற்பொருட்டும் இலக்கணஞ் சிறப்பிக்கத்தக்கதாம் ; கருமைமுதலியவற்றைத்துணியுங்காற் சாகாதியாகாரபரிணமபரம்பரை முதலியவற்றிற்கும், அதைத் துணியுங்காற்கருமை முதலியவற்றிற்கும் உபாதித்தன்மை யுண்டாதலான் உபாதியுந்தான்றுணிவான் எங்ஙனமேயுமா லோவெனின் ? இன்ணமியம்பற்க, தனித்தனியிரண்டையும் மைத்திரமகன்மை முதலியவற்றுனே தனிவுழிதுணிவிக்கும் பொருளொடு நிகழாமையைச் சங்கிப்பான்முடியாமையின் ; மாறுயினே, கருத்தாவுடைமையைத் துணிவுழி அதிட்டம் பயந்தமையும், அதிட்டம்பயந்தபான்முையின் மாட்டும் கருத் தாவுடைமையும், உபாதியாமெனவிரண்டுந் துணியப்பெறு வரம் ; இவ்வாறே, மதிபொதிவாயிலாந்தன்மையின் முயல் வுறுவாயிலாந்தன்மையும், முயல்வுறுவாயிலாந்தன்மையின் மதி பொதிவாயிலாந்தன்மையும் ; இங்ஙனமே, வன்னியுடைமை யினும் காஷ்டவன்னியுடைமையும் அதன்கண்ணே வன்னி யுடைமையும் உபாதியாம்என்பதன்கண்ணும் எல்லாஅனு மானமுமே யிடர்ப்பட்டுவாடும்.

456. சர்வஞ்ஞ நாராயண மதநீக்கம்.

இதனுனே, சாத்தியசாதன சம்பந்தப்பொருட்டு வியாப கத்தகைமை சாத்தியவியாபகத்தகைமை யிட்டமாமென்பதும் நிராகரிக்கப்பட்டதாம்.

457. நிச்சிதவுபாதியின்கண்ணும் சாதனஅவ்வியாபகத் தகைமை கவரமுடியாமை

உபாதி துணியப்படுமிடத்தினும் புலப்படா வுபாதிவிட யத்தில் அதனின்மைக்குச்சாதன அவ்வியாத்தியின்பொருட் டுக் கருதப்படுவதாதலின்கண் ணுபாதியுடையதாகச் செய்யுஞ்

சாதனத்தானே சற்பிரதிபக்கங்குயிற்றுவான் கூடலின்; அங்ஙனமாயின் ஆண்டுச் சங்கிதவுபாதித்தன்மையே தடையற்றதாக நிலைபெறுவதாகும் எனின்? ஹேமந்த! இங்ஙன நியதமியம்புபவனுக்கேவலம் வெட்கத்தையே வெற்றிகொண்டவனுகின்றனை, பிரதிவாதியையன்று; அங்ஙனமன்றே:—அங்கீகரித்தநிச்சிதவுபாதிபாவத்திற் சங்கிதவுபாதித்தன்மைவிழுவேயனுகூலமெனநினைபவர் வெட்கம் வெற்றிகொண்டநினையலாமல் வேறுயாவருளர்? ஒருபால் நிச்சிதஉபாதி யங்கீகரியாதவழி அச்சங்கையாற்றமுடியாதாம். யாண்டுக்காட்சியானேயுபாதிநிச்சயமாமோ அதுவே அதன்றரிசனவிடமாகவாமெனின்? என்னற்க, பொறிச்சம்பந்தம் பாதிக்கப்படவே அதன் ஜாதியுற்ற பொறிக்குவிடயமாகாததை அப்பிரயோஜகமாக்குமேதுவினுனே சாதிக்கக்கூடலின். யாது ஓரிடத்தில் ஒரு ஜாதியுற்ற பொறியதார்மோ அஃதயலிடத்திற் பொறியதாதலைப் பாதிக்கப்பெற்றவழி ஹேதுவின்வலுவாற் பொறிக்கெட்டாததெனச் சாதிக்கமுடியாதாமெனச் சாற்றற்க; சடரவனலாதிபாகங்காண்டலின். துணிவிக்கும் பொருளொடுநிகழாமையுடன் றுணிபொருளொடு நிகழுதலென்பதும், சாகாதியாகாரபரிணாம பரம்பரையாற்றுணியப்பெற்றதை வியாபியாதென அவ்வியாபகத்தன்மைத் தோடமுற்றதாம். சாகாதித்தன்மையென்பது யாதேனுமொன்றன்றும், யாதுதுணிபொருளே வியாபிக்கலாமோ.

458. சாகாதித்தன்மைக்குத் தோடர்பிருப்பினும் தோடமாம்.

உளதாகுகதான் எங்ஙனமேனும் அங்ஙனமாயினும், கருமையை வியாபிக்கமாட்டாதாம், இந்திரநீல சிலாதிக்கருமை ஆகாரம் பயந்ததாகாமையின்; காயக்கருமை துணிபொருள் இது அதைத்தான் வியாபிப்பதே யாகுமெனின்? ஆகாதாம். வியாத்தியின்கண்ணேயுபாதி யோதவேண்டலின், புருடக்கரு

மையானே வியாத்தியின்றும், ஹேதுபக்கதருமமாகவிணும் றுன் சாத்தியம்பக்கதருமமாகச் சித்திக்கின்றதேயன்றி வியாத்தியானன்றும், மாறுயிலை, விலக்குவதாய புருடபதத்திற்கு அடையாகாமை யடைவுறுதலின்; பரம்பரைச்சம்பந்திமை முதலிய பூச்சுக்கருமை விலக்கற்பொருட்டேலோ, சையுக்தமான கரியன்கட்சமவேதித்த பரம்பரைச்சம்பந்தியின் கருமையை விலக்கலியாங்ஙனமாம்? சாத்தியசாதனசம்பந்தத்திற் பிறழ்ச்சிகாணுமையே சாத்திய வியாபகத்தன்மை யாகாதாம், உருவத்தைநேரே காணுங்கரண்டத்தன்மை முதலியவற்றுனே தேஜசாத்தன்மைகளைச் சாதிக்குங்கால் வெளிப்பட்டவுருவமுடைமை முதலியவை யுபாதிகளாகாமலேகுக. சிறப்பாகப் புகுத்தப்பட்ட சாதனத்தானும் கேவலசாத்தியவியாபகம் விலக்கப்படுவதாமேலாயினை, பிறழ்ச்சிச்சங்கையைக் கவருமாற்றலுற்றவதற்கு முபாதித்தகைமையாகாதாம். இனிவிலக்கப்படுவது யாதொன்று மின்றுமாயின், சிறப்புத்தன்மையசித்தியேயாம், பிரயோஜன மாத்திரையானே சிறப்பான்ன அருத்தமுடையதாகாதாம். மற்றே, சிறிதுவிலக்குவதானு மென்பதாம், ஆகாதாயினை, கருத்தாவுடைய தாகாததாந்தன்மையிற் சரீரிசனியாமைபோலும் வெளிப்படையாக அசித்தியின்கண் முடிவுபேறுடையதாகுமென்க.

459. கேவலவியதிரேகி ஹேதுஉபாதிகளின் கண்ணே யிலக்கண அவ்வியாத்தி.

மேலும், வாழுங்காயம், மண்முதலிய எட்டுப்பொருள்களினுமயலாய, அநேகம்பொருள்களையுடையது உயிர்ப்புமுதலியவற்றே டுறுந்தன்மையதாதலின் என்பதாகியின்கண்ணுள்ள வியதிரேகிப்போலியாய பக்கதருமவேதுவின்மாட்டு இவ்வுபாதியிலக்கணம் யாங்ஙனம் நிலைபெறுத்தப்படும்? போலி வியதிரேகியனுமான வடிவத்திலெத்தணிபொருளோ அஃது

பாதியானே வியாத்தமென வங்கீகரிப்பதில்லையாம், பிறர்கரு தியவதற்குச் சிலபாற்சித்தியமைதலின். வெதிரேகங்களின் வியாத்தியில் உபாதியாமேலாயின், வெதிரேகத்திலியாது வியாப்பியமோ அதனது வியாப்பியமாக வுபாதியைய வசிய மெண்ணவேண்டும், அன்றுயினே, உபாதியி னன்வயமாகத் துணிபொருளன்வய அடைவாமெனவுபாதி வெதிரேக வியாத் தியவசியமாதலே யங்கீகரிக்கவேண்டலின் உபாதிக்கெதுவியா பகமோ அதனபாவம் உபாதியபாவத்தின் வியாப்பியமாக வெண்ணத்தக்கதாமெனப் பரசாத்தியவடைவாம் சமலிலாவி யாத்தியுடையவற்றிற்கு அன்னுவயவியாத்தியிலுள்ள சாத் திய சாதன பாவவேறுபாடாக வெதிரேகமாம் வியாத்தியினு னே யாகலாம், ஆயினயற்றேடமேயன்றே வறைந்ததாகுமெ னவறையற்க; ஹேதுவிற்குப் பக்கதருமத் தன்மைத்திதியில் வியாத்தி விலகும்பொருட்டின்னுபாதி யுடன்பாடுரைக்கப் படுதலின்.

460. வியாத்திசித்தியை யங்கீகரித்துந் தூடித்தல்.

உளதாகுகதான் யாதேனுமொன்று வியாத்தியாக, அஃ தளதாகவே யனுமிதியுளதாகலின் அதற்கு மனுமிதிக்கும் வியாத்தி யங்கீகரிக்கத்தக்கதாம், அதனுனேதற்பற்றுதலாம், அவை வேறுயினே தொடர்பின்மை துணிபின்மைத் தோடங் களாம்.

461. பக்கதருமத்தன்மைக் கண்டனம்.

வியாத்திபக்க தருமங்களைக்கொண்டு அனுமிதியை புண் டாக்குதலென்பதன்றே விளம்புதல், இப்பக்கமென்பது யா தோ, எதன்றன்மத்தன்மையானே பக்கதன்மத் தன்மையா மோ; சாதிப்பான் வேட்ட தருமமுடைய தருமியாமெனின்? ஆகாதாம், சாதிப்பான் விரும்பியதும், விளம்புவான்வேட்கை யா? அறிவானவாவா? ஆதியதேற் றற்பொருட்டாமனுமிதியுதி

யாதென்னும் வழக்காம்; மற்றதேலோ, தீநாற்றத்தாலனுமிக் கத்தக்கதியவிரதவிடய தற்பொருட்டனுமிதியுதியாதென்னும் வழக்காம்.

462. இரண்டாவது விகற்பநீக்கம்.

துணியப்பெறுத தருமத்தையுடைய தருமிபக்கமென் பதுமாகாதாம், ஹேதுவுடையதாகவேனும் துணிவிலதேலா யின் அனுமான உதயகாரணத்தகைமை யடைவுறுமையின். துணிவின்மையினனே துணியப்பெறுததருமத்தன்மைதுதை யாமையின்.

463. இரண்டாவது கற்பமகற்றல்.

துணியப்பெறுதஹேதுவிடயதருமத்தையுடைய தருமி பக்கமென்பது மாகாதாம், அங்ஙனமன்றே:—ஏதனற்றுணி யப்பெறுததருமம்; ஆண்டுஅனுமானப் பிரயோகமாற்றுவனு ஞகாதாம், தானேயுணராதபோது பிறன்பொருட்டுப் பிரயோ கிக்கமுடியாமையின். பிரதிவாதியினனெனின்? ஆகாதாம், பிரதிவாதி விசித்தபொருளில் வாதியாக வொன்றற்கொன்று வித்தையின்மேன்மை தாழ்மைகாட்டற்பொருட்டு அனுமா னங்காண்டலின்.

464. வேறுவகையாக விகற்பித்துத்தோடம்.

அவ்வாறு துணியப்பெறுததும், ஒருசிறிதுஹேதுவிடய தருமகோசரமா? வாதிபிரயோகிக்கத்தக்க ஹேதுவிடயகோச ரமா? ஆண்டாதியதாகாதாம், அனலுடைமைநிச்சயதசையின் கண்ணும் அவ்வவ் வேதுவிடய மிகமிகவயற்றருமங்க ளுணியப் பெறுமையின் புகையைக்குறித்து மலைக்குப்பக்கத்தன்மை வழக்காதலின்; இரண்டாவதுமேலாதாம், ஆயினுமாண்டுவழக் காதலின், அவ்வேதுக்கட்தும் வாதியாற்பிரயோகிக்கப்பட்ட தாந்தன்மையுண்மையின், ஒன்றைமற்றொன்று பற்றுந்தோடத் தானுமென்க; பக்கதருமத்தன்மையானே ஹேதுத்தகைமை

நிரூபணத்தான், வியாத்தபக்கதருமத்தன்மைக்கு ஹேதுத் தன்மையுண்மையின், ஹேதுவினுனே பக்கநிரூபணத்தான், தற்பொருட்டனுமானத்திலோ ஹேதுவிற்குப் பிரயோகிக்கப் பட்டதாந் தன்மையின்மையின், பக்கமின்மையினுனே அனு மானமுதயமாகாதென்னும் வழக்காதலின், விருத்தஹேதுவின் கண்ணே பக்கத்திற்குப் போலித்தகைமை வழக்காதலின் (பக்கதருமத்தன்மையின்மை வழக்காதலின்), ஆண்டுத் தணி பொருட்கு அவ்வேதுவிடயத்தன்மையின்மையின், ஹேது விற்கே தணிபொருண்மாறுய வியாத்தியினுனே தட்டத் தன்மையுண்மையின்.

465. தூடணத்தைத் தோடர்த்தல்.

இதனுனே ஐயுற்ற தணிபொருட்டருமமுடைய தரு மிபக்கமாம், தணிபொருட்டன்மையும் தற்புரன்பொருட்டனு மானப் பொதுவாக வுண்டாக்கப்பட்ட வுணர்வுத்தன்மையா மென நீக்கப்பட்டது.

466. பக்கதருமத்தன்மை நீக்கம்.

உளதாகுக தான் ஏதாவதொன்று பக்கமாக, இப்பக்க தருமத்தன்மையென்பதுயாதாம்? பக்கத்தைப்பற்றியிருக்கும் பான்மையெனின்? ஆகாதாம், நையாயிகாதியர்பொருட்டுப் பிரமேயத்தன்மை ஹேதுவாகாதென்னும் வழக்காதலின், விடயவிடயிபாவத்திற்கு ஞேயஞானசொரூபத்தினுமயலாந் தகைமையங்கீகரியாமையின், அவற்றிற்கும் ஞேயத்தைப் பற்றியிருக்குந் தன்மை கூடாமையின்.

467. இரண்டாவது விகற்பநீக்கம்.

வியாத்தியின் வீரத்தாற் பொதுவாக வியாபகத்தைக் கவர முயன்ற தோற்றத்தைக்கொண்டு கேவலம் சிறப்பை முடிவுபெறத்துவான் வியாப்பியத்தினுற்றல் ஆஃதாமெனின்? ஆகாதாம், சாமானியவிடயமாயவதுபொருந்தாமையினசித்தத்

தான் வியாத்தியோலும் பொருந்துதலின், பொருந்தாமை யுடையதாந் தன்மையேல் வியாத்தியனுப் பிரவேசமாதலின், அதிகவிடயவவாவாந் தன்மையேற் பொறுத்து வியாபாரம் பொருந்துதலின் அயலளவையாந் தன்மையடைவுறுதலினு னேனும்; விசேடவிடயத்திற்கும் பொருந்தாமையேலோ நிலை பேறின்றென்னும் வழக்காதலின். பக்கதருமத்தன்மையானே சாத்தியவியக்கிபேதஞ் சித்திக்குமேலாயின் அனுமித்ததனைக் காட்சியானே கண்டு புருடசத்தத்தானே புருடனையனுமித் துக் காட்சியானே இருபுருடத் தரிசனமுறவே அதன் சிறப் பையப்பாடிலாதவனுகவேண்டும். முன்னர்ச் சிறப்பின்மரிசன மிலாமையின் அவ்வாறுமெனின்? ஆகாதாம். பின்னராண் டது தரிசிக்கப்படுதலின் ஐயப்படவேண்டியதின்றென்பதாம்.

468. உபமான கண்டனம்.

உபமானமும் என்னுரைக்கப்பெறும், ஒப்புமையுணர்வுப மானமென்பர் சிலர், அஃதாகாதாம், மிருகியின்மாட்டும் வழக் காதலின், அனுபவமெனவுறையினும் ஒப்பநிற்பனவிலை யென்னும் பொறிபயந்ததிலும் வழக்காதலின்; அதுவும், ஆமா ஆவினையொக்கும் ஆமாத்தன்மையான் அயலாமா போலும், என்னுமனுமானத்திற்கும் அத்தகைமையடைவுறு தலின்; இங்ஙனம் ஆத்தன்மொழியிற் பிறந்ததிலுமாம்.

469. விகற்பமிரண்டன் றீக்கம்.

அன்றியும், இஃதுபமிதியிலக்கணமா? உபமிதிகரணவிலக் கணமா? ஆதியதாகாதாம், ஒப்புமைக்குபமேயத்தன்மையடை வுறுதலின், ஒப்பாவதிலோ வுபமேய விவகாரமுளதாம், மதி யுபமேயம் வதனமென்பதாதியாம்; ஒப்புணர்வுஅஃதாமெனின்? ஆகாதாம், அக்கமுதலிய காரணங்கள் அமையாதவழி அத னுதாகரணந் தணியப்பெறுமையின், இரண்டாவதுமினிதன் றும், வேறுபிரமாணங்களின் வியாபாரமமையப்பெறுத பலம்

பயக்கும் பான்மையானே யெல்லா வொப்புமை யுணர்விற்கு மே காண்பிப்பான் கூடாமையின்.

470. ஒப்புமைக்கு விசேஷணத் தன்மையேனும் உப லக்கணத் தன்மையேனும் உரைக்கிற்றேடம்.

ஒப்புமை யொன்றுய்த் தொடர்ந்ததா யிலதாம்; வதன வொப்புமைக்கும் அத்த வொப்புமைக்கும் வேற்றுமைப் பட்டே புலப்பாடு காண்டலின்; ஒப்புமை யுருவத் தன்மை யவற்றின் மாட்டுந் தொடர்புற்றதே யாமெனத் தோட மின்று மென்னற்க; அங்ஙனமன்றே:— ஒப்புமையோடு கூட வொப் புமையில் அநேகத்திருப்புண்மை முதலியவற்றே யொப்பு மை யுருவத்தன்மைப் பற்றுக்கோடாயவழி யொப்புமை யுரு வத்தன்மைக்குப் பற்றுக்கோடாத வுடன்பட்டவழி யொன் றை யொன்று பற்றுதலாம். உடன்படாவிடினே, தொடர் பின்மையாம். அவற்றி னெற்றுமையை யுடன்படா விடினே பிறவிடத்தும் அவ்வாறடைவாம், மேலும் வேற்றுமைப் புலப் பாட்டிற்கும் அயலளவைத் தகைமை யிவ்வாறும், ஒப்பாத லின். இங்ஙனமே யங்கீகரிக்கினே எண்ணியவளவை மிகும் வழக்காதல், எண்ணப்பட்டவைகளின் மாட்டே யொப்புமை யுணர்விற்கும் உள்ளடக்க மாதலா மென்பதாம்.

471. மீமாஞ்சகன் மிழற்றிய வுபமான விலக்கண நீக்கம்.

புலப்படாததற்குப் புலப்படுவதோடு ஒப்புமையுணர்வு உபமானமென்பதாகவு மாகாதாம், ஆத்தனது தொடர்மொழி யானும் அன்னணமறிவாதலின்.

472. மீமாஞ்சகன் விளம்பிய இலக்கண தூடணம்.

யாண்டவ்வியாபார மின்றுமோ வெனின்? அன்றும் அதுவும் இதுவும் அபின்னம் என்பதொப்ப அதுவு மிது வும் ஒப்புறுவன வென முன் : றேற்றியதற்குத் தோற்றுவ

தோடு பொறியாலாய வொப்புமைப் புலப்பாட்டின் மாட்டும் வழக்காதலின். பொறியொற்றுமை யற்றதற்கா மெனின்? என்னற்க, கண்கூடாகக் கோமரை யொப்புமையைக் கண்டு, அக்கோவும் மரையோடொக்கும் கோப்பாண்மையான் இஃதொப்ப வென்னு மனுமிதியின் பாலும் வழக்காதலின். குறியாற் பெறுமையு மெனின்? என்னற்க, என்னை, இன்னணமேல், காட்சி கருதலுரைகளாற் கிளம்பாமையோ டுற்றதாயென வுரைத்தன்றேவாம், ஆகவே, சிறப்பே யாற்றலுற்றதாம், உறவே, புலப்படாததற்கு என்பதாதி வாளாவன்றே வீழும். அயன்மொழி கொள்ளத் தக்கதாகாததேயாமெனின்? ஆகாதாம், அருத்தாபத்திக் கவசிய மடைவுண்மையின். அதனேடும் இதனது ஒப்புமைக்கு இதனேடு அதனது ஒப்புமையிலாது பொருந்தாமை யுண்மையின், மாறுயின், ஒவ்வாமையா லுணர்வி னுற்பத்தி யுண்டாக்குவதாக அயலளவை அடைவுறு நிற்கும்; ஆதலின் இது குறுகியது என்னும் புலப்பாட்டினுக்கு இதனினும் அது நீண்டது என்பதூஉம் அயலாற்றல் என்ன பிரமையாம்? பொருளடைவை அயலளவை யென அவாவாதவனுனும் இப்பொருளடைவு கருதலி லேனும் அடக்கத் தக்கதாகும், தனியளவையாகவேனு மாற்றத்தக்கதாகும்.

473. அயலுபமான இலக்கண மகற்றல்.

இதனனே, புலப்படாத ஆமா அயலாவின் சாமியத்திற் குத் திட்டாந்தங் கூடாமையானே யனுபமானங் கூடாமையின் இவ்வாமாவோடு மொப்பாயது அவ்வாவென்னும் மிதி உபமிதியா மென்பதும் நூக்கப்பட்டது; அதனேடு இதனைப்புமைக்கு இதனேடு அதனைப்புமையிலாது பொருந்தாமையே தணியப்பெற்ற தென்க.

474. உதயனருளுற்றிய இலக்கண நீக்கம்.

அறியப்பெறுத ஒற்றுமையையுடைய பெயரோடு கூட்டப் படிக்கப்பட்ட தொடர்மொழிப் பொருளின், பெயருடைய தன்கண் ணனுசந்தானம் உபமானமென்பதும் ஏலாதாம்; மறந்த வொற்றுமை எதனுனே அதற்குக் கூறிய வகையாய வுபமிதி வியாபியாமையின். மறக்கப்பெற்ற வொற்றுமை யென அறையத்தக்க தெனின்? ஆகாதாம், அனுபவிக்கப் பட்டு மரிக்கப்பட்ட டயற்சமயத்தின் மறக்கப்பெற்ற வொற்று மையின் அவ்வியத்தி வருதலின். மரிக்கப்படாத வெனினுே? அன்றும் ஒரொருகான் மரிக்கப்படாமை ஆண்டும் கூடலின். எஞ்ஞான்றும் மரிக்கப்படாமை எங்குங் கூடாமையின் உப மிதியின் முற்போதெனின்? உபமிதி யிலக்கியப்படு மேலாயின் ஆகுகவேதானிது. அதன்பொருட்டே யன்றே இந்நினது கூக்குரல்.

475. ஒற்றுமையின் அறியப்பெறுமையின் விகற்ப நீக்கம்.

மேலும், யாவராலும் அறியப்பெறுத வொற்றுமைத் தன்மைக்குப் பிரகிருதத்தினும் அசித்தமாதலின். எவனுனே னும் அறியப்பெறுத வொற்றுமைத் தகைமைக்குத் தொடர் மொழி பயந்ததினும் கூடலின். உபமாதாவான் என்பதும் முன்போல் நீக்கத்தக்கதாம். எப்பிரமிதிக்கு எப்பிரமாதா வான் எனக் கூறினும் தொடர்ந்த வடிவ மிலாமையின்; வியத் தியில் வீழ்தலான் இலக்கணத் தொடர்பின்மை தொடர்த லின் என்க.

476. பேயர் என்னும் விசேஷண நீக்கம்.

பெயரென்பதும் ஆகுலமாம், ஆவிற் கொப்பாய ஆமாப் பெரும்பாலும் கானனத்தின் மிகவும் காணப்படும் என்னுந் தொடர்மொழியைக்கேட்டுக் கானனபதவொற்றுமையை யறி

யாதவனும், ஆமாபத வொற்றுமையை யறிந்தவனும், ஆயவனுக்குப் பெயர் பெயருடையதன் ஒற்றுமை யுணர்வின் பயனுயவழி இத்தகைய வுணர்வின்மாட்டுச் செல்கையானே அதிவியாத்தி வருதலின். இலாமலேனும் பெரும்பான்மைச் சத்தம் கூறியவதனனுசந்தானத்தில் வழக்காம். ஆண்டுக் கானனப் பெயர் பெயருடையதன் ஒற்றுமைத் துணிபிலும் பிறண்டுபோன்றே வேறு பதத்தோ டொக்கப் படிக்கப்பட்டதினின்றும் எழுந்த வேறுராற்றுற் பொருந்தாமைக்குப் பிரமாணத்தன்மை யுண்மையின், உபமானத்திற் கின்றும்; உபமேயப் பெயரோடொக்கப் படிக்கப்பட்ட வென வடைகொடுக்கினே நீக்கம் முன்னிகழ்த்தியதேயாம்.

477. தொடர்மொழிப் பொருள் என்னும் விசேஷண நீக்கம்.

தொடர்மொழிப் பொருள் என்பதும் அத்தகைத்தேயாம்; உணரும்போழ்து உபதேசித்த வாக்கியத்துட்பட்ட கானனுதி பதார்த்தங்களே மறந்தானுக்கு அவ்வாறுய வுணர்வின் அவ்வியாத்தி வருதலின். தொடர்மொழி யொருசிறுபாகத்தினுக்கும் தொடர் மொழித்தன்மையானே விளம்ப விழைவுண்மையேல் ஒப்பாயது ஆமாவென்ப தாதியை மரித்தானுக்கும் உணர்வில் வழக்குண்டாதலின் புலப்பா டுண்டாதற்பொருட்டுச் சாதகபூதமாக எத்துணையோ அத்துணைத் தொடர்மொழி விளம்ப விழைந்ததாம் எனின்? ஆகாதாம்; உள்ளடங்கிய வன அதிகரண அத்தகைய வுணர்வின் பொருட்டு அதற்கும் சாதகத்தன்மை யுண்மையின். உபமிதியின் பொருட்டென்பதோ முன்போன்றே நீக்கப்படும். எத்துணைப் பெயர் பெயருடையதன் புத்தி சாதனம் ஆமோ அத்துணையறையும் அவாவாமெனின்? ஆகாதாம், இலக்கணத்தோடு நிகழும் பெயரினுபதேசத் தொடர்மொழிப்பொருளனுசந்தான்த்தில் அதிவியாத்தி யாதலின்.

478. அயலதிவியாத்தி.

மேலும், தருக்காநுசந்தான மற்றவனுக்கு இவ்வகை யாய அநுசந்தான மிருந்தபோதினும் ஒப்புமையே ஆமா பதப்பிரவிருத்தி நிமித்தம் என்பதாக மிதிபய்ஞக வுண்டாங் கால், அப்பிரமையின் காரணமாய வதற்கும் உபமானத் தன் மையான துண்டாம். பிரமையாம் பயனையுடையது என் னும் அடையோடும் பக்கத்தினும், ஆராயப்பட்ட தன்வடி வத்திற்கு விவகாரியத்தன்மை அனுமிதி யுண்டாக்கலானும் இத்தன்கைய அனுசந்தானம் உபமானமாம். அவ்வியாத்த விஷயப் பிரமையைப் பலமாகவுடையதெனச் சிறப்பிக்கத் தக்கதாமெனின்? ஆகாதாம், வத்துகதியால் அவ்வியாத்தத் தன்மைக்கு உபமேயத்தின் கண்ணும் இன்மை யுண்மையின். வியாத்தத் தன்மையினே அறியப்பெறுதற்கு எனச்செயி னே, யதின்பொருட்டுத் தற்குறியதனேடு வியாத்தத் தன் மையானே யறியப்பெற்ற வுபமிதிகரணமும் வியாபியா தாத லின். உபமேயத்தோடு வியாத்தத் தன்மையானே அறியப் பெறுப் பான்மையைக் கூறியபோதினும் அனுமானத்தில் வழக்காங்கே நிலைபெறும். அனுபேயத்தோடு எனவாற்றினும் அஃதகலாமையின் அவ்வியாத்தி யாங்கே நிலைபெறும்.

479. எஞ்சிய கற்ப வினு விலக்கம்.

பெயர் பெயருடையதன் ஒற்றுமைப் பிரமையின் கர ணம் ஆமெனின்? ஆகாதாம், அவ்வாறுந் தன்மை யாகாமை யின், அருத்தாபத்தி முதலியவற்றினே அதன்சித்தியைமேற் கூறப்போதலின். அனுமிதியல்லாததைப் பயக்கும் அத்த கைய பிரதிசந்தானம் உபமானமாமெனின்? ஆகாதாம், இப் பொதுமை யுடையதற்கு அனுமிதியைப் பயக்குந் தன்மை யுண்மையின்; வியத்தி யபேக்ஷையின் கண்ணே பயக்கும் பான்மைக்குச் சாமானியாகார முடிவு பேறுடைமையின் நித்

தியம் வியத்தியின்கண்ணே சம்பவியாமையானும் தொடர்ந்து தோற்றுமையானும் பொருந்தாமை யுண்மையின் என்ப தாம்.

480. சம்பந்தப்பிரமைக் குபமானபலத் தன்மையேயாதல்.

மேலும், ஆவொப்புமைவிட்டு ஆமாத்தன்மை பொது மையின்கண் ஆமாசத்தார்த்தத் தன்மைப் புலப்பாடு, கற்ப னாகவுமெனப் பெயரிய தருக்கம் நீக்கியாகாதாம் என வதன் உபந்யாசம் திதிபெற்றவழி ஆண்டு ஆமாத்தன்மைக்கு ஆமாப் பதவாச்சியத்தன்மைப் பிரமிதியிது அனுமானத்தாற் பெறப் படுவதெனவே யேன் அங்கீகரிக்கலாகாது? பிரயோகமுஞ் சம்பவிக்கின்றதே யன்றே:—விப்பிரதிபத்தி விடயம், ஆமா சத்தப்பிரவிருத்தி நிமித்தம், அவ்வாறுந்தன்மையின் மாட் டுத் தருக்கத்தா லுணர்த்தப்பட்ட இன்மையுடைமையதா தலின், எஃதிவ்வாறுகாதோ அஃதிவ்வாறுகாதாம், ஆத்தன் மைபோலும், அவ்வாறேயிது, ஆகலி னவ்வாறே யென்பதாம். மூலசிதிலத்தன்மை முதலிய தோடமற்ற தருக்கமருப்பித்த விபரியயப்பொருளும் அவ்வாறுகாதா மெனச் சம்பவமின் றும். அல்லது, ஆமாப்பதம் அசம்பவமாகப் பிரவிருத்தி நிமித்தாந்தரம் பொருந்தப் பெறுதலாய்க் கூறிய ஆவொப்பு மைச் சாமாநாதிகரண்யம் பொருளால் ஆமாத்தன்மை பிர விருத்தி நிமித்தகத்தகைமையை ஆக்ஷேபிக்கின்றது என அருத்தாபத்தியே யீண்டுப் பிரமாணமாக வாகுக. அதுவும் உன்னல் வியதிரேகியாக்கி அன்னியனல் தனியாகவே அவசி யம் பிரமாணிக்க தக்கதாம்.

481. சத்தப்பிரமாண கண்டன ஆரம்பம்.

சத்தமும் யாதோதப்படும், ஆத்தவாக்கியமாகிய சத்தம் பிரமாணமெனல் கூடாதாம் விகற்பம் பொருந்தாமையின்

482 ஆத்தத்தன்மை யறைய முடியாமை.

அங்ஙனமன்றே இவ்வாத்தனென்பது யாதுகாண்? உள்ளபடி கண்டதை யுரைப்போனெனின்? மயலான்மன்னியதை வழங்குபவன் வாக்கியத்தும் வழக்காதலின்; பிரமாணத்தாற் கண்டதை யெனச் சிறப்பிக்கினே அவ்வாறுயதை வேறோராறுய்க் கூறுவதில் வியாபித்தலின். எவ்வாறு பிரமாணத்தாலென வியற்றினும் அங்கிசத்தி லவ்வாறுயதைக் கூறுபவன் வாக்கியம் உண்மையல்லாம லிருந்தபோதினும், எத்துணை யெவ்வாறு பிரமாணத்தாற் கண்டதையென வியம்பினும் இலக்கியங்கட்குப் பெரும்பாலும் அவ்வாறுகாத்தன்மையானே அஃதவ்வியாத்தியாதலின் எத்துணை யளவையா லளக்கப்பெற்றதோ அத்துணை யறையப் பெருவதின்றும்.. உள்ளபடி யளவையா லளக்கப்பெற்றதே வக்தாவின் வாக்கியமென வழங்கினும், யுதிஷ்டிரர் வாக்கியத்திற்கும் இவ்வாறுந் தன்மை யின்மையானே அவ்வியாத்தி வருதலின். ஆண்டு விடயத்திலெனச் சிறப்பிக்கினும் விசேடரூபமாய விடயத்திற்குச் சிறப்புண்மையானே அவ்வியாபகத்தன்மை வந்தடைதலின்.

483. நிர்த்தோஷ வாக்கியத்திற்குப் பிரமாணத்தன்மை நீக்கம்.

இனித் தோஷமற்றவன் றன்வாக்கியம் அவ்வாறுமெனின்? அன்றும், குடமில்லையென இயம்புவா னிச்சித்ததோடத்தோடு கூடியவனுக்குக் குடமிருக்கின்றதெனத் தெய்விகமாகக் கிளம்பிய வுண்மைத்தொடர்மொழியி லவ்வியாத்தியாம். அது பிரமாணமாகாததேயாமெனின்? ஆகாதாம், முன்னர் மொழிந்த விடையதாதலின். முயன்றதின் ஆற்றலினானே பிரமாணமாதல் துணிதல் கூடலின் தொடக்கத்திலேய மேனும் மாசின்மையானே பொதுவதாக மாசற்றமாண்பு

பீமனுக்கு முன்பிறந்தோன் பாலுமின்மையின் சிறப்பதாக அவ்வாரூந்தன்மைக்குச் சிறப்பதாந்தகைமை முடிவுபேறுடைமை யுண்மையின்.

484. மூன்ரூவது கற்ப நிராகரணம்.

உள்ளபடியுரைத்த தொடர்மொழியாகிய சத்தம் பிரமாணமென்பதன்கண்ணே யாதுகோதாமெனின்? என்னற்க; ஆண்டு முதலின் முன்மொழிந்த உள்ளபடிப்பான்மைத் தூடணங்கள் உளவாம்! உள்ளபடி யென்னும் விசேஷணத்திற்கு முன்போல் விலக்குந்தன்மை விலக்காத்தன்மைகளின் ரூடமோ இரண்டாவதாம். வாக்கியத்தன்மை வழங்க மூடியாமையோ மூன்ரூவதாம்.

485. வாக்கிய இலக்கண நீக்கம்.

அங்ஙனமன்ரூ, இவ்வியாசக்கியம் என்பதுதானியாதோ? ஒருபொருளால் வரைந்துகொண்ட சொற்கூட்டம் வாக்கியம் ஆமெனின்? ஆகாதாம், ஒருமைவிடையத்தன்மை வரைந்துகொண்ட தன்மைகட்குக் கூறவேண்டிய தூஷணங்கள் ஆண்டுளவாகுக. பதபதார்த்தமோ சிந்தித்துப்பார்ப்பாம்.

486. பதமுதலிலக்கண கண்டனம்.

வேற்றுமை முடிபு விஜமுடிபுடையது பதமாம் என்பர்சிலர். விபக்திமுடிபுகளாய வருணங்கள் பதமாம் என்பர் மற்றையர்; ஆண்டுத்தனித்ததற்கும் ஒருங்குகூடியதற்கும் அவ்வியாபகத்தன்மை யுண்மையின் ஆகியதாகாதாம். தனிப் பிரயுருத்தி நிமித்தத்தன்மையின்கண்ரூ வாக்கிய இலக்கண அவ்வியாபகத்தன்மை வந்தடைதலின்.

487. இரண்டாவது பத இலக்கண கண்டனம்.

இரண்டாவது மியையாதாம் வேற்றுமைப்பொருளின் ரூடர்பின் கூடாமையுண்டையின் விபக்தியென்பதனோன

வேற்றுமை விணைவிகுதிகட்கும் பிராக்தி சோவிபக்தி யென்ப தனுனே தசின்முதலிய விகுதிகட்கும் தனித்தனியே வியக் திப்பெயர் விளம்பியிருத்தலின் சத்தசாமியத்தாலு மிலக் கணஞ் சாராமையின்.

488. விபக்தியந்த வருணங்கள் பதமென்னு மிலக்கணத் தின் கண்டனம்.

மேலும் வருங்ணகளெனப் பன்மையை விளம்பவிழை யின் யானென்பதாதிகட்குப் பதமின்மை வழக்காம். விளம்ப விழைவின்றெனின் ? தேவதத்தவென்னும் ஈற்றகாரத்திற்கு பதப்பான்மையி னடைவாம். அதற்கு விபக்தியந்தத்தன்மை யுண்மையின். பயனுடைத்தாய தவ்வாறுமெனின்? என்னற்க, பவதியென்பதாதியிண்பால் ஸபகாராதிகட்குப் பதப்பான்மை வழக்காம், ஸப்புக்குப்பயனுடைத்தாந் தன்மையுண்மை யின் யாண்டு விதிக்கப்பெற்றது விபக்தி அஃதாமெனின்? ஆகாதாம், ஸபகாரத்தை விடுத்துப் பதப்பான்மை வழக்காத லின். அதனிடையுட்படுதலின் ஸபகாரமும் கவரப்படும் எனின்? ஆயின் யாண்டு விபக்தி விதிக்கப்பெறுமோ ஆண்டு அதன் விபக்தியிடையுட்பட்டது பதமென அறையுமவாவா? யாண்டு விபக்தி விதிக்கப்பெறுமோ அது அதன் விபக்தி யிடையுட்பட்டதோடுற்றது பதமெனவா? ஆதியதேல், ஸப காரத்திற்கும் தனித்தே பதப்பான்மை வழக்காம். இலக்கணத் திற்கும் அவ்வியாபகத்தன்மையாதலின் இரண்டாவதேலோ, தேவதத்தவென்பதற்குப் பதப்பான்மையின்மை வழக்காம். இடையுட்பட்டதின்மையானே இடையுட்பட்டதோடுற்ற தென்னும் அடையின்மையின் சிலபால் இடையுட்பட்டதோ டுற்றதற்குஞ் சிலபாற் கேவலத்திற்கும் எனப்பொருந்திய வாறேயாமெனின்? ஆகாதாம், ஏகத்தொடர்பு வடிவங் கூறுக்

கால் இலக்கணத்திற்கு அவ்வியாபகத்தன்மை யடைவகற்ற முடியாமையின்.

489. பதவிலக்கண விலக்கம்.

மேலும், தேவதத்தசுவென்பதும் பதமாம், இனியபசத்தமிது, பதப்பான்மை பெறலாயவழி ருத்வாதிவிதி யின்றியமையாது இயையவேண்டலின் எனின்? அன்றும், எதனை இஃதபசத்தமாமோ அதனினை நினக்குத்தோடம் நேரும், அபசத்தத்திலும் பதவிலக்கணை மடைகின்றதன்றே. ஆகலின், ஆசிரியர் பாணினியாரால் சத்தசத்தியின் பொருட்டு ருத்வாதிவிதியை யனுசரித்து அபசத்ததசையின்கண்ணே இப்பதசம்ஜ்ஞை நதீசம்ஜ்ஞை போலும் அயலாயே செப்பப்பட்டதாம்; இலௌகிக பதவிவகார சித்தியின் பொருட்டுச் சாதுசத்த விசேடத்திலின்றும் ஆகலினை, அதற்கு அயலாகவே யிலக்கணமியம்பத்தக்கதாம். அன்றியினை, தாக்ஷீநந்தனர் (பாணினியார்) கூறிய கானகத்தலி நீதிசம்ஜ்ஞைப் பிரத்தியபிஞ்ஞையுளதாயவழி நீரைவேண்டியவனுக்குப் பொய்யுணர்வுடைய நீயாண்டு முயல்க.

490. பதத்தின் வேற்றிலக்கண மாற்றம்.

இனி, சருவ இலக்கணப் பிரவிருத்தியினை யடைவுற்ற விபக்தியந்தமே வியாவகாரிகபதமென விலக்கணமாகுகவென்றியம்பின், இன்னணமாகாதாம், சருவ இலக்கணப் பிரவிருத்திக்கு யாண்டுஞ் சம்பவமின்மையின். சம்பவிக்கப்பட்ட சருவ இலக்கணப் பிரவிருத்தியினை யெனின்? என்னற்க, சம்பவித்தலும், அப்போழ்தா அயற்போழ்தா அறையுமவா? ஆதியதேல், தேவதத்தரு என்பதும் பதமாம், ருத்வம் விதிக்கும்போழ்து விசர்க்கஞ் சம்பவியாமையின். அயற்காலென்னும் பக்கத்தும் தேவதத்த என்பதும் பதமாகாதாம், என்ப

தாதிபத பூர்வகாலத்தாவதாப யத்தன்மைய லோபாதிகளா காமையின்.

491. அவ்வியாத்தியகற்றற் பொருட்டு அயற்சிறப்பென்னுஞ் சங்கை யகற்றல்.

வேறு சத்தசந்நிதி யில்லாமலே எஃதாமோ விலக்கணம் அஃதறையு மவாவாமெனின்? ஆகாதாம், ஜீவிசையாற்றி வியரக்கியானித்தான் என்னும் பொருளில் ஜீவிகையைச் செய்து வியாக்கியானித்தான் எனப் பிரயோகிக்கப்படும் வாக்கியமாகும். ஒரு பொருள் வரைந்துகொண்ட பதக்குழுவிற்கு ஆண்டுமடங்குந்தன்மை யுண்மையின். செய்து என்பதனோடு சம்பத்தமாய ஜீவிகையை யென்பதற்குக் கூறிய பதவிலக்கணத்தானே யினிது கவரப்பெற்றதன்மை யுண்மையின்.

492. வேறுவஸ்துகயாகப் பதவிலக்கண விலக்கம்.

எவ்வுபாதியை யுடையதா யெவ்விலக்கணப் பிரவிருத்தி அவ்வுபாதி சம்பத்தியுளதாகவே அதனுலடைவுற்றது அவ்வாறுமெனின்? ஆகாதாம், யாண்டுபாதி சம்பத்தியின்றுமோ ஆண்டுக்கேவலத்தி லஃதுளதாக வென்பதனின்மையினே பதமன்மை யடைவுறுதலின். எவ்வவத்தையின்கண்ணே எவ்விலக்கணத்திற் கினிதுறலாமோ அவ்வியாவுளதாக விபக்தியந்தம்பதம் ஆமெனின்? ஆகாதாம். எவ்வவத்தையின் கண்ணேயென அவத்தைகட்கு வேற்று வேற்றுகாரமாக ஆராய்வா மேல் இலக்கணத்திற்குத் தொடர்பின்மையின் அவ்வியாபகத்தன்மைத்தோடமாம். அவஸ்தைகளின் ஒருமைஅறையுமவாவின்றும் அமையாமையுமாம். எஞ்ஞான்றும் எல்லா அவத்தைவிடயத்தில் இலக்கண வழக்காதலின் என்க. அதுவும், பவதி பவதி பவதியென வொன்றும், பவதியஸ்தியென வொன்றும், படம் படங்களென வொன்றும், படத்தைப் படமெனவொன்றும், என்றறிவியாத்திபாம்.

493. மீமாஞ்சகமதத்தில் அதிதேசம்.

இதனானே, அபௌருஷேயம் வாக்கியம் அஃதென்பதும் அகற்றப் பெற்றதாம்.

494. அருத்தாபத்தி கண்டனம்.

இனி, அருத்தாபத்திதா னென்னென் றறையப்பெறும்; அயலோராற்று லமையப் பெறுமையாமெனின்? அமையாதாம், எதனானே அன்னியத்தன்மை அதன் சித்தியின் முன்னர் அதன் அசித்தியாதலின்.

495. மீண்டுந் தூடித்த பக்கத்தின் நிராகரணமே செய்தல்.

சித்தத்தாற் பொருந்தாமையாமெனின்? ஆகாதாம், விசேடனத்தானே விலக்கப்படுவதன் புலப்பாடிலதாயவழி அது வாளாபோகவே அதனைக் கொள்ளாக்கால் எல்லாவாற்றானும் பொருந்தாமைப் பொருட்டன்மையின்மாட்டோ பயன்முரண்படுதலின் எதனானேனும் பொருந்தாமைப் பொருட்டன்மையின்மாட்டோ துணிபொருட்பெறுதி முடிவுபேறடையாமையின்.

496. வேறு வகையானே பொருந்தாமை யகற்றல்.

பிரமாணங்களின் முரண்பொருந்தாமையெனின்? துணிவுபெறுத்தன்மை யுண்மையின்; பிரமாணத்தன்மையானே அபிமானஞ் செய்யப்பட்டவைகட்கு ஆமெனின்? ஆகாதாம், அபிமதத்திற்கு மபற்பொருட்டன்மையின் மிகு வழக்காதலின்; ஞானப்பொருட்டன்மையேனும் நிகழ்த்தியதோட நீக்கமின்மையாம், நிண்ணயிக்கப்படாத பிரமாணமாதலின் மைகளில் என்பதின்கண்ணும் அவ்வாறேயாம். அங்ஙனமன்றேல்:—சற்பிரதி பக்கத்திலும் அதற்கு அதன் சம்பாதகப் பிரமைப்பயனுடைமை யாட்வுவருதலின் ஆண்டு முரண்ப

டில் வியாகதியால் ஏக அப்பிரமாண்ய நிச்சயமாம். யாண்டு தான் இவ்வாறிலதாமோ அஃதறையவேட்கையெனின்? அன்றும், இங்ஙனம் சற்பிரதி பக்கம்போலும் பிறவிடத்தும் முரண்பட்ட பொருட்டன்மையானே போலித்தன்மை சமமாதலின் தருக்கங்களின் முரண்பாடு அவாவப்பெறும் எனின்? பெறுதாம் பரஸ்பரம் விரோதத்தானே தருக்கங்கட்கும் போலித்தன்மை யுண்மையின்.

497. மீண்டும் வேறு விஞவின் விலக்கம்.

விசேடத்திற் பிரவிருத்தித்த பிரமாணத்தின் அருத்த நிட்டேதத்தை விடயமாகவுடைய தன்மையின் கண்ணேயம், அவிசேடத்திற் பிரவிருத்தித்த பிரமாணத்தினும் விபரீத அர்த்தப் பிரமாணமுடையதன் விரோதமாயெனின்? ஆகாதாம் விபரீதத்தன்மையில் விசேட விடயப்பிரமாண மூணர்த்தியதோடும், அதன் விருத்த அருத்தத்தன்மை அங்கிசத்தி வலுவிலாத லையத்திற்கு இடங்கிடையாமையானே அவிசேடப்பிரவிருத்த பிரமாண விடயத்தன்மையாகிய வதனதைக் கோசரிப்பதற்குங்கூட ஆற்றலின்மையினானே யென்பதாம். அவிசேஷப் பிரவிருத்த பிரமாணத்திற்கு அதன் மாறுபட்ட பொருள் விசேட விடயப் பிரமாணதரிசனம் அதனினயல் விசேட விடயப் பிரமையைப் பலமாகவுடையது அவ்வாறு மெனின்? ஆகாதாம், அவிசேஷப் பிரவிருத்தப் பிரமாணத்தின், அதன் மாறுபட்ட பொருள் விசேஷ விஷயப் பிரமாணத்தின் விடயங்கட்கு அதனின் விபரீதத்தன்மை விசேஷணப் புலப்பாட்டை யங்கீகரித்தலினானே கிடைக்கப்பெற்ற பரஸ்பர விருத்தத்தன்மை புலப்பாடாயவழி தருமிகளின் விருத்ததரும அத்தியாச பேதத்திற்கு விரோதத்தின் பகுப்பில் வெளியாயதன் கருப்பத்துட்புகுந்த தன்மையினானே

அத்னோடு ஞேயத்திற்கு அதன் முடிவு பேறின்றியதற்காதல். பிறவிட்த்திற் போலப் பிறிதினோனே அடைவு கூடலின்.

498. வேறு வகையானே அருத்தாபத்தியின் நீக்கம்.

மேலும், அவிசேஷப் பிரவிருத்தமாய அதற்கேவிசேஷ விஷயத்தன்மையா? இனிச் சாமானியமாகப் பிரவிருத்தத்தின் முடிவு பேறிலாமையானே முன்னரே விசேஷ விஷயத்தன்மையானே யறியப்பெறுத விசேஷ விஷயத்திற்கு விசேஷ விஷயத்தன்மையா? அல்லது சாமானியமான அதன் விஷயத்திற்கு விசேடமா? அல்லது அது விடயஞ்செய்த விசேடத்திருக்கும் வேறு தருமம் யாதேனும் இப்போதளக்கப் பெறுகின்றதா? அருத்தாபத்திக்குப் பிரமகரணத்தன்மையின் அடைவாதலின் ஆதியதாகாதாம். அதனலுவியலசாய உற்பத்தியினோனே அதன் விடயப் பிரதீதி யசம்பவமாதலின் இரண்டாவது மியையாதாம். உள்ளடங்காத ஆசிரயத்தையுடைய சாமானியத்தை நீக்க முடியாமையின் முன்னரே அதன்றுணிபு கூடலின் மூன்றாவதுந் தோன்றுதாம்.

499. நான்காவது விகற்ப நீக்கம்.

நான்காவதும் நன்கன்றும், அதோ புலப்படாகின்ற விரோதியையுடையதினும் வேறுயதன்மையா? அல்லதயலேயா? அதன் புலப்பாட்டின்மாட்டாற்றலே யினிதுகாட்டுமுடியாமையானே அநியம் வழக்காதலின் சுற்றது மாற்றதாம். தொடர்ந்த தொடராத ஜாதியத்தி விழிகவர்ந்த கவராததாதி வியத்திகந்தாதி தாதான்மியவாதி மதத்தில் அவ்விரண்டு பிரமைகளின் தாதாத்மிய விடயத்தன்மை விலக்கமிலாது விரோதந் துணியப்பெறுமையின், அதன்கமனிகையாற்றலுக்கே யசித்தியாதலின். அவ்விரண்டன் புலப்பாட்டின்மாட்டும் அதன்றுணிபின் முன்னரே அதன்றோற்றக்கால் அருத்தாபத்தி யனுவாதத்தன்மை யடைவாதலின்.

500 அனுபலப்திப் பிரமாண கண்டனம்

யோக்கிய அனுபலம்பம் அபாவப்பிரமையின் கரணம் என்பதும் தகாதாம், பிரமாண அபாவத்திற்கு அவ்வாறுந் தன்மையேன் மயுதயமாகா வழக்காதலின் உபலம்ப அபாவமாத்திரத்திற்கு அவ்வாறுந்தன்மையேலா சங்கத்தின் வெண்மையை நினையவனுக்கு மஞ்சண்மயல் எழாவழக்காதலின், போதின் பேதத்தாலாண்டு முரணின்றுமெனின் ? முரணுறுதாம், ஆயினும் சம்பந்தமுற்றவற்றின் அன்னியோன்னிய அபாவக்கவர்ச்சியின்மை வழக்காதலின். தாதாதமியத்திற்குச் சொரூப மாத்திரத்தினும் வேறுகாமை யுண்மையின் அபாவ இயக்கத்தேலா அஃதியங்க வேண்டிய தோர்தலையாதலின்.

501. யோக்கியதை யாலுதிக்குந் தூடணம்.

மேலும் யோக்யதையோ அவ்வவ்வவிநாபூத அன்னியப் பிரதியோகியை யளப்பதன் சாகல்லியமாமென அவாவப் பெறும்; பெறலாயவழி யாண்டுப்பாவ உபலம்பமாமோ ஆண்டும் அபாவப்பிரமையாம். ஆண்டு ஹேது வில்லாமையானுதல், உளதுதானுதல் அதனப்பாவப்பிரமை யுற்பவியாதாம். அவ்வவ்வவிநாபூத விரகசகித அஃதவ்வாறுமெனின் ? ஆகாதாம், அவ்வவி நாபூத வியதிரேகத்திற்கு, அதன் வியதிரேகத்தானே வேறுராற்றுற் பெறப்பட்ட சந்நிதிக்கும் ஹேதுத்தகைமையை யங்கீகரிப்பதிற் பிரமாண மின்மையின். இதனுனே ஆலோகத்தின் அத்தியகணத்தில் அவயவத்தானுதல் அவயவியினுனுதல் ஆலோகாந்தர முடைமையில்லையாம், ஆலோசத்தான் வேறுறுற்றுற் பெறப்பட்ட சந்நிதி ஹேது வல்லவாமென ஆலோக அபாவக் கவர்ச்சியில் அஃதவாவப் பெறுவதில்லையாம்.

502. அசம்பவ மறைதல்.

பொருட்பொறியோகமோ பொருள் வியாத்தமாகாதாம். அங்கிசமா யைக்கியமிருத்தலின் அதனபாவசகித:மா மஃந்தவ் வாருமெனின் ஆகாதாம், பொறியொற்றுமைக்கன்றே பிரதி யோகியின் அநுபலம் பத்தில் ஆண்டேதுத்தகைமை யங்கீக ரிக்கப்படுகின்றது; ஆண்டென்னொற்றுமையிலாதவழி காரிய முதயமாகாத உதாரணம் அங்கீகரிக்கத்தக்கதா? இல்லையா? இலதாமேல் ஆயின், ஒற்றுமைக்கேதுத் தகைமையைத்தா னேனுடன்படல்வேண்டும். வேறேராற்றானே காரியோற்பத் திகூடலின்; அங்கீகரிக்கத்தக்கதெனின்? அவ்வுதாகரணத் தின்மாட்டே தடைப்படுத்துவதால் பொறியொற்றுமையில தாம்வழி உண்மையாயோ இன்மையுடையதாகக் கூறியகா ணங்கூடிநிற்றலின் இன்மையுணர்வுளதாதல் வேண்டும். பிரதி யோகியைப் புலப்படுத்துவதற்கேதுவாய தடைப்படுத்துவ தின்மை ஆண்டிலதாமெனின்? அற்றன்றும், ஒற்றுமைக்குட் பிரமை வியதிரேகப் பிரயோஜகத்தகைமைத் துணிபுதார ணமே யஃதாயினுகாதாம் தடையானது ஒற்றுமைவிரோதி யாதலினுனே பிரமை விரோதியாம் எனின், ஆயின் தடை யின்மையொற்றுமை யுற்பத்தியின்மாட்டுக் காரணமேயலாது அபாவப்பிரமை விசேடவுற்பத்தியின் மாட்டுக் காரணமாகா தாம் என நிலைபெற்றவழி அவ்வழக்காங்கே நிலைபெறும்; ஒற்றுமை யின்மையினுனே அஞ்ஞான்று கூறிய காரண அடைவின்மையாம் என்னற்க. பிரதியோகியொற்றுமை யபா வப்பிரமையை யுண்டாக்குமேல் எப்போதும் அதன் அநுற் பத்தியடைவு வருதலின். இதனுனே, தடையற்றதென அதிக காரணம் அங்கீகரிக்கத்தகாதாம், பொறியொற்றுமையின் கண்ணே அது கூடலின்; ஆசிரயசாரூஷாத்காரமும் அதிகார ணமாக அங்கீகரிக்கத்தகாதாம்; முன்னின்மைக்கவர்ச்சிமுத லியவற்றே பிறழ்தலின் என்க.

503. மீண்டும் வேறுசங்கை நீக்கம்.


அற்றேல், தடைப்படுத்துவதிருந்தபோதினும் யாண் டுண்மையாக அபாவமிருக்கின்றதோ ஆண்டுக்கூறியகாரணத் தான் அபாவத்துணிபுளதேயாம் யாது விரோதம் அது? ஆண்டுப் பாவமிருக்கு மிடத்தும் அத்துணையானே அதன பாவப்பிரமை அடைந்திடாதாம், ஆயின் பிரதியோகியபாவத் தோடுற்ற அனுபலம்பமே அபாவப்பிரமாணமாகுக; தகுதிச்ற ப்பைப்புகுத்தும் வியசனத்தை தரித்திருதொழித்தி தகுதிச் சிறப்பைத் தாராதொழியில் அநுபலம்பமாத்திரத்தான் உண் மையாகப் பிரதியோகியில்லாவிடத்தும் அபாவநிச்சயமாகா தாம், ஒரொருகாலோ ஐயப்பாடுளதாம்; ஆகலின் யாங்ஙன மங்ஙன மங்கீகரிக்கப்படுகின்றதெனின்? ஆயின் மறைப்பிருப் பினும் இவ்வண்ணமேயெனத் தகுதிச் சிறப்பைத் தரினும் சமமேயாம்.

504. அங்கீகரித்துத் தூடண மறையல்.

அன்றியும், மேயத்தின் வாஸ்தவசத்வம் பிரமாணபக் கத்திற் புகுத்தத்தக்கதாகாதேயாம், மேயவஸ்துசத்வ நிண் ணயப் பொருட்டேயன்றே பிரமாண அப்பிரமாண விவே கம் செய்தல் ஆராயப்புகுந்தோர்; மாறுயினே, அனுமானத் தில் வியாத்தியின்மாட்டுபாதிதீக்கும் ஆபாசம் பிணன்றே வாம் வியாபித்தபக்கதருமத்தன்மை ஞானமாத்திரத்திற்கே காரணத்தன்மை யங்கீகரித்தலான் நன்னிலைநண்ணலின். முன்னின்மைப் பிரமிதியின்மாட்டோ அபாவப்பிரமாணத் தன்மையை எண்ணுதியேல்ஆயின் அஃதாகாதாம். ஆண் டிஞ்ஞான்றுண்டாகும் அபாவப்பிரமையின் உற்பத்தியின் மாட்டு அபாவவாஸ்தவ சத்தையின்மையும் இஞ்ஞான குறியாண்டேனும் சம்பவித்தலின். பலவிடயகாலத்திய அபா வஉபலக்ஷித ஆசிரயாதிகள் காரணகோடியிற் புகுத்தப்படு

மேற் சிறப்பின்மையின்; அதனுபலக்ஷிதத்தன்மைவாய்ந்த சிறப்பிற்கே சிறப்புறுந்தன்மையேன் மிகுவழக்காதலின், ஆயினும் பொதுவாகச் சிறப்பின்மை மயசித்தாமெனின்? ஆகாதாம், அதனதுண்மையில் நிர்வசனம் நேர்தலின்.

பிரமாண கண்டன முற்றிற்று.



505. ஆபாசகண்டனாரம்பம்.

இவ்வசித்தவென்பது தானென்னைகோல்! அங்ஙன மன்றே வியாத்தி பக்கதருமத்தன்மைகளானே அளக்கப்பெறுத லசித்தமாம் என்பதிலக்கணமாகாதாம், இங்ஙனமாமேலாயின் மற்றைய ஹேதுப்போலிகட்கும் அசித்தத்துட் புகுதலாம், வியாத்தி பக்கதருமத்தன்மைப் பிரமிதியையாதல் யாவை எதிர்க்கின்றனவவ்லீயோ அவற்றிற்கேது தோடத் தகைமை கூடாமையின்.

506. நையாயிகர்வினுதல்.

அற்றேல் இஃதித்தகைதாயதாகாதாம், அங்ஙனமன்றே:— சில தோடங்கள் வியாத்தி பக்கதருமத்தகைமைகளின் பிரமிதி யபாவவடிவுடையனவாம்; மற்றுஞ் சிலவோ வியாத்தியாதி பங்கத்தில் இலிங்கபூதங்களாம் தோடங்கள். கடைப்படுத்துவதானே அனுமதியினுற்பத்தியைத் தடுப்பனவாய்ச் சில தோடபாவத்தைத் தோய்கின்றன. ஆண்டு முதலில் அசித்தியினிடையிற்றானே புகுகின்றன, அஃதாமாறு:— வியாப்பியத்வ அசித்தம் சோபாதி வடிவதாம், உபாதியோடு கூடாததாய சம்பந்தித் தகைமையே வியாத்தியாகும், உபாதியோடுகூடிய தன்மையும் அநுபாதித்தன்மையினின்மை வடிவமேயாம், இவ்வண்ணம் அதிகரண அசித்தியும் அசித்தியின்

பாலே யடங்கிக்கிடப்பதாம், பக்கபதத்தாற் பற்றக்கிடந்த பற்றுக்கோடாயதன் இன்மைவடிவதன்றேவது.

507. சித்தசாதனம் அசித்தியூடடங்கல்.

சித்தசாதனமும் அத்தகையதேயாம், துணிதல் வேட்கைத்தன்ம, அடையடுத்ததற்றே பக்கமெனப் பகரப்படும், யாண்டுத் துணிபுளதோ ஆண்டுத் துணிதல் வேட்கையில தாம், ஆதலின் ஆண்டு அடையினின்மையாலாக்கப்பெற்றதா கும் அடையடுத்த பக்க ரூபத்தின் இன்மையென்க; பிறழ்ச் சித்தன்மையின் வியாத்தி ஈாத்தியாக்கப்பெற்றதெனத் தனித் தே பிறழ்ச்சிக்குத் தோடத்தகைமையாமாறு துணிபுண்மை யின் · ஆண்டுத்துணிதல் வேட்கையிலதாமெனத் துணி புண்மைக்கும் தனித்தே தோடத்தகைமையடைவுறும், குறி வாயிலாக அசித்திமூடிவுபேறுண்மையின், மாறுயிஞே, வியாத் தியாதியின்மை முடிவுபேறடைதன் மாத்திரையானே பிறழ்ச் சிமுதலியவையும் [1]அசித்தியின்மாட்டே யடங்காநிற்குமென அறையற்க; துணிதல் வேட்கைபின்மை, துணிபுண்மைக்குறி யானே யறிபவனுலறியப்பெறுமையின்; மற்றே; அவ்விழை வின்மையின் உள்ளவாறு காண்கை காட்சிமுதலியவற்றுனே காணப்பெறும். விழைவேதானுண்டு யாதிலதோ ஆண்டுத் துணிபுண்மை சாதகம் என்னுமித்துணை மாத்திரையானே துணிந்ததைத் துணிவதிற் றுணிபுண்மை யுரைக்கப்பெறு கின்றதாம், குறியினுனே விழைவின்மையைக் கருதுவானல்ல வாம். இன்னணம் சொரூபாசித்தியும் பக்கதருமத்தன்மை யினின்மை வடிவதேயாம்.

508. விருத்தத்திற் சசித்தத்தினும் தனித்தன்மை.

யாவை வியாத்தி பக்கதருமத்தன்மை யின்மைக் குறி வடிவங்களாமோ அவை அசித்தத்தினும் தனித்தவையேயாய ஹேதுப்போலிகளாம். அஃதெங்ஙனம்; — விருத்தமென்

பது துணிபொருள் விபரீத வியாத்தமாம், ஆண்டுத் துணி பொருள் வியதிரேக வியாத்தத்தன்மை ஏதுவிற்குத் துணி பொருள் வியாத்தத் தன்மையின்மையன்றும். அஃதென்னை கொல்? துணிபொருளின்மையோ டுபாதியற்றதாஞ் சம்பந் தம் அயலேயஃதாம், இம்முறையே யிது பக்கதருமத்தன்மை யின்மைவடிவதூஉம் ஆகாதாம்; அஃதென்னைகொல்? அதற் குத் துணிபொருளின்மையோ டுபாதியற்ற சம்பந்தத்தன்மை யுண்மையின், ஆண்டுத் துணிபொருள் வியாத்தி யிதற்கின்று மெனக் கருதலாம், அவ்வாறுயவழி துணிபொருள் வியாத்தி யின்மைக் குறியாய் விருத்தம் தனித்ததாகவே ஹேதுப் போலியாமென்க.

509. அநைகாந்திகத்திற்கு வியத்தின்மை ரூபத்தன்மை யின்மை.

இம்முறை அநைகாந்திகமும் வியாத்தியின்மை ரூபமன் றும், மற்றே, அதன்குறியேயாம்; அங்ஙனமன்றே:— ஹே துவின் உடனிகழ்ச்சிக்காதல் தடனிகழ்ச்சிக்காதல் உள் தாம்பிறழ்ச்சி துணிபொருட்சாதன வியாத்தியின்மை வடிவ தன்றும்; மற்றே பிறழ்ச்சி ஏதுவிற்குத் துணிபொருள் வியாத்தி யின்மை யிலாமற் பொருந்துறுதாமெனக் குறிப் பான்மையானே வியாத்தி நாத்தியை யறிவுறுத்தா நிற்கும். துணிபொருளோடு சம்பந்தம் நிரூபாதியா யிதற்கேலுமாயின் பிறழுவான் யாங்ஙனமேலும்? ஆகலின் வியாத்தியின்மைக் குறி பிறழ்ச்சியே யலாது வியாத்தியின்மை யல்லவாம். பக்க தருமத்தன்மையின்மை ரூபத்தன்மையோ அநைகாந்திகத் திற்குப் பொருந்துறுதேதையாம்.

510. சற்பிரதிபக்கம் அசித்தியினும் அயலாதலும் அதன் வடிவமும்.

சற்பிரதிபக்கத் தன்மையின் மாட்டோ அறியப்பெறுத சிறப்புப் பிரதிபக்கப் பெருந்தடையான் எத்துணிபொ

ருட்டுணிபு பிறப்பியாமை ஹேதுவிற்கு அது தடையுளதாய வழி காரியத்தைப் பிறப்பியாமை அயற்காரணப்பொதுவத்து வியற்கையாம், அதற்கு வியாத்தி பக்கதருமத்தன்மை யின்மை ரூபத்தன்மை பொருந்துறுதேயாம்.

511. பாதம் அசித்தியினும் அயலாதல்.

பாதமோ துணிவிக்கும் பொருளுடைய பக்கத்திற் றுணிபொருளின்மையை யுணர்த்தும் வடிவதாக வாய்ந்த போதினும், வியாத்தியின்மை யுணருருவாகாதாம், பொதுவதாக உபாதியற்ற சம்பந்தரூபமே வியாத்தியாம், துணிவிக்கும் பொருளுடைய பக்கத்திற் றுணிபொருளின்மை உபாதியோடுற்ற தன்மையாகாதாம், அதற்குத் துணிபொருண் முரணுவியற்கை யுண்மையின் ; இதுபொதுவதாகத்துணிபொருடுணிவிக்கும் பொருளொற்றுமையி னின்மைரூபமாகாதாம், பாதமிருந்துழியும் பொதுவதாகத் துணிபொருடுணிவிக்கும் பொருள்களின் றிட்டாந்தத்தாற் பெற்ற வொற்றுமையைத் தணர்தலேலாமையின், பாதத்திற்குச் சிறிது சிறப்பு விடயத்தன்மை யுண்மையின், பொதுவடிவமாகக் கவர்ந்த வொற்றுமை வேறு சிறப்பைக்கொண்டு முடிவுபேறடைதல் முரணுமையின்; ஆகலின் சிறப்பின் பாதத்தாற் பொதுவதாக வொற்றுமைக் குபாதியோடுற்ற தன்மை கருதப்பெறும், உபாதியற்றதன்மையேலாயிற் பாதம் போதாமையின் "பாதத்தானுதல் அயலாற்றுணுதல் உபாதி யுன்னப்பெறும் என்பது யாதொரு கோதுடையது மன்றும்" என வியம்பியுமுள்ளார்.

512. வாசஸ்பதிமதம்.

சற்பிரதிபக்கம் போலப் பாதத்திற்கும் தடைத்தன்மையேயாம் அதனற் பாதமுளதாயவழி தடைப்படுதலின் துணிவதின்று மேதுவென வியாத்தி பக்கதருமத்தன்மைத் தோட

மாலோசியாது பாதத்திற்கு அயலாற்றனே தோட்டத்தன்மை யைப் பிறரோ பிறங்காநிற்பர்.

513. மும்மைவகைமுடிபு.

ஆகலின் வியாப்தி பக்கதருமத்தன்மை யுணர் வுண்மை களின் யாண்டு நேராகவே இன்மை யெழுச்சியாமோ ஆண்ட சித்தமரம், யாண்டுதான் வியாத்தியாதி யின்மைக்குறி யுபந்நி யாசமாதல், சற்பிரதிபக்க விபந்நியாசமாதல் ஆமோ ஆண்டு அயலேதுப்போலியாம்.

514. நியம ஆக்ஷேப பரிகாரங்கள்.

ஆற்றேல், உபாதியோடுற்ற தன்மை முதலியவையும் எதனு லறியப்பெறுகின்றனவோ அஃதியாங்ஙனம் தனித்து டணம் அநைகாந்திகத்தன்மை முதலியவற்றைப் போலும் ஆகவில்லையெனின்? அற்றன்றும், அநைகாந்திகத்தன்மை முதலியவைகட்கு வியாத்தியாதி யின்மை யுணர்த்துவதிற் குறியுண்மை நியமத்தாற் றனித்துபந்யாசமாம்; உபாதியோ டுற்ற தன்மை முதலியவற்றிற்கோ காட்சியாலும் புலம்பு தலுண்மையின், குறியுண்மை நியதத்தை யாண்டு நிகழ்த்துவ தொருசிறிதுமின்றும். யாண்டுப் பொறிக்கெட்டாததாதி யாம் விடயத்திற் குறியால் உபாதியோடு கூடியதாந் தன்மை முதலியலற்றின் றோற்றம் ஆமோ ஆண்டு அக்குறி தனித்தே அநுஷணமாகக் கூறத்தக்கதாம், அநைகாந்திகத்தன்மை முத லியவையும் யாண்டினு முளதாய வியாத்தியின்மைக் குறி யின தென்பதாக விலதாமென வேறதுப்போலி மிகுதியாகப் பொருந்துமென் றியம்பற்க; அநைகாந்திகத்தன்மை முதலிய வைபோலும் அக்குறிகட்கு ஒரு வடிவுண்மையானே காண் பிப்பான் முடியாமையின் தனித்தனி யேதானுதல் நாமமிடல் நண்ணுதன்றே, ஏன்னை? எண்ணமுடியாமை வந்துறுதலின்

என்பதாம். அதற்குப் பெயரிடாமைக்கு ஹெதுவை மேலே மிழற்றுவேம்.

515. தனித் தூடணத்தன்மை யின்மைவிளை.

அற்றேல், தகாததன்றே கூறப்பெற்றது, வியாத்தியாதி யின்மைக் குறியானே அநைகாந்திகத்தன்மை முதலியவற் றிற்குத் தனித்தூடணத்தன்மை என்பதாக; எதனுன் வியாத்திபக்கதருமத்தன்மைகளோடு கூடிய குறியாலுணரப் பெறும் திணிபொருட்கருதல், அதனழிவான் ஆகாதாமோ; எதனுற்றான் அஃதாகாதோ அதுவே அதன்கட் டோடணம் என வியம்பற்றகுதியாம், இக்கருதலினுதயகாரணம் ஈண்டின் றும் என; வியாத்திபக்கதருமத்தன்மைகளையும் அவற்றின் உணர்வுகளையும் விடுத்து அயலொன்றதனுதய வேதுவாக வியதிரேகமாய்க் காண்பிப்பான் றகுதியாயிலதாம்; ஆதலின், கருதற்றோடத் தோற்றகாரணத்தன்மை அநைகாந்திகத் தன் மைமுதலியவற்றிற்காம், நேரே தோடத்தன்மையாகாதாம், தோடத்தை யியம்பும் வாயிலாயேனும் தோஷத்தன்மையாம், நேரே தோடத்தன்மை உபஜீவியாதுரைத்தன் முடியாதென முக்கியதோடத்திற்கே தோடமதாகக் கிளப்பல் பொருத்த மாம், பிறழ்ச்சி முதலிய வற்றிற்காகாதாமாகவே பகுக்குஞ் சூத்திரம் பயனில் கூற்றன்றேவாமெனின்.

516. விளைவிலக்கம்.

உண்மையே யுரைத்தீனை, நேரே தோடத்தன்மை, தடைக்காதல் வியாத்தியாதியின்மைக் காதல், விருத்தத்தன் மைமுதலியவற்றிற்கோ அதனை யளத்தலினனே தோடபக் கத்தில் வீழ்தலாம், எனினும் விருத்தத்தன்மை முதலியவை எத்தோடத்தை யியம்புவதாக வியம்பப்பட்டதோ அதனுதய வெளிதிற் கோடலையனுசரித்து வியாத்தியாதியிலதாண்டுதிப்

பதிலேது செல்வதற்கு முடியாதாம், அநைகாந்திகத்தன்மை முதலியவற்றின் கண்ணே உதிப்பிப்பதில் வியாத்தியாதியின் மை பொருளாற் கிடைக்கும்; வியாத்தியாதியின்மை யிலாது அநைகாந்திகத்தன்மை முதலியவற்றிற்குப் பொருத்தமின் மையின். அதனினும் நீண்டது இதுவென்புழி இதனினும் குறுகியது அதுவென்பது பொருளாலுணரப்படுமன்றே ! ஆண்டறையவேண்டியதாக மற்றேரவாவிலதாம், அதுபோன் றே ஈண்டும், அனலின்றியவிடத்திற் புகையுளதாமெனப் புக லப்பெறின் அனலானது வியாத்தமாகாதாம் எனப்பொரு ளாலுணரப்படும். அனலானே வியாத்தமாம், அனலிலா விடத்துமிருக்கும் என்பது பொருத்தமற்றதன்றே ! இத னானே, அநந்தமாதலினானே அதீந்திரிய வுபாதியாதி குறிக ளாய எவைகட்கு முன்பெயரிலாமை பொருத்தினமோ அவை களின் பெயரிலாமைக் கிதுவுங் காரணமாம். அவ்வுபாதிக் குறிகள் பொருள்வயத்தான் உபாதியை யவாவாதனவாயறி யப் பெறுவனவாகாவாம்; எதனானவைகட்கு வியாத்திதுணி யப்பெறவில்லையோ, அதன்பொருட்டு அதனை யறைவதொ ழிந்து அறையமுடியாமையுங் கூடலின். அநைகாந்திகத் தன்மை முதலியவற்றை யுணர்வதன்மாட்டோ வியாத்தியாதி யின்மை யுணர்வின்பொருட்டுப் புகலவேண்டற்பாலதாய மற் றொன்றன் அவா எம்மதிமானுக்குஞ் சம்பவியாதாம் என்ப தாகப் பூர்வபக்கம் தொகுக்கப்பெற்றது.

517. சித்தாந்தத் தொடக்கத்தே அசித்தியிலக்கண நீக்கம்.

இன்னணம் அசித்த இலக்கணம் நிலைபெற்றுழி இப்பாத மியம்பப்பெறும், இதனானே எத்தகைய அசித்த இலக்கணம் ஆயுண்மானால் நிலை பெறுத்தப்பெற்றதோ, வியாத்தத்தன்மை பக்கதருமத்தன்மைகளானே அளவிடப்படாதது அசித்த மென ஆமேல் ஆண்டுவிருத்த முதலியவற்றில் இலக்கணம்

இலதா ? அலதுளதா ? இலதாமேலாயின் வியாத்தி பக்க தருமத்தன்மைகளான் அளக்கப்பெற்றனவேயாய் விருத்த முதலியவை அடையப்பெறுவனவாம், இனி உளதாமேலா யின் அவையும் அசித்த வேற்றுமைகலேயா யடைவனவாம். இனி இவ்விலக்கண மிருந்தபோதிலும் அவை அசித்தத்துட் படாதனவாம், ஆயின் இவ்விலக்கணம் அதிவியாத்தியை யடைந்ததாம், இனியாண்டு வியாத்திபக்க தருமத்தன்மை களின் அளக்கப்படாத்தன்மை நேராக உதிக்குமாயின் அஃ தசித்தமென அறையப்பெறும், ஆயின் இலக்கணமயலிஃதி யம்பியதாகும், இதுவும் பொருத்தமுறுவதன்றும், யாண்டு வியாப்பியத் தன்மையசித்திக்கு வியாத்தியின்மை மாத்திரம் இயம்பப்படுகின்றதோ ஆண்டு வியாத்தி பக்கதருமத்தன்மை களின் அளக்கப்பட்டதாந் தன்மைகளின் ஹானம் சேர்க்கை யாக உதிப்பதின்றுமெனவிஃதசித்தமாகாதாம், இங்ஙனம் எல்லா அசித்தச் சிறப்புங்கூறி வழக்கு விதிக்கத்தக்கதாம்.

518. தனிப்பக்கவிலு அதன்பரிகாரங்கள்.

இனித்தனியாகவே யிவ்விலக்கணமாகுக, வியாத்தி யளக்கப்படாமையானே நேரேயுதிப்பிக்கத்தக்கது அசித்த மாம், பக்கதருமத்தன்மை யளக்கப்படாமையானும் என்ப தாம், ஆயின் அன்னியோன்னிய உதாகரண அவ்வியாத்தியி னுனே அவ்வியாபகத்தன்மை யிரண்டினுக்குமாம், இனி யிரண்டினுக்கும் அசித்தச் சிறப்பு இலக்கணத்தகைமை யுண்மையின் அன்னியோன்னிய விடய அவ்வியாபகத்தகை மை தோடப் பொருட்டாகாதாமென நினைக்கின்றனை கொல் ! கூடாதாம் பொதுவிலக்கணம் புகலுவான் பொருந்தாதபோது இச்சிறப்பிலக்கணமுந்தா னெங்ஙனம் பொருந்தும். இனிக் கருதலுக்குச் சிறப்பாய ஹேதுவின்மையை யுஞ்சிப்பித்தல் பொதுவிலக்கணமாகுகவே, ஆகாதாம், சற்பிரதிபக்கதற்பனை

யங்ஙனமாமென அதிவியாத்தியாதலின்; பாவரூபமாக வே தாச் சிறப்பேல் திருபாதித்தன்மையின்மைக் கற்பனை யவ்வி யாத்தியாதலின், சொரூபாசித்தி எல்லா அளவைப் பொதுத் தோடமென்பதன்கண்ணே யதன் கற்பனை யவ்வியாத்தி யாத லினனுமென்க. இனிவியாத்தத் தன்மை பக்கதருமத்தன் மைகளானே யளக்கப்பட்டதன்மையினின்மை யாண்டு நோக உபந்யசிக்கப்படுகின்றதோ அஃதசித்தமெனக் கூறப் படின், இதுவும் அலக்ஷணமேயாம் அவ்வியாபகத்தன்மை யுண்மையின். யாண்டு வியாத்தியாதியின்மை யுபந்யசிக்கப் படுகின்றதோ ஆண்டு வத்துகதியான் வியாத்தத்தன்மைப் பிரமிதியினின்மை யுளதாகுதான் உபந்யசிக்கப்படுவதூஉ மின்றும், பயனின்மையின். வியாத்தியின்மைத் தரிசனத் தானே கருதலங்கக்கெடுதல்வடிவ தோடத்தின் கற்பனை முடிவுபேறடைதலின்; ஆகலினுண்டு அளக்கப்படுந்தன்மை யின்மைக் கற்பனையிலதாமென அவ்வியாபகத்தகைமை தோ டமாம்.

519. விஞ விடைகள்.

அற்றேல், அடைமுதலியவற்றினின்மையும் உண்மை யாக அடையடுத்ததன் இன்மையேயாமெனக் கூறிய தோட மிலதாம் எனின்? இலதாம். அடை முதலியவற்றினும் அடையடுத்ததுமிகுமாயின் அக்கால் அதனின்மை வேற்று மையும் ஆம்; இனி மிகாதாயிலை அப்போழ்து அடையின் மைத் தன்மை யுண்மையின் அடையடுத்ததன் இன்மைத் தன்மை அஃதயலாம் என அடையடுக்கற்பாலதன் இன்மைக் கும் அவ்வாறுயவழி தனித்தே யடையடுத்தத னின்மைத் தன்மைப் பொருளவற்றிற்காமெனத் தொடர்பின்மையே யாம், தற்பொருட்டுக் கருதலசித்தி யவ்வியாத்தியுமாம், கற் பனையின்மையின் என்பதாம்.

520. மீண்டும் விஞவிடைகள்.

இனியாண்டு வியாத்தத்தன்மை பக்கதருமத்தன்மை யுணர்வினின்மை நேரேயுரையிட முடியுமோ அஃதசித்தம், உரையாட முடியுந்தகைமையை யுரையாடாவிடினும் பொருந்தலின் அவ்வியாபகத்தகைமை யாகாதாம் என வியம்புதியேல்; இதுவும் பொருந்துறுதாம், அங்ஙனமன்றே:— உரையாட முடிதலும், வடிவங் குறித்தன் மாத்திரை முடிதலா? அளவையடுத்தி முடித்தலா? ஆதியதேல், அநைகாந்திகாதிகளின் கண்ணும் வியாத்தி சூனியத்தகைமைப் பதிஞ்ஞை கூடல் கூடியதேயாம். மற்றதேலோ நேரேயென்பது காட்சியான் எனப் பொருள்படுமாயின், காட்சியா லளவைப்படுத்தற்றன்மை, வியாத்தி பக்கதருமத்தன்மை யுணர்வின்மைக்குக் காட்சி யெதிர்மறை யுடைத்தாமின்மைக் காட்சித்தன்மை வாதி மதத்தில் விருத்தாதியி னிடத்தும் உளதாமென அதிவியாத்தியாம்; அயன்மதத்தோ, யாண்டு மிலதாமெனச் சருவ அவ்வியாத்தியாம்.

521. விசேஷணத்தின் கண்ணும் தோஷநீக்க மிலாமை.

இனி வியாத்தி பக்கதருமத்தன்மை யின்மைக்கும் காட்சி யளவைப்படுத்துதல் விளம்பும் வேட்கையாயது பொருத்தமற்றதாம், இயம்பிய இலக்கணவாக்கியத்திற்கு வியாத்தி பக்கதருமத்தன்மை யின்மையியம்பாமை யுண்மையின்; அதனின்மையின் கண்ணும் கருத்துட்படில், தனித்து விரவியிலக்கணத்தன்மை விகற்பத்தானே அவ்வியாபகத் தன்மை வந்தடைதலின். பொறிக்கெட்டாப் பக்கமுதலிய இன்மை விடயத்திலோ அஃதிலாமையின் அவ்வியாபகத் தகைமை வந்தடைதலின்.

522. தூடனந் தொடர்ப்படுத்தல்.

இதனுனே, குறியவாவாத்தன்மை நேரின் பொருளேல், அதுவும் அகற்றப்பட்டதேயாம்; இனி, யாண்டு வியாத்தத் தன்மை பக்கதருமத்தன்மை யுணர்வினின்மை, பிரதிபாதிக் கத்தக்க அயலொன்றை யவாவாமன் அதனை யளவிடுங் குறி யின் உபன்யாச வின்மையாற் கற்பனைகூடல் ஆமோ அஃத சித்தமென அறைந்திடினே; இதுவும் பொருத்தமுடையதா காதாம், அதிவியாபகத்தன்மை யுண்மையின்; அங்ஙனமன் றே, விருத்தாதியின்கண்ணே யுபாதியோடு கூடியதாந்தன் மை, ஆண்டு விபக்கத்திருக்கும் தண்டவடிவ தருக்கமின்மை யின் உணர்வான் கூடியதேயாகும். "யாண்டனுகூல தருக் கம திலதோ அஃதப்பிரயோஜகமேயாகும்" எனக் கூறியு முள்ளார். ஆகலின் அவற்றிற்கு மிங்ஙனம் இலக்கணச் சேர்க்கை யுண்மையின் அசித்தத்தன்மைவழக்காம். அத்த கைய தருக்க அவிடயத்தகைமையும், அறையத்தக்க வயலை யவாவாத வியாத்தி பக்கதருமத்தன்மை யுணர்வின்மையள விடுங் குறிவடிவமே யெனக் கூறற்க; அன்னமையின் விருத் தத்தன்மை முதலியவைபோலும் அதற்கு ஹேதுப்போலி யயற்றன்மை வழக்காதலின்.

523. தருக்கவின்மைக்கு ஹேதுப்போலியயற்றன்மை விளைவிடைகள்.

இனி, அவ்வாறுரைக்கப்படுவதா மது அசித்தமாகுக, துணிபொருள் விபரீத வியாத்தித்தன்மையாதியாலே தூடிக் கப்படுவது விருத்தாதியேயஃதாம், உரையாடும்வகைவேற்று மையானும் வேற்றபாடாம் விவத்தை ஹேதுப்போலிகட் காம்; ஈண்டு ஆத்தன்மை பரித்தன்மை முதலியவற்றிற்கே போலும் மிகவும் விரவலின்மை வேண்டப்படுவதின்றும், மற் றே; அளவை அளக்கப்படுபொருட்டன்மைபோலும் வகைக்

கலப்பின்மைமாத்திரம் என்பதாம் எனக் கூறப்படுமாயின்; அதுவும் பொருத்தமறப்புகன்றதாம், எவ்வகையானே அசித்தத்தன்மையா மென்பதறையத்தக்கதன்றே, ஆண்டறைந்த இலக்கணத்தாலாகாதாம், விருத்தவசிதவகையா லுரையாட்டப்படுவதற்கு அவ்வாறுகற்பிக்க முடிதல் கூடுதலின். எவ்வாறானும் வகையற்ற அசித்ததன்மிக்கு அக்கற்பனை யமையாமையின், அவ்வாறு கற்பிக்க முடிதலும் அசித்திக்குண்டாக்கலாம் என்னற்க; எதனால் வகைவேற்றுமை விவத்தையிதனாலாமோ. கற்பிக்கமுடியும் என்னும் பதத்தானத்தில் உதிப்பிக்கப்படுதல் எனப்புரியிற் றுண்டலாமென்னற்க; உபாதியோடுகூட்டியதாந்தகைமை முதலனகற்பிக்கப்படுங்காலுணர்வினின்மைக்கற்பனை வாளாபோதலின் செய்யப்படமாட்டாதென அதன் அவ்வியாபகத்தன்மை அடைவுறலா மென்பது முன்னரே மொழியப்பட்டிருத்தலின்.

524. சூத்திரத்திற்சொற்ற அசித்த இலக்கண நீக்கம்.

இதனானே துணிபொருட்டுவ்விய மென்பது மறுக்கப்பட்டதாம், எவ்வாறேனு மொருவாறுகத்துணிபொருட்டில்லியத்தகைமை யாண்டும் பொதுப்படுதலின், துல்லியச்சிறப்பிற்கும் கூறியவகையாய் முடிவுபேறடைதலன்றி யயற்கமை தியின்மையின்; வேற்றிலக்கணங்களின்மாட்டோ சொற்ற தூஷண வகைகள் பொருத்தமாமாறு ஈண்டுப்புகுத்தற்பாலனவா மெனச் சாலும்விரித்தது.

525. விருத்தகண்டனத் தோடக்கம்.

மேலும், அசித்த இலக்கணச்சிறப்புகளில் அளவைவிலக்கிடுவது ஒழித்து ஒழிந்துள்ளதான் விலக்கப்படுவதுயாது அஃதென் ? ஒன்றால் விருத்தம், ஒன்றலயல் எனின் ? விருத்தந்தானென்னென்று கூறப்படும்? அங்ஙனமன்றே:—துணி

பொருளினின்மையானே வியாபிக்கப்பெற்றது விருத்தமென விளம்புவர்; அஃதலையாதாம். துணிபொரு ளின்மையோடு வியாத்தியும் முற்றினுமா? அநெள்பாதிகமா? சுபாவிகமா? சம்பந்தம் என்றற்றொடக்கத்தனவாய கூற்றுகளால் விசேட முற்றதோ டொற்றித்து நிற்றலே நிகழ்த்தப்படும்; அவ்வா ருயின் துணிபொருளின்மையோடு ஒருநிலைக்களத்திலே விசே ஷண விசேடத்தோடு கூடியதாம் விருத்தத்தன்மையென விளம்பப்பட்டதாம். எப்போழ்திங்ஙனமாமோ அப்போழ்து துணிபொருளின்மையின் ஒருநிலைக்களத்திருத்தலே ஹேது விற் கடக்கமிலாமையிலாற்றலாம் என அம்மாத்திரமெழுப் பத்தக்கதாம், மடமையேயடை யிடல்; எனவே அநைகாந்தி கமே யிஃதாம்.

526. அநைகாந்த விருத்தங்களின் வேற்றுமை விளுவிலக்கம்.

அற்றேல், துணிபொருளின்மைச் சம்பந்தம், விருத்தம் அநைகாந்தம் என்னுமிரண்டன்கண்ணு முளதாமெனினும் பொருணெறியான் இயற்கையாமிது விருத்தத்தின்கண்ணே யென்னும் இத்துணைமாத்திரஞ் சிறப்புக்கூறும் வேட்கை யால் விருத்தத்திற்கு அநைகாந்திகத்தினும் வேற்றுமை விளம்பியதாம் எனின்? இங்ஙனமியையாதாம், விடைவிடுத் திருத்தலின், பொருணெறியானே இச்சிறப்புப் பொருந்துவ தாயினும் கிளப்பத்தகாததாமென வுபேக்ஷிக்கத்தக்கதா மென்றுரைக்கப்பட்டதாம்; அங்ஙனமன்றே:—இஃதினது சாதகமாகாதாம், இத்துணிபொருட்பொருட்டு விருத்தத் தன்மையுண்மையின் எனப்புகன்றபழி விருத்தசத்தார்த்தக் கூற்றில் அதிக அடைநிகழ்த்தி நியாயத்தான் பரிகரிக்க முடி யாமையின். இதனானே அநைகாந்திகத்தில் ஐயப்பாட்டாற் றொடங்கூறலாம், விருத்தத்தின்மாட்டோ இன்மைத்துணிபா

லென்னுஞ் சிறப்பாலிவற்றை வேற்றுமையாக விளம்பல் கூடும் என்பதற்கு மிடங்கிடையாதாம். அனுமிதியின் காரண மின்மையே ஹேத்வாபாஸமாம், அனுமித்தி காரணமும் ஒன்று வியாத்தியாம், அதனால் அதனின்மைக்குத் தோடத்தன்மை யுண்மையின் அத்துணைமாத்திரம் அறிவுறுத்தற் பாலதாம் அதுவும் ஹேத்வாபாஸத்திற்கு விபக்க வேற்றுமையைக் கிளப்புகை மாத்திரையானே யறியப்பெறும், ஆகலின், அனுமிதி ஹேது வியாத்தி யுணர்வுகளின் இன்மையை யுணர்த்தற் பொருட்டு ஐயத்தையும் வியதிரேகத் துணிபையும் கிளப்பியபோதினும் அவைகடா மெவணிருந் துண்டாயின வென்புழி விபக்க சம் பந்தமாத்திரம் நியதமாய வதன் சம்பந்தம் என்பவை யொரு தலையா யுரையாடத் தக்கனவாமென்க, எனவே அச்சம்பந்த மாத்திரமே யுளதாதலாகாண், வியாத்தி யதனுணர்வுகளி னின்மைக்குக் குறியா யுண்மையிற் கிளப்பத்தக்கதாம் மற்றவற்றா லாற்றியது சாலும்.

527. அறைய வவாவாத நியம அநியமப் புலப்பாட்டி னீக்கம்.

லகாரபேதப் பிரயோகத்தில் அவ்வவ் விலகாரங்களாற் கால விடய விசேடம் விளம்பலே போலும், வேற்றுமைக ளாற் பாலெண்முதலியவை யறிவிக்கப் படுவதே போலும், மலை தியுடைத் தென்பதாதியின் கண்ணே தருமியாதிகளைச் சாற்றலே போலும் இது பொருந்துவதாம்; ஆண்டுப் பதப் பிரயோகத்திலாதல் விசிட்டபோதனத்தின் கண்ணுதல் வே றோராற்றா் பெறப்படுவனவாய் கருத்திலா விடயங்களாய அவற்றின் போதன மெங்ஙனமாமோ அங்ஙனம் ஈண்டும் வியாத்தியின் கருத்திலா விடயத்தன்மையேலோ அஃதை காங்கிகப் பொதுமையானேயாம், அன்றாயினோ அறைந்த தோடம் விலக்காமையானேயாம்.

528. வேறு கண்டனம்.

அநைகாந்திக்த் தன்மையைக் கிளப்பாதவனுற் முனுதல், அறியாதவனுற் முனுதல் விருத்தத்தைக் கிளப்பவு முடியாது அறியவுமுடியாது அதனியண்டிப் பிழைக்குந்தன்மை யுண்மையின், நிக்தூடணமாகாதாம், விசேடியத்தை விளம்பல் விசேடியத்தை யுணர்தலிலாது விசிட்டத்தை விளம்பலும் விசிட்டத்தை யுணர்தலும் முடியாதாதலின். இவ்வாறு பிறவிடத்தும் விசேடியத்திற் காற்றலுறுங்கால் விசேடணத்தின் சாதகமின்மை தானே ஊகிக்கத்தக்கதாம்; அஃதெங்ஙனம்:— இது சாதகமாகாதது சாதாரண அநைகாந்திகத்தன்மையான் என்பதன்கண்ணே சாதாரண மென்னும் விசேஷணத்தில், சபக்க விபக்கத் திருக்குந் தன்மையான் என்பதன்கண்ணே சபக்கத்திருக்குந் தன்மை யிருப்பினும் கிளப்புவதில் (அப்பிரயோஜகத் தகைமை) ஆம் இங்ஙனம் அசாதாரணத்தினுமாம், இது சாதகமாகாதது ஜாதித்தன்மையின் என்புழி ஜாதித்தன்மையைப் பகுத்தபோது தனது வியாகாதவிடை ஜாதி யெனவாம், ஆகவே எல்லாம் அசத்து ஞேயத்தன்மையான் என்பதாதி அஜாதி ஜாதி சாதாரணமாய தனது வியாகர்த்தத் தகைமைக்கே மாசுதரு மாற்றன் மாண்பான் விடைத்தகைமை விளம்பலில் (அப்பிரயோஜகத் தகைமை) ஆம்.

529. விருத்த இலக்கண கண்டனம்.

மேலும், துணிபொருள் விபரீதமென்பது துணிபொருளின்மையெனப் பொருள்படுமாயின், இன்மை வடிவமாகவே துணிபொருள் சிலபாற்சிவணுங்கால் ஆண்டு அதன் விபரீதத்திற்குப் பாவப்பான்மை யுண்மையின் அஃதிலக்கணத்திற் கவ்வியாபகத் தகைமையாம். விபரீத சத்தத்திற்கு விரோதி மாத்திரமாகப் பொருட்படுத்தின் பாவ அபாவ இரண்டன்

வியாத்தியாமென விளம்பற்க; பாவ அபாவங்களின் விரோதம் கூடியிராமை யென்றன்றே கொள்ளுதல், இராமையும் ஒற்றுமை நிடேதமாம், அதுவும் பாவ அபாவங்களின் அன்னியோன்னியங்கட் கிருப்பின்மையேயாம், அவற்றிற்குப் பரஸ்பரம் நிடேதரூபத்தன்மை யுண்மையின். அவ்வாறுகவே பாவ அபாவங்களின் சொரூபத்தைக் கோடாக்கால், தனித்தனி யவ்வியாத்தியாம், ஒருங்குற்றதற்கோ அசம்பவமேயாம். பாவ அபாவங்களின் விரோதம் விளம்பலின் விலக்கம் மேன் மிழற்றுவாம்.

530. அநைகாந்திக கண்டன ஆரம்பம்.

அன்றியும், இலக்ஷணத்துட் புகுந்த வியாத்தி பதத்தால் விலக்கத்தக்கது யாதுகொல்? அநைகாந்திகமெனக் கூறின்? அவ்வநைகாந்திக மென்பதுதா னியாதோ? அங்ஙனமன்றே:— அநைகாந்திகமென்பது பிறழ்ச்சியுடையது எனல் அலக்ஷணமாம். பிறழ்ச்சி யுடைமையும் விபக்கத்திருக்குந் தன்மையேல் அக்கால் விருத்தத்தினும் வழக்காம், அசாதாரண அநைகாந்திகத் தவ்வியாத்தியுமாம். இனிச் சபக்கவிபக்கத் திருப்பின்மையேலாயின் அப்போழ்து சாதாரண உதாசரணத் தவ்வியாபகத் தன்மையாம்.

531. விகற்ப விலக்கம்.

இனிப் பிறழ்ச்சியுடைமை சபக்கவிபக்கப் பொதுத் தகைமை கருதிபதாகும், அதுவும் உடன்மாட்டான் பொது அநைகாந்திக வியாபிநையாம், எதிர்மறையாற் சிறப்பநைகாந்திக வியாபிநையாம் என வியம்பப்படும், சபக்கவிபக்கப் பொதுமைமாத்திரம் உடன்பாட்டானுதருல் எதிர்மறையினுஞ்சிறுன் சிறப்புடைமைபானே விளம்பும் வேட்கையிலதாம், ஆகலின் பொதுச்சிறப்பு அநைகாந்திக மிரண்டன் கவர்ச்சியு

மினிதாயாம். விவாதகற்பனை யெவையும் கணிகமாம் உண்மையாதலின் என்பதனுபசங்காரியத்திற்கும். சபக்கவிபக்க சூனியத்தன்மையானே சபக்கவிபக்க இருப்புண்மையின்மையான் ஒப்பாம். இவ்விசாரிக்கத்தக்க வியாக்கியானம் ஆண்டுக் கேவலந் தொடக்கத்தேயாகுக ஆயினும் எதிர்மறையாற் சபக்கவிபக்கப் பொதுத்தகைமை சபக்க அவ்வியாபகநல்லேதுவாந் தூமவிசேடாதிகளிற் செல்லுகின்றமையின் அதிவியாபகத் தன்மையன்றேவாம். இத்தோடத்தை விலக்கற்பொருட்டு எல்லாச் சபக்கவிபக்கப் பொது அநைகாந்திகம் எனக்கூறின், அப்போழ்து எதிர்மறை மாத்திரத்தான் எல்லாச் சபக்கவிபக்கப் பொதுமை புகையனுமானுதி மேனடவா தொழிகுகதான், உடன்பாட்டானே எல்லாச் சபக்கவிபக்கப் பொதுமையானது விபக்கசபக்கத் தேகதேசஞ் செல்லும் பொது அநைகாந்திகமாம் சுத்தம் நிச்சியமன்று காட்சிப்படுதலின் என்றற் றொடக்கங்களைக் கவரமாட்டாது என்பதாக அவ்வியாத்தியாம் ஆகவே ஒன்றைக்கருத மற்றொன் றிழந்த தன்றேவாம்.

532. அங்கீகரித்துந் தோடம் ஆங்கே நிலைபேறல்.

மேலும் உடன்பாடெதிர்மறைகளான் எல்லாச் சபக்கவிபக்கச் செல்லை யுண்மையின் புகையனுமானுதிகளில் அதே வழக்காம் சிறப்புருவத்தான் அவற்றைக் கூறும் வேட்கையின்மையின்.

533. இலக்கணவிகற்ப நீக்கம்.

அன்றியும், எல்லாச் சபக்கவிபக்கப் பொது அநைகாந்திகம் என்னுந் தொடர்மொழியில் எல்லாமென்பது விபக்கத்திற்குஞ் சிறப்பாயின், விபக்கத் தேகதேசத் திருப்பதாய்ச் சபக்கவியாபியாய்ச் சாதாரண அநைகாந்திக மென்னும், மும்

மையணு, காரியஅவயவத்தோடுற்றது, பெருமை யுடைமை யான், குடம் போலும், என்பதாதிக்கு இவ்விலக்கணம் அவ் வியாபகமன்றேவாம். இனி எல்லாமென்பது விபக்கச் சிறப் பன்றுமாலாயினே இன்மைபற்றி விபக்க சர்வசபக்க சாதார ணம் அநைகாந்திகம் என்னுமிது விபக்க ஏகதேச மாத்திர விருத்தியாய விருத்தமென்னும், கிதி, நித்தியம், அவயவத் தோடுறுதலின் என்பதாதியிற் சென்றமையின் அதிவியாபக மாம் என்க.

534. வாசகயுக்தி நீக்கம்.

மாசுறுதெங்ங னிவ்வாசகயுக்தி. சபக்கவியக்க சாதார ணம் அநைகாந்திகம் எனப்புகலில் எல்லாம் நன்கு கவரப் பெறுகின்றது உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் என வாம், ஆகவே யெங்ஙனம் சபக்ஷவிபக்ஷமற்றதாய அநுபசங் காரிக்குச் சபக்கத்திலாதல் விபக்கத்திலாதல், உடன்பாட்டா லாதல் எதிர்மறையானுதல் பொதுமையாதல்கூடும்? அவை யே யிலாமையின். சபக்கத்திலும் விபக்கத்திலும் சாதாரணத் தன்மை இருபாலும் சொரூப அனுகமம் எனச் சொல்ல விழையினே அஞ்ஞான்று அசாதாரண அநைகாந்திக அவ்வி யாத்தியாம். இனி அவ் விருபாலும் அசத்துவம் அஃதா மென அறைய விருப்பாமேலாயினே எல்லா அவ்வியாத்தி யாம், என்னே, அதனசத்துவத்திற்கு அதன்றருமத்தன்மை யின்மையின். இனி யதன் உபயத்திருக்கும் இன்மை யெதிர் மறைத்தன்மையாதல், அதனுபய சம்பந்தத்துன் எவ்வின்மை யுளதோ அதற்குப் பற்றுக்கோடா யிருக்குந்தன்மையாதல் கருதிடினே, அப்போழ்தும் சாதாரண உதாகரண அவ்வி யாத்தியாம். இனி அதனுபயப் பொதுமையென்பது ஒன் றன்கண்ணே எவ்வுருவமா யிருக்குந்தன்மை யேதுவிற்கா சத்துவமாதல் அசத்துவமாதல் அவ்வுருவமா யிருக்குந்தன்

மை மற்றதன்பாலும் யாததுகூறப்படும்; படவே அவ்வியா பகத்தன்மைத்தோடம் அணுகாதாம் என்றெண்ணுகின்றாய் கொல்! இங்ஙன் இயையாதாம்; ஏதுவின் ஏகரூபமாயிருத் தற்குச் சபக்கவிபக்கங்கள் ஆசிரயங்கள் என முக்கியமா யாண்டு வசனப்பொருள் பொருந்தாதாம். ஏகரூபத்தன்மை யை யுடைய ஹேதுவிற்கு அவைகள் ஆசிரயங்கள் எனவா யின் என்னமாலோவெனின்? என்னும், அங்ஙனயின் அசா தாரண அவ்வியாத்தியாம், ஆண்டுச் சபக்கத்திலும் விபக்கத் திலும் ஹேதுவிற் கசந்துவ முண்மையினனே அதனாசிர யத்தன்மை சம்பவியாமையின். ஆகலான் சபக்கத்திலும் விபக்கத்திலும் சாதாரணத்தன்மை ஹேதுவிற்கு அவைகாந் திகத்தன்மை பென்பது பொருந்தாததேயாம்.

535. முன்மொழிந்த ஹேவின் அனுவாதம்.

அசத்துவ பக்கத்தில் ஹேதுவிற்கு அவற்றைப் பற்றி யிருத்தல் கூடாமையின் சபக்கத்திலும் விபக்கதிலும் என ஏழாம் வேற்றுமையைக் குறிப்பிட்டது அசங்கதமாதலின். அதன் இன்மையை யபேக்ஷித்து ஆசிரயத்தன்மையின் பொ ருத்தமாயவழி ஹேதுவிற்கு அதனாசிரயத்தன்மையில் வந்த தென்னே? வருகதான்சிறிது; ஆயினும் சாதாரண வுதாகர ணங்களில் ஹேதுவின்மை யபேக்ஷையால் சபகக விபக்கங் களில் ஆசிரியத்தன்மை ஏழாம் வேற்றுமைப் பொருளன்றும்; மற்றோரு, ஏதுவின் அபேக்ஷையானேயாம் என்க, என்னின் அநேகார்த்த முடிவுபேரயினோ, வாக்கியத்திற்கு இலக்கண அவ்வியாபகத்தன்மை யடைவேயாம்.

536. சாமானிய விசேட இலக்கணங்களின் நீக்கம்.

மேலும்; சபக்கவிபக்க சாதாரணத்தகைமை பொதுவ தாக இலக்கணமெனப் பொதுச்சிறப் பநைகாந்திக பேதமி

ரண்டன் நற்கவர்ச்சியின் பொருட்டுக் கூறப்படுமேலாயினும், அப்போழ்து சபக்க விபக்கங்களில் அன்னியத்தகைமை முதலியவற்றுல் ஹேதுவிற்குப் பொதுமையுளதாம் பிறவிடத்தும் என அதிவியாத்தியாம். இனி அதிவியாத்தியை யகற்றவவாவி அன்னுவய வியதிரேகங்களானே சபக்கவிபக்க சாதாரணம் அநைகாந்திகம் எனக்கூறும்பக்ஷத்தில், அக்கால் உடன்பாடெதிர்மறைகளின் தனித்தனி சேர்ந்த விகற்பம் பொருந்தாமையானே அவ்வியாபகத்தன்மையினடைவாம்.

537. வேறுவிதத்தானே வியபிசார விலக்கம்.

ஆகுக இது, தன்னியற்கைவிரோத ஆசிரயங்களால் ஆசிரிதமாய சபக்கவிபக்கத்தன்மை, சபக்க விபக்கப் பொதுமையாம் என அறையும் வேட்கையுறுதலாம் உறவே அவ்வியாப்தியும் அதிவியாப்தியும் இன்றும்; அதுவும் அசத்தாம், அங்ஙனமன்றே:— உளதாகுக ஆண்டுச் சர்வபத விசேஷணங் கோடல் வீடற் பக்கத்திற்பகர்ந்த தோட அடைவாம், சர்வசப்தத்தைக் கோடின் தூம அனுமானுதிகளில் வழக்குமாம். தன்னிபற்கைவிரோத சப்தார்த்தமாய ஒன்றற்கும் தொடர்ந்து நிற்றல் சம்பவியாமையின், இலக்கணந் தொடர்ந்திராமை தோடமாம்; அவ்வவ் வின்மைகட்கேயன்றே விரோதம் உடனிராமை இராமையும் இருப்பின் நீக்கமாம், அது பாவத்திற்கு அபாவ சொரூபத்தினும் வேறு அன்றும், அபாவத்திற்கும் இராமையினது பாவ சொரூபத்தினும் வேறு அன்றும்; மற்றே, அதேபாவத்தின் சொரூபம் ஆண்டுத் தன்னியற்கைவிரோத ஆசிரயமாம் என்பதற்குப் பயனுடைமை ஒருசிறிதும் தேடினும் அகப்படாதாம். தன்னியற்கை விரோதாசிரயம் என்னும் வசனம் ஆராயத்தக்கதாம், தன் இயற்கைகட்கு விரோத விசேஷணமாகி வந்தவழி ஆதேய கோடி புகுதலுண்மையின் அடையடுத்த சொற்பொருள்

அடை கடிதமூர்த்தியாக வமைதலின், அதற்கு ஆகாரத்தன்மை கூடாமையின், அதிவியாபகத் தன்மையுமாம், உடன்பாடு பற்றிச் சபக்கத்திலும் எதிர்மறைபற்றி விபக்கத்திலும் நிகழ்வதற்கும் கூறிய இலக்கணங் கூடலின். தன்னியற்கை விதிக்கப்படாத விரோதத்திற்கு ஆச்ரய மறைவதேலாயினும் சர்வானுமான வியாபகத்தன்மை அநைகாந்திக இலக்கணத்திற்கு அடைவுண்டாம்.

538. மூன்றுவது கற்ப நீக்கம்.

தன்னியற்கையுபலக்ஷித விரோதம் அங்கீகாரமாம், அதனல் விசேஷணபக்ஷத்திற் பகர்ந்த தோடத்திற் கவகாசமின்றும் என அறையற்க; தன்னியற்கைகளால் விரோதமாத்திரமாதல் அதன் வியத்தியாதேனுமாதல் குறிக்கப்படுவதேலாயின்; முதலாவதில், தன்னியற்கைகளால் எவ்விரோத மாத்திரமே குறிப்பிக்கப்பட்டதோ, அதுவே அபலும் என அறைந்த அதிவியாப்தி அவ்வவத்தையதேயாம்; தன்னியற்கைப் பதங்கோடல் வாளாவுமாம். இனியிரண்டாவது, அக்காலிலக்கணத்திற்குத் தொடர்பின்மையாம், ஈண்டினிது கவ்வப்பெற்ற ஒருவிரோத வியக்தி விசேடத்திற்கு வேறு விரோத வியக்தி வடிவமாகாமையின். இனி யெத்துணை யவாவப்படுகின்றனவோ விரோதவியத்திகள் அத்துணையன உபலக்ஷிக்கப் பெறுகின்றன வெனக் கூறப்படுமாயின், உபலக்ஷிக்கப் பெறுகின்றன வின்றுவென ? (உபலக்ஷிக்கப் பெறுகின்றன வேயாம்) மற்றே, யாதேனும் தொடர்ந்தவடிவத்தாஞ? அல்லது தனித்தனி விலகியவடிவத்தாஞ? முதலதில் உபலக்கண உபங்கியாசப் பிரயாசத்தால் என்னை யென்னும் அதுவே கூறத்தக்கதாம்; அதுசம்பவியாதாம், விரோதமாத்திரத்திற்கு அதிவியாபகத்தன்மை வருதலின். தனித்தனி பரித்து வியத்திகளின்வடிவம் உபலக்ஷிக்கப்படுமாயின் அவ்

வாறே அவற்றிற்கு இலக்கணம் புகுதலாமெனக் கூடியவற்றிற்கு இலக்கணத்தன்மையேல் சர்வ அவ்யாப்தியாம், தனித்தனி இலக்கணத்தன்மையேலோ பரஸ்பர உதாகரண அவ்யாப்தியாம்.

539. அநைகாந்திகத்திற்கு அயலிலக்கண மகற்றல்.

சபக்கத்திலேயும் விபக்கத்திலேயும் இராதது யாதோ அது அநைகாந்திகமென இலக்கணம் அமைக, அதன் சாதாரண அசாதாரண அநைகாந்திக உதாகரண வியாப்தி ஆமென ஆகுகதானிது; இதுவும் அலக்ஷணமாம், நல்லேதுவாய தூமாதியின்மாட்டும் சென்றமையின். இது விபக்கத்திலேயே இராததாம், எல்லாவகையானும் ஆண்டிறுமையின்; சபக்கத்திலேயே யிருப்பதும் ஆகாதாம், பக்கத்திலும் இருக்கின்றபடியால். இனிப்பக்கத்திருப்பதெனச் சிறப்பிக்கின்றீர், ஆயினும் நல்லேதுவை விட்டுடிபாதாம், பக்கத்திருக்குந்தன்மையானே சபக்கத்திலேயே யிருப்பின்மையின், அசித்த அநைகாந்திக சங்கர அவ்வியாத்தியுமாம். இனிப் பக்கத்தினும் வேறுற்ற வென்னுஞ் சிறப்பைப் பெய்தியேல் அஞ்ஞான்று, அடைவற்றதை யகற்றுதல் அமையாமையாம். பக்கத்தயலற்றது சபக்கமாதல் விபக்கமாதல் அகப்படுத்தப் படாதாமெனச் சபக்கத்திற்கும் விபககத்திற்கும் எங்கும் விலக்காத விசேடணமேயாமிது அவற்றிற்கு எங்ஙனம் பொருந்தும். இனிப்பக்க வியதிரிக்தத்தில் நிகழ்வது என விசேடிப்பையேல், அப்போர்து அசாதாரண அவ்யாப்தியாம், இது பக்கவியதிரிக்தத்தில் நிகழ்வதாகாதாம். இனிப் பக்கவியதிரேகத்தால் என விசேடணந் தருதியேலாயின் அக்காலும் பக்ஷவியதிரேகமாய பக்ஷவிரகரூபத்திற்கு உபலக்கணத்தனமையாதல் ஹேதுத்தன்மையாதல் இரண்டும் பக்கமாத்திரவிருத்தியாய அசாதாரண அநைகாந்திகத்திற் சம்பவியாதாம்,

பக்கவின்மைக் காண்டசம்பாவத்தானே யாமென்ச. நிஷேத்தி விசேஷணத்தன்மையேலோ இதற்கு நல்லேதுவின்கண் ணே செல்லுகையாம்.

540. பிரண்டு தூடணம்புகுத்தலும் அயல்வினை வகற்றலும்.

இதனுற் பக்கமின்றி பக்கத்தை விடுத்து, என்பதாதி யக்கரங்களாற் சிறப்பாகச்செப்பல் சிதைக்கப்பெற்றதாம். இனிப்பக்க விதிரிக்கத்தில் நிகழ்கின்றது என்னின், அப் போழ்து சபக்கத்திலே விபக்கத்திலே இராததுயாதோ அஃ தனைகாந்திகமாம், ஆகவே அசாதாரணத்திற்கும் வியாப்தி யாம், நல்லேதுவின்கண்ணும் அடைவின்மையாம் என எண் ணுதிகொல்! அக்கான் மிகமிகவும் மயங்கினுய்தான்! இவ் விதமாமேலாயின் உடயத்திற்குஞ் சங்கிரகம் ஒல்லாதாம். அசாதாரணத்தி லாண்டு பக்கவியதிரிக்கத்தில் நிகழ்கின்ற தேலாயின், இதுசப்பவியாதாம், பக்கமாத்திரத் திருக்கும் தற்கு ஒருகாலத்தினும் பக்கவியதிரிக்கத் திருப்பின் சம்பா வனை ஒவ்வாமையின்; சாதாரணமாய நிச்சிதமாஞ் சபக்க விபக்க விருத்தியினும், பக்கவியதிரிக்கத் திருக்குமேல் என ஏற்பொருள் காண்கிலேம். நிச்சிதமாய தருத்தன்மைவாய்ந்த அசோகின்கண்ணே, அசோகவிருக்ஷ மாகுமேல் எனப் பிர யோகித்தல் முடியாதன்றே; அஃதெவ்வே துவினுன்? ஐயத்தா னிலேபெற்றனவாய இருகோடிகளி னின்றும் ஒரு கோடியின்கண் ணதுபற்றில் சிறிது தருமத்தைக் காட்டும் பொருட்டு ஆரோபிக்கப்பட்டதில் ஏலென்பது பிரயோகிக் கப்படும்; நிச்சிதமேயாய வத்துவின்கண்ணினின்றும். ஆகலின் அசாதாரண அனைகாந்திக சங்கிரகப் பொருட்டு ஏல் என்ப தாதி கொண்டதாம்; அது சாதாரணத்தையும் வியாபித்த தாக ஆகாதாம்.

541. வேறு வகையானே அநைகாந்த விலக்கண நீக்கம்.

இனி விபக்கத்திலே சபக்கத்திலே யாது ஹேதுப் போலி அது அநைகாந்திகம் எனநினைதியேல், அதுவும் பொருந்தாதாம், அநைகாந்திகத்தன்மை துணியாததற்கு முன்பே ஏதுப் போலித்தன்மைத் துணிபாமேலாயின் அதனானே ஹேதுவிற்குச் சாதகத்தன்மையின்மை துணியப்பெற்றதா மென அதனுபஜீவியாய அநைகாந்திகத்தன்மை யுபந்நியாசத்தா லுளற்றி முடித்தது சாலும். இனி முன்பே ஹேதுப் போலித்தன்மை துணியப் பெறுவ தில்லையாயின், அக்கால், இலக்கணத்திற்குத் துணியப் பெறுமையாம், அடையாய ஹேதுப் போலித்தன்மையின் றுணிபின்மையின்.

542. அநைகாந்திகத்திற்கு அயலாரு யிலக்கணமிரித்தல்.

இனி, அசித்த ஷ்ருத்த சற்பிரதிபக்க பாதங்களினும் அயலேதுப்போலி யநைகாந்திகம் எனக்கூறுதியேல், அதுவும் கூறிய நியாத்தானே நிராகரிக்கப்பட்டதாம். மேலும், இவ் வண்ணம் அசித்தியாதி கலந்த அநைகாந்திகத்தின் சங்கிரகம் ஆகாதாம். அது அசித்தாதித் தன்மையானே ஹேதுப் போலியாகுமென அறையொணுதாம்; அயல் அநைகாந்திகம் போல விபக்கத்துட் செல்கையாகிய வற்றானும் உற்பாவன முளற்றுழி தோஷத்தன்மை சம்பவித்தலின்.

543. வகைவேறுயாட்டானே அநைகாந்தலக்ஷண மகற்றல்.

இனி சாதாரணத்வ அசாதாரணத்வங்களின் இன்மைகளால் சேர்ந்தவற்றால் சிறப்புற்றதினும் அயலாந்தன்மை சாதாரண அசாதாரண அநைகாந்திகவியாபி சாமானிய இலக்கண மாகுகவெனச் சிந்திப்பாயேல், அவ்வகையானும் ஆகாதாம், வியதிரேக மிரண்டன் சிறப்புற்றதினும் அயலாந்தன்மையேலாயின் அந்தச் சிறப்புற்றதன் விசேடியத்தினும்

விசேஷணத்தினும் இது உளதாம் என அதிவியாத்தியாம். வியதிரேக பிரண்டுற்றதன் உபலக்ஷணமாயின் அக்காலுட்பு லக்ஷிய சொரூபங்கட்காம், பேதத்தானே யுபலக்ஷியத்தன்மை வேலாயின் அப்போது வியதிரேகமும் சிறப்புற்றதற்ற அதன் கண்ணிருக்கும், யாது சிறப்புற்ற தற்றதேயாமோ தன்மாத்திரம் சிறப்புற்றது இலதாம் இவ்வண்ணம் அபேதத்தானும்; பேதாபேதத்தான் அதுவேயெனின்? அன்றும், அதுவல்லாததும் என்னும் வழக்கு ஆங்கேயுறுதலின். அதனினும் அத்தியந்தம் அன்னியப்பான்மை இலக்கணமெனிலோ? ஆகாதாம், அசித்தியாதி கலந்த அநைகாந்திக உதாகரணங்களில் வியாபியாமையின்; சொரூபங்கட்கும் அநந்தத்தன்மையானே அதன் எதிர்மறையையுடைய அயற்றன்மைத் துணிபின் முடியாமையாம், அவற்றிற் கனந்தத்தன்மையுண்மையின். அதன் இடையில் வீழ்ந்த சிலபல அன்னியத் தகைமையேலோ பிறுண்டு சிலபலவற்றே வழக்கு ஆங்கே நிலைபெறுமாதலின். உபலக்கணத் தன்மையேலோ இரண்டன்மையின் அன்னியத்தன்மைப் பிரதியோகி கோடி புகாமையால், அது சங்கிருகித்த வியதிரேகப்பக்கத்தன்மை வீழ்தலின். இவ்வண்ணமுறவே வாணுதி காணுதலவனல், இத்தகைய வடிவினதாம் கோத்தன்மையின் வாணுதிவிஷாணித்வ அனுமானம் செய்யத்தக்கதென வருதலின். (விஷாணி - கொம்புடையது) ஹேதுப்போலி யயலும் இங்ஙனம் என்னேயினிதுகவரவில்லே யென்னுஞ் சிந்தையின் இதரங்களினின்றும் விலக்கியதருமம் இவற்றிற்கு யாதுதான் கூறத்தக்கதாமோ அவ்விலக்கணமேகூறவேண்டியதாக அடைதலின்என்க.

544. அநைகாந்திகத்தின் அயல் இலக்கண நீக்கம்.

அசித்தத்தன்மை முதலிய வகையினும் அயல்வகையானே ஹேதுப்போலி அநைகாந்திகம் எனின்? அறைதி

யேல் ஆயின், அவ்வகையி னுணர்வின்றி அசித்தியாதி வகை யினும் அயற்றகைமை எதனது ஞேயத்தன்மையாம். மேலும் இங்ஙனமாயின் அசித்தத்தன்மையினும் அன்னியம் அநைகாந்திகம் எனவியற்றி விருத்தாதிகட்கும் அநைகாந்தி கத்தன்மையானே நற்கவர்ச்சியாக முடியவே விருத்தாதி போலும் ரூபாந்தர நற்கிராகிய மல்லனவாய சாதாரண அசா தாரணங்கட்கே எவ்விவ்வகையானே நற்கவர்ச்சி செய்தியே லாயின், ஆண்டு நியதமான ருசியே தினக்கு நியந்தாவாம். எக்காற்ருனீர் அசித்தாதி அயலதாக அநைகாந்திக லக்ஷணம் புரிகுவீரோ, அக்கால் அசித்தாதி பேதகப்பிரகாரத்தை யறி யாமல் அதனயலாந்தன்மை அறிய முடியாதாம், என அதனை யறையவேண்டியதாகவே அதனைப் பற்றினவாக எத்தோ ஷங்கள் காண்பிக்கப்பெற்றனவோ அவற்ருலும், விருத்தியயற் றன்மையிற் கூறிய தோஷங்களாலும், நிராகரிக்கத் தக்கவ ராவீர்.

545. அநைகாந்திகத்திற்கு லக்ஷணாந்தர நீக்கம்.

துணிபொருளானே அவ்வியாப்பியத் தன்மையோடுற்று அதனபாவ அவ்யாப்தமாவது அநைகாந்திகம் என்பதும் ஆகாதாம், துணிபொரு ளவிசிட்டத்திலும் சென்றமையின், சிறப்பாயிருக்கும் துணிபொருள் அவ்வியாப்பியத்தன்மை யறிவினாலும்; முதலாவது அவ்வியாப்பியத்தன்மை யசித்தியே உபஜீவிய தூஷணமாம். விசேஷணங்கிசத்திற்கேதான் சாத கத்தன்மை யின்மைச் சாதன சாமர்த்தியத்தான் வியர்த்த விசேடியத் தன்மையுமாம். வத்துகதி வியாபகமுற்ற தன் மாத்திர முடிவுபேறுடையதாதல், அதனின்மையுற்ற தன் மாத்திர முடிவுபே றுடையதாதல், அக்கால ஞயமுற்ற அன் யதர வியாபகத்தன்மையேல், சத்தம், அநித்தியம், சுரோத் திர விசேடகுணத்தன்மையால், என்பதாதிய சாதாரணத்தில்

அகன்றிருத்தலினுனும். உண்மையாகச் சாத்திய அவ்வியாத்தமேல் அக்காலத்திலுந்தான் சற்பிரதிபக்கமாகத் துணியப்பெறுத சாத்திய வியாத்தியையுடைய பிரகரண சமத்திற் சென்றமையானும் என்க. இதனுனே அனைகாந்திகம் பிறழ்ச்சியுடையது என்பது நிராகரிக்கப்பட்டதென் றுணர்ந்துகொள்க; பிறழ்ச்சியுடையதைக் கூறியவகையினும் அதிகமாகக் கூறுவதற்கு மூடியாதாகலின் என்பதாம்.

546. சற்பிரதிபக்ஷ கண்டன ஆரம்பம்.

மேலும், கூறிய விலக்கணச்சிறப்பாற் பிரமாண விலக்குதலின் அன்னியத்தான் விலக்கப் படுவதுயாது? யாதாவது சற்பிரதிபக்கமா? யாதாவதயலா? எனின். யாது மறுத்து சற்பிரதிபக்கம்? அங்ஙனமன்றே. சற்பிரதிபக்க விலக்கணம் வினவ, சமானபல மூணர்த்தப்பெற்ற தூணிபொரு ளின்மையுடையது ஹேதுவாக வுடன்பட்டது சற்பிரதிபக்கமெனக் கூறின்; அஃதாகாதாம், இவ்வாறும், ஈண்டென்னபலம் விளம்பவினைந்ததோ! சாமர்த்தியம் என்குறியேல், அஃதெவ்விடத்தில் காரியத்தில், ஆண்டு எல்லாக்காரியங்களிலு மில்லையாம்; சற்பிரதிபக்க வேதுக்கட்கு வெறு விடயவுணர்வையுண்டாக்குவதாக எல்லாக்காரியத்திலும் ஒப்பாற்றலுடைமையொவ்வாதாகலின். எங்கேனுமொரு காரியத்திலென்பதும் இயையாததேயாம், பிரகிருத சாத்தியப்பொருட்டுப் புலப்படும் அசித்தத்தன்மை முதலிய தோடத்தாலும் பிரமேயத்தன்மைப் பிரதிபாதனுதிகளிற் சமர்த்தமாய மாறேதுவாற் சற்பிரதிபக்கத்தன்மை யடைவால் எல்லா ஹேதுக்கட்கும் சற்பிரதிபக்க ஹேதுப்போலித் தகைமை யடையமுடியுமாதலின். முன்னேது சாத்திய அபாவமறிவிக்கும் வடிவ காரியத்திலு மிலையாம், பின்னேதுவிற்கு இவ்வண்ணம் சற்பிரதிபக்கத்தன்மை யின்மையெய்தலே தற்சாத்திய சாதகத்தன்

மை யடைதலின். மாறேதுவிற் கென்னின்? இன்றும், அம்மாறேதுவிற்கு ஆற்றல் இல்லாமையானே ஒப்பாற்றலுடைமை ஒவ்வாமையின். இவ்வண்ணமே ஹேதுசாத்தியத்தின் இன்மையுணர்த்துவதிலு மில்லையென்பதாம்.

547. தார்க்கீகர் உடன்பட்ட பலசப்தார்த்த நீக்கம்.

இனி, தனது தனது பிரகிருதசாத்தியத்தில் எச்சாமர்த்தியம் பக்ஷ சபக்ஷத்திலகி விபக்ஷத்துவிலகிப் பாதிகப்படாவிடயத்தன்மை வடிவம் ஆமோ அது சற்பிரதிபக்க ஹேதுக்களில் துல்லியமாம், அக்கருத்தானே இச்சமபலக்கூற்றும், அதனால் இது இயம்பப்பெற்றதாம். பக்ஷ சபக்ஷத்திலகி விபக்ஷத்தேவிலகிய பாதித விடயத்தன்மைகளால் ஒப்பானேயுணர்த்தப்பெற்ற துணிபொருளின்மை சற்பிரதிபக்கமென்பதாம். இது இயைபுடைய தாகாதாம், தோற்றுகின்ற பாகாசித்தித் தன்மையானும் மாறேதுவாற் சற்பிரதிபக்கத் தன்மை வழக்கான். எப்பக்ஷத் திருந்தபோதினும் அதற்குப் பக்கத் திருப்புண்மையின். பாகாசித்தத்தானும் சற்பிரதிபக்கத் தன்மை யுடன்படத்தக்கதேயாம் என்னற்க, புலப்படாகின்ற வேறுதோடத்தானும் அங்ஙனமாயின் சற்பிரதிபக்கத்தன்மை யுடன்படத்தக்கதே யாமன்றே! ஆகவே ஹேதுப்போலி வேறுறுதல் ஒப்பாதலின். சர்வபக்ஷம் எனப்புரியின் இத் தோடமையையாதாம் எனவியம்பற்க; யாண்டு ஒரே பக்கம் மாறேதுவில் அதன் சற்பிரதிபக்கத்தின் அவ்யாபனமாதலின். ஆண்டுப் பக்கத்திற்குச் சர்வ சப்தார்த்தத்தன்மை யின்மையானே, சர்வபக்ஷத் திருப்பின்மையான் உரைத்தவிலக்கணங் கூடாமையின். இதனானே எத்துணையெனவும் பக்கவிசேஷணத்தில் தோடம் கூறியதாகவே கொள்க.

548. சற்பிரதிபக்ஷ லக்ஷணத்தில் அவ்யாப்தி.

மேலும், அன்வயவியதிரேகிக்குக் கேவலவியதிரேகியா னும், கேவலவியதிரேகிக்கு அன்வய வியதிரேகியானும் சற் பிரதிபக்கத்தில் இலக்கணமிஃதில்லையாம். சபக்கத்தன்மை யோடு துல்லியத்தகைமை ஆண்டின்மையின். சபக்ஷசத் தையோடு துல்லியத்தால் என இலக்கணத்தில் அதனனுசார மாகச் செய்யத்தகாததேயாம் என்னற்க, அங்ஙனமாமேலா யின், அசாதாரண அநைகாந்திகத்தன்மையாகின நிச்சிதத் தானும் சற்பிரதிபக்கத்தன்மை வழக்காதலின். அன்வய வியதிரேகியானே அன்வய வியதிரேகிக்கும் கேவல வியதிரே கியானே கேவல வியதிரேகிக்கும் சற்பிரதிபக்கத்தன்மை யின்றும், மாறுகவேனும் என்னும் நியமம் அங்கீகரித்தற்கு முடியாதாம்; இரண்டினுக்கும் அறியப்பெறுத வேறு தோடத் தன்மைத் தசையில் ஒரு சம்பந்திதோஷம் அவசியம் அமை யவருவதால் எதற்கு வியாப்பியத்தன்மை பக்ஷதருமத் தன்மை, யுணர்ச்சி எனக்கு மயக்கமென்னும் புத்திபற்றி ஆராய்பவனுக்கு நிச்சயவுற்பத்தித் தடைவருவிப்பான் கேவல் வியதிரேகியின்கண் அன்வய வியதிரேகியின், அன்வய வியதி ரேகியின் கண்ணும் கேவல வியதிரேகியின், மாறேதுவின், சாமர்த்தியத்தை மாற்றமுடியாமையின். சற்பிரதிபக்கத் தன்மையின் தோஷத்தன்மை யங்கீகரிப்பதில் இதுவேதான் மூலம், யாதுதான், வியாப்தி பக்ஷதர்மத்தன்மை யுணர்ச்சி இதன்கண் ணுளதாக உண்டாதற்குத் தகுதிய துறுததாமோ வென்பதாம்.

549. சற்பிரதிபக்கத்தின் இலக்கணம் வேறுவிலக்கல்.

இனி, பக்கசபக்கத் திருப்புடைத்தாய் விபக்கத்தில்லா தாய்ப் பாதிக்கப்படாத விடயத்தன்மை கூடியதா வுணர்த்

கப்பட்ட சாத்தியவிபரீதம் சற்பிரதிபக்கம் எனக் கூறுதியேல்; கூடாதாம், நீக்கப்பட்ட பெற்றியதேயாதலின்; பக்கபதத்தில் சர்வசப்த விசேஷணங் கொடுத்தல் விடுத்தல் ஆம் பக்கத்தோ தில தோடமும் கேவல வியதிரேகி அவ்வியாபகத்தன்மைத் தோடமும் வருதலின். மேலும், சோதியை யசித்தவய லறை பவர்தம் மகத்தே சோபார்தியதாக நிச்சயமான போதினும் கூறியபடியாவுமேயாய இவ்விலக்கணம் உளதாமென வதனும் சற்பிரதிபக்கத் தன்மையாம்.

550. வேறு வகையானே யிலக்கணம் விலக்கல்.

இனி, அசித்த விருத்த அநைகாந்திக பாதித விடயத் தன்மை யற்றதாற் போதிப்பிக்கப்பெற்ற சாத்திற அசத்வம் சற்பிரதிபக்கம் எனவியம்புதியேல், இதுவும் இன்னிலையெய் தாதாம், தொடக்கத்திலேயே தோற்றுத்தோடத்தால், வத்து கதியாலும் அசித்தியாதி தோஷவானல் சற்பிரதிபக்கத்தன் மை யங்கீகாரத்தான் அதன் அவ்வியாபகத் தன்மையான் என்க. மேலும், மாறுபொருளைக் கவர்வனவாய சற்பிரதி பக்க ஹேதுக்களின் மத்தியில் அவசியம் இரண்டிலொன்றய அசித்தியாதி தோஷத்தால் ஆகவேண்டும், மாறுயிலை, தரு மிக்கு விருத்ததர்ம அத்தியாச வழக்காதலின். ஆண்டொன் றற்குப் பிரித்துத் தோடநிச்சய மாகாமையின், மாறேதுவின் மாட்டும் அசித்தியாதி தோட ஆசங்கை யுளதாகியவழி அசித்தியாதி ஹீனத்தாலென இலக்கணங்கிசம் நிச்சயப்படா மையின் இலக்கணக் துணிதல் முடியாதாம். யாதின்பொ ருட்டுச் சற்பிரதிபக்க ஹேதுகட்கு இரண்டி லொன்றசித்தி யாதி யவசியம் அங்கீகரிக்கத் தக்கதாம், சற்பிரதிபக்க விலக் கண தோஷ துஷ்டத்தன்மையானே அவற்றிற்குத் தருமி யின் விருத்ததரும அத்தியஸ்தத் தகைமை பொருந்தாதாம் எனக்கூறற்க; அவசியம் துஷ்டமான ஹேதுவின்கண்ணே

வியாப்திக்காதல், பக்கதருமத்தன்மைக்காதல், இல்லாமை யோ டிருக்குந்தன்மையாம், அதன் சத்தையை யங்கீகரிக்கின் சாத்தியசத்தையின் அங்கீகார வழக்காதலின் என்பதனுண். பாதாதிகட்கும் உபாதியை யுணர்த்தும்வாயிலாய் வியாத்தி யாதி பங்கமே முடிவுபேறுதலின். சற்பிரதிபக்கத் தன்மை யான் உணர்த்தப்படுவதும் வியாத்தி பக்கதருமத்தன்மைப் பங்கம் சிறப்பித்து ஓரேதுவின்கண்ணே நிண்ணயஞ் செய்ய முடியாதாம், இரண்டி லொன்றன்கண் வியாத்தியாதி பங்கத் தானும் சற்பிரதிபக்கத்தின் பொருத்தம் இருத்தலின். ஆகை யால், அவிசேஷத் திருப்பதானே அஃதுணர்த்துவதாக விருந்தவழி நேராக விதுநிண்ணயஞ் செய்யின் அக்கால் அசித்தியாம். இனி, குறியால் அனுமிக்கப்படின் அக்கால் அநைகாந்திகாதியின் யாதாவதொரு தூடணம் வத்துக்தியா வுளதாம் சற்பிரதிபக்கத்திலது யாங்ஙனம் அசித்தியாதி யாதேனுமொன்று ஆண்டங்கீகரியாமை கூடல்? ஆகலின் அவ்வத்தோடத்திற்கு யாண்டு இரண்டனிடையில் இருப்புள தாமென இரண்டிலொன்று துணியாதபோது மாறேதுவின் கண்ணும் அச்சங்கையுளதாக அசித்தியாதி ஹீனத்தால் என்னும் இலக்கண அங்கிசம் நிச்சயிக்க முடியாமை நீக்க முடியாத்தேயாம்.

551. மீண்டும் விளுதல்.

ஆகுகதானிது, அசித்தியாதி ஹீனத்தன்மையாகிய இலக்கண அங்கிசத்தின்நிச்சயம் உளதாம், ஐயமும் ஆண்டு ளதாம் அவ்வையத்தால் சங்கிக்கப்பட்ட சற்பிரதிபக்கத் தன்மைத் தோடபீடையானே அசாதகத்தன்மை தூடிக்கப் பெற்ற அனுமானத்தின் சங்கிக்கப்பெற்ற உபாதியிற்போ லும் அசித்திசங்கையான். ஈவ்வசித்தியாதி சங்கையை யுப ஜீவித்து சற்பிரதிபக்காதி சங்கை தோடமாமோ அதுவே

அக்கால் தோடமாமென வறையற்க; அசித்தியாதி சங்கைக்கே அத்தகைய மாறேதுகாட்டும் மூலத்தகைமையாதலின் அதனுபஜீவகத்தன்மை யுண்மையின் எனின் ?

552. விரு விலக்கல்.

இங்ஙனம் ஏலாதாம், சங்கிக்கப்பெற்ற வுபாதியால் அசித்தத்தானும் இவ்வண்ணம் சற்பிரதிபக்கத்தன்மை யுண்டாம். அற்றேல், இன்னணமும் ஆகுக, ஆனதால் என்ன தானுய்விடும் ? அதற்கு அசித்தத்தன்மை யுண்மையானே ஹீனபலத்திற்குச் சித்தியாதியுடையதால் பக்ஷபாதம் விடுத்து ஒருசிறுநாம் அயலின்றும், ஆயின்பாதத்தானே, அதனுல் சற்பிரதிபக்கத்தன்மை யின்றுமெனின் ? அற்றன்று, ஐயப்பாடுற்ற அசித்தத்தன்மையானே சற்பிரதிபக்ஷ ஹேது விற்கும் ஆயின் யாங்ஙனம் பரஹேது. அசாதகத்தன்மைப் பிரசாதகத்தன்மையாம், ஹேதுப்போலித்தன்மை யொப்பா யிருத்தலின். ஹேதுப்போலி யயல் தோடவைய சம்பாதக மாகாதாம் ஆகலின் இவ்வண்ணம் இலதாமெனின் ? இலதாம், ஆயின், எவ்வுபாதிபற்றிக் குறைந்தபலத்தால் பாத்தியத்தன்மையாமோ அதுபற்றியே அவ்விதவுபாதிக்குத் தோடசமூசய வாற்றலுண்மையானே. மேலும், சிலபாற் சற்பிரதிபக்கத்தன்மை நிச்சய அபாவம் உற்றவழி சமுசயங் கூடாமையாம்.

553. சற்பிரதிபக்ஷ இலக்ஷணந்தர நிராசம்.

இனி வேறுவகையாகாரம் இலக்கணம், அசித்த விரோத வியபிசார பாதவின்மையானே புலப்படுவதாற் போதிக்கப் பட்ட எதனது சாத்தியத்தினிலதாதல் ஆமோ அது சற்பிரதிபக்கமாம் எனக் கூறினுமேல், இதுவும் ஆராய்ச்சியைச் சகிக்காததாம், எவனுல் அவ்வாறு தேற்றுந்தகைமை

யங்கீகாரம் மாறனுமானம் பிரயோகிப்பவனுலா? இனி முதலாவது அனுமான வாதியாலா? இருவராலுமா? எவனெனும் ஒருவனுலா? ஆண்டாதியதாகாதாம், தானே தோடத்தை யறியினும், தூஷணம் வேறு விளங்காதபோது இத் தோடத்தை நினைந்திலனுயின் அக்கால் அபீஷ்டமேயாம். இனி, நினைந்திடுவனுயினே அஞ்ஞான்று அயல்வகையானும் தோஷம் வேறு தோற்றுத எனது தோல்வியில் இவனுல் கதையிற்கஸ்ஷாந்தரம் ஏறியவழி சாகாந்தரமேனுந் தாண்டற் பொருட்டு அவகாசம் அடைவேனுகவும் என்னும் அபிப்பிராயவானுகிய அற்பப்பிரஞ்ஞை யுடையவனுக்கு என்பாற் கூறி அசத்பக்ஷத்தையும் நிர்வகிப்பன் என உலகில் மேன்மை வெளிப்படுத்தற் பொருட்டு எங்ஙனமேனும் கிரந்தக்காரர் முதலியோராற் கூறப்பட்ட அவ்வித மாறேதுவின் நிர்வாகப் பொருட்டு அயலாகப் பொருந்திய மேலாய அறிவுற்றவன் பால் தோற்றுந்தோடத்தாலும் மாறேதுவானே சற்பிரதிபக்கஞ் செய்யக் காணவருதலின். ஆண்டு அயலானுல் தோடமுண்டாக்காதவழி வெற்றியு முண்மையின்.

554. இலக்கணத்துள்ளடங்கிய புலப்படுந்தன்மை விகற்ப நீக்கம்.

மேலும் புலப்படுந்தன்மை, துணியப்பெறுந்தன்மை யெனக் கூறவிழையிலை, அக்கால் அசம்பவமேயாம், ஒன்றற்கு விருத்த அருத்தங்களில் அவசியம் தோடமாகலின். அத்தோடமும் எதற்குளதாமென அப்போது துணியமுடியாமையின் மாறேதுவின் கண்ணும் அவ்வையம் உளதாதலின். இனி, புலப்படுந்தன்மை சம்பாவனையேல், ஆண்டுற் பாவன சம்பாவனையைத் தூடித்து யாது கூறுவேமோ அதுவே தூஷணம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

555. இரண்டாவது மூன்றுவது நான்காவது கற்ப நீக்கம்.

இரண்டாவது மூன்றுவது நான்காவதுகளுங் கூடா வாம், பரபுத்தியைத் துணிதல் கூடாமையினாலே, பரனது அசித்தியாதி யின்மைமதி யீண்டுண்டாம் என மூன்பு துணி தற்கு அளவையின்மையாலே. மூடியாமையின், எங்ஙனம் சற்பிரதிபக்கத்தன்மை பதிஞ்ஞைசெய்து உணர்ந்த முடிதலாம்? வேறு சங்கையும் ஈண்டு நீக்குவோம்.

556. தூஷண அதிசேஷம்.

இதனாலே, அசித்திவிரோத பாதவியபிசார முடைமை யாஞதல், வியாப்தி பக்ஷதருமத்தன்மை யின்மையுடைமை யாஞதல் கவரப்பெறுததால் உணர்த்தப்பட்ட துணிபொருள் மாறுபாடு சற்பிரதிபக்கம் என்பது நீக்கப்பெற்றதாம், எவ்ஞற் கவரப்பெறுமையென்க் துணிந்து கூறமுடியாமையின்.

557. இலக்கணமூன்றன் சாதாரண தோஷம்.

மேலும், எல்லா இவ்விலக்கணங்களுக்குமே, தர்மியாதி கவரும் அனுமான பாதிதத்தினும் செல்லான் அதிவியாபகத் தன்மையாம். இதனால், தன்பொருட் டனுமானத்திலாதல் அதன் போலியிலேனுமாதல் சற்பிரதிபக்கத்திற்குத் தோடத் தன்மை யகற்றப் பெற்றதாம்.

558. சற்பிரதிபக்கத்தில் விசேடசங்கை நீக்கம்.

இனிக் கவரப்பெறுத விசேடத்தால் உணர்த்தப்பட்ட துணிபொருளின்மை சற்பிரதிப்க்கம் எனக் கூறப்படும். ஆண்டு யாவனுற் கவரப்பெறுமை என்பதாதி விகற்பதோடக் கூற்றுளதாகுக: யாதாவதொரு விசேடம் விசேடசப்தத் தாற் கருதப்பட்டதாம் எனவாயின் அஞ்ஞான்று அதன் கவர்ச்சியின்மை எவ்விடத்தும் இல்லையாமெனச் சர்வ அவ்

யாப்தியாம். இனி, ஹேதுதோடவடிவ விசேடம் அங்கீகார மாயின், அப்போது தர்மியாதி கவரும் அனுமான பாதிதத் திலும் செல்கின்றமையின் அதிவியாபகத் தன்மையாம், கவரப்பெறுத ஹேது தோஷரூப விசேஷத்தால் உணர்த்தப் பட்ட துணிபொருள் வேறுபாடுண்மையின் அதற்கும், ஆண்டு ஹேதுதோட அபாவத்தானே கவரப்பெறுத விசேடத்தன்மை யுண்மையான். அக்கிருகியமாண பரமார்த்தத் திக ஹேதுதோடரூப விசேடத்தால் எனச் செய்யின் தாண்டி விடலாம் என்னற்க, அங்ஙனமாயின் சற்பிரதிபக்ஷ ஹேது வையுடைய சற்பிரதிபக்ஷம் வியாப்பியப்படாதாம். உண்மை யாயிருப்பதாகவும் காட்டவேண்டும் அல்ல அறிவது எளவும் பேறறிவேயாம். கவரப்பெறுத ஹேதுதோஷ ஹேதுகுண ரூப விசேடத்தால் எனச் சிறப்பிக்கக்கூறும் விழைவேனும் தாண்டமுடியாதாம். வியதிரேகியின்கண் அன்வயவியதிரேகியால் சற்பிரதிபக்கத்தில் ஹேதுகுணரூப விசேடம் சபக்கத திருக்கும் வடிவதாகக் கவரப்பெறும் என அதன் அவ்யாபகத்தன்மை யடைவு வருதலின்.

559. விசேஷணாந்தர சங்கை யகற்றல்.

இனிக் கவரப்பெறுத வியாத்தி பக்கதருமதாபங்களரூப விசேடணமெனச் செய்யிலே. அக்கால், வினவத்தக்கது, எதைக்குறித்து விசேடத்தன்மையிது இவ்விடம் ஆதல், யாதேனுமொரு சிறிதை யபேக்ஷித்து எனக்கூறின், அக்கால் வெளியாய அநித்தியத்தி பாவமுற்ற ஹேதுப்போலியைக் குறித்து விசேடம் கிரகிக்கப்படும் சத்தனுமானவடிவ மாறேதுமில் என வாண்டவ்யாபகத் தன்மையாம்.

560. இரண்டாவது கற்பநீக்கம்.

இனிப் பிரகிருத விரோதியேதுவைக்குறித்து என்பதாயிலே இலக்கண வாக்கிய மித்தகையதாக எஞ்சாநிற்கும்,

வியாப்தி பக்ஷதர்மத்தன்மைப் பங்காபங்க ரூபம் பிரகிருத ஹேதுவினால் எதனது விசேடமாகக் கவரப்பெற வில்லையோ அதனால் உணர்த்தயபட்ட எதனது துணிபொருள் வியதிரேகம் அது சற்பிரதிபக்ஷம் என்பதாம். இத்தகையதாகவும் இவ்வாக்கியம் வியாக்கியானமாகத் தகுதியாம். அங்ஙன மன்றே:— வியாப்தி பக்கதருமத் தன்மையெனச் சேர்ந்த தற்குப் பங்காபங்க பதசம்பந்தஞ் சாற்றவாசையில், தனித் தனியுதாகரண அதிவியாத்தியாம், அதன் பங்காபங்கரூப மென்பதாய மிலிதத்திற்கும் விசேடபத சம்பந்தம் அபிப்பிரா யப்படின். எல்லாவற்றினும் சம்பவியாமையானே அசம்பவ மாம்.

561. வேறு தோடம் விளம்பல்.

மேலும் இங்ஙினம் இவ்வாக்கியத்தினது பொருளியம் பத்தக்கதாம், வியாத்தி பங்கரூபம், வியாத்தி யபங்கரூபம், பக்கதருமத்தன்மைப் பங்கரூபம், பக்கத்தருமத்தன்மை யபங்கரூபம், பிரகிருத ஹேதுவைக்குறித்து விசேஷம் கவ ரப் பெறுவதின்று எதற்கு அதனால் உணர்த்தப்பட்ட எத னது சாத்திய வியதிரேகமோ அது சற்பிரதிபக்கமாம். அவ் வாறியவழி, பரமாணு. அவயவமற்றது, இளைப்பறிய பரி மாணதர தமாதி பாவத் தன்மையான், விண்போலும் எனப் புகன்றபோது, பரமாணு, அவயவத்தோடமைந்தது, மூர்த் தத்தன்மையான், கடங்கடுப்ப, எனப் பிரதிவாதி கூறிய ஏதிர் அணுமானத்தானே பரமாணு தருமியைக் கவர்வதாயினும் அணுபரிமாணதர தமாதி பாவம் ஓரிடத்தில் இளைப்பாறுவ தாம். பரிமாணதர தமாதி பாவத்தன்மையான், மகத்பரிமா ணதர தமாதிபாவம் போலும் என்பதாதி நல்லனுமானமாக இஷ்டப்பட்டதற்கு, பக்கதருமத்தன்மைப் பலத்தினானே அதனது நிரவயவத்தன்மை யிருப்பினும் பிரமாணத்தின்

மையை யடைந்ததற்குச் சற்பிரதிபக்கத் தன்மையாம். யாவ னிதற்குச் சத்தனுமானத்தன்மையை யுடன்பட்டிலனே அவன் பொருட்டு இவ்வகையனவாய அநேக உதாரணங்கள் உள்ளனவாமென அவற்றில் வழக்காம். அதுவும் அவ்வா றுளதேயாம் என்னற்க, அதற்குத் தருமி சித்தியின் பொ ருட்டு உபஜீவியத் தன்மையாமே பலமுடைமையான்.

562. வேறு விசேடண சங்கை விலக்கல்.

அதனை விலக்கற்பொருட்டு அது பிரகிருதம் சற்பிரதி பக்கம் என இயற்றத் தக்கதாமெனின்? அவ்வாறுயினும் பொருந்தாதாம், ஈண்டோ, எதற்குக் கவரப்பெற வில்லையெ னச் சம்பந்தமாமோ அதனால் எச்சம்பந்தித் தன்மையதாகக் கவரப்பெறவில்லை யென்னும் அர்த்தம் விளம்ப விளைந்ததா மேலாயின், அவ்வியாபகத்தன்மை தோட்டமாம்; அங்ஙனமன் றேல்:— யாண்டு இரண்டு துகட்கும் பரமார்த்தமாகச் சாதா ரண வியாத்தியாதி பங்கமாம், சற்பிரதிபக்க தசையின்கண் ணே கவரப்பெறுதலாம் ஆண்டின்று மிவ்விலக்கணம், ஆண்டு வியாத்தியாதி பங்கம் விசேடமன்றும், பின்னையோ பிரகிருத ஹேதுவோடு சாதாரணமேயாம்.

563. அதிவியாப்தி பரிகாரசங்கை யகற்றல்.

அற்றேல், அதீதியந்தம் அசத்தாய வியாத்தியாதி பங்க ரூப விசேடத்திற்கும் முதலிலாண்டு கவரப்பெறுமை யுள தாம், அதனைகொண்டே இலக்கணம் அதன் வியாபியாகும் எனின்? ஆயின் யாண்டுவாதி தன்ஹேது சாதாரணம் வியாப் திபங்காதி தோடத்தைத் தெரிந்து மாறேதுவின்கண் ணிருப் பதாக பரனுக்குண்டாக்குவானே, பரனும் நீக்குவதற்கு முடி யாதவன் ஆவனே, ஆண்டும் இவ்வண்ணம் சற்பிரதிபக்கத் தன்மை யழியாததேயாம்; கூறிய வடிவ விசேட முடைமை

யானே அவனல் இது கவரப்பெறுமையின், உரைத்தவடிவம் சமானத்தன்மையினனே அவனற் கவரப்பெறுதலின்.

564. மீண்டும் வேறுசங்கையை விலக்கல்.

ஆயினும் மாறேதுவாதியின் ஆண்டு விசேடமுடைமையானே கவரப்பெற்றதாம், அவனுக்கு அதன் சாதாரண பாவத்தோற்றமின்மையின், பிராந்தி அப்பிராந்தி சாதாரணமே யீண்டுக் கிரகணமாத்திரமெனக் கூறு வேட்கையுண்மையின் எனின்? என்னற்க, மாறேதுவாதியபிப்பிராயத்தான் கவரப்பெறுமை பக்ஷத்திற்கு முன்னரே நீக்கியிருத்தலின். மேலும் வேறேதுவாதியும் சாதாரணத்தகைமையை அத்தோஷத்திற்கு அஞ்ஞான்றே பார்ப்பானேல் அக்கால் ஆங்கதியாதுகொல்? இவன் வாதியேதுவின் கண்ணும் தோடங் காண்பனேல், அக்கால் அதனை யுண்டாக்கலாம், அங்ஙனமாகவே ஆண்டே கதைக்கலப்பாம் சற்பிரதிபக்கத்தை யுபேக்ஷித்து எனின்? இலதாம், பார்த்தும் பிரதிவாதி யாண்டு தோடம், இங்ஙனம் மந்திரிப்பால்; இப்போழ்து பிரதிஞ்ஞை செய்த சற்பிரதிபக்ஷத்தன்மையை விடுத்துத் தோடமயலொன்றை யுதிப்பிப்பனேல் ஆயினும் பதிஞ்ஞைபாறலாற் பங்கமே யெனக்காம், இனி யுதிப்பியேனேலாயினும் பதிஞ்ஞை செய்ததோட அநிர்வாகத்தால் எனக்குத் தோல்வியாம்; ஆகலின் இங்ஙனம் வேறுதோடமேற் கிளப்புமாயாசம் வாளாவாமெனச் சிந்தித்துச் சும்மா விருப்பனேல், அக்கால் யாதுகதியாம்?

565. எதன் என்னுஞ் சப்தத்திற்கு விசேடபதத்தோடு சம்பந்தமிருப்பினுந் தோடமாம்.

இனி, எதன் விசேடம் எனக்கூறிய இலக்கணவாக்கியத்தில் பதசம்பந்தம் நின்று அபிமதமா? ஆயின் அறைவப்

பட்டது ஆண்டுத்தோடம், அயற்றோடமாம். வியாத்தியு பங்காதியின் விருத்தார்த்த ஹேதுக்கட்குச் சாதாரணத்தின் அசம்பவமாதலின், விலக்காததாகிய விசேடபதத்தோடு விசே ஷண விசேடியபாவம் பொருந்தாமையின்.

566. வேறு விசேடணம் வைக்குஞ் சங்கை நீக்கம்.

இனி வியாப்தி பக்கத்தருமத்தன்மைப் டங்காபங்க ரூபப் பிரகிருத ஹேத்வபேக்ஷ விசேஷமுடைமையானே யுண்டாக்காமையி ணுணர்த்தப்பட்டது எதனது சாத்திய விபரியயமோ அது பிரகிருத சற்பிரதிபக்கம் எனக் கூறுவதா யினும் பொருந்துறுதாம்; பரன் நிஞ்து இம்மாறேது இன்ன ணம் முறிந்த வியாத்தியது எனவே யியம்பின், எனது ஹேது வினுமிது விசேஷமன்றும் எனவுமியம்பின், வேறுபாசத்தன் மை தோற்றிவைத்தலானே மாறேதுவிற்குச் சற்பிரதிபக்கத் தன்மைப் பங்கத்தான், அப்போதும் இங்ஙனம் சற்பிரதிப க்ஷத்தன்மை நீக்கமாட்டாதாம். அவ்வாறுகவே தான் புலப் படாநின்ற அசித்தியாதியானும் சற்பிரதிபக்ஷகரணமாற்றலே லும் என நன்கு நவிற்றலாயது சர்வ அனுமான அனுகூல மாம்.

567. உண்டாக்காமையை விகற்பித்து இலக்கண தூஷணம்.

மேலும் எக்காலத்தில் அவ்வாறு உண்டாக்காமை யவா வப்படுதலாம், எக்கால் மாறேது உண்டாக்கலானே பரஹேது வைப் தூடிப்ப பின்னர்க் கூறிய போதினும் மாறேது தோ டத்தில் முற்போதிய உண்டாக்காமை யுற்றவழி மாறிச்சீறல் யாதுமிலதிரம் என, எல்லா ஏதுப்போலிகளானும் சற்பிரதி பக்கஞ் செய்தல் தூட்டமன்றுமென அனுமான தூஷயாற் போயதாம். இனி மறுவாதியாற் கூறியபோது எப்போது மீண்டும் வாதிவசன அவசரம் அப்போது உண்டாக்காமை

யிட்ட மேலாயின், இவன் இங்குச் சிறப்பாக்கத் தோட்டத்தை உற்பவிக்கச் செய்யான் என்று அஃதெங்ஙனம் முன்பில் மாறனுமான வாதியாற் றுணிதல்கூடும் ?

568. தோடமுண்டாக்காமைத் துணிபின் சங்கை நீக்கம்.

தனது பிரதி ஹேதுவிற்குத் தோடசூனியத்தன்மை புண்மையின் சமர்த்தன் அதனை நிஷ்ணயஞ்செய்ய முடியக் கூடியவன் ஆவன் எனின் ? ஆகான், கூறப்பட்ட தீண்டுத் தோற்றுந்தோட முடையதானும் சற்பிரதிபக்கஞ் செய்தல் சம்பவிக்கும், ஆண்டு பரனுல் தோஷம் உண்டாக்காதவழி வெற்றியுமுண்டாம். மேலும் விசேடதோட சூன்யத்தன்மையும் தனது ஹேதுவிற்கு எங்ஙனமிவன் றுணிவுறுவன், ஆண்டு முரணுற்ற பொருளுற்ற ஹேதுக்களுக்குள் ளொன்றற்கு இன்றியமையாது தோடத்தோடுகூடலாம், ஆண்டு அவனுல் தனது ஹேதுவில் தோடங் காணப்படாததேபோலப் பர்வேதுவின்கண்ணுமாம். அதன் றரிசனத்தில் அதனையே யுற்பவிக்கச் செய்ய வேண்டும். எந்நல்லுள்ளத்தன்றன் நிச்சித தோடத்தை யுபேக்ஷித்து தோஷத்தோடு கூடியதை நிர்த்தோஷ சாமானியமாக நிலைபெறுத்தி நிற்பன், ஆகலின் தோஷத்தோடு கூடியதாயினும் தோடத்தைப்பாராமலிவன்தன்னு லதரிசனம் தோஷாபாவத்திற் பிரமாணப்படுத்துவான் றக்கவனுகான்.

569. வேறு விசேடத்தால் அசம்பவ சங்கையின் பரிகாரம்.

இனி வியாத்ய தர்மத்தன்மைப் பங்காபங்களுபப் பிரகிருத ஹேதுவபேக்ஷ விசேடமுடைமையானே உண்டாக்காமையாய்ச் சம்பவிக்கப்படுவதான் உணர்த்தப்பட்ட எதனது சாத்தியத்தின் விபரியயம் அதுபிரகிருத சற்பிரதிபக்கம் எனின், இதுவும் நிலைபெறுதாம், உதிப்பிக்குங் காலத்தி

னும் பூர்வகாலத்திய சம்பாவனை சாற்ற விருப்பேலாயினேனு, அக்காலத்திய உண்டாக்காத பக்கத்துரைத்த தோடத்தையே யமைத்துக்கொள்க. இனி யுண்டாக்குவதற்குள்ள அவசரம் அக்காலத்தியதாக ஆகுமாயின் சற்பிரதிபக்கத் தகைமையை விளம்பரஞ் செய்யுங்கால் அஃதின்றுமெனச் சிறப்பின்மையின் இலக்கணமிலதாம்.

570. காலமாத்திர சம்பந்தி சம்பாவனை நீக்கம்.

இனி எத்துணைச் சம்பாவனை தொடர்ந்து நிற்குமோ அத்துணை சற்பிரதிபக்கத் தன்மையாம், சம்பாவனைக்குக் காலநியமந் தேடலானே என்பயனெனின் ? இங்ஙனம் இயம்பற்க, இங்ஙனமே, மாறேதுவிற்குத் தோட முண்டாக்காத வழி, மாறுக, நிர்த்தோஷமாகவே கவர்ந்தவழி தோஷமுண்டாக்கும் சம்பாவனை நீங்குதலின், 'சற்பிரதிபக்கத்தன்மை நீங்கும், அவ்வாறுகவே இவ்வாறியற்றலானே வாதி சற்பிரதிபக்கத் தன்மையை பரிகரிக்குகவென நன்கேபெறியும். மாறேதுவிற்கு மாறுபாடியற்றுமல் அங்கீகரித்தே யதை சற்பிரதிபக்ஷத்தன்மை சமைத்தற்பாலதாம். மாறேதுவினை யங்கீகரித்தலானே தோல்வியாம் என்னற்க, சற்பிரதிபக்கத் தன்மையைப் பரிகரித்தற் குபாயமாகவே யங்கீகாரஞ் செய்தலின், அங்கீகரித்தவழி சம்பாவனை நீக்கத்தால் அவ்விலக்கண முடைய சற்பிரதிபக்கத்திற்கும் நீக்கமாதலின், ஆகையால், அங்கீகாரமு மிது பரனது அநிஷ்டார்த்தமாம், சித்த சாதனத்திற் பரனது சாத்திய வங்கீகாரம் போலும் குணத்தின் பொருட்டாம். அங்கீகரிப்பவனுக்குத் தோடப்பொருட்டன்றும்.

571. இலக்கணத்தை யனுவதித்துத் தோடங்கூறல்.

வாதிகட்குச் சமானப் பிரதிபக்க தரிசன ஜனிதத்தான் தன்னேதுவி லாபாசத்தன்மைச் சமுசயத்தான் சற்பிரதிபக்க

மாமேலாயின், யாண்டுமே சற்பிரதிபக்கத்தன்மை யிலதாகும், தன்னேதுப் பக்ஷபாதத்தான் பரஹேதுவின் கண்ணே தோடஞ் சிறிதுளது என்னுற் கவறப்பெற வில்லையென அவர் களால் எண்ணிக்கொள்ளப்படுதலின்; "நிச்சயித்தவரேவா தம் நிகழ்த்துவர்" எனக் கூறப்படுதலின். இனி யுசிதமாத லின் நீக்கமற்ற வையத்தாற் சற்பிரதிபக்கத்தன்மை யாமேலா யின், எல்லாவிடங்களிலுமே வாதிக்குச் சர்வானுமானங்களின் சற்பிரதிபக்கத்தன்மை நீக்கமுடியாததாம். அஃதெங்ஙன மெனின்:— சப்த அநித்தியத்தன்மை யனுமானத்தால், மதி மான்களால் நூறுவகையானே, சப்தநித்தியத்தன்மை வாதி வெற்றியான்; சப்த நித்தியத்தன்மை யனுமானத்தானும் பேரறிவாளிகளால் நூறுவகையானே சப்த அநித்தியத்தன் மை வாதி வெற்றியான். இருபக்கங்களிலுள்ள அனுமானங் களில் யாதுகொலுண்மையாக வுண்மையனுமானம் என்னத் தக்கவனுக்குத் தோடசமுசயம் நீக்க முடிதல் கூடாமையின்.

572. பாத கண்டனத் தொடக்கம்.

பிரகாரபேத அபாவத்தானும் பாதம் பேதியாதாம். அஃதிங்ஙனமாம்:— பாதிதவிடயம் பாதமென்பது அலக்ஷ ணமாம்.

573. மூவகையாக விகற்பித் தாதியதிரண்டன் நீக்கம்.

அங்ஙனமன்றே:— பாதித விடயத்தன்மை என் னென்று இயம்ப இச்சை? ஆண்டுப் பலவாறுற் போதித விடய விபரீதம் எதனுக்கு அத்தகைமையா? கேட்டபடியா யதற்கு சற்பிரதிபக்கத்தின் பாலும் செல்கின்றமையின்; ஆண்டு மாறனுமானத்திற்குப் பக்கதருமத்தன்மை முதலிய பலஞ் சம்பவிப்பதான் முதலனுமான விடய விபரீதம் விளக் குந்தன்மை யுண்மையின். இனிப்பலவாலுல் என்பது அதிக

வ்லுவால் எனக் கூற விழைவாமேலாயினும் கேவல வியதிரே கிக்கு அன்வய வியதிரேகியானே சற்பிரதிபக்ஷஞ் செய்யிற் செல்கின்றமையின் அதிவியாபகமாம், ஆண்டன்வய வியதி ரேகியின் மாறேதுவிற்குச் சபக்க சத்வலக்ஷண பலமத்திகம் எய்துகின்றமையின்.

574. இரண்டாவது விகற்பத்தின் வேறு கண்டனம்.

மேலும், இங்ஙனம் காட்சியாற் கருதற்போலிப் பாத முண்டாகாதாம், காட்சிக்குப் பொறிப்பொரு ளொற்று மையை லுண்டாய மயலற்ற வுணர்வின் கரணத்தன்மை மாத் திரம் பலமாம், கருதலுக்கோ பக்கதருமத் தன்மையாதி மிகுதியாய பலமாம்.

575. மூன்றாவது கற்ப நீக்கம்.

இனி அயலாற்று லடையப்படாமைப் பலத்தைப் பற்ற விழைந்து 'இது கூறப்பெறும், அயலாற்று லடையப்படாத வதனால் உணர்த்தப்பட்ட எதனது சாத்திய வியதி ரேகம் அஃதாதல் பாதித விடயத்தன்மையாம் என எண்ணு தியோ இங்ஙனம் எண்ணற்க, அவ்வாறாயினும் உண்மையாக அயலாற்று லடையப்படாததால் சற்பிரதிபக்கத்தின் கண் ணும் செல்கின்றமையின்.

576. மூன்றாவதிற் கவுரவங் காட்டல்.

மேலும் அயலாற்றல் என்பது அயல் வகையால் எனப் படும், அன்றயலாற்றல் என்பது அன்றயல்வகையால் எனப் படும், எதனினின்றும் அன்றயலாந்தகைமை அதனனே யெனப் பொருள் பொருந்தும், அங்ஙனமாகவே அவ்வன் னியத் தகைமைப் பிரதியோகி யாதென வோதவேண்டும்? பிரமாணமாதல் அஃதெனின்? அகோ! தங்கள் துர்விதக்வத் தகைமையை யென்னென்பதோ! பிரமாணமாதலான் எனக்

கூறவேண்டியதிருப்பப் பிராமாணியத்தினும் யாது அன்னியம் அதுயாது ஆகாதோ அதன்வகையானே யாது சித்தம் பிரஸ்தீதம் உற்பன்னம் ஆமோ அதனுல் என அறைந்தீரே.

577. பிரமாணத்தால் என்னும் பதமுற்ற இலக்கணத்திற் ரோடம்.

ஆயினும், அளவையா லறிவிக்கப்பட்ட விபரீத விடயம் எதற்கோ அது பாதமாம் எனின், ஆகாதாம், இது வெள்ளி யென இப்பியை விடயஞ்செய்யும் காட்சிப்போலியாய் இது வெள்ளியல்ல வென்னும் அளவையால் வாதிக்கப் படுவதினும், ஹேதுப்போலிச் சிறப்பு இலக்கணமிது செல்வதாலதிவியாபகத்தன்மை அடைவுறுநிற்கும். இங்ஙனமே, வாதிக்கப்படும் விடயங்களில் வாஞ்சை வந்தவழியினும் செல்லுமென்றறிக. அளவையா லறிவிக்கப்பட்ட எதனது விடயத்தின் அயலாருதல் அவ்வேது பாதமாம் எனின்? அன்ரும், முக்கியப் பொருளுடையதே லேதுசப்தம், அக்கால் ஹேதுப்போலித்தன்மை வியாகாதமாம், இனி அமுக்கியப் பொருளுடையதே லாயினே, அதனது பொருளியாது கொல்! யாண்டிது நிலைபெறுத்த வேண்டுமென யாதோதப்பெற்றதோ அது அறையப்பெறல் வேண்டும். அளவையாற் போதிக்கப்பெற்றது எதனது விடயத்தின் வியதிரேகம் அது ஹேதுப்போலியாம் பாதம் எனின்? முதலில் ஹேதுப்போலியின் றன்மையின் றுணிபுறுதபோது இலக்கணத்தின் றுணிபுறுதல் கூடாதாம். இனிப் பாதிதத்தன்மை நிரூபித்த அளவே ஹேதுப்போலித் தன்மையின் நிர்ணயமெனின். அதனுனே துஷ்டத்தன்மையின் சித்தியாதலின் பின்னர்த் தோற்றுநின்ற வாதம் வழங்கலி னுபந்யாசத்தா லாற்றியது சாலும். அவ்விது நின்மதத்தே யிலக்கணமாகுக ஆகாதுதானெழிக, சாமுத்திரிகப் பிராமாண்யத்தான் மீண்டும் பெரிதானவிது இலக்க

ணம் பாதம் வழங்கற்கு, எதனலிதற்கு வெளியாக ஹேதுப் போலிப் பேதபதத்தில் அபப்பிரமிச மீயப்பெறுமோ.

578. ஹேதுப் போலிப் பதத்திற்கு ஒப்புமைப்போருள் உடைமையிலும் முன்மொழிந்த தோடமாம்

இனி, ஹேதுப்போலிப் பான்மை, ஹேதுப்போல விலங் குறும் பான்மை, ஹேதுவிற் கொப்பாகப் புலப்படும் பான் மையாம், ஹேது தோடமுடைமை யன்றும் எனக் கூறுதி யேல், இங்ஙனமியையாதாம், ஹேதுவோடு துல்லியத் தகை மையும் அஹேதுத்தகைமை யுணர்வி லது உணர்தற்கு முடி யாதாம். பின்ன அநிஷ்டான வொப்புமைக்கு அவ்வாறே புலப்பா டுண்மையின், மாறுயிஞ், ஹேதுவிற்கும் ஹேதுப் போலித் தன்மை வருதலின், அதனனே ஹேதுரூப அழிவு பாட்டை யின்றியமையாது அடைய வேண்டி யிருத்தலின் முன்மொழிந்த தோடநீக்க மின்றும்.

579. பக்கபதம்பதிந்த விலக்கணத்திலும் தோடமாதல்.

பிரமாணத்தால் போதிக்கப்பட்ட எதனது பக்கவின்மை அது பாதமெனின், ஆகாதாம், ஆசிரயாசித்த வியாபனமாத லின், ஆசிரயாசித்த வயல் எனச் சிறப்பிக்கவெனின்? சேரா தாம், விசேஷணஞ் யசித்தியான் ஆசிரயாசித்தத்தோடு கலந்த வாதவுதாகரணம் இங்ஙனம் வியாபியாமல் அவ்வியாப்தி யாம்.

580. முன்மொழிந்த இலக்கணத்தில் அதிவியாப்தி பரிகார சங்கை நீக்கம்.

அளவையாற் போதிக்கப்பட்ட எதனது சாத்தியத்தின் வியதிரேகம் அது பாதம் எனின், ஆகாதாம், காட்சிப்போலி யிற் கலத்தலின், ஆண்டுந்தான், ஞாப்பியரூப சாத்தியத்தின் அபாவம் பிரமாணத்தாற் போதிக்கப் படுகின்றதேயாம்.

அளவையா லுணர்த்தப்பட்ட எதனது துணிபொருள் வியாபகத்தின் வியதிரேகமோ அது பாதம் எனின்? அன்ரும்; பிரமாணத்தா லுணர்த்தப்படும் அபாவத்திற்குப் பிரகிருத ஹேது வியாபகத்தன்மை யசம்பவத்தான் என்க. பிரமாணத்தா லுணர்த்தப்பட்ட எதன் பதிஞ்ஞைத் துணிபொருளபாவமோ அது பாதமெனின்? ஆகாதாம், தன்பொருட்டனுமானத்தில் பாதத்திற்கு இவ்வண்ணம் அவ்வியாப்தி வருதலின்; ஆண்டுச் சத்தரூபப் பதிஞ்ஞை யின்மையின்; சத்தத்திற்குப் பிறர்பொருட்டாந் தன்மை யுண்மையின். பிரமாணத்தாற் போதிக்கப்பட்ட பக்கத்தழுத்திய எதனது துணிபொருளின்மையோ அது பாதமெனின்? ஆகாதாம், அவ்வகையாயதற்குப் பக்கப்போலித்தன்மை யங்கீகரித்தலான் முக்கிய பக்கார்த்தத்தன்மை யசம்பாவத்தான். பக்ஷாபாசநிஷ்டத் தன்மைபோடு கூடியெனச் செய்யிஞே பூர்வம் பக்ஷாபாசத்தன்மைப் பிரதிதி யப்பிரதிதிப் பக்ஷங்கட்குத் தனியாக ஹேதுப்போலித் தன்மைத் தோற்றந் தோற்றமின்மைப் பக்கத்துரைத்த தோடம்போலுந் தோடம் காணத் தக்கதாம்.

581. பக்கத்தன்மை யபிமதத்தன்மை யென்பதை மூன்ருக விகற்பித்துத் தோடம்.

பக்கத்தன்மை யபிமத அம்சபூதத்தின் எனச் செய்யிஞே கேட்கத்தக்கதாம், பக்கத்தன்மை யபிமதத்தன்மை யென்பதென்? பக்கமதாக அங்கீகரித்தலாந் தன்மையா? அல்லது அது அத்தகையதாக அளவையால் அளந்து கொள்ளுதலா? அல்லது பிரத்தியக்ஷமாகப் புலப்படுந்தன்மையா? ஆதியதாகாதாம், தூடகன்பொருட்டு அஃதசம்பவமாதலின், அவனுற் பாத்திய சாத்தியத்திற்குப் பக்ஷாபாசமதாகவே மாறுயங்கீகரிக்கப்படுதலின். அனுமானவாதியபே

கையினலும் நியமாபாவமாம், நல்லனுமானந் தோற்றுத வழி மந்தப் பிரஞ்ஞையனேனும் பேரறிவாளனென்னும் பேரபிமான முடையவனல், யான் புகலும்போது வெளியாக மாசிருப்பினும் யாவன் மாசுறுத்த வல்லான் என்னுங்கருத் தால் இட்டமட்டில் அறிந்து ஆசுப்பிரயோகமும் அமைத லின், ஆண்டனுமானவாதியால் பக்கத்தன்மை யங்கீகார மின்மையான், அவ்வாறுய பாதித வனுமான அவ்யாபகமாம் இவ்விலக்கணம் ஆம். பக்கமதாக வுபன்யசிக்கப்படுதலாதல் அங்கீகாரப் பொருளென்பது பொருந்தாதாம், அங்ஙன மாயின் தன்பொருட் டனுமானத்தில் வாத அவ்யாப்தியாம்.

582. பக்கத்தன்மையானே யளவிடற்படற் பக்கநீக்கம்.

இரண்டாவது மாகதாம் பக்கத்தன்மையானே யள விட்ட விடயத்தில் வாத அவகாசம் வராமையின்.

583. அவ்வாறுந்தன்மையானே தோற்றுதன் மாத்திரம் என்னும் மூன்றுவது கற்டநீக்கம்.

மூன்றுவதும் முடியாதாம், அக்காலோ இங்ஙனம் இலக் கணம் இல்லையாயிற்கும், பிரமாணத்தாற் போதிக்கப்பட்ட எதனது சாத்திய பக்கப்பிரதிதி விடய அங்கிசத்தின் அபா வமோ அது பாதம் என்பதாம்; இத்தொடர்மொழிப் பொருள் ஒருபோதேனும் சம்பவிக்குமென எண்ணிலேம்; எக்காலாண்டுப் பிரமாணத்தாற் றுணிபொருளின் இன்மை யுணர்வாமோ, அக்காற் பக்கத்தோற்றமிலதாம், விசேடதரி சன மூலதாக மயற்கிடமிலாமையின், அதனனும் அக்கால் பக்கம் புலப்படுதலின்மையான் அவ்விடயத்தன்மை யின்மை யின் அவ்விடய அங்கிசத்தின் என விசேடணபாவ அதீன மாம் விசிட்ட இலக்கணவடிவ அபாவம். எக்காற்றுன் பிர மாணத்தாற் றுணிபொருளின்மை யுணர்ச்சியிலதோ அக்கால்

அவ்விலக்கண பாகத்திற்கே யபாவத்தால் இலக்கணபாவ மென நித்தியம் அசத்வநிலைமை வாய்ந்த விலக்கணத்தால் இலக்கியத்தை நிலைபெறுத்திக்கொண்டு தங்களுடைய பேர றிவையே வியந்து கோட னலனன்றே. வைசேடிகப் பிரக் கிரியையைப் பின்பற்றி அழியவத்தையதேனும் பக்கத்தோற் றம் அக்காலத்திற் சம்பவியாதாம், அதனது துணிபொரு ளின்மை யுணர்வால் நீக்கப்படுவதாழுது; அதன் றுணிபொரு ளின்மை யுணர்வும் மிகுமுன்பே யிருப்பதாக இன்றியமை யாம லுடன்படல் வேண்டும், அன்றுயிலே அளவையால் அறிவிக்கப்படுந்தன்மை யாங்ஙனம் துணிபொருளின்மைக்கு அக்காலறியப்பெறும்.

584. பிரதீதி விடயத்தன்மைக் குபலக்ஷணத் தன்மையிலும் தோடம்.

பிரதீதி விடயீத்தன்மை யென்னுமிது விசேஷணமா காதாம், மற்றே உபலக்கணமாம், உபலக்கணத்தானும் அசத்தேனும் வேறுபடுத்தும் பிரதீதியுண்டாம், எங்ஙனம் காகவான்கள் தேவதத்தன்வீடுகள் என உபலக்கணீபூத காகமுடையதாகத் தேவதத்தகிருகத்திற்கு விவகாரத்தி லாமோ எனக்கூறற்க; ஆண்டு உபலக்ஷிய தேவதத்தகிருகத் திற்கு இயற்கையாய விசேடம் விவகாரகாலத்தி லிருக்கின்ற தாதலின் அதனற் காகமுடைமை யின்றேனும் அதனைப் பற்றி விவகாரநியமப் பிரவிருத்தியாம், ஆண்டும் அசத்துப லக்கணத்திற்குக் காரணத்தன்மையின்றும். ஈண்டோ, வியக் திகளின் உபலக்ஷியத்தன்மையில் இலக்கணத்தின் றொடர் பின்மையாம், அநுகதமாகவோ சிறிதுபலக்ஷியம் குறித்தி டக்காணேம்; ஆகலின் அறைந்த வாக்கியார்த்தையே பற்றி முயன்ற இலக்கணவடிவ சாதனத்தில் விசேஷணசித்தி நீக்க மூடியாததாம்.

585. ஹேதுத்தன்மை யபிமதத்தன்மைப் பக்கத்திற்கும் நீக்கம்.

இதனனே, பூர்வஞ் சங்கித்த ஹேது வென்பதற்கும், காட்சிப்போலி விலக்கற்பொருட்டுக் கொண்டதன் றனத்தில் ஹேதுத்தன்மை யபிமதவென்னு மித்தகையதற்கும் காரணம் தூடித்ததாகவே யாமென்றறிக.

586. பாதிதத்திற்கு இலக்கணமயலின் நீக்கம்.

பிரமாணத்தானே யுணர்த்தப்பட்ட எதனது சாத்தியத்தின் அபாவமோ அது காட்சியி னயலாய பாதமெனக் கூறினேனு;இதுவும் நங்நிலைமையுறுதாம், சப்த உபமான ஆபாசப்பொதுவாதலின்.

587. அதனயற்றன்மைக்கு மூன்றுய் விகற்பித்து நீக்கம்.

அதனினும் அயல் என்றும் சிறப்பிக்கத்தக்கதாம் எனின், இதுவும் விசாரிக்கத்தக்கதாம், பியத்தியகூ ஆபாசாதி வியதிரிக்தத் தகைமை பிரத்தியகூ ஆபாசாதிகளினின்றும் வைதருமியஞ் சிறிதா? அல்லது சொரூப பேதமா? அல்லது அன்னியோன்னிய அபாவமா? ஆண்டாதியதாகாதாம், அதன் பேதக தருமத்தைப் பேசமுடியாமையின்; இரண்டாவது மியையாதாம், சொரூபமானது பரஸ்பரம் விலகியிருத்தலினனே இலக்கண உபாயமாகாமையின்; மூன்றுவதும் முரணுநிற்கும், அன்னியோரன்னிய அபாவவடிவமாயிராநின்ற வியதிரிக்தத் தன்மைக்குக் காகூப்போலியாதியின் கண்ணும் இருத்தலினுலே அதன் விலக்கல் அமையாமையின்.

588. அன்னியோன்னிய அபாவத்தின் ஒருமையால் அதிவியாப்தி சங்கையின் பரிகாரம்.

வியதிரிக்தத்தன்மை மாத்திரம் அன்னியோன்னியாபாவ சொரூபம் விசேஷணம் எம்மனோரால் கொடுக்கப்படவில்லை

மற்றே காக்ஷிப்போலி முதலியவற்றினின்றும் வியதிரிக்கத் தகைமையாம், காக்ஷிப்போலி முதலியவை தங்களினின்றுமே அயல்களாகாவாம், ஆகலின் யாங்ஙனம் கூறிய வழக்கிற் கவ காசம், உண்ணுற்கூற விழைந்த இது அறியப்பெற்றது; இதுவே விசாரிக்கப்பெறுகின்றது, காக்ஷியாயாச முதலிய வற்றுனே விசேடிதமாய் இவ்வண்ணியோன்னிய அபாவம் உன்னுல் உரையாடப்படுகின்றதா? அவற்றுல் உபலக்ஷித மாய் எதனைக் காக்ஷிப்போலி முதலியவற்றுள் அடைவற்ற தென எண்ணுகின்றனை கொல்? ஆண்டாதியதமைவுற்றாம், எதிர்மறைவடிவச் சிறப்போடும் கூடியவின்மை எவ்விடத்தும் படுத்தமுடியாதாம், ஆகலின் அத்தகையதை யறைய அவா வின் சர்வ அவ்யாப்தியாம். இரண்டாவதன்கண்ணோ, காக்ஷி யாபாச முதலிய உபலக்கணங்களால் எதுபலக்ஷியம் அன்னி யோன்னிய அபாவத்தின் ஒருசொரூபமோ அது காக்ஷிப் போலியாதிகளிலும் பாதித அனுமானங்களிலும் பொதுவாம் என யாங்ஙனம் வழங்கிய தோட வழக்கின்றுதல்.

589. மீண்டுஞ் சங்கையய லகற்றல்.

அயதுளதாகுக உண்மைவடிவமான விசேஷணம், எதிர்மறையோ இன்மைக் கிராமலேயாம், அவ்வுணர்விற்குச் சிறப்புளதாக விலக்குமதிகோடன் முரண்படாமையின் சிறப் பாமெனின்? இது இயையாதாம், ஆண்டு அபாவத்தின் சொரூபம் விசிட்டமீண்டு கொண்டாம், அதுவும் விசேடிய மாத்திரசரீரம் ஆதற் றகுதியதன்றும், அங்ஙனமாகவே விசேஷசொரூபமே கூறத்தக்கதாம், வாளா விசேடபத வுப்பர் யாசமாம், அதனுபர்யாச மன்றுகவே அன்னியோன்னிய அபாவமுடைமை மாத்திரம் உபர்யாசிக்கப்பட்டதாம், அது வும், காக்ஷிப்போலியாதி விலக்கப்படுவதையும் நன்குகவர்வ தாகும், அதனுனே விசேடியமாய அன்னியோன்னிய அபா

வத்தினும் அதிகஞ் சிறிது மொழியத்தக்கதாம், அவ்விசிஷ்டம் உபந்யசிக்கற்பாலதாம், அதுவும் எதிர்மறையதனதாக்கக் கழற்பெறுமாயின் அதனது இன்மையானே அப்போது விசிட்டாபாவம் அடைவுறும்; விசேடியமாத்திரம் இனி தெஞ்சுவதாகும், அதுவுங் கேவலம் மிக்கடைவுறுதலாம், ஆகலின் விசிஷ்டவிவகாரம் நிகழ்விக்கும்போது விசேடியத்தினும் வேறுகச் சிறிது அங்கீகரியாமல் விசிஷ்ட இருப்பு விவகரிக்க முடியாதாம். ஆகவே பிரதியோகி அபாவதத்தின் விசேஷணமாக்கத்தக்காதாம், உபலக்கணமோவாம், ஆண்டோ அறைந்தேவந்தேம். அன்னியோன்னிய அபாவம் ஒன்றுவதின்றும் வேற்றெதிர்மறைகள் வாய்ந்த இரண்டபாவங்கள் அவையென்னற்க, அங்ஙனமாயின் பிரதியோகி லக்ஷித மாய அதன் சொரூபம் வேறேயாமெனச் சித்தார்த்த அவிரோதி பொருந்தாதாம், இரண்டோ அன்னியோன்னிய அபாவத்திற்கு ஒருவடிவாகவே பிரதியோகி யேகான்மத்தன்மைக்கும் பேதவிரோதமேயாம். அதனுனே எவ்வுருவத்தானே பிரதியோகித்தன்மையாமோ அவ்வுருவத்தானே பேத அவகாசமின்மையின் பின்னப் பிரதியோகித்தன்மையாங்ஙனம் அன்னியோன்னிய அபாவத்திற்காம். எவ்வுருவத்தானே தான் பின்னத்தன்மையே அதனுல் அன்னியோன்னிய அபாவப்பொருட்டுப் பிரதியோகித்தன்மை வத்துவிற் நின்றும்.

590. தருமிப்பிரதியோகிகட்குப் பிரகிருதத்தில் வைலக்ஷண்ய நிரூபணம்.

அற்றேல், உண்மையாக அவற்றிற் கொருமைமின்மையின் யாங்ஙனம் ஒருமையாக இப்பிரதியோகித்தன்மையன்னியோன்னிய அபாவப்பொருட்டுப் பொருட்கட்குப் பொருந்தும். எங்ஙனம் உண்மையாக பூதல சம்சர்க்காபாவ

மிருப்பினும் கடத்திற்குப் பூதலசம்பந்தமாகச் சம்சர்க்காபா வப் பொருட்டோ; ஆண்டு எங்ஙனம் அயல்பூதல சம்பந்த மாகக் காண்பெற்றதோ அங்ஙனம் ஈண்டும் அவ்வயேய்ய சப்பிரகார பேதங்கள் அவ்வடிவின்வாய்க் காண்பட்டன, அவ்விந்நினது திரிசன அபிப்பிராயம் எம்மனோர்க்கு நிர்வாஹ அர்ஹமாகாதாம்எனச் சாலும்விரித்தது.

591. தாதாத்மியப் பிரதியோகித்தன்மை பேதத்திற்கின்றும் என்னுஞ் சங்கையின் நீக்கம்.

மேலும் கடபடங்கட்குச் சொரூபபேதத்தானுதல் வை தர்மிய பேதத்தானுதல் உபயகோடிசெய்ததாக அன்னி யோன்னிய அபாவம் நிரூபிக்கப்படும்; ஈண்டோ, காகூஷிப் போலியாதிகட்குக் காகூஷிப்போலித்தன்மை முதலியவற்று னே ஒருகோடித்தன்மை யுளதாகுகதான், காகூஷிப்போலித் தன்மை முதலியவற்றினின்றும் அயல்வகையாக யாதுதான் உணரற்பாற்றே அதற்கு எவ்வுருவத்தானே ஏகோடியாக் கல், ஆண்டுத்தனிவியத்தி பின்னசொரூபத்தால் ஆகாதாம், அவையநந்தமாதலின் மதிபால் வைத்துக்கொள்ளமுடியாமை யின், எவ்வுருவஞ்சேர்த்த விசேடியம் பிரத்தியகூ ஆபா சாதி வியதிரிக்தத்தன்மை விசேஷணத்தானே விசேடிக்கத் தக்கதாமோ, அவ்வுருவ விடயமுறும் வகையானே அன்னி யோன்னிய அபாவநிரூபணம் என்பதும் பொருந்தாதாம். அச்சொரூபத்திற்குக் காகூஷிப்போலியாதி இனிதுகவருந்தன் மையானே கோடித்வைதபங்க சம்பாதகத்தன்மையானே அன்னியோன்னியாபாவ நிரூபணவிரோதித்தன்மை யுண்மை யின். ஆகையாற் சொரூபபேதம் வைதர்மியப்பேதமேனும் இரண்டுகோடி விவத்தைசெய்வதென வெண்ணுமல் அன்னி யோன்னிய அபாவநிரூபணம் முடியாததென நிலைபெறவே, சொரூபபேத பக்கத்திற்கீண்டு தூடிதத்தன்மையுண்மையின்

முமபேதம் யாதேனும் ஒதத்தக்கதாம்; இஃதியம்பற்கேலா
தகவும், ஏனுமாயினுந் தான் அதனைக்கொண்டே யிலக்கண
நிலைபெறுத்துகை யுளதாகுக, அன்னியோன்னிய வியதிரிக்
தத்தன்மைக்கு யுக்தியால் ஆற்றியதுசாலும். ஆகவே மொ
ழிந்த இந்தநியாயங்கொண்டே பிறவிடத்தும் அதிவியாப்தி
யுதாகரண அன்னியத்தன்மையானே விலக்குதல் அடிபட்ட
இலக்கணவாதிக்குச் சரணமஸ்திரமாகும் அதுநிராகரிக்கத்
தக்கதாம். அதனானே, வேறுபடுத்துவது வேறிலாது அத
னியலாந்தன்மையே நிரூபிக்கமுடியாதாம் என்னுங்கருத்
தால் அவ்வதனின் அயலாயிருக்குந் தன்மையோடும்எனச்
சிறப்பிப்பதாகிய வைசேடிகஹேதுவை, இஃதிவ்வண்ண மில
தாம் எதனால் எதனால் வியபிசாரம் அதனினும் அயலாந் தன்
மையோடுகூடிப் பிரமேயத்தன்மையான் என்னுஞ்சற்பிரதி
பக்க ஹேதுவின் உபன்யாசத்தான் நகையாடுவர் மிகையாடுவர்.

கவிதார்க்கிக சக்கிரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ ஹர்ஷாசிரியர் அரு
ளிய கண்டன கண்ட காத்தியத்தில் பிரமாண அதனுபாச
கண்டனமெனப் பெயரிய முதற்பரிச்சேதம் முற்றிற்று.

இரண்டாவது பரிச்சேதம்.

1. நிக்கிரகஸ்தானங்களுள் பிரதிஞ்ஞைஹானி கண்டன ஆரம்பம்.

அற்றேல் ஹேதுப்போலிகள் தூல்லக்ஷியங்களாகப் போ
மாயின், பிரதிஞ்ஞைஹானிமுதலிய நிக்கிரகத்தானங்கள்
பாதகங்களாகப் பலிக்கலாம் எனின்? ஆகாதங்ஙனம், பிர
திஞ்ஞாஹானி யென்பதனு லென்னே? சுவீகரித்த மொ
ழிந்ததின் பரித்தியாகம் பிரதிஞ்ஞைஹானி என்பது அலக்

கணமாம். அங்ஙனமன்றேல்:— விரைவின்மறத்தவழி ங்கி ரஸ்தானத்திலும் செல்கின்றமையின் பரன் றாடிக்குங்கால் எனவுஞ் சிறப்பிக்கவேண்டி யிருத்தலின்.

2. சுவீகாரபதார்த்தத்தின் விகற்பிய நீக்கம்.

மேலும், சுவீகிருதமென்பதனனே அபிஷ்டமாத்திரம் அறையப்பெறுகின்றதா? உண்மையானே இஷ்டமா? ஆதிய தேல் யாதாவதொருரூபத்தானே இஷ்டப்பட்டதற்கு வேற்று ருவத்தானே விடுதல் எங்குதானில்லையென அதிவியாப்தி யாம். சுவீகாரபூர்வகம் அசுவீகாரத்தியாகம்ஆம், வேறுரூ பத்தாலன்றும் ஆண்டதன்சுவீகாரம் அதன்பின்றியாகமே யிதற்குண்டாகாதாம்என அதிவியாப்தி யின்றுமெனின்? இன்றும், சுவீகாரத்திற்கும் பரித்தியாக பதார்த்தத்துள் ளடக்கமேல், சுவீகரிக்கப்பட்டதென்பது வீணும், அதன் றியாகத்தினுமோ முதலாவது இரண்டாவதுகள் ஆகாவாம். உண்மையானே யிஷ்டத்திற்கு வேற்றுருவத்தானேயாண்டு மே அநிஷ்டத்தன்மை சம்பவித்தலின். சையோகாதி அவ் வியாப்பிய விருத்தித்தன்மைவாதி பக்கத்திலோ ஒரே சை யோகத்திற்கே இருப்பு இன்மைகளால் அங்கீகாரஞ் செய் யப்பட்டிருத்தலின். இன்னணமாகவே காலதேசாதி பேதத் தானே சத்துவாசத்துவ வங்கீகாரத்தினும் வழக்குக் காணத் தக்கதாம்.

3. தேசகால புருடாதியபேதத்தால் அங்கீகார பரித்தியாகங்களின் றேடம்.

அதற்கே அக்காலே ஆண்டே அவனனே அவ்வாறே இஷ்டத்வ அநிஷ்டத்வங்கள் இயம்ப இச்சிக்கப்பட்டன வாம் ஈண்டெனின்? இங்ஙனமாயின் காலத்தையங்கீகரித்து அங்கீகரியாதவன் பதிஞ்ஞையானி யாகாமற்போம்; ஆண்டு

அக்கால் எனப்புகன்ற விசேடணங்கிசத்திற்கு அசம்பவமாத லின், காலம்காலம் அயலேயேனும் தன்னேத்தானேனும் ஏற்றிக்கொள்ளாதாம், காலத்தில் அக்காலென்னும் விசேஷண மிடின் பிருண்டும் ஸவப்பின் இலக்கணவொருமை யறிவாம். போதின்பொருட்டுத்தான் பதிஞ்ஞை ஹானியின் அதோஷமாயின் அதுபோல அயலிடத்தும் அதோஷத்தன்மையின் அடைவாம். எக்காலே சுவீகாரம் அக்காலே அசுவீகாரமாகித்தியினும். அக்காலென அக்கதைக்காலம் அறையுமவாவாம் எனின்? ஆகாதாம், அதுவெனுஞ் சத்தம் ஒரு வியத்திபரமாயின் இலக்கணத் தொடர்பின்றும், வாதாதித் தன்மையானே சாமியமாயிலே ஒருபோழ்தினுமே அதனினும் விபரீத வேறுவாதம் நடத்தமுடியாமை வழக்காம். இங்ஙனம், அவ்வாறே அதற்கே என்பதாதி பதங்கட்குங் கண்டுகொள்க. அபசித்தாந்தத்தை யகற்றுவதாகிய அறைந்தவென்னும் பதத்திற்கும் விருத்த நியாயத்தான் ஆற்றலற்ற சிறப்பாந் தன்மையாம். இவ்வண்ணம் எல்லா நிக்கிரகஸ்தானங்களிலும் காணத்தக்கதெனச் சுருக்கமாம்.

4. பிரதிஞ்ஞாந்தர கண்டனம்.

பிரதிஞ்ஞை யானியாதி யென்னும் ஆதிபதத்தாற்றான் ஏன்னே தொகுக்கப்படும், பிரதிஞ்ஞாந்தராது மெனின்? ஆகாதாம், பிரதிஞ்ஞாந்தரமே நிரூபிக்க முடியாதாம், அஃதெங்ஙனமெனின்:— தான்மொழிந்து பரன்றாடித்து முன்மொழியாத சிறப்புற்ற துணிபொருட் பாகத்தின் கூற்றுப் பிரதிஞ்ஞாந்தரம் என்பதலக்ஷணமாம். அங்ஙனமன்றே:— யாண்டு வாதியானே முதலிற் சிறப்போடு கூடிய பதிஞ்ஞைப் பாகம் பகரப்பெற்றதோ பரனிலோ சிறப்பற்றதாகக் கூறிய மயலாற் றாடிதமாமோ, அதன்பின் வாதி முதலின் மொழிந்த சிறப்புற்றதையே யுபன்யசித்து இங்ஙனம் என்ஞை யியம்பப்

பட்டது, சிறப்பற்றதேர் அன்றும் ஆகலின் நிரனுயோச்சி யானு யோகம் நின்க்காம் எனச் சத்துத்தரமே சாற்றுழி ஆண்டும் சென்றமையின் அதிவியாப்கமா மிது.

5. அதிவியாப்தி பரிகார சங்கை நீக்கங்கள்.

முன்மொழியாத சிறப்புடைமை ஆண்டிலதாம் அஃ தென்னன மதிவியாப்தியாதல் எனின்? ஆகாதாம், முதற் கூற்றின் முன்னின்மையின் முன் னிருப்புண்மையின். விசே டியக்கூற்றும் அக்கால் உளதாவதில்லையெனின்? அத்துணை யால் வந்ததென்னே விசேஷண அநுக்தியதிப் பிரசங்கத கிற்கு.

6. விசேடிய உக்தி சமயத்தில் விசேஷண அநுக்தி வீவிகைஷ் விலக்கம்.

விசேடியம் விளம்பும்போதில் விசேஷணம் விளம்பாமை விளம்பும் வேட்கை யெனின்? ஏலாதாம் ஒருகர்த்தாவா லோதப்பட்ட வாக்கிற்கு ஓரேகாலத் தசம்பவத்தால் யாண் டும் அவ்வாறிருப்பதற்கே யிருப்புண்மையின், விசேடியக் கூற்றின் பிற்காலத்திலெனின்? ஆகாதாம், கருங்குவளை யென்பதாதியில் முன்விழுந்த சிறப்பில் அஃதின்மையின். விசேடியக்கூற்றின் றடையற்ற முற்போதிலெனின்? ஆகா தாம், குவளை கறுப்பு என்பதாதியில் அஃதின்மையின், விசே ஷணம் விளம்பத்தக்க போதில் எனின்? இயையாதாம், நானு விசேஷணமுடைய விசேடியத்தில் முறை விருத்தித் தன்மை யுண்மையின் வாக்கை முறையாகக் கூறும்போது எவ்வேக விசேஷணங் கூறுங்காலமோ அது அயல் விசேஷ ணைக் கூற்று கட்கும் தகுதியதாய் ஆகவேயாமென அக்கால் அன்னியங்களாகிய முறையே வருபனவைக்கு இன்மையின் அதுவே யதிவியாப்தியாம்.

7. அந்திமகற்ப மகற்றல்.

எல்லா யோக்கியகாலத்தில் எனின்? ஏலாதாம், தூஷண பிற்காலத்திற்கு யோக்கியகாலத் தன்மை யங்கீகரிக்கில் அவ் வியாப்தியாம், தூஷணமுற்காலத்திற்கு அங்ஙனம் அங்கீக ரிக்கினே தூடணத்தின் பின்பவிப்பதாய விசேஷணேக்தி வியக்திக்கு அக்காலின்மையின் முன்போன் றதிவியாப்தி யாம். எல்லா அதன் ஜாதீய விசேஷணக் கூற்றின் இன்மை யியம்ப விச்சித்ததெனின்? பொருந்தாதாம், அபாதப் பிரதி யோகி பூதமாய எல்லா வியக்திகளையும் தனித்தனியாக எவ் வளகையானும் நம்மனோரால் அளவிடுதற்கு முடியாமையா னே அபாவம் நிரூபிக்க முடியாமையான் இலக்கணத்தின் அஞ்ஞானத்தால் அசித்திவழக்காதலின். சாமானியப் பிரத் தியாசத்தியால் வியக்திகள் விளங்குகின்றனவென்பது அனு மான அவசரத்தில் அகற்றப்பெற்றது.

8. விசேஷணத்தானத்தில் விசிஷ்டக்கூற்று விளம்ப விழைவதன் பங்கம்.

இதனானே, முன்னர் அவிசிஷ்டோக்கத்திற்குளன விசே ஷணம் பெய்யத்தக்கதாம் என்பதும் இகழத்தக்கதாம்; உத்த ரகாலத் துரைக்கும் விசேஷணமுடைய விசேடியத்திற்கு முதலில் அவிசிஷ்டோக்கத் தன்மைச் சம்பவங் காட்டப்பட் டிருத்தலின்.

9 பிரதிஞ்ஞாந்தர இலக்கணத்தில் விசேஷண பரம்பரைக்குப் பொருந்தாமை.

மேலும், முதலில் அவிசிஷ்டத்தைப் புகன்று இவ்விசே ஷணம் நின்னால் வைக்கப்படுமாயின் அக்கால் வேறேது நினக் குமாம், அவ்வாறாயினும் அஃதின்மையிற்றான் எனக்கும் யாங்ஙனம் பதிஞ்ஞை யியலாதல்? இனிமுதலதேயாய இவ்

விசேஷணங்கொண்டு கூறுதியேலாயினும் அவ்வியாப்தியாம், முதலில் சிறப்புற்றதாகக்கூறிச் சிறப்புவாளாவென்னு மயலான் விசைவின்மறைப்பாற் சிறப்பற்றதாகக்கூறப் பரஞலே யோ தூடிக்கப்பட்டபோது மீண்டும்சிறப்புற்றதாகக் கூறுபவனுக்கு இவ்வண்ணம் பிரதிஞ்ஞாந்தரம் ஆகாதாம்என அவ்யாப்தியாம். சுவ, பர, சாத்திய பூர்வ பதங்களைப் பரித்தணரின் வியக்தியின்கண்ணே வீழ்தலின் அவ்யாப்தியுமாம் பிரகரணதிலப்பியமாக முன்மொழியாத விசேஷணமாகி மயலயலான்றூடிக்க பிரகரண லப்பிய விசேஷணமுடைமையானே அனுவதிக்கப்பட்டவனுக்கும் சத்வாதத்தில் வழக்காம். இயம்பாவிடத்திலும் அப்பிரதிபாதிதம்என இடினும் தோடமாம், அயலான்பால் அறிவுண்டாகாதவழி பிரதிபாதிதத் தன்மை கூடாமையின் என்பதாதி சுயமூகிக்கத்தக்கதாம்.

10 பிரதிஞ்ஞாவிரோத கண்டனாரம்பம்.

பிரதிஞ்ஞாந்தராதி என்னும் ஆதிபதத்தால் இஷ்டப்பட்டதுயாதோ, பிரதிஞ்ஞா விரோதாதி எனின்? இயலாதாம், எதனைன்கூறுயவன் ஒருவஸ்துயுடைத்தாகிய ஏகவாக்கிய அங்கிசங்கட்குப் பரஸ்பரம் வியாகதம் சாத்யவிபரீத வியாப்தத்வ உற்பாவன அநபேக்ஷ உற்பாவனம் பிரதிஞ்ஞாவிரோதம், அவ்விது அலக்ஷணமாம்; அங்ஙனமன்றே :— ஈண்டுப் பூதலத்திற் குடமில்லை யென்பதாதியின் மாட்டுஞ் சென்றமையின் இது அதிவியாபகமாம். வசனங்கட்கோ வியாகாதம் அன்னியோன்னிய விருத்தார்த்தத்தன்மையாம் அதுவு மீண்டுளதாம், குடமுளதாம்என்னும் அங்கிசத்திற்கு குட

விருப்பை யுணர்த்துந்தன்மையுண்மையின், நகாரத்திற்கோ அதன் நிடேதகத்தன்மை யுண்மையின் என்க.

11. வியாகாத விசாரம்.

அற்றேல் அயுக்தமிது அறையலாயது, குடமில்லை என் புழிக் குடமும் விதிக்கப்படுகின்றது குடநிடேதமும் விதிக் கப்படுகின்றது என்பதாகவின்றும், எதனற்பரஸ்பரம் வியா காதமாமோ, மற்றே, குடம் நிடேதிக்கப்படுகின்றது, குட நிடேதமேதான் விதிக்கப்படுகின்றது என்பது துணிபாம், ஆகலின் யாங்ஙனம் வியாகதி கூடுமெனின்? இங்ஙனமியம் பற்க, குடமென்னும் அத்துணை யங்ஙசத்திற்குக் குடவிதி போதகத் தன்மையாம், இல்லை யென்பதற்கும் அதன் நிடேத அர்த்தத் தன்மையாம் என நீரும் உடன்படத்தக் கதே. இங்ஙனம் அங்கீகரியா தொழிதிரேலாயின் அவற் றிற்கு அவிருத்தார்த்தத் தன்மையானே குடமும் அபேக்ஷித நிடேத இருப்பும் பூதலாசிரிதமாம், இரண்டையும் இவ்வாக் கிய மிலக்கு மென்பதாம், எனவாகலின் விதிரூபமே குட மெனவும் அதன்நிடேதமே இன்றெனவும், இவை ஒரு கர்த்தாவா லாக்கப்பட்ட வாக்கியாங்கிசங்க ளாகவில்லையா? பரஸ்பர விரோதார்த்தங்களைக் கூறுவனதா மாகவில்லையா? எதனலுபமது இலக்கண மிஃதேகாதோ ஆண்டு பரஸ்பரம் விருத்தத்தன்மை மாத்திரம் பரஸ்பரம் வியாகாதகத்தன்மை யன்றும், மற்றே, ஏகதேச காலாதிகளில் பரஸ்பர விருத் தார்த்தங்களின் இருப்புண்மையாம். இன்றென்பதால் ஏக தேச காலாதிகளில் வர்த்தமான விதிநிடேதங்கள் போதிக்கப் படாவாம் எனின்? அன்றும், உத்தர முரைக்கப்பட்டிருத் தலின் தேசகாலாதி யந்தர்ப்பாவ மிலதாயின் விரோதமே கூடாமையின்.

12. ஓரிடத்தில் விருத்த அஸ்தித்தன்மையின் பிராமாணிகத் தன்மை அப்பிராமாணிகத் தன்மைகளின் ரோடம்.

மேலும், ஏகதேசாதிகளில் விருத்தாஸ்தித்வம் பிராமாணிகமென வங்கீகரித்தீரேல் ஆயின் உமக்கு விருத்தசப்தமிது அயலேயாம் சாமயிகப் பொருளதேதேனுமாம். அளவையான் அவ்வாறுயதைக் கவர்தலினனே விருத்தத்வ அங்கீகார சாந்தியாதலின். இனிபிராமாணிகமது அங்கீகார மிலதேலாயின் அப்பிராமாணிகம் பரஸ்பரம் வியாகாதகத்வம் எங்குதானில்லையென அதிவியாப்தியாம்.

13. தன்னுல் பிரமாணமாகாத்தற்குப் பிரிதாற் பிராமாணிகத் தன்மை யாமென்னுஞ் சங்கை பங்கம்.

எங்ஙனம் பரனுல் கூறப்படுகின்றனவோ அருத்தங்கள் அங்ஙனம் பரஸ்பரக், வியாகாதங்கள் ஆம் எனக் கூறுவேம் ஆண்டோ பிரமர்ணம் பெருகியே நிற்கும் என இனி நினைதியேலாயினும், நில்லாதாம்; எங்ஙனமேனும் ஆண்டுப் பிரமாணப்பெருக்கில் விரோதபாஷா பரிபாஷா மாத்திரத்தன்மையடைவுறுதலின். எங்ஙனம் பரனுற் கூறப்பட்டது பொருளோ அங்ஙனம் பரஸ்பரம் வியாகாதகம் என்பதாகவும் சில பால் பரஸ்பரம் வியாகாதகப் பொருளோ அளவிடாமல் அறைதற் கொண்ணுதாம். அடைவிக்கப் படுகின்றது பரஸ்பரம் வியாகாதம் சாதிக்கப்படுவதின்றும் எனின்? அன்றும், எங்கும் அளவிடமுடியாததை அடைவிப்பதின் பொருட்டும் உனக் காற்றலின்மையின். அளவிடாதொழிக, அளவிடாததற்கே அவ்விவகாரமாம் எனின்? ஆகாதாம், யாண்டும் அளவிடப் படாததாய் ஆபாசமாத்திர உபஸ்திதமாயது எங்குதான் நிலை பெறுத்த முடியாது என்பதாகக் கூறிய அதிவியாப்தியே மாறி வரும். அநேக விடங்களில் நியதங்கட்கு ஓரிடத்தில் அடைவித்தல் எனின்? இன்றும், அடைவிப்பதா மவ்விரண்டின்

ஓரிடத்திற் றிதியதத்தன்மை யளவிடப்பட்டவழி பதை யற்றதின், அளவிடப் படாதவழியோ அடைவியாத் தன்மை யின் அடைவுவருதலின்.

14. இரண்டின் சம்பாதனச் சங்கை நீக்கம்.

ஏக ஏக வியாப்பியங்களான் தனித்தனி அவ்விரண்டன் சம்பாதனமாம் எனின்? ஆகாதாம், ஏகம் ஏகம் அவ்வியா காதத்தான்; பொருளால் இரண்டும் ஆமெனின், ஆகாதாம் அருத்தாபத்தி யருத்தத்தன்மையானே அவ்வியாகாத மாத லின்; அருத்தத்தான் அடைவித்தல்சாதனமாகாதாம் எனின்? ஆகாதாம், பரஸ்பரம் விரோதித் தன்மையானே தருக்காபா சத்தன்மை யடைவுறுதலின், இஷ்ட சம்பாதனத்தானும், பரஸ்பரம் வியாகாதத்தான் யாங்ஙனம் அங்ஙனம் ஆதல் எனின்? ஆகாதாம், அவ்விருதருமிகத்தன்மை யுண்மையின் வியாகாத அடைவான் தருமியின் கண்ணே பிரமையபே க்ஷையாயவழி யவ்வியாகாத மாதலின்.

15. பிரதிபந்தியால் விகற்பித்து விலக்கல்.

என்பன வாதியாய தோடங்கள் பரன்பொருட்டுக் கூறப்படின் உமக்கும் இவையாவும் இனிதியம்ப முடியும் எனின்? இயையாதாம், உமக்கும் பிறவிடத்தில் தோடம் எம்மால் அடைவித்தல் கூடும் எனப்பிரதிபந்தியைக் கவர்ப வனுக்குப் பரபக்ஷத்தில் தோடசம்பாதன மாத்திரம் விழை வா? அல்லது யாதும்மால் ஆண்டுச் சமாதி சாற்றப்பெறு மோ அது எம்மாலும் என்னுங் கருத்தால் தற் பக்ஷத்திற் சமாதியா? ஆண்டாதியதாகாதாம், புகல்வதாகாமற் போத லின், பரனியம்பிய தோட முத்தார மாகாமற் போக அத் தனையானே கதையின் அதன் பாதியினேனும் முடிவுபே

றடைதலின் அவற்றிற்கு நிக்கிரக அபரிகார அவதித்தன்மை யாதலின்.

16. இரண்டாவது கற்ப நீக்கம்.

இரண்டாவதன் கண்ணே அதையே கூறுவதாகுக எம் மனோர்க் காணி யாதுகொல்! தாங்கண் முதலிற் புகன்ற சமாதி யாண்டு யாதோ பின் னெம்மானும் இயம்பத் தக்க தாம் எனின், ஆகாதாம், எம்மால் அதனபிதானத்திற் கிப் போது பகரப்பெறுப் பான்மை யுண்மையின். எம்மாற் றற் பக்சாதனமும் உம்மாலோ அதன் றாடணமும் பிரகிருதத் தில் புகலத்தொடங்க வில்லை யல்லவா, மற்றே, உம்மாலோ தற்பக்கம் நிர்வகிக்கத் தக்கது அதன் றாடணமோ எம்மா லியம்பத்தக்கது எனக் கதை பிரகிருதமாக வன்றே நிகழ் கின்றது. இத்தகைய கதை விபாகத்தில் எம் பக்கசமாதா னப் பொருட்டு எம்மைப் பரியனு யோகம் புரிவான் தங்கட் கெங்கே யதிகாரம்?

17. தோடங்க ளிருந்தபோதிலும் பரிகார மாமென்னுஞ் சங்கை நீக்கம்.

இனி விசேஷமாக அதனை நிர்ணயிப்பதில் யாது பயனு ளது ஆண்டு இத்தகைய வினவில் பரிகாரம் எதனால் உம்மா னும் தற்பக்கத்தில் இஃதங்கீகரிக்கத் தக்கதாம். என்னுங் கருத்துமக்கோ அதுவும் பொருந்தாதாம், எம்பக்கத்திற் சமாதி யுளதேலாயின் அத்துணையானே உம்பக்கதினும் அதனால் பலிக்கத்தக்கதாம் என்பதன் கண்ணே ஒரு சிறிதும் அளவையிலதாம். ஒப்பாதலி னிங்ஙனமெனின்? ஆகா தாம், வேற்றுமையை யவசியம் யங்கீகரிக்க வேண்டி யிருத்த லின். அதின் ஒன்றிய சிறந்த வடிவங்கொண்டு எமது தரி சனமாதல் பிரகிதந்திர சித்தாந்தமாதல் ஈண்டுச் சமாதியா

மேல் ஈண்டு உமதுபக்கத்தில் அஃதின்மையின் ஆகாதாம்; அங்ஙனமாகவே, ஒப்புமை மாத்திரத்தால் யாங்ஙனம் சமாதியிஃதீண்டுமெனத் துணிவான் முடியும். யாதிஃ தாண்டுச் சிறப்பெனின், இன்றும், எம்மாலிப்போது அதன் கூற்றிற்குக் கூறிடாத்தன்மை யுளதெனக் கூறப்பட்டிருத்தலின்.

18. சமாதிசாமிய சங்கை நீக்கம்.

விஞ்சமத் தன்மையால் விடைச் சமத் தன்மையா மெனின் ? ஆகாதாம், தூடியத்தொன்றும் விசேட பாவாபாவ விசேடித்தத்தன்மை முதலிய வற்றுணும் அதன் வேற்றுமை சம்பவித்தலின். சத்விவகாரத்திற்குச் சத்தை யவ்கீகரிப்பதில் ஒப்பாகிய வழியிலும் சத்தையின் மாட்டு அதனங்கீகார முற்றபோது எல்லையின்றிச் செல்லலால் அதன் பற்றுக் கேட்டிலோ அதனின்மையான் எங்ஙனமோ, அங்ஙனம் பிறண்டும் வெகுவாகக் காணப்படுதலின்.

19. வேறுவகையானே பிரதிபந்தி கண்டனம்.

மேலும் பரஞுண்டாக்கப்பட்ட அசித்தியாதிகளைப் பரிகரியாது பிரதிபந்தியால் எழுந்துநிற்பானது கருத்தியாதோ, யாதிதுதோடமதாகப் பரஞுண்டாக்கப்படுமோ அஃததூட்டணமாம் அதூடியத்தினும் செல்லுகின்றமையின் எனவா ? அல்லது, தூஷணமிருந்தபோதினும் கிளப்பலாகாதாம் சமபோகசூஷமத்தன்மையுண்மையின். "யாண்டிருவருக்கும்" என்பதாதியாகக்கூறியும்உள்ளார்; எனவா ? ஆதியதாகாதாம், ஈண்ட சித்தியாதியிலக்கணமுளதாமேல் தூஷணத்தைக்கிளப்பில், அக்கால் தோட்டத்தைப்பரிகரிக்கக் கூடாமையின், பரிகரித்தபோதினும் அதற்கலக்கணத்தன்மை வழக்காதலின். இதுதூட்டணமாகுமாயின் யாங்ஙனம் அதூடியத்தன்மையானே வாதியால் அங்கீகரிக்கப்படினும் பிரதி

பந்திஸ் தானத்திற் சென்றதெனின்? இஃததூடண மாகு மேலாயின் யாங்ஙனம் தோட லக்ஷண மடைவுற்றது. என் பதன்மாட்டும் திட்டியை நாட்டுக. நியாமகாபாவ மாகுமே லாயின் இதனது தூடனத்தன்மையிற் சந்தேகம் முடிவுபே றடையுமெனின்? உளதாகுக, தோடத்தன்மைச் சந்தேக முற்றவழியும் தங்களது சாதனத்தின் அசாதகத்தன்மை யுண்மையின் சந்திக்த அசித்தம் மீபாலும். மேலும் எவ் விலக்கண முடையதாக விதற்குத் தோடத்தன்மைச் சந்தேக மாமோ அவ்விலக்கண முடையதாகவே யிது பிறவிடத்தி லும் என ஆண்டும் அசித்தியாதிகட்கு அதூஷணத் தன்மை யேயாம் என்னுமிப் பிரதிபந்தி விடையற்றதாம் பிரதிபந்தி வாதியான் என்க.

20. சமானத் தன்மையானே தூஷணமும் உண்டாக்கத் தகாதாம் என்னுஞ் சங்கை நீக்கம்.

இரண்டாவது மாகாதாம், அங்ஙனமன்றே உபயவாதி சம்மத அதூடியத்தன்மைத் தூமாணுமானுதிகளைப் பரன் பிரதிபந்தி செய்வனுயின் அப்போது அதன் றரிசனத்தில் அயலிடத்திலெங்கும் இவ்வசித்தியாதிகள் உண்டாக்கலாகா வாம் பரசாதனங்களில் அதற்கே தூமாணுமானுதிகளின் பிரதிபந்தியாபயத்தான் எனவிது எம்மாலும் இனிதுகவரப் பெறலாமே அவர்பொருட்டு பிரதிபந்தி ஈண்டும் "யாண்டிரு வருக்குஞ் சமம் தோஷம்" என்பதாதி படிப்பான் முடியக் கூடியதேயாம்.

21. விசிஷ்டத்திற்கே யுற்பாவனஞ் செய்யினும் தோஷமாம்.

இனி எச்சிறப்பைப் பற்றிப் பிரதிபந்தியாமோ அதன் மாத்திரத்திற்கு உற்பாவனஞ் செய்யாதொழிதலாம் சாமானி யத்தானேயோ அன்றும் எனின்? அன்றும், ஆண்டு விசே ஷத்திற் பிரதிபந்தியால் தியாளிக்கப்பட்ட அவ்டத்தன்மை

யிற் கென்றமையின் அஃதிலக்கணமே யாகாதனவாம்; சிற
பித்து அதன் விசேடத்தியாகந் தன்னிலோ அத்தகைய
இலக்கணத்திற்கு அசித்தியேயாம் எனச்சாலும் பிரதிபந்தி
யாலாற்றியது. இனி எமது தரிசனமாத்திர அங்கீகார
அதூடியத்தன்மை யொருசிறிது பொருள் பிரதிபந்தி செய்
வானுயின் அக்கால் அவனுலிது கூறப்பட்டதாகும் ஈண்டித்
தூடணம் கூறுணுததாம் எனக் கூறியவழி இந்த யூகத்தி
னுலே உமதிஷ்டபங்கப் பிரசங்க முண்டாதலின் எனச்சங்
கிப்பின் ? அது முடியாதாம், ஈண்டு இந்தத் தூடணம் இயம்
பத்தக்கதாம், இயம்பாதொழியில் இவனுக்கே அநிஷ்ட
மாய அயற்றுணிதல் வேட்கையான் சித்திப்பிரசங்கம் வருத
லின் எனக் கூறுவதன் அநுகூலத்தினதும் பிரதிபந்தியின்
சம்பவமாதலின்.

22. பிரதிஞ்ஞா ஹானி யடைவின் நீக்கம்.

அற்றேல் இங்ஙனமேயாகுக அங்ஙனமாயின் கூறிற்
கூறுதொழியினும் இருபாலும் பாசமாம் பிரதிபந்தித் தாம்பு
தங்கட்கே நீக்கமுடியாததாம்; இங்ஙனமாகாதாம், பரஸ்பரம்
விருத்தப் பிரதிபந்தியத் தருக்காபாசத்தன்மை யுண்மை
யின், பரஸ்பரம் விருத்தத்தன்மைக்கு தருக்க தூஷணத்
தன்மை யுண்மையின், சற்பிரதிபக்க அனுமானம் போலும்,
இரண்டும் பரஸ்பரம் தடுத்தலானே உபகூணமாய்ப் போத
லின் என்க. நியாய இரண்டாவதத்தியாய முதலாந்நிக
சூத்திரத்திலோ "பிரமேயத்தன்மையும் துலாப்பிரமாண்யம்
போலும்" என்பதன்கண் வருவிக்கப்பட்ட திருஷ்டாந்த
அபாவ இலக்கனை தோட வொப்பான் எதிர்த்து நின்ற பூர்
வபக்ஷவாதியை நிராகரிக்கும் பொருட்டு ஆசிரியர் "சமான
மென அநுத்தரம் அங்கீகாரத்தின் அங்கீகரிக்கப்பட்ட
தாண்டி தன்னுலான் எமது பக்கத்திற் றிருட்டாந்த மில்லை

யென" க்கூறிக்கொண்டு உத்யோதகரர் யாண்டு பயத்திற் கும் என்பதாதி கூறும் பட்டருக்கு எதிர்த்து மற்புரிய வேண்டும்.

23. அபசித்தாந்த கண்டன ஆரம்பம்.

அஃதென் பிரதிபந்தியாதி தூடணம் பலிக்கவே யில் லையோ அற்ற லிங்ஙனம் தங்கட் கபசித்தாந்தமாம் என்னின்? ஆகுமாயின் பிரகிருத சம்பத்தமாக அபசித்தாந்தத்தின் இலக்கணம் கர்ட்டல் வேண்டும், வாக்கு மாத்திரத்திலே அபசித்தாந்தம் கூறில் தங்கட்கென்றன் அபசிந்தாந்தம் வர மாட்டாது? சித்தாந்த விபரித அங்கீகாரம் அபசிந்தாந்த மாம், பிரதிபந்தியாதியோ, தங்களால் சித்தாந்தத்தன்மை யானே யங்கீகரித்ததாம், என்னுலித்தரிசனம் பற்றிப் பகரத் தக்கது எனத் தங்களால் தரிசனவிசேட மங்கீகரித்தலின், தரிசனத்திற்கோ அவ்வப்பதார்த்த அங்கீகாரவடிவத் தன் மை யுண்மையின், அப்பதார்த்தங்களிலோ பிரதிபந்தி தூட ணதிகள் புகுந்துறுதலின் எனின்? ஆகாதாம், இல்க்கணமே ஆண்டு அபசித்தாந்தத்திற்குப் பெர்ருந்துறுதாம், எமது சித்தாந்தவிபரீத மங்கீகரிக்கும் தங்கட்கு அபசித்தாந்தப் பிர சங்கத்தான்.

24. தன்னென்னும் விசேஷணத்தானே தோடவாரண சங்கை நீக்கம்.

தன் சித்தாந்தம் அங்ஙனம் அவாவியதாம் எனின்? ஆகாதாம், விசேஷண பூரணமில்லாமல் அதன் லாபமின்மை யின், மாறுயிலை யாண்டுமே விசேடணமீயும் பிரயாசம் வள்ளர்போதலின். இங்ஙனமே யங்கீகரிக்கின் தங்கட்கே அபசித்தாந்தச் செல்கையால் விலக்கப்பாடு வீழ்தலின், உமது சித்தாந்தத்தில் நூற்றுக்கணக்காக ஹேதுவாதிகளில் விசே ஷண உபாதான தரிசனமாதலின்; பரசித்தாந்த அடையண்ட

வியா ஹேதுக்கட்கோ, பிறழ்ச்சிப்படுத்தி யுமது சாஸ்திரத்தில் வெகுவாகத் தூடிக்கப்பட்ட தன்மை யுண்மையின். முதலில் தன் என்னுஞ் சப்தத்தை விசேஷணமாகக் கோடாது தூடண பயத்தானே யிப்போழ்து அஃதை யாற்றினே ஹேது வேறு என்னும் நிக்கிரகஸ்தானம் தங்கட்காம், ஹேது வந்திரமோ பிரதமம் அவிசேடணமாகச் சாதகபாகஞ் சாற்றிப் பின்னர் விசேடண முடையதன் வசனமாம்.

25. அடையாக் காலத்தன்மை நிக்கிரக வடைவாம்.

மேலும் இங்ஙனம் இலக்கணம் இயம்பும் தங்கட்கு அடையாக் காலத்தன்மை அடைவாம், அடையாக்காலம் அவயவ விபரியாசமெனவாம் இலக்கிய மியம்பியன்றே இலக்கணங் கூறல் பொருத்தம், அதற்குந் தங்களால் விபரியாசம் செய்யப்பட்டதாம், இங்ஙனமே யங்கீகரித்தவழி தங்கட்கே யபசித்தாந்த மடைதலின்.

26. பிரதமம் சவிசேஷணமாகக் கூறினும்
இலக்கணத்திற் றோடமாம்.

யாவன்றன் முதலிலேயே தன்னென்னும் விசேடணம் கொள்கின்றனனே அவன் பொருட்டு அநுபாத்த விசேஷண பக்கத்திற் பகர்ந்த தோடங் கூறத்தக்கதாம். என்னுடையதே சித்தாந்தமாம் தற்சித்தாந்தமே எனதாம்.

27. மீண்டும் இலக்கண நிர்வசனஞ் செய்யினுந் தோடமாம்.

ஈண்டு, வாக்கியத்தில் அங்கீகாரபதக் கேள்வியால் அங்கீகரிப்பவன் லபிக்கின்றன், அவனது எத்தன்னதுளதோ அது தற்சப்தார்த்தமாக எஞ்சாநிற்கும் எனின்? ஆகாதாம், எனக்கு அங்கீகரிப்பவனுந் தன்மை யுண்மையின் என்னுமே சிறிது உடன்படப் படுகின்றதேயன்றே! விபரீத அங்கீகரிப்பவன் அபேக்ஷிக்கப்படுகின்றன் எனின்? அன்றும்,

விசேடமின்மையின். சித்தாந்த விபரீத அங்கீகாரஞ் செய்பவன் விபரீத அங்கீகாரஞ் செய்பவனுவன் எனின்? ஆகான், ஆயினும் விசேஷமின்மையின், எனக்கும் உனது சித்தாந்த விபரீத அங்கீகரிப்பவனுந் தன்மை யுண்மையின், தற்சித்தாந்த விபரீத அங்கீகாரஞ் செய்பவன் அவ்வாறு அபேக்ஷிக்கப்படுவன் எனின்? கூடாதாம், அத்தியந்தம் அகலறிவாளனுயன்றே இருக்கின்றாய், யாது தற்பதமங்கீகரிப்பவனுல் சிறப்பிப்பான் முயன்று அங்கீகரிப்பவனையே தற்பத வாயிலாய்ச் சிறப்பித்தனையோ, பரஸ்பர ஆசிரயத்தினின்றும் பயந்திலையோ, தற்பதத்திலும் பொதுவதாக எதிர்த்தெழல் பரன் கூறியது மீண்டும் அங்ஙிலையாலேயே யுளதாமெனவும் மாறிநிற்கின்றிலை.

28. எதுவென்னுஞ் சப்தம் வைத்தலானே அபசித்தாந்த இலக்கண நீக்கம்.

யாவனுக்கு யாது சித்தாந்தமோ அவனுலது விடப்படின் அபசித்தாந்தம் அவனதாமெனின்? இங்ஙனமாகாதாம், எவனது எச்சித்தாந்தம் என்புழிப் புருடவியத்திவிசேட சித்தாந்த வியக்தி விசேட பரமாயின் சிறப்பாக வருதலின் அவ்யாபகத்தன்மை இலக்கண தோடமாம். எவனதென்பதைச் சித்தாந்த சம்பந்தியினதெனப் பொருள்படுத்தின், அவனுலென்பதைச் சித்தாந்த சம்பந்தியினுலெனவும் பொருள்படுத்தின் உனக்கபசித்தாந்த மாதலின். அங்ஙனமன்றே:— சித்தாந்த சம்பந்தியாய எனது எச்சித்தாந்தமோ அதனது சித்தாந்தர சம்பந்தியாகிய வுன்னுல் தியாகம் உளதேயாம்.

29 தியாக்சப்த பலத்தானே அதிவியாப்தி பரிகார சங்கை நீக்கம்.

தியாகமேயவனுக் கின்றும், என்னுல் இனிது கவர்ப் பெற்ற விடயத்தன்மை யுண்மையின் றியாகத்திற் கெனின்? இன்றும், தியாகமென்பது அசுவீகாரமாயின் இனிது கவரப் பெற்ற விடயத்தன்மை நியம மின்றன்றேவாம். இனிச் சுவீகிருதத்தின் அசுவீகாரமாயினே, என்னுலே சுவீகரிக்கப் பெற்றதற்கு உன்னுல் அசுவீகாரம் உளதேயாம் அங்ஙன மெனச் சிறப்பிலதாம். இனி அவனுனே சுவீகிருதத்திற்கு அவனுனே யசுவீகாரம் எனின் அதுவுமாகாதாம், அவனு லெனச் சுவீகரிப்பவனுலெனப் பொருளாயின், எனக்கும் சுவீகரிப்பவனுந் தன்மை யுண்மையானே என்னுல் சுவீகிருத மாய்தற்கு உன்னுல் அசுவீகாரமாயவழி உனக்கு அபசித் தாந்த மடைவாம்.

30. எகசப்தம் போட்டே இலக்கண சங்கை பங்கம்.

ஒருவனுல் ஒன்று சுவீகரித்ததின் அசுவீகாரம் அபசித் தாந்தமாம் எனின்? ஆகாதாம், ஒருவனுலென்பது ஒன்று என்னும் எண்ணிக்கை கூடியவனுல் எனவாயின் எனக்கென்ங ஙனம் எக்எண்ணிக்கையோடு கூடுந்தன்மையோ அங்ஙனம் உனக்கும் ஆமென அதே யபசித்தாந்த மடைவாம். இனி யொருவனுலென்பது அபின்னனுல் எனவாயினும் தன்னி னும் அபின்னத்தன்மை உனக்கும் எனக்கும் சமானமாம், அன்னியனினும் அபின்னத்தன்மை எனக்குமில்லை உனக்கு மில்லையாமென் அபசித்தாந்த விடயக்கெடுதலாம். இனி சுவீகரிப்பவனுக்கு அசுவீகரிப்பவனினும் பின்னத்வ மில்லை யாம் ஆயின் அக்கர லிப்பொருளாம் சுவீகரிப்பவனினும் பின்னமற்றவனுல் சுவீகரிக்கப்பட்ட ஒன்றனது அசுவீகர

ரம் அபசித்தாந்தமாம், அங்ஙனமாயிலோ அதே உனக்கப சித்தாந்தமாம், என்னுல் எதனது அங்கீகாரமாமோ, சிறிது சுவீகரிக்கு மபின்னுய தினக்கு அதனது அசுவீகரிப்பவ் னுந் தன்மை யுண்மையின்.

31. வேற்றிலக்கணத்தே கூறியதூடணை அதிதேசமாம்.

இதனுனே ஒன்றன தொருவனுல் சுவீகார அசுவீகாரங் கள் அபசித்தாந்தங்களென்பதும் அகற்றப் பெற்றதாம்; கலந்தநம்மனேருக்கு அபசித்தாந்த அடைவு வருதலின்.

32. தோஷபரிகார சங்காநீக்கம்.

இனி, அதைச் சுவீகரித்தவனுக்கே அதையசுவீகரித்த வனது அபின்னத்னும் எகசப்தத்தானே யபிமதமாமெனின், என்னினும், சுவீகார விடயாபின்னத்தன்மை அதுவெனுஞ் சத்தத்தானே கூறப்படினே அசுவீகார விடயத்திற்கு, அக் கால் வேறு சுவீகர்த்தாவின் சுவீகாரவிடயத்திற்குச் சிறிது சுவீகரிக்கு மபின்ன வன்னுல் அசுவீகார விடயமாத லமை தலின், சுவீகார கர்த்தாவிடய அபின்னத்வ சுவீகாரத்தால் உனக்கபசித்தாந்த வழக்கு நீக்க முடியாதாதலின் ஒரு சுவீ கர்த்தாவால் வேற்றவனுலென்றும் சுவீகாராசுவீகாரங்கள் கூற விழைந்தவைகள் எனின்; அன்றும், ஒரு சுவீகர்த்தாவால் என்னும் இதனையே பகுத்து நோக்கிட மீண்டும் அதையே யிழுத்து வழுத்திய அத்தூடண கணத்தின் விலக்காவடை வால், கனகனுகனத்தான் மழைப்பொழு தெழுவழி மிகவுள தாஞ் சஞ்சல விரைவுறு யாற்றின் வேணி நீர்விவர்த்தத்தால் விரிந்த சுழற்குழுவிற் சுழலாநின்ற திருணகதம்ப விடம்பனே யை யாங்ஙனம் அனுபவியாய் புகலுதிரே. சுவீகரித்து அசு வீகாரம் அஃதாமெனின் ? அன்றும், க்த்வா விகுதிப்பொருட்

பகுத்துணர்வான் வழங்கிய வாதம் வருதலின் அசுவீகரித்துச் சுவீகரிப்பதிலோ அதனின்மை யடைவாதலின்.

33. அபசித்தாந்தத்தின் தூஷணத்தன்மை யுபந்யாச நீக்கம்.

மேலும், சித்தாந்த நன்கு விட்டவன்பால் எவ்வபசித்தாந்த உற்பாவனம் அஃதென் சுவீகரிக்கப்பட்ட தரிசன அனுமத அபசிந்தாந்த தூஷணத்தன்மை வாதியின்பாலா? அல்லது அத்தகையன் அல்லான் பாலா? ஆதியதேல், பூர்வசித்தாந்தம் போலும் அபசித்தாந்தத்திலும் இதனால் விசேஷமாக எழுமுடியும் ஆண்டென்னே யறையத்தக்கது, ஆண்டறையத்தக்கதே யொருசிறிதுங் காணும் பூர்வசித்தாந்தத்தியாகத்தினுனே அபசித்தாந்தத்தான் நிக்கிருஹீதத்தன்மை யுண்மையின் எனல் பொருந்தாதாம், அபசிந்தாந்த மாயவழி அதன் பரிகாரத்திற்கு அதன் தூஷணத்தன்மை யன்னியதர அசித்திக்கு அதனுலறையப்படுந் தன்மை யுண்மையின். மாறுயினை தன்கருத்துப்படி அசித்தியை யுண்டாக்கியே கதையைக்கடிந்து வெல்லலாம், பர அசித்திபரிகாரம் அவாவ வேண்டியதில்லை, எனவே அசித்தியில்லாதவழியும் அசித்தியை யுண்டாக்கிப் பரனைத் தோல்விபுரிந்து தடையின்றிக் கிருகங்களைப் பிரதிஷ்டை செய்யலாம்.

34. கூறிய பொருளின் அனுவாதம்.

நிக்கிருகிதமான அதற்கு அயற்பெயர் ஆதரணீயம் அன்மையேயாம் எனின்? ஆகாதாம், அன்னியதர அசித்தியால் நிக்கிருக பரிகாரத்திற்கே அதனுல் கூறப்படுந்தன்மை யுண்மையின்; ஆயினும் அநாதரண முற்றவழி அசித்தமற்ற விடத்தில் அசித்தியை யுளதாக்கிப் பரன் பகாநிற்கும் அசித்தி பரிகாரத்தை யநாதரவுசெய்து வெற்றியே கோடலாமெனக் கூறப்பெற்றது. இனி மத்தியஸ்தனு லிஃது ஆராயத்தக்கது,

அசித்தியில்லாத விடத்தில் இவனுல் அசித்தி யறையப்பெற் றதா? அநபசித்தாந்தத்திற்ருன் அபசித்தாந்தமா? இதனை யாராய்ந்து அவனுனே வெற்றி தோல்விகள் துணியப்பெறு வனவாகுக, அதன் பொருட்டே மத்தியஸ்தனை வைத்தலா மென மனங்கொண்டியா? தகாதாம், அற்ருயின் வாதியாற் ச்சாதன மோதியவழி துஷ்டமித்துவெனக் கூறியே பிரதிவாதி யால் நீக்க வேண்டிவரும், மத்தியஸ்தரேனே பரமார்த்தமாக துஷ்டத்வம் அதுஷ்டத்வமேனும் அச்சாதனத்திற் காரா ய்ந்து வெற்றி தோல்விகள் நிச்சயிப்பின்; அவ்விது பெற்று வைத்துவிட்டுப்போன கோகிலதம்பதிகளின் குஞ்சைக்காத்து வளர்த்த மகாயாச வாயச வியசனமொத்த வியசனத்தை ஏழைமத்தியஸ்தனை அவ்வளவு கஷ்டப்பட்டுப் பேராராய்ச் சியி லீடுபட்டும் பெரிதுமடையுமாறு செய்விக்கும்.

35. பூர்வ அனுஷ்டியினனே அபசித்தாந்த வுபந்யாசம் என்னுஞ் சங்கை நீக்கம்.

இனி இப்போது ஐயந்தான் படட்டும் அபசித்தாந்தத் தினும் இவன் இத்துணையாலென்னே, பூர்வம் அங்கீகரிக்கப் பட்ட அபசித்தாந்த தூடணத் தன்மையை யுடைய தரி சனத்தை ஆண்டதனுற் சுவீகரணம் செய்தவனுவன், அத னையே கொண்டு அபசித்தாந்தத்தின் உபந்யாசம் பொருத்த மாமெனக் கூறிற்கூடாதாம், இப்போதிய அநுமதியிதற்கு ஆதரிக்கப் படாதாயின் இம்முண்டாய வழியும் பழைய அனுமதியைப் பற்றியே தான் தூஷணப் பிரவிருத்தியாயின், அக்கால் அபசித்தாந்தத்திற்குந்தா னிடமெங்கே? அதுவோ முன்னரனுமதத்திற்கு இஞ்ஞான்று அநுமதியைக் கொண் டே பிரவிருத்திக்கும் அயலாற்ருனே அல்லவாம். ஆகலின் அங்கீகரிக்கப்பட்ட அபசித்தாந்த தூஷணபாவமும் வாதி யின்பொருட்டு ஐயப்போது சாதிக்கத்தக்கதாம் அபசித்தாந்

தத்திற்குத் தோடத்தன்மையென இரண்டாவது அவகாச மேற்க. எச்செளக்தாதியர்து மதத்திற்முன் அபசித்தாந்தம் தூடணமாகாதேர் அவன் பெர்ருட்டவசியம் சாதிக்கத்தக்க தேயாம் இதற்குத் தூடணத்தன்மை

36. அங்கீகரியாத அபசித்தாந்த தோடப்பொருட்டு காயாகாத் மூண்டாக்கலாம் என்னும் விஞ விலக்கம்.

யர்வன் அபசித்தாந்தத்தில் ஐயத்தை யாற்றுகின்ற னேஞ் அவன் பொருட்டு வியாகாதமே விளம்பத்தக்கதாம், தரிசன விசேடத்தை யங்கீகரிப்பவனுன் முதலில் அத்தரி சன்த்துட்புகும் பிரதிபந்தி தூஷணத்தன்மை முதலியவை யங்கீகரிக்கப்படுதலின், பின்னர் அவனுக்கே யசுவீகாரம் அவ்விச் சுவீகார அசுவீகாரங்கள். ஒருவனுல் ஒன்றற்கு வியர்கதங்களாம் என அறையற்க; இவ்வியாகாதம் அபசித் தாந்த வடிவமேயாமால்யின் அபசித்தாந்த தூஷணத்தன் மையினும் ஐயுற்றவனுக்கு ஐயத்தை விலக்காமல் விளம்பு வது பொருந்தாதாம். இனியிவ்வியாகாதம் வேறு தூஷண மாக அபசித்தாந்தத்தை யனுபஜீவித்துண்டாவதெனச் சம்ப விக்குமாயின் எல்லாவிடங்களிலும் வரும் அபசித்தாந்த உதா கரணத்தில் இதுவே யுளதாகுக அபசித்தாந்தத்தைத் தூஷ ணமென வங்கீகரித்தலால் என்னேபயன் ?

37. வியாகாதத்தை யுண்டாக்கில் பிரதிஞ்ஞையானியடைவு.

மேலும் இங்ஙனம் அபசித்தாந்தத்தை யுண்டாக்கின் பின்னர் அதனியம் உண்டாகியவழி யபசித்தாந்தத்தை யுபே கூஷித்து வியாகாதவடிவமான இவ்வேறுதோடத்தைக்கூறின் பிரதிஞ்ஞையானியடைவாதலின், பிரதிஞ்ஞாஹானி அங்கீ கரித்து மொழிந்ததன்றியாகுமாம். இவ்வண்ணம்முதலிற் கூறி தூஷணங்கூறி அதன் பரிகாரமாக வேறுதூடணம்

நுதலில் இல்லை பிரதிஞ்ஞை யானியெனச் சென்றதன்றே பிரதிஞ்ஞையானியாதி நிக்கிரகங்களான்.

38. பிரதிஞ்ஞையானி யாபத்தியில்லை யென்னுஞ் சங்கைநீக்கம்.

முன்பிரதிஞ்ஞை செய்த தோஷநிர்வாகப்பொருட்டே வேறுநிக்கிரகங்கூறியதாகாத் தோடழில்லையாமெனின்? இல்லையாம், பூர்வநிக்கிரகபரிகாரம் செய்யாமல் அதனுனேதோல் வியுற்றிருப்ப நிக்கிரகம் வேறுவிளம்பல்பொருந்தாமையின் என்க. இவ்வச்சத்தால் உன்னல் வியாகாதமே உரையாடத் தக்கதாம் முதலில் அபசித்தாந்த மன்றும் என அறையற்க; அபசித்தாந்த வியர்த்தத்தன்மைப் பிரசங்கத்தான் எல்லா இடங்களினும் அபசித்தாந்த உதாகரணத்தில் வியாகாதங் கூறுதற்கே யங்கீகரிக்கத்தக்கதாந்தன்மை யுண்மையின், என் னலபசித்தாந்தம் இபற்றப்பெற்றபோது இவன் ஐயுறவு தில்லை யென நிண்ணயம் புரியச்சிறிதும் முடியாதாம்.

39. விப்பிரதிபன்னன்பொருட்டே அபசித்தாந்ததூஷணத் தன்மைப்பிரசாதனநீக்கம்.

அற்றேல் உளதாகுக இங்ஙனம் விப்பிரதிபுன்னன் பொருட்டு அபசித்தாந்தத்தின் தூடணத்தன்மையினிது சாதிக்கத்தக்கது எனின்? இங்ஙனமையுமாதாம், ஏவ்வகுவி காரதண்ட தூடணத்தான் அதனையங்கீகரித்தன அதனனங் கீகாரமுஞ்சம்பவித்தலின். "சாஸ்திராசிரயங்கள் வாதங்களா காவாம், அபசித்தாந்தம் நிக்கிரக அதிகரணமாகாதாம், ஞானஹீனமாய்ச் சமுசாரியாய் ஜன்மமாத்திரமுற்றுக் குண தோடம் பார்ராததாயதற்குச் சித்தாந்தவிடயக் கவர்ச்சிகளா மிவைகள் எவனுல் அந்தோபிரதிபாதிக்கப்பட்டன?" ஏனச் சௌகதராலும் கூறப்பட்டுளது.

40. உதயனமதத்தோடக்கம்.

ஆண்டொருவ னுரைக்கின்றான் :—சாஸ்திரம்பற்றுது கதைதொடங்கல் பொருந்தாதாம், எக்காற்றான் கணபங்சசா தனப் பிரயோக்தாவிளக்கமற்றவனுகிய திரவாதியால் சித்தசா தன முற்பவிக்கச் செய்து நிக்கிரகிக்கப் படுவனேலாயின் அக்கால் என்னேயாற்றவதோ, பிரதம விப்பிரதிபத்தி விரோதத்தை யுற்பவிக்கச் செய்கவெனின்? இவ்வண்ணமா யின் விப்பிரதிபத்தி யனுகுண பிரமேய மயன் மாறுமுறை யும் உற்பவிக்கவே செய்யலாம், மாறுயிலே ஐயமாறுமுறை யும் உபேக்ஷிக்கலாம், அதனதன் அனுகுண மாறுமுறைகட்கு விரோத அடைவின் பொருட்டுச் சிறிது விசேடமென்பதின் றும்; ஏகபுருடார்த்த அனுகுண அங்க அங்கிபாவமாக விவஸ்தை செய்யப்பட்ட பதார்த்த சமுதாய வியுற்பாதனத் தால் அயற்சாத்திர மென்பதின்றும்; ஆகலின் கணிகத்தன் மையை யங்கீகரிக்கின் அதனனுகுணமாய அபோகாதி சமஸ்த அங்கீகாரமும், அதனேகபரிகாரமேலோ சமஸ்த அதனனுகுண பரிகாரமும் ஆமெனச் சருவஞ்ஞனுயினும் அயல்வகையாக அளவிடுதற்கு ஆற்றலின்றும். சமஸ்த அதனனுகுண பதார்த்தக்கூட்டம் கதைத்தொடக்கத்தில் தற்சப்தத்தானே கூறத்தக்கதன்றும்; அக்காலே சாஸ்திர மாற்றும் வழக்காதலினனும், கூட்டம் அபேக்ஷிதமன்மை யனனுமென்க. அதன் மாறுமுறை யுண்டாக்கற்பொருட் டுச் சமஸ்த அதனனுகுணக் கூட்டம் அந்நியோந்நிய சாஸ் திரம் பற்றுமன் முடியாதாம்; அவ்வவ்வனுகுண மாறுமுறை யிலாதல் அதன் நொதுமலினுதல் தத்துவவுணர்வு வெற்றிக

ளிலவாம், என அகாமலுலும் அதனதிகாரப் பிரிவிருத்த சாஸ்திரத்தையே ஆசிரயிக்கத் தக்கதாம் எனின் ?

41. உதயனமத கண்டனத் தொடக்கம்.

அவ்விது அசுந்தரமாம், எதனேயங்கீகரியாவிடின் விரோதம் உண்டாக்கலாமென வுரைக்கப்படுமோ அதனனுகுணம் வேறுபிரமேயமென்னே ? இரண்டங்கீகரிக்கத் தக்கதாகச் சம்பவிக்கும், ஒன்றே ஆண்டு எதனே யங்கீகரியாவிடின் கதையே பிரவிருத்திப்பதற்கு முடியாமற்போமோ, எங்ஙனம் பிரமாணுதி சர்வகதைகாரர் சித்தம்; மற்றதோ தெரிசனந் தோறுஞ் சித்தஞ் சிறிது, எங்ஙனம் கணபங்க ஈசுராதி. ஆண்டு முதலிலங்கீகரித்தே கதைப்பிரவிருத்தி யெனின் அதனங்கீகாரமாகியவழி பின்னர் அதன் அநங்கீகாரம் அபசித்தாந்தமாம்; அஃதொர்வாதாம், தன்வியாகாதகத் தன்மையானே அதற்குத் தங்களானே ஜாதித்தன்மை யங்கீகாரத்தான்; ஜாதிக்கும் நிரநுயோஜ்யாநு யோகத்தில் நிவேசமாதலின்.

42. இரண்டாவது பக்ஷநீக்கம்.

இரண்டாவதும் இயையாதாம், தரிசனபேத நியதமன்றே கணபங்காதி யாது கதையாரம்பத்தில் அங்கீகரிக்கத்தக்கதாமோ அஃதென்னே அதனங்கீகாரத்தின் பிரகிருத சாத்திய அபோக நல்லுபாயமதாகவா ? அல்லது அதன் வியாபகமதாகவா? முதலதாகாதாம், கணபங்க சாதன சமயத்தில் அபோக்காதி பரித்தியாகஞ் செய்யும் சௌகதனுக்கு அபசித்தாந்த அபாவ அடைவாதலின், அதனங்கீகாரத்திற்கு அதன் அனுபாய்த் தன்மையாதலின்; அன்னியோன்னிய அங்கீகார உபாயத்தன்மையேலோ அன்னியோன்னிய விசாரத்தின் சித்தியேயாகாதாம், விசாரமாங்கால் பிராமாணிகத்

வப் பிரதிஜ்ஞையின்கண்ணே அதனங்கீகாரமாம் அதனங்கீகார முளதாயவழியோ விசாரமாம். அங்கீகரிக்கப்பட்ட வுபாயத்தியாக விடயத்திலேயே இவ்வபசித்தாந்தமாம் பிறவிடத்திலிஞ்ஞும் எனின்? இன்ஞும், யாதுதான் எதனுபாயம் அதனை யங்கீகரித்து விசாரம் பிரவிருத்திப்பிக்க வேண்டும் என்பதாகத்தான் சுங்ஞனம், அதனது உபாயமதாக அதனால் விசாரம் பிரவிருத்திப்பிக்க வேண்டும் என்பதாகவே பொருத்தமாம், அதனங்கீகாரமும் அவ்வளவான் அதனுபாயம் என்பதாக வின்ஞும், அதற்கும் அதனங்கீகாரத்திற்கும் தனிக்காரணத்தன்மை யங்கீகரிப்பதில் பிரமாணத்தைக் காட்டமுடியாமையின், முடியுமாயினுந் தான் ஆண்டும் தன்னங்கீகாரம் என்னென் றங்கீகரிக்கத்தக்கது வியர்த்தமதாகலின், உபாயத்தன்மையானே பரனுக்கு அவ்வாறு தோற்றல் பொருந்தலின்.

43. மீண்டு சங்கை நீக்கம்.

உபேயத்தை யுபாயத்தானே துணிபவனுல் உபேயம் ஒப்ப உபாயத்திற்கும் சத்துவம் அங்கீகரிக்கத்தக்கதாம் எனப்பின்னர் அதனை யங்கீகரியாதபோது அபசித்தாந்த வுபன்யாசம் அவகாசமுடையதாம், அசத்திற்கு உபாயத்தன்மை யொவ்வாமையின் எனவுரையாடின்; அங்ஞனமாயின் உபாயத்தன்மையானே உபன்யசித்தலான் அதன் சத்துவ அங்கீகாரம் அதற்கு நேரே கேட்கப்படாவிடினும் அசத்துவமாக அங்கீகாரஞ் செய்துகொள்வதற்கு உபாயத்தன்மை யங்கீகாரம் பொருந்தாமையானே கற்பிக்கத்தக்கதாம், கற்பிக்கப்பட்ட வதனுல் கேட்கப்பட்ட அதன்சத்துவ அங்கீகார விரோதத்தான் அபசித்தாந்தம் அறையத்தக்கதாம். இவ்வண்ணமாகவே சத்துவ அங்கீகாரத்திலேயே உபாயத்தன்மைப் பொருந்தாமை வழக்காம் தூடணம்

கூறத்தக்கதாம் உபஜீவியத்தன்மை யுண்மையின், அதனுபந்யாசமில்லாமல் கேட்கப்படாத அதனது அங்கீகாரத்தைக் காட்டமுடியாமையின், அதனுபஜீவியாய்ப் பின்றொன்றுவதாய அபசித்தாந்தத்தினனே செய்தது சாலும்.

44. தூஷண அதிதேசம்

இத்தனே இரண்டாவது மன்றும்? அதன் வியாபகத்வ அங்கீகாரமுந்தான். அதன் சத்தையை யங்கீகரியாதொழியின் சாத்தியத்தின் அபாவ அடைவான் றொடர்ந்தெண்ணத்தக்கதாம், அங்ஙனமாக அதுவே தூஷணமுளதாகுக, அநங்கீகாரமாயவழி அதனல் அங்கீகாரத்தை யினிது கற்பித்து அதனேடு அநங்கீகார விரோதத்தான் அபசித்தாந்த அவ்வுபந்யாசத்தா லாற்றியது போதும் என்பதாம்; இங்ஙனமே நிக்கிரக மயலதுகண்டனமும் ஊகிக்கத்தக்கதாம்.

கவிதார்க்கிக சக்கிரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ ஹர்ஷாசிரியர் அருளிய கண்டன கண்ட காத்தியத்தில் நிக்கிரக அநிருக்தி யெனப்பெயரிய இரண்டாவது பரிச்சேதம் முற்றிற்று.

மூன்றுவது பரிச்சேதம்.

1. கிம்சப்தார்த்த விசார ஆரம்பம்.

நல்லது எவற்றைப்பற்றி வெகுவாக வாக்குவிவகாரங்கள் ஆமோ அச்சருவ நாமங்கட்கு அருத்தங்கள் எங்ஙனம் நிகழ்த்தப்படும். அங்ஙனமன்றே, ஈசுவர இருப்பில் என பிரமாணம் எனக்கேட்பவன் எதிர்கூறத்தக்கவனுவன், என்னென்னுஞ் சப்தமிது அபாவங்கூறும் பொருளதா? துவ்டத்தன்மை தொகுக்கும் பொருளதா? ஐயப்பொருளதா? அறியும் வேட்கை விடயத்தன்மை தரும் பொருளதா?

கொடுத்தல், ஆண்டு முதற்பக்ஷமதேலாயின் அக்கால் ஈசுர இருப்பில் இல்லை யளவையென வியம்பியதாகும், அவ்வா றுகவே, பதிஞ்ஞைமாத்திரத்தால் சாத்தியசித்தி யின்றுமென் ஹேதுமுதலியவை இயம்பத்தக்கவாம். அதுவுமுன்னல் அறையப்பெறவில்லை, ஆகலின் குறைவுறல் தோடமாம். இதனுனே இரண்டாவது மாகாதாம் ஈசுர இருப்பில் குற் சிதம்பிரமாணம் என்பதற்கும் பிரதிஞ்ஞை மாத்திரத்தன்மை யுண்மையின்.

2. இரண்டாவது விகற்பத்தையே வேறுவகையாய் நீக்கல்.

அன்றியும் சாத்திய அசாதகத்தன்மை யாற்றுன் அஃ துன்னுற் குற்சிதப்படுவதா, அயல்வகையாற்றுனு? அயல் வகையாலெனின்? சாலுமஃதளதாக்கலான் சாத்தியசித்திக் குத் தடையின்மையின், முதலாவதன்றும் பிரமாணமும் சாத்திய அசாதகமும் என வியாகாதமாதலின். இப்பிர மாண சப்தம் கௌணமாம் எனின், அன்றும், பிரமாணத் தன்மைச் சம்பந்தத்தில் இப்பிரமாண சப்தப் பிரயோகமே லாயின் கௌணத்வ வியாகாதம் முக்கியத்தன்மையான். பிர மாணபாசமேலாயினே அதை யுண்டாக்கலாற் சாலுங் கொண்டது. ஈசுர இருப்பில் எப்பிரமாணபாசம் அது குற் சிதம் என்பதன்கண்ணேபரனுக்கும் சம்பிரதிபன்னத்தன்மை யுண்மையின். ஈசுர இருப்பில் எனவும் விசேஷங்கொண் டது வீணேயாம், பிறுண்டுளதாம் விடயத்தும் அளவைப் போலி குற்சிதமே சாத்திய அசாதகத்தன்மையான். மூன் றுவதும் முரணுவதாம், அங்ஙனமாயினே விதர்க்கத்திற்குப் பக்ஷம் வேறு அவாவப்படுதலானே பக்ஷாந்தரமும் பகரத் தக்கதாம் ஈசுர விருப்பில் இது பிரமாணமா அல்லது அன் னியமா என அதுவும் உன்னுற் கூறப்படவில்லை அதனுற் குறைவுறல் தோடமாம்.

3. கிம் சப்தத்திற்குப் பிரசினார்த்த முடைமை நீக்கம்.

நான்காவதும் நலமலதாம், பிரசின அருத்தம் வாய்ந்த கிம்சப்தத்தான் மற்றேதேனும் பதார்த்தத்தின் அறியும் வேட்கை யுடைமை புலப்படுமேல் அதுவும் ஈண்டுப் பிரமாணப்பத சமபடிதத்தாற் பிரமாண விஷயிணியாகப் புலப்படும், எதன் விஷயந்தான் பிரசினமாமோ அதுத்தரவாதியாலறையத்தக்கதாம். அவ்விப்பிரசினம் ஈசுர இருப்பிற் பிரமாண சாமானிய விஷயந்தான் அதன் விசேட விஷயந்தான் அபிப்பிராயப்பட்டதா? ஆதியதேல் ஈசுர இருப்பிற் பிரமாண மென்பதாகவே யுத்தரம் அமைவதாம், எதனது விடயமாமோ வினு அது அறையத்தக்கதாம், பிரமாண சாமானிய விடயமாம் பிரசினம் அதுவும் பிரமாண சப்தத்தானே யுறையப்படுவதேயாம். இனியிரண்டாவது ஆயினும் ஈசுர இருப்பிற் பிரமாணம் என்பதாகவே உத்தரம் பொருந்துவதாகும் எங்ஙனம் வினு வாக்கியத்திற் பிரமாணசப்தம் விசேடபரமாமோ அங்ஙனம் உத்தர வாக்கியத்தினுமாம்.

4. விசேடபரம் பிரசினம் என்னுஞ் சங்கை நீக்கம்

அவ்விசேட மென்னெனின்? என்னற்க, முன்போன்று விடையாதலின். மேலும் இவ்வினுவிற்கும் விசேடவிடயம் என்னென்னுஞ் சப்தத்திற்கு விசேடசப்தத்தாற் சமநிலைக்களப்படுதலின், அங்ஙனமாகவே விசேடமென்பதாகவே யுத்தரமாம். ஆகுக விதுதான் விசேடசப்தத்தான் விசேடமாத்திரம் அறிர்த்தாரித மீண்டுவிளம்பும் வேட்கை யின்றும், மற்றே, சிறப்பான வியக்தி ஆண்டு விசேடசப்தத்தின் தாற்பரியம், ஆகலின் யாதவ்வசாதாரணமான பிரமாண வியக்தியென்பது பிரசினப்பொருளாம், ஆண்டோ அத்தகைய பிரமாண வியக்தியின் கூற்று உத்தரமாகப் பொருந்தும் இவ்வகையாய பிரலாபங்கள் கூடாவெனின்? இஃதிங்ஙனமாகா

தாம், ஈண்டும் விசேடமென்பதாகவே விடையாதலின், எங்
ஙனம் வினவாக்கியத்திருக்கும் விசேடசப்தத்திற்கு யாவற்
றினும் விலகும்வடிவப்பிரமாண வியக்தியின்கண்ணே கருத்
தர்மோ, அங்ஙனமே விடைவாக்கியத் திருப்பதற்கும் ஆம்,
இன்னணமாகவே எவ்விடயத்தின்கண்ணே உன்னுடைய
வினவாக்கியத்தின் ருத்பரியம் அதுவே யெங்கட்கு உத்தர
வாக்கியத்தால் அறையப்பெற்றதாமெனப் பொருத்தமே புக
லப்பட்டது.

5. வினவின் வேறுவகையானே அபிப்பிராயம் அகற்றல்.

ஈண்டென்பிரமாணம் எனக்கேட்பவனது அபிப்பிராய
மிதுவாம், இப்பொருளின்கண் அனுமானம் பிரமாணமா மற்
றொன்று எனஇனி நிரூபிதியேலாயின்? ஈண்டும் அனுமானம்
என்பதாக உத்தரம் எங்கட்காம், அவ்வனுமானம் என்னே
யெனின்? இவ்வினவும் அனுமாத்திரவிடயமா? அல்லது
அதன்விசேடவிடயமா? எனவிகற்பித்துப் பிரமாண பிர
மேனத்திற்கேபோலும் உத்தரம் உரைக்கத்தக்கதாம். "வின்
வுவன் றன்வினவின் விளம்புமெவ் விடயந்தன்னை, நனிவகை
யெந்தவெந்த நயத்தினு ன்வில்வோனனும், பனுமந்த விடய
மந்த வகையதாய்ப் பகிராவாக்காற், பினுமந்த நயத்தினனே
மேற்வே செயலாமாங்கே" "வினவிய தெதுதா னந்த விட
யமே விளம்பல் வேண்டும், இனவகை யியம்ப லானு மிது
பவித் திடு நிருக்தம், தனவினு விடய் வக்தா வாகுமுன்
றன்னி னுனும், வினவுமிம் மொழியி னுனே வேண்டவும்
படட தீதே."

6. தூஷணாந்தரங் கூறல்.

வினப்பொருளாலும், என்னெனனுஞ் சப்தத்தானே
ஜிஞ்ஞாசை விஷயதை அர்த்தத்திற்குப் புலப்படும், ஜிஞ்
ஞாசையும் அறியும வேட்கையாம், வேட்கையும் அறியாத

தில் அமையாதாம் மிகுவழக்குண்டாதலின், ஆகலின் ஈசுர விடயம் பிரமாணம் அறியும் அவாவினலுல் ஆணடு இச்சை யின் காரணபூதமாய தன்னுணர்வு சாற்றத்தக்கதாம், அதண் மையேனும் இன்மையேனுமாம், உண்மையேலாயினே அந்த ஞானத்தினுனே தனதுவிடயம் பிரமாணம் நிலைபெறுத்தப் பெறும் விஷயத்திற் பிரமாணப் பிரவிருத்தி யில்லாமல் அத ன்து உண்மைப் பான்மை யுசைப்பான் முடியாமையின். அந்தப் பிரமாணத்தினுனும் தற்கோசர ஈசுரசற்பாவம் நிலை பெறுத்தப்பெறும் என அநாயாசமாகவே சித்தம் நமது ஈசுர சித்திமனேரதம். இனி அயதார்த்தமாயின், ஆண்டு இந்த இன்மை ஞானவிடயத்தில், நம்மனேரான் அயதார்த்தமே யாய ஞானம் உண்டாக்கத்தக்கது என்பதாக கேட்குமுனக்கு வாஞ்சிதமாயினே யாதுகொல்லிது தனததீனப் பொருளில் பர அபேகைஷ அயத்தார்த்தஞானஉற்பாதன குசலனுகியிரேயே ஆண்டுஒருபொய்யுணர்வை யுண்டாக்கலே போல மற்றொன் றையும் உண்டாக்கிக்கொள்ளலாம். யாமோமீண்டு யதார்த்த ஞானத்தை யுண்டாக்குபவராய் மித்தியாஞானத்தில் எல்லா வாற்றுனுமே அபண்டிதர் ஈண்டுன்னுவப்படுவேம். இனி என்னுடைய அயதார்த்தஞானத்தின் விடயம்யாதோ அது என்து யதார்த்தஞான விடயமதாக வுன்னுற்செய்யப்பட்ல் வேண்டும் எனினது வாஞ்சிதமாகுமாயின், வியாகாதத்தான் இத்தகைய பொருளில் நினக்குப்பிரவிருத்தியே பொருத்த முடையதாகாதாம்; சுக்திகை ரஜதத்தன்மையானே எனது யதார்த்தஞான விடயமாகுகவென ஏதன்பொருட்டு எண் ணியவன்றன் எங்ஙனஞ்செயத்தான் எத்தனம்புரிவான். எவ்வுருவத்தானே அயதார்த்த ஞானவிடயத்தன்மையோ அவ்வுருவத்தானே யதார்த்தஞான விடயத்வமாயின் வியா காதமாதலின்.

7. பரமதத்தில் அயதார்த்தத் தன்மையேனும் தற்சித்தாந்தத்தால் உண்மையுணர் வுண்டாக்கலா மென்பத னீக்கம்.

இனித்தற்சித்தாந்த அனுசாரமாக வுன்ன துண்மை யுர்ண்வு ஆண்டுண்டாக்கலாம் ஆகலின் அதன்பொருட்டு நீவி னுவுகின்றதாக எண்ணுதியோ? அஃதேதலாதாம், எவ்வீசுரசற் பர்வ விஷயம் உன்னல் பிரமாணுபாசம் பிரமாணமதாக மயக் கத்தால் புலப்படுத்தலாமோ அதற்குப் பிரமாணத்தன்மை எம்மனோனான் விரித்துரைக்கற்பாலது என எம்மனோர்க் கித்தகைய சித்தாந்தமின்றும், மாறாக, ஈசுரசற்பாவ விடயம் எப்பிரமாணம் உன்னல் பிரமாணுபாசத்தன்மையாதின மயக் கற்புலப்பாடாமோ அதுபிரமாணிக்கத்தக்கதாம். ஈசுரசற் பர்வ விஷயப்பிரமாணத்தின் ஞாபனமாத்திரம் உன்னற்செய் யப்பெறலாம் எனவபிமதம் வினவும் எம்மனோருக்குப் பிர மாணத்தாற்றான் அப்பிரமாணத்தாற்றான் எனவிசேடந்தா னும் அபிமதமின்றும் என்பதாகச் சம்மதிக்கில், கூடாதாம், ஞாபனமாத்திரத்திற்கு அப்பிரமாணஞானம் கொண்டும் பொருந்துகின்றமையின், ஆண்டுச்சுவாதீனத்தில் ஏனிப்பரா பேக்ஷை? என்பதாகியாய்ந் கூறப்பட்டதையே தொடர் படுத்துக.

8. ஞானத்திற்கு மெய்ம்மை பொய்ம்மைகளின் ஐயமேயா மென்னுஞ் சங்கை நீக்கம்.

எவ்விவ்வீசுர சற்பாவ விஷயப்பிரமாணப் பிரதீதியும் மனோர்க் குண்டாயதோ அது பிறழ்ச்சியா? அல்லது உண் மையா? எனவையம்மீண்டு எம்மனோர்க்கு அதனு லேகபக்ஷ நிர்த்தாரணுநீனம் எவ்வித்தூடணம் நின்னுற் கூறப்பெற் றமோ அஃதவகாசமற்றதாம் என விஃதாகுக வெனின், இஃ தாகார்தாம், இவ்வண்ணமே அது பிரதீதியாயவழி யதார்த்

தத்வ அயதார்த்தத்வ சம்சயத்தால் அந்தப்பிரதிதியின் கோசர மெப்பிரமாண்மோ அதற்கும் எவ்விடயம் ஈசுரசற் பாவமோ ஆண்டு யாண்டுமே சமுசயமுடைய நினதுவினு வித்வாம், விப்பிரதி பன்னனதுவென வன்றும், ஆகவே சிஷ்ய பாவத்தை யங்கீகரிப்பாயாக, திருவருள் பெறுவான் எமது திருவடிகளை நெடுநாள் அருச்சித்துத் தொண்டு புரிவாயாக; புரியில் நினது ஐயத்தைக் கெடுப்பேம். விப்பிரதி பன்னரே யாம் ஆகாரிய ஐயம் எமக்காம் எனின்? ஆயின் ஒரு கோடியை நன்கு பற்றியவரேயாம் காரியத்தை யனுசரித்தே சமுசயத்தைப் பற்றியுள்ளேம் எனக்கூறியதாயிற்று; இங் ஙனமாயின் அதேகோடியவதாரணம் உனது யதார்த்தமா அயதார்த்தமா வென்னும் விகற்பத்தில் விளம்பிய ஊகத்தால் தூஷிக்கத்தக்கதாம்.

9.- கற்பாந்தரத்திலும் தூணஷ அதிதேசம்.

இதனினை, நிச்சயமின்மையினினை அஃதெம்மனோ ரான் அறியப்பெற்றது என்பதும் நீக்கப்பெற்றது என அறி யப்பாலதாம், வியபிசாரி விஷயமாதல் அவ்யபிசாரி விஷய மாதல் அஃதென விகற்பங்களான் அதற்கும் விழுங்கப்படுந் தன்மை யுண்மையின் "பரஸ்பரம் பகைபற்றியவழி வேறு வகைத் திதியில்லையாம்" என்னும் நியாயத்தான். இவ்வண் ணம் ஈசுர அபிசந்தியாதியின்மாட்டும், அவ்வத்தானத்தில் நில்லும் சர்வநாமாந்தர கண்டனம் ஈண்டு காணத்தக்கதாம்.

கவிதார்க்கிக சக்கிரவர்த்தி, ஸ்ரீலஸ்ரீ ஹர்ஷாசிரியர் அரு ளிய கண்டனகண்ட காத்தியத்தில் சர்வ நாமார்த்த அதி ருக்தியெனப் பெயரிய மூன்றாவது பரிச்சேதம் முற்றிற்று.

நான்காவது பரிச்சேதம்.

1. பாவத்வ கண்டன ஆரம்பம்.

அற்றேல் ஆயினும் பாவவடிவமா யிராநின்ற அவ் விசாரிடத்தில் விதேயகமாய சிறிது பிரமாணம் கூறத்தக்க தாம் எனின்? மீண்டு பாவத்வமென்ப தென்னே? விதித்வ மெனின்? ஆகாதாம், பரியாயம் வினவாமையின், சொரூப சத்வம், எனின்? அன்றும், அபாவத்திற்கும் அவ்வாறாண் மையின், சுவந்தோறும் விலகினமையானே தொடர்பின்மை யாதல் தொடருவதினுமென்க. இருக்கின்றதென்னுந் தோற்றவிடயத் தன்மையெனின்? அல்லவாம், அபாவங் கடத்திற் இருக்கின்ற தென்னும் உணர்வுண்டாகின்றமை யானே அபாவத்திற்கும் அவ்வாறுந்தன்மை வழக்காதலின்; இருக்கின்றதில்லை யென்னும் பிரதீதி விடயத்தன்மை யிருந்த போதினும் கடாதிகட்கு பாவத்தன்மை நீங்காமையின்.

2. அஸ்திசப்தார்த்த விகற்ப நீக்கம்.

இருக்கின்ற தெனத்தான் இருக்கின்றபொருளா சத் தமா கூறும்வேட்கை? ஆதியதன்றும், அதனைக் கூறமுடி யாமையின், சத்தை யதன்பொருள் எனின், அன்றும், பொதுமை முதலியவற்றிற்கு ஆஃதில்லாமையின் இன்மை யேயத்தலின்; சொரூப சத்வமோ நீக்கப்பெற்றதாம், இரண் டாவதும் இயையாதாம், அபாவ மிருக்கின்றது என்றுபுலப் படல் புகன்றிருத்தலின், நிகழ்கின்ற தென்பதாகியாகாரத்தி னூடே புலப்படுவதற்கு இன்மை வழக்காதலின். அதுவும் இருக்கின்ற தென்பதன் பரியாயமெனின்? அன்றும், இரண் டன்பொருளுரு பொருளுரைத்த லில்லாமல் பரியாயத் தன்மை பகர்வான் மூடியாமையின். யாண்டொன்றற்கு

இருக்கின்றதென்னும் பதப்பிரயோகமோ ஆண்டே யபரத் திற்கு நிகழ்கின்றது எனப்பிரயோகத்தான் சாமானியமாக ஆண்டுப் பரியாயத்தன்மை அறிதல் கூடுமெனின்? கூடா தாம், பிரமேய அபிதேயாதி சப்தங்கட்கு அவ்வாறுந் தன்மை யிருந்தபோதினும் அபரியாயத் தன்மை யமைதலின் யாண்டென்பதற்குப் பிரவிருத்தி நிமித்த அர்த்தத்தன்மை யேலோ அதன் நிர்வசனப் பிரசங்கம் அவ்வவத்தையதேயாம் அதேபொருள் பாவத்வம் பகர்வதாம் சப்த உல்லேகந் தேட லால் வருவதென்னே.

3. பாவத்திற்கு இலக்கணமய லிலதாக்கல்.

அபரப்பிரதிஷேத வடிவுடைமை பாவத்வம் எனின்? அன்றும், விலக்கப்படுவதன் அசம்பவத்தானே பரபதம் வீணுதலின்; பாவ அபாவங்கட்குப் பரஸ்பரப் பிரதிஷேத வடிவமுடைமை யங்கீகாரத்தானும் என்க. ஆயினும் பாவ மில்லையாம் என அபாவப் பிரதிபத்திபோலும், அபாவம் இல்லை யாமெனப் பாவத்தின் பிரதீதி யின்றுமெனின்? இன்றும், அத் தன்மையானும் இலக்கணம் இயம்ப வியையாமையின், அபரப் பிரதிஷேத வாயிலாகப் பிரதீதியாந் தகைமையே பாவத்வ மெனின்? கூடாதாம், விழிமுதலியவற்றானே பாவத்வக் கவர் வின்மை வழக்காதலின்; பிரதீதி யாகுந்தகைமை விழி முதலிய வற்றானே கவரப்பெறுவ தாகாதாம் அபாவ மில்லையாமென்னும் பிரதீதிக்கு நிர்விடயத்தன்மை வழக்காத லினானு மென்க இது பாவவிடயமன்றும், நினது பக்ஷத்திற் ப்ரப்பிரதிஷேத வாயிலாய்த் தோற்றப்படுவதாதலின்; அபாவவிஷயமே யென்பதுமாகாதாம் அது நிடேதார்த்த மதலின். இவ்வகையாய பிரதீதியே யிலதாம் எனின்? இலதாம், சத்தஞானத்தாற் பிரதீதியின் சம்பவமாதலின், ஆகாங்ஷாதிமான்களாய பதங்களாற் சுவந்தோறும் சம

சர்க்க முணர்த்தப்படுதலின், "முற்றினு மில்லாப் பொரு
ளினு மொழிதான், அற்றமி லறிவை யாக்கிடு மன்றே."

4. பாவத்வ இலக்கணத்திற் பிரத்தியகூஷப் பிரமிதிவிஷயத்வம் புகுத்தலாதி சங்கை பங்கம்.

பிரத்தியகூஷப் பிரதிதிக்கு அவ்வாறு விளம்பும் வேட்கை யிருத்தலின் இஃததோஷமாமெனின்? ஆகாதாம், எல்லாப் பாவங்கட்கும் பிரத்தியகூஷத்தன்மை யங்கீகரியானம்யின், சுகுர்சகித பகூஷத்தில் எல்லாம் பிரத்தியகூஷமெனின்? அன் றும், அவரால் அவைகட்கு அபரப்பிரதிஷேத வடிவத் தானே கவர்வதில் அளவையின்மையின். அவைகட்கு விதி ரூபமாக அவ்வாறே கவர்ச்சியாமெனின்? ஆகாதாம், விதி ரூபத்தன்மைக்குத் துணிவுபேறின்மையின், யாது அபரப் பிரதிஷேத வடிவமதாக சப்தத்தானும் உணர்த்தப்பெறுமோ அது ஆண்டுப் பாவரூபமெனின்? இன்றும், பரபதம் ஸ்ளா போதலின். அதனைத் தியாகம் பரியபிணம் அச்சாகூஷாதித் தன்னை [illegible] சர்வகூஷத்தன்மைய முண்டாம் எனின்? அன்றும், அவ் வவையவய விடயத்தானே விசிஷ்டமாய புத்திக்கு விஷய விசேஷணத்தன்மைக் கவர்ச்சியில் சுவாசிரயமும் அங்கிசத்தி லாம், அதனு லுபலகூஷிதமானதற்கு அவ்வாறுந் தன்மை யேலோ, அபாவவிசிஷ்ட பாவக்கிரக அர்த்த அபாவத்திற்கு அவ்வாறுந்தன்மை யாதலின், அதனுனே யாது இவ்விதம் அது பாவரூபமெனவும் கூறப்பவனுல் இவ்விதத்தன்மையால் பாவத்வம் அயலாக அறையத்தக்கதாம், அபேதத்திலும் யாதிவ்விதம் அது பாவரூபமென நியமங் கூடாமையின், இதற் குபலகூஷணத் தன்மையேலோ உபலகூஷிய அன்னி யத்திற்கு வாச்சியத்தன்மை யுண்மையின், இதற்கே பர்வார்த்

கத்தன்மையேலோ அபாவ மில்லையெனக்கொண்டுப் புலப் படும் பாவத்திற்குப் பாவத்வாபாவ வழக்காதலின், பின்ன மும் பாவத்வமாகாதாம் ஆறு பதார்த்தத்தினும் வேறும் வழக்காதலின், எதுதான் சிறிது பாவத்வமோ அது தன்வடி வத்தில் இருக்கின்றதா? இல்லையா? இருக்கின்றதெனின்? தன்பாலிருப்பது விரோதமாம், இல்லையெனின், தனக்கு அன்னியப்பிரதிஷேத வாயிலாலோ அப்பிரதியமானம் வந்து அபாவத்தன்மை வழக்கர்தலின் என்றுணர்க.

5. அபாவத்தன்மைக் கண்டன ஆரம்பம்.

அற்றேல் இவ்வண்ணம் ஈசுரரிடத்தில் அளவைகாட்டா மையின் அவரபாவமே அடைவுறும் எனின்? அபாவத் தன்மை யென்னறையப்பெறும்? நிஷேத வடிவமுடைமை யெனின்? அது தீர்ளுபடும் வடிவமாயினே பாவத்திலு முளதாம், பாவாபாவ மிரண்டுகட்கும் பரஸ்பரம் தள்ளுபடும் வடிவமுண்மை யங்கீக்ரிக்கப்பட் டிருத்தலின். இனி யபா வத்தன்மையேயாயின், பரியனுயோக மகலாதாம், இதனுனே நிஷேதவாயிலாகப் பிரதியமானத்தன்மை என்பது நீக்கப் பெற்றதாம்.

6. மூன்றுவது கற்ப நீக்கம்.

பாவவிரோதித் தன்மையெனின் அன்றும், சர்வபாவ விரோதித்தன்மையா? அதன் விசேஷ விரோதித்தன்மையா? ஆதியதாகாதாம், அசித்தியாதலின், கடாபாவம் பூதலா தியைமூடித் தடாதாம். இரண்டாவது மெங்ஙனும், பாவங் கள் சிலவற்றிற்கும் அவ்வாறுந்தன்மை யுண்மையின். இனிக் கூடியிராமை விரோதம் விவக்ஷிதமாயின் அது பாவங்கட்கு இன்றுமெனின் இன்றும், கோத்தன்மை அசுவத்தன்மை யாதிகளில் அதற்கு மிருப்பாதலின்; ஒன்றை விதிக்கின் மற்

சர்க்க முணர்த்தப்படுதலின், "முற்றினு மில்லாப் பொரு ளினு மொழிதான், அற்றமி லறிவை யாக்கிடு மன்றே."

4. பாவத்வ இலக்கணத்திற் பிரத்தியகூஷப் பிரமிதிவிஷயத்வம் புகுத்தலாதி சங்கை பங்கம்.

